

காழிப் பெருநிலக்கிழார்
உயர்சைவத் தமிழ்ப் பெருவள்ளல்
**திருவாளர் கி. சிதம்பரநாத முதலியார் அவர்கள்**

௬௰-ஆம் ஆண்டு நிறைவு விழா வெளியீடு:

உ

சிவமயம்

சேக்கிழார் பெருமான் அருளிய

# திருஞான சம்பந்த சுவாமிகள் புராணம்

(செய்யுள் ௧-முதல் ௨௱௪ வரை)

உரையாசிரியர்

**கா. ஆலாலசுந்தரம் பிள்ளை அவர்கள்**

இயற்றிய

பொழிப்புரை, சித்தாந்த விரிவுரையுடன்

காழிப் பெருநிலக்கிழார்

உயர்சைவத் தமிழ்ப் பெருவள்ளல்

**திருவாளர் கி. சிதம்பரநாத முதலியார் அவர்கள்**

விருப்பத்திற்கிணைய

தருமையாதீன வித்துவான்

**காழி. சிவ. கண்ணுசாமி, B. A.**

அவர்களால்

சென்னை புரோகிரஸிவ் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

உரிமை செய்யப்பட்டது] ஜூன், 1938 [500 படிகள்

*June 1938.*

THE PROGRESSIVE PRINTERS
2/17 CORAL MERCHANT ST., MADRAS.

# பதிப்புரை

உலகெலாம் உணர்ந்தோதற் கரியவனும், நிலவுலாவிய நீர்மலி வேணியனும், திருவம்பலத்தே எண்டோள் வீசி நின்றாடுவோனுமாகிய எம்பெருமான்றன் மலர்சிலம்படிகளில் முப்பாலும் சித்தத்தை வைத்து, முழுநீறு பூசிப், பத்தராய்ப் பணிந்து, பரமனையே பாடி, அப்பாலு மடிச்சார்ந்த பொய்யடிமை யில்லாத துய்யநெறிச் செல்வர்கள் அறுபான்மும்மையோரின் வரலாறுகளை உயிரோவியச் செய்யுள் வடிவில் தன்மாட்டுக் கொண்டு திகழ்தருவது சேக்கிழார் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய பெரிய புராணம் என்னும் திருத்தொண்டர் புராணம் பத்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பன்னூறு ஆண்டுகட்கு முன் பாடப்பெற்ற இப்பெருங்காவியம் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுகட்குமுன் வரை ஓலையகத்துள்ளேயே ஒடுங்கிக் கிடந்தது. 1843-ஆம் ஆண்டில்தான் அதன் ஒருபகுதி அச்சுப் பொறிவழி வெளிவரத் தொடங்கி, முப்பது நாற்பதி யாண்டுகளுக்குள் முழுதும் வெளிவந்து நிலவுவதாயிற்று.

முதற்கண் வெளிவந்தகாலை இப்பெருநூல் உரையேதுமின்றி வெளி வந்ததியல்பே. சிலவாண்டுகட்குப்பின், திருவண்ணாமலை ஆதீனம் ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் இப்பெரு நூலுக்கு முக்காற் பகுதிக்குமேல் அரும் பெறற் பதவுரை யொன்று வகுத்தருளினார்கள். அவ்வுரையின் விடுபட்ட பகுதி பொம்மபுரம் இராமலிங்க சுவாமிகளாற் பின்னர் நிறை விக்கப்பெற்றது. அதன் பின்னர், சென்னைப் பெரும்புலவர் சுப்பராய நாயகர் அவர்கள் சிறந்ததொரு பொழிப்புரையியற்றி வெளியிட்டார்கள். இவ்வுரைகளிலெல்லாம் நன்கு பயின்று சென்னையில் சைவசமயச் சொற். பொழிவாற்றிவந்த திரு. கா. ஆலாலசுந்தரம் பிள்ளை என்ற அருணெறிச் செல்வர், திருத்தொண்டர் புராணத்தைத் தமக்கு இயற்கையா யமைந்த சித்தாந்தக் கண்கொண்டு துருவித் துருவி யாராய்ந்து தாம் அரிதிற் றுய்த்த ஆராவின்பப் பெருநலனை வையகத்தோர் யாவரும் உடன்றுய்க்கு மாறு செய்தலே உண்மைச் சைவத் தொண்டாம் என உணர்ந்து, சொற் செறிவும் பொருட் செறிவும் பொலியப் பொழிப்புரையும் சித்தாந்த விரிவுரையும் எழுதி வருவாராயினர். ஆனாலும், தமிழ்நாடு செய்த தவக்குறையால், மேற்கொண்ட இத் திருத்தொண்டு ஒருவாறு முடிந்தும் முடியாமலுமிருந்த நிலையில் இச்சைவப் பேராசிரியர் சிவபெருமான் திருவடி நீழல் எய்தினர்.

சீரிய சிவத் தொண்டாற்றிச் சேணடைந்த பிள்ளையவர்களின் மகனார் திரு. கா. ஏகாம்பரம் பிள்ளை என்பார் பேரூக்கத்துடன் விடாது முயன்று செல்வர்கள் பலர் உதவியை நாடிப் பெற்றுத் தம் தந்தையார் வைத்துச்சென்ற பெரியபுராண விரிவுரைச் செல்வத்தைப் புராணம் புராணமாகத் தனித்தனி அச்சிட்டு வெளியிட்டு வருவாராயினர். இம் முயற்சியிலீடுபட்ட இவர், திருத்தொண்டர்புராணத்திற்குத் தலையணியாய் இலங்கும் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்தை அச் சுவாமிகள் தோன்றிய காழிமா நகர்னுள்ள செல்வர்களுள் ஒருவரைக்கொண்டு வெளியிடுதலே சால்புடைத்தாம் எனக் கருதிக் காழியம்பதியை யடைந்தார்.

அடைந்த அவர், அந்நகரில் தண்டமிழ்ப் புலவராய்த் தனியரசோச்சி வரும் பேரறிஞர் வித்வ சிகாமணி ப. அ. முத்துத் தாண்டவராய பிள்ளை அவர்களையும், திருத்தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்த திருப்புள்ளிருக்கும் வேளூர்க் கட்டளை சுவாமிகள் உயர்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமி களையுங் கண்டு தங் கருத்தை யெடுத்துக் கூறினர். தமிழ்ப் பற்றுஞ் சைவப்பற்றும் உருவாயமைந்த அப் பெரியார்களிருவரும், இப்பெரும் பணிக்குதவுவார் காழிப் பெருநிலக்கிழார், உயர் சைவத் தமிழ்ப் பெரு வள்ளல், கி. சிதம்பரநாத முதலியார் அவர்களும், அவர்கள் பயந்த செல் வச் சிறுவர்களாம் திரு. கிருஷ்ணமூர்த்தி முதலியார் அவர்களும், திரு. இராமநாத முதலியார் அவர்களுமே என அறிவுறுத்தினர்கள்; அறி வுறுத்தியதோடன்றி அப்பெருவள்ளலாரிடம் பிள்ளையவர்களை நேரில் அழைத்துச் சென்று அறிமுகமுஞ் செய்து வைத்தார்கள். புகலிவேந்தர் தம் புகழ் பரப்புவதிலும் சீரிய சிவத்தொண்டு வேறொன்றில்லை என உறுதியாய்க் கடைப்பிடித்துவரும் வள்ளல் முதலியாரவர்கள் பிள்ளை யவர்களின் வருகைக் காரண மறிந்து அகங்குழைந்து அன்பு பெருகி, "இஃதோர் அரும்பெறல் வாய்ப்பே" என வியந்து கூறி, அச்சிடுவதற் கான பொருளுதவியைத் தாம் செய்வதாக உறுதிகூறினர்கள்.

உறுதிகூறிய அவர்கள் அச்சிற்பதிப்பிக்கும் பணியை ஒன்றுக்கும் பற்றாத சிற்றறிவினனாகிய அடியேனிடம் ஒப்புவிக்கவேண்டும் என்றும் தங்கள் மாறா அன்புப் பெருக்கினால் திருவுள்ளம் பற்றினர்கள். இக் குறிப்பைப் பெறுதற்கரிய பெரும்பேறாகக் கொண்டு அச்சிடும் பணிக்கு ஆவனவற்றை என் சிறு ஆற்றலுக் கேற்றவாறு அடியேன் செய்ய முயன்று வந்தேன். ஆனால், திரு. ஏகாம்பரம் பிள்ளை அவர்களின் உடல் நலக் குறைவினால் மேற்கொண்ட இப்பணி பற்பலகால் இடையீடுபட்டு மிகவும் மெதுவாகவே நடைபெற்று வந்தது. இதற்குள் திரு. ஏகாம்பரம் பிள்ளை அவர்களுங் காலஞ்செல்ல நேர்ந்தமையால் வேலை ஒருவாறு தடைப்பட்டு நிற்கலாயிற்று. எனினும், அச்சிட்டவரையிலேனும் ஒரு சிறு நூலாகக் கட்டி முடித்தால், அதனைத் தம் அறுபதாம் ஆண்டு விழா வெளியீடாக வெளியிடலாமென்றதொரு குறிப்பைப் பெருவள்ளல் திரு. முதலியார் அவர்கள் தெரிவிக்கவே, அதற்கியைய, செய்யுள் க முதல் உங்ச வரை யில் உரையோடு கூடி அச்சிடப்பெற்ற இச்சிறு பகுதி நூல்வடிவில் வெளிவருகின்றது. சைவ நன்மக்கள் இதனை விரைந்தேற்றுக் கற்றுப் பெருநலந் துய்ப்பாராக.

இம்முயற்சியில் அடியேனை ஈடுபடுமாறுய்த்த புகலிவேந்தர் பொன்னடித் தாமரைக்கும், காழிப் பெருவள்ளலார் திரு. கி. சிதம்பர நாத முதலியார் அவர்கள்தம் மாறாப் பெருங்கருணைக்கும் என் தாழ்மை யான வணக்கங்கள் என்றென்றும் உரியவாகுக.

சென்னை,
29-6-'38

காழி. சிவ. கண்ணுசாமி

## உயர் திரு. கி. சிதம்பரநாத முதலியார் அவர்கள் வரலாற்றுக் குறிப்பு

### பிறப்பு

தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த காழிமாநகரில், தொண்டை மண்டல முதலியார் வகுப்பில், வேளாண் தலைவராகத் திகழ்ந்த சி. கிருஷ்ணசாமி முதலியார் அவர்களின் அருந்தவப் புதல்வராக, 1878-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் முதல் நாள், உயர்திரு. கி. சிதம்பரநாத முதலியார் பிறந்தார்.

### கல்விச் சிறப்பு

1894-ஆம் ஆண்டில் காழி உயர்தரப் பள்ளிக்கூடத்தில் மெட்ரிகுலேஷன் தேர்வில் தேர்ச்சியுற்றுக் குடந்தைநகர் அரசினர்க் கல்லூரியில் 1899-ஆம் ஆண்டுவரை மேற்கல்வி பயின்று வந்தார்; வடமொழி, தமிழ் மொழி, ஆங்கிலம் ஆகிய மூன்றிலும் சிறந்த பயிற்சியுள்ளவர்.

### குடியோம்பல்

1899ஆம் ஆண்டு இவர் தம் பெருங்குடிக்குத் தலைமையேற்று நடத்த வேண்டியவரானார். இளமையில் ஏற்ற இப் பெருஞ்சுமையை எவ்வாறு இவர் திறம்படத் தாங்கிவந்தாரென்பதும், பண்டுதொட்டுப் பெருங் குடியாயிருந்த இவருடைய தொல்குடியை இவர் எவ்வாறு தம் ஆழ்ந்த அறிவினாலும், பெரு முயற்சியினாலும் படிப்படியாக மேலுயரச் செய்து முன்னணிக்குக் கொண்டுவர உழைத்தார் என்பதும் யாவரும் நன்கு அறிந்தனவே.

### பண்புச் சிறப்பு

அன்பு, ஆண்மை, இரக்கம், ஈகை, உண்மை, ஊக்கம், எளிமை, ஏற்றம், ஐமை, ஒழுக்கம், ஓவா முயற்சி என்பன போன்ற உயிர்ப் பண்புகளுக்கெல்லாம் உறைவிடமாய் இலங்குபவர்; செழுங்கிளை தாங்கும் செல்வர்; சித்தத்தைச் சிவன்பால் வைத்த சீரியோர்; அறிவுக் களஞ்சியம்.

### பொதுப்பணிச் சிறப்பு

காழிமாநகரில் சிறுவர் பள்ளிக்கூடம், சிறுமியர் பள்ளிக்கூடம், உயர்தரப் பள்ளிக்கூடம் ஆகியவற்றைத் திறம்பட நடத்தி வருகிறார்.

1903-ஆம் ஆண்டு தொடங்கிப் பல ஆண்டுகள் மாயூரம் தாலூகா சபை யுறுப்பினராகவும், தஞ்சை ஜில்லாச்சபை யுறுப்பினராகவும் சேர்த்துக் கொள்ளப்பட்டு நன்கு உழைத்துவந்தார்.

1913-முதல் 1919-வரை சென்னைச் சட்டசபை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தஞ்சை ஜில்லா மக்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உழைத்துவந்தார்.

1914-முதல் 1926-வரை நாகபட்டினம் கோவில் நிர்வாகசபை உறுப்பினராகவிருந்து நற்பணி யியற்றிவந்தார்.

காழிநகர் மக்கட்குப் பெரும்பயன் நல்கிவரும் ஜனோபகார நிதி என்ற நிதியொன்றை நிறுவிய பெருமை இவருக்கே உரியதாகும்.

இன்னும் இவர் கலந்துகொண்ட பொது இயக்கங்கள், சான்றுரைத்த விசாரணைக் கமிட்டிகள், தலைமை வகித்த பெருங் கூட்டங்கள் பலப்பல.

## திருப்பணிச் சிறப்பு

காழி பிரமபுரீசர் கோவிலின் பல பகுதிகளைப் பெரும் பொருட் செலவில் புதுப்பித்துள்ளார்; தாடாளப் பெருமாள் கோவிலைச் சேர்ந்த இராமசாமி கோவிற்கட்டிடத்தையும் புதுப்பித்துள்ளார். காழி ஆளுடைய பிள்ளையாரால் பாடப்பெற்ற திருமுல்லைவாயில் கோவிற் திருப்பணியைத் தனிப்பட நன்கியற்றியுள்ளார். சிதம்பரம் நடராஜப் பெருமானர் சந்நிதியில் முன்மண்டப மொன்றைக் கண்கவர் வனப்புடையதாக அமைத்துள்ளார். இப்பெருந் திருப்பணிகளேயன்றி இவர் இயற்றியுள்ள சில்லரைத் திருப்பணிகள் எண்ணிலடங்கா.

## நட்புச் சிறப்பு

காலஞ்சென்ற ஸர். வி. கிருஷ்ணசாமி ஐயர், ஜஸ்டிஸ் டி. வி. சேஷகிரி ஐயர், திவான்பகதூர் பி. கேசவ பிள்ளை, ஏ. அரங்கசாமி ஐயங்கார் முதலியோரும், இதுகாலைப் புகழ்கொடு திகழ்ந்துவரும் ரைட் ஹானரபிள் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியார், ஸி. இராஜகோபாலாச்சாரியார், சேலம் ஸி. விஜயராகவாச்சாரியார் முதலியோரும் இவர்தம் நண்பர்கள்.

## நூல் வெளியீடுகள்

இவர் இதற்கு முன் வெளியிட்டுள்ள தமிழ் நூல்கள் பண்டாரசாத்திரம், சம்பந்தர் பிள்ளைத் தமிழ், ஆபத்தோத்தாரணமாலை முதலியவாம்.

திரு. கி. சிதம்பரநாத முதலியார் நீடு வாழ்க!

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்தை விரிவான சித்தாந்த வுரையுடன்

சீகாழி ஸ்ரீமான்

கி. சிதம்பரநாத முதலியார் அவர்கள்

*தமது சஷ்டியப்த பூர்த்தி முகூர்த்த சுபதினத்தில் அச்சிட்டு*

உபகரிக்கும்

## கொடைச் சிறப்பு

வேதமுதற் சிவமோங்க விரிஞ்சன்முதற் றேவரெலா
மோதுமறை யொழுக்கநிலை யுலகனைத்துந் திகழ்ந்தோங்க
நாதபரம் பரையுணர்ந்த நற்றவத்தோர் நிலையோங்கச்
சீதவள வயற்புகலித் திருநகரம் திகழ்ந்தோங்க (க)

சேலோங்கு விழியம்மை திருநிலைநா யகியளித்த
பாலோங்கு மொழிபகர்ந்த பரசமய கோளரியார்
மேலோங்கு புராணவுரை விதிமுறையி னச்சிட்டு
மாலோங்கு புகழ்படைக்கு மகிபரவர் யாவரெனில் (உ)

மதியோங்கு மணிமாடம் வயங்குசீர் காழிதனில்
நதியோங்கு திருத்தொண்டை நன்னாட்டு வேளாளர்
திதியோங்கு வடகலையுந் தென்கலையு மாங்கிலமு
மதியோங்கக் கற்றுணர்ந்து மாநிதியம் பலபடைத்தோர். (ங)

தலமோங்கு பலதளிகள் சமைப்பித்துந் தமிழுணர்ந்தோர்
நிலமோங்கு சிவனடியார் நிலையுணர்ந்து கொடையளித்தும்
பலமோங்கு முன்மண்ட பம்பொலிய வமைப்பித்தும்
பலமோங்கு பலதரும தானங்கள் புண்ணிடுவோர். (ச)

பதம்பரநா தக்கப்பால் பரித்துநடம் புரிந்தருளுஞ்
சிதம்பரநா தக்கடவுள் திருவருளைத் தினம்பரவி
இதம்பரமா னவர்க்கருளு மெழிற்சுற்ற முடன்வாழுஞ்
சிதம்பரநா தப்பெயர்கொள் திகழ்முதலி யார்தாமே. (ரு)

வேறு

திருவமர் காழிச் செழும்பதி யிதனிற்
சிறுமகா ரோதுகல் லூரி
குருவமர் தரவே பலபல வமைத்துக்
குறையற வுபகரித் தருளி
வருகிளை யுடனே ஆறுபத் தாண்டில்
வயங்குசீர்ச் சடங்குசெய் தருளால்
முருகமர் தெரியல் சிதம்பர நாத
முதலியார் நன்றுவா ழியரே. (சு)

சீகாழி
29-6-'38

ப. அ. முத்துத்தாண்டவராயன்.

உ

திருச்சிற்றம்பலம்

மதுரஸங்கீதாய நமஃ

---

## இரண்டாங் காண்டம்

## ஆருவது

## வம்பருவரிவண்டுச் சருக்கம்

# திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம். க

(எ - து.) உலகுதழைத்தோங்கக் கூறியருளிய வேதமார்க்கங்கள் குன்ருது எவ்வுயிர்களிடத்தும் பரவி ஓங்கி வளரவும், அவ்வேதமார்க்கங்களில் விதிக்கப் பட்டுள்ள விதிகளைப் பிறழாது கைப்பற்றியொழுகிவரும் பரிபாகிகளாகிய சத்திநி பாதர்கள் உய்தற்பொருட்டுக் காட்டும் சிவாகமத்துறைகள் பிரகாசித்து விளங்க வும், சிவாகமத்துறை வழியே வருவார்க்குச் சித்தாந்த ஞானுபதேசத்தைச் செய்யவல்ல குருபரம்பரை நிலவிப் பொலியவும், பரிசுத்தமாகிய தமது திருவாக் கைத் திறந்து புலம்பியருளிய, நீர்வளமிக்க வயல் சூழ்ந்த திருப்புகலி என்னும் சீகாழிப்பதியில் அவதரித்த திருஞானசம்பந்த மூர்த்திகளுடைய திருவடித்தாம ரைகளை எனது தலைமேல் வைத்துக்கொண்டு, அந்த மூர்த்திகள் செய்தருளிய இறைவனுடைய தொண்டுகளை யாம் வாழப் போற்றுவோமாக என்பதாம்.

பிறப்பிறப்புக்கு இடஞ்செய்யவல்ல பாவப்பெருங்குழியில் வீழ்த்தும் புறச் சமயங்களென்னும் ஏத(குற்ற)ங்களாகிய தீநெறிகளை விலக்கி, சித்தாந்த நெறி யைக்காட்டும் நன்னெறியை மேற்கொண்டு அதனை உணர்த்துவது வைதிகநெறி என்பார்—வேதநெறி எனவும், அவ்வேதநெறி எங்கும் பரவி, குன்ருது நடை பெற்று வந்தாலன்றி சித்தாந்தசைவம் செழுமைபெற்று வளருமாறில்லை என் பார்—தழைத்தோங்க எனவும், அங்ஙனந் தழைத்தோங்கும் வேதமானது புறச் சமயங்களாகிய தீநெறிகட்குத் தான் பிரமாணமாக நில்லாமல் சித்தாந்தத்திற் கூறப்படும் முப்பொருளுண்மைக்கே பிரமாணமாக நிற்றலின், அவ்வேதத்துக்கு அர்த்தமாகவந்த ஆகமமானது வைதிகநெறியின்கண்ணே சென்று இலைமறை காய்போல் ஆங்காங்கு மறைந்துகிடக்கும் பதிபசுபாசங்களுடைய இலக்கணங் களைப் பலமுறை (துறை) யான் எடுத்துக்காட்டும் (விளக்கும்) சிறப்புடைத் தென்பார்—மிகுசைவத்துறை விளங்க எனவும், இங்ஙனமான வேதநெறியானும், சைவத்துறையானும் ஓங்கிவிளங்கும் முப்பொருளுண்மையை ஆன்மவர்க்கங்க

ளெல்லாம் குருபரம்பரையின் வழித்தாய் உபதேசிக்கப்பெற்றுச் சிவானுபூதிமான்களாய் வாழவேண்டும் என்பார்—பூதபரம்பரை பொலிய எனவும், அவ்வாசிரியபரம்பரை இவ்வுலகின்கண் பரவச் சாமிநாதனென முதலாசிரியராய்க் கயிலையின்கண் இருந்து, சிவசத்திகளைத் தம்முட்படுத்தி உபதேசிக்கத் தமது திருவாக்கைத் திருவாய்மலர்ந்தருளியதுபோல் இவ்வுலகின்கண்ணும் சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கோயில்கள்தோறும் சென்று சென்று ஆராமை கொண்டு பாடினர் என்பார்—புனித வாய் மலர்ந் தழுத எனவும், வேதநெறியே சென்று சைவத்துறையில் நிற்கவல்ல சான்றோரைத் தன்னகத்துட்கொண்டு விளங்கும் காழியாகலான் அக்காழிப்பதியை வளப்பங்களெல்லாம் தாம் புகுமிடமாகவந்து புகுந்துவாழும் இயல்புடைத்து என்பார்—சீதவளவயற்புகலி எனவும், வளப்பங்கட்குப் புகலிடமாகிய அப்புகலியின்கண் வந்த ஆளுடைய பிள்ளையார் அனாதியே திருஞானசம்பந்தரேயன்றி அஞ்ஞானசம்பந்தமுடைய ஆன்மாக்களில் ஒருவரன்று என்பார்—திருஞானசம்பந்தர் எனவும், சைவசமயத்தோடு முரணுமாறு கூறவல்ல சமயங்களெல்லாம் தனக்குப் புறம்பென்றும், சைவசமயத்தோடு முரணாத அதனடிப்பட்டு உடன்வாழவல்ல சமயங்களெல்லாம் தனக்கு அகம் என்றும் கொண்டு அவ்விரண்டு நெறியையுங் கூற முன்னிற்கவல்ல வேதநெறி தழைத்தோங்கவும், தத்துவசுத்தி ஆன்மசுத்தி சிவயோகம் சிவபோகம் என்னும் துறைகளை ஆன்மாக்களுக்குக்காட்டி அத்துறைகளில் அவர்களைச் செலுத்தவல்ல சைவத்துறை விளங்கவும், அவ்விருசெயலையும் செய்தருள இவ்வுலகின்கண் அடிகளாய்வந்த ஞானசம்பந்த மூர்த்திகளுடைய திருவடிகளை நந்தலைமேற் கொள்வேமாயின் நாம் எண்ணிய எண்ணம் முற்றுப்பெறும் என்பதில் ஐயமில்லை என்பார்—பாதமலர் தலைக்கொண்டு எனவும், அம்மூர்த்திகளது சரித்திரத்திலும் நாம் எண்ணியிருக்கும் அவையே பிரகாசிக்கின்றமையான் அச்சரித்திரத்தையே நாம் எடுத்துச் சொல்லப்புகுவேமாயின் அதுவே நாம் செய்யத்தகும் தொண்டாக முடியும் என்பார்—திருத்தொண்டு பரவுவாம் எனவும் கூறினர்.

இதனால், வேதத்திற் கூறப்படும் நெறியே சித்தாந்த ஞானத்துக்கு நெறி எனவும், அந்த வேதநெறியில் விளங்கும் துறைகளே சைவத்தில் (ஆகமத்தில்) கூறப்படும் துறைகள் எனவும், இந்த வைதிக சைவமாகிய நெறியுந் துறையுமே அனாதியாய் ஆன்றோர்களால் ஆளப்பட்டு என்றும் பொலிவு பெற்றிருப்பன எனவும், அந்நெறிகளிலும் துறைகளிலும் படர்ந்து அடர்ந்து ஆன்மாக்களைத் துன்பப்படுத்தும் புறச்சமயங்களென்னும் பேரிடர்களைத் தமது திருஞான சம்பந்தத்தாற் பொங்கிய தமிழ் வேதத்தைத் திருவாய்மலர்ந்து போக்கின காரணங்களை இனி நாமெடுத்துச் சொல்லுவாமெனவும் கூறியவாறும்.

அல்லதூஉம், வேதநெறி தழைத்தோங்கினால் சைவத்துறை விளங்குமெனவும், அத்துறை விளங்கினால் பூதபரம்பரை பொலியுமெனவும் கூறிய உண்மை விளக்கத்தினால், முத்தியை வேண்டும் பூதபரம்பரையார் வேதமார்க்கத்திற் கூறியபடியே சென்றால் அம்மார்க்கம் சைவமாகிய பெருந்துறையைக் காட்டிப் பொலிவு பெறச்செய்யுமெனவும் வெளியாயிற்று.

புனிதவாய் மலர்ந்தழுத என்றதனால், திருஞானசம்பந்த மூர்த்திகளது திருவாக்கே வேதமெனவும், அந்த வாக்கு மலர்(திற)ந்ததே சைவத்துறை எனவும், மலர்ந்து அழுததே பூதபரம்பரை பொலிய எனவும் அறியலாயிற்று.

அழுதலாகிய செயல் வாக்கைத் திறந்தாலன்றி ஆகாது. அது வாக்கைத் திறக்கத் தொடங்கினாலன்றி ஆகாது. ஆகவே ஆளுடைய பிள்ளையார் வேதநெறி தழைத் தோங்கவே திருவுள்ளத்தெண்ணி வாக்கைத் திறப்பதற்கு முயன்றாரெனவும், சைவத்துறை விளங்கவே முயன்றபடி வாக்கைத் திறந்தாரெனவும், திறந்த படியே "அழுதால் உன்னைப்பெறலாமே" என்ற திருவாசகப்படி ஆன்மாக்க ளெல்லாம் அன்பினால் அழுது இறைவனைப் பெற அழுதுகாட்டினாரெனவும் அறியக் கிடக்கின்றமை காண்க.

இனி, வேதநெறி தழைத்தோங்கினாலன்றி இருவினைகளும் ஒப்பாகா. மிகு சைவத்துறை விளங்கினாலன்றி மலம் பரிபாகம் ஆகாது. பூதபரம்பரை பொலிவு பெற்று வந்தாலன்றி சத்திநிபாதம் பதியாது. புனிதவாய் மலர்ந்தழுதாலன்றி சத்திநிபாதருள்ளத்தில் சிவமாக்கும் அன்பு மலராது. சீகாழியாகிய புகலியை யடைந்தாலன்றி அன்புண்டாகப்பெற்ற அன்பர்களுக்கு ஞானசம்பந்தராக அருள் திருவுருக்கொண்டு வாராது. அவ்வருளுரு நம்மை ஆளும் ஆளுடைய பிள்ளையா ராய் வந்தாலன்றி நமக்கு ஞானம் சம்பந்தமாகாது. ஞானசம்பந்தரது பாதமலர் தலைக்கொண்டாலன்றி ஞானசம்பந்தப்பட்ட சீவன்முத்தர்களுடைய ஞானக்கிரி யைகள் பரசிவத்தினுடைய ஞானக்கிரியைகளைப் பொருந்தா. ஞானசம்பந்தரது திருத்தொண்டு பரவினாலன்றி தொல்லை வல்வினை மனவாக்குக் காயங்களிற் பர விப்படுத்தும் துன்பம் விட்டுநீங்காது. ஆகலான் வேதநெறியே சென்று இருவினை யொப்பையும், சைவத்துறைவிளங்கி மலபரிபாகத்தையும் அடைந்து, அத்துறையி லுள்ள பூதபரம்பரை (சித்தாந்தபரம்பரை)யில் வந்த ஆசாரியர்களைப் பணிந்து சத்திநிபாதம் பதியப்பெற்று, பின்னர்ச் சிவஞான மணங்கமழும் திருப்பதிகங்களை ஓதி அன்புருவாகி அருள்வரப்பெற்று, அவ்வருள் வழியானே திருஞானசம்பந்த ராய், அச்சம்பந்த விசேடத்தால் தம் ஞானக்கிரியைகள் சிவஞானக்கிரியைக ளாய், அந்த ஞானக்கிரியைகளைக் கொண்டு திருஞானசம்பந்தப் பெருமானது புராணத்தைச் சொல்லி அப்புராணசாரத்தைத் தம் மன வாக்குக் காயங்களில் பரவச்செய்து தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியத்தைப் பெறுவேமாக, என்று ஆசிரியர் சேக்கிழார் கூறியருளினாரென்க. இதனுண்மை நன்கு விளங் கவே "தோடுடைய செவியன்" என்னும் பதிகத்திருக்கடைக்காப்பில்,

"அருநெறிய மறைவல்ல முனியகன்பொய்கை யலர்மேய
பெருநெறிய பிரமாபுர மேவியபெம்மான் இவன்றன்னை
ஒருநெறிய மனம்வைத்துணர் ஞானசம்பந்தன் உரைசெய்த
திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினைதீர்தல் எளிதாமே."

என்று அருளிச்செய்ததென்க.

எனவே, வேதநெறி சைவத் துறையைக்காட்டும் நன்னெறியென்றறிய-அரு நெறியமறை எனவும், சைவசித்தாந்த ஞானத்தால் உணரவரும் பரசிவம் பரப் பிரமமெனும் வாசகத்திற்கு வாச்சியார்த்தப்பொருளென்று காட்டும் பெருந்துறை என்றறிய-பெருநெறிய பிரமாபுரமேவிய பெம்மான் இவன் எனவும், பரப்பிரஹ்ம பதவாசக வாச்சியன் பரமசிவன் என்னும் உண்மையை ஓதியுணரமுயல்வாராகிய பூதபரம்பரையார் திருநெறியதமிழில் தத்தம் அறிவுகளைச்செலுத்தி ஆராயுங்கால் பூர்வபக்ஷிகள் கூறும் கூற்றான் மாறுபடாது வேதாந்தத்தெளிவாகிய சித்தாந் தத்தையுணர்ந்து அதில் நிலைபெற்றுநிற்க, திருஞானசம்பந்தராகிய நமது அருளா ளர் புனிதவாய்மலர்ந்தழுது தமிழ்வேதத்தைப் பொழிந்ததென்றறிய-ஒருநெறிய

மனம்வைத்து உணர்ஞானசம்பந்தன் உரைசெய்த திருநெறிய தமிழ் எனவும், அத்தமிழ் வேதத்தைச் சிவபுண்ணிய விசேடத்தான் உணரவல்லவர் அநாதிமல வாசனையான் விடாதுவரும் இருள்சேர் இருவினையும் தீர்ந்தொழிந்து எளிதிற் பேரின்பசுகமுறுவர் என்றறிய - வல்லவர் தொல்வினைதீர்தல் எளிதாமே எனவுங் கூறினர்; நம்மை ஆளுடைய பிள்ளையார், ஞானசம்பந்தமுடைய சைவசமயத் துக்கு ஆசிரியராய் எழுந்தருளாராயின், சைவசமயம் வேதநெறியானும், சைவத் துறையானும், பூதபரம்பரையானும் பொலிவுபெறுமாறு எங்ஙனென்று சைவ சமயிகள் அறியுமாறு அறிவுறுத்தியதூஉமாம்; எனவே, சித்தாந்த சைவர்கள் தமக்குரிய சைவசமயமே நன்னெறியையும், நற்றுறையையும், நல்ல பரம்பரை யையும் உடையது, ஏனைச் சமயங்களெல்லாம் தீநெறியையும், தீத்துறையையும், தீயபரம்பரையையும் உடையன என்று தத்தம் மதிநுட்பத்தால் அறிவரென்க.

ஆளுடையபிள்ளையாரைப்போலவே, ஆளுடைய அரசுகளும், ஆளுடைய நம்பிகளும் வேதநெறி தழைத்தோங்க, மிகுசைவத் துறைவிளங்க, பூதபரம்பரை பொலியவே வந்தவரென்று அவ்விருவர் புராணத்தும் அறியுமாறு ஆசிரியர் சேக் கிழார் கூறியிருக்கின்றனர். அவ்வுண்மையை அவ்விருவர் புராணத்தில் கூறி யிருக்கும் விசேடவுரையிற் கண்டுதெளிக.

சைவசமயம் நன்னெறி நற்றுறை நற்பரம்பரையுடைத்தென்றும் ஏனைச்சம யங்கள் தீநெறி தீத்துறை தீப்பரம்பரையுடையனவென்றும் கூறியது என்னை யெனின், தீமைபயப்பனவாகிய ஆணவாதிமலமற்ற நித்தசுத்தனாகிய சிவனால் சொல்லப்பட்ட வேதசிவாகமங்களையே நெறியாகவும், துறையாகவும், ஞான வுண்மையாகவும் சைவசமயங்கொண்டிருத்தலால் யாவும் நல்லவாயின; ஏனைச் சமயங்களெல்லாம் வேதசிவாகம ஞானங்களைக் கொள்ளாமையால் அவை தீய வாயினவென்க.

இத்திருப்பாட்டான், வேதநெறியும், சைவத்துறையும், ஞானகுருபரம்பரை யும் ஓங்கி விளங்கிப் பொலியுமாறு திருவுளத்தெண்ணி, இரங்கித் திருவாய் மலர்ந்த சீகாழிப்பெருமானாராகிய திருஞானசம்பந்தப் பெருமானுடைய மலர் போலும் செம்மையான திருவடிகளை நந்தலைமேற்சூடி அப்பெருமான் செய்தரு ளிய இறைவன் பணிகளைப் புகழ்ந்து உலகமெங்கும் பரவும்படி செய்வோம் என்று கூறப்பட்டது.

ஒருநெறியும் உணராது ஆணவச்சேற்றில் ஆழ்ந்து கிடக்கும் ஆன்மாக்க ளுக்கு ஒரு நெறியைக் காட்டி அந்நெறியில் அவர்கள் வரும்படியாகச் செய்வது இறைவனது கருணைக்குக் கடனாகலின் அந்நெறி வேதத்தாற் கூறப்பட்டதென வும், அந்நெறியே ஆன்மாக்கள் வந்த பின்னர், அந்நெறியின் வழியாய்வரும் அவர்களது வன்மை மென்மைகளை நாடி, அவரவர்கட்குத்தக்க துறைகளைக்காட்டி அவ்வத்துறைகளில் அவரவரை நிறுத்தி அங்குச்செய்வனவற்றை அறிவுறுத்திப் பின்னர் அவற்றைச் செய்யும்படி விதிப்பது நெறி காட்டிய கருணைக்கு இலக்கண மாகலின் அவரவருக்குரிய துறைகளும் அத்துறைகளில் அவரவர் செய்யக்கட வனவாகிய செயல்களும் சைவமென்னும் ஆகமத்தாற் கூறப்பட்டன எனவும், அந்த வேதநெறியும், சைவத்துறையும் ஆசிரியவசனத்தாலன்றி தாம்தாமே உணரவொண்ணாவாகலின் ஆங்கு அவை யுணர்த்தவந்தது கைலாயமுதல் ஆவடு துறையளவாக வந்த பூதபரம்பரையாகிய நந்திபரம்பரை எனவும் விளக்குவார்

வேதத்தை நெறி என்றும், ஆகமத்தைத் துறை என்றும், ஞானபரம்பரையாகிய அந்தப் பெரிய கயிலாயபரம்பரையைப் பூதபரம்பரை எனவும் கூறினர்.

நெறி (மார்க்கம்) வாக்கினாற் சொல்லப்படும் அளவுடைத்தாகலின், வாக்கினளவாயுள்ளதும் வாக்கெனப்படுவதுமாகிய வேதத்தாற் கூறப்படுவதனை - நெறி என்றார். அந்நெறி கெடாது எங்குந்தழைத்து (பரந்து) ஓங்கியிருந்தாலன்றி ஆன்மாக்களெல்லாம் அந்நெறியில் பரவிவருதற்குக் கூடாதாகலான் - **வேதநெறி தழைத்தோங்க** என்றார். இவ்வுண்மை தோன்றவே ஆளுடைய பிள்ளையார் திருவாக்கைத்திறந்தார் என்பார்—**புனிதவாய்** என்றும், வேதநெறியேசென்று ஆகமத்துறையில் வந்தார்க்கு ஆகமத்திற் கூறப்படும் செயல்களெல்லாம் நெஞ்சக்கமலத்தில் மலரவேண்டும் என்னும் அக்குறிப்புப் பிள்ளையார் உள்ளக்கமலத்தில் தோன்றின தென்பார்—**புனிதவாய் மலர்ந்து** என்றும், ஆகமத்திற் காட்டப்பட்ட துறைவழியே வந்தவர் ஞான பரம்பரையிற் போதிக்கப்படும் சித்தாந்த ஞானத்தால் உள்ளமுருகி அழுதழுது சிவனுமாறு பிள்ளையார் திருவுள்ளத்திலெண்ணினரென்னும் அக்குறிப்புத் தோன்ற—**புனிதவாய் மலர்ந்தழுத** என்றுங் கூறினர். (க)

### நாடுநகரத்தின் சிறப்பு

சென்னிவளர் மதியணிந்த சிலம்பணிசே வடியார்தம்
மன்னியசை வத்துறையின் வழிவந்த குடிவளவர்
பொன்னிவளந் தருநாடு பொலிவெய்த நிலவியதால்
கன்னிமதில் மருங்குமுகில் நெருங்குகழு மலமூதூர். உ

(எ - து.) வளர்கின்ற சந்திரனைத் திருமுடியின் கண்ணும், வேதச்சிலம்பைச் செவ்விய திருவடியின் கண்ணும் அணிந்தருளிய நடராஜப்பெருமானது நிலைபெற்றுள்ள சைவத்துறையிலே வழிவழியாய் மாறுபடாதுவந்த குடிப்பிறப்பினையுடைய அனபாய சோழ மகாராஜா முதலிய சோழர்களால் ஆளப்பட்டு வரும் காவிரிநதியினால் வளம்பட்டிருக்கும் சோழநாடானது, எந்நாட்டினும் மேம்பட்டு ஓங்க, மேகங்கள் நெருங்கியூரும் அழிதலையறியாத மதில்சூழ்ந்த கழுமலம் என்னும் பெரியநகரம் ஒன்றுளது என்பதாம்.

இறைவன்தன்னைச் சார்ந்தவர் என்றும் வளருந்தன்மையுடைய பேரின்பத்தைப் பெற்றுத் தன்னிடத்தில் வாழ்ந்திருப்பர் என்பதும், தன்னைச் சாராதவர் என்றுந் தேய்ந்தொழியும் சிற்றின்பத்தைப்பெற்று சுவர்க்க மத்திய பாதலமென்னும் மூன்றிடத்தும் போக்குவரவுடையராய் அலைவரென்பதும் தோன்ற - **சென்னிவளர்மதியணிந்த** எனவும், "அனாதியாயுள்ள ஆன்மாக்களின் மாட்டு அனாதியாய்க் காணப்பட்டுவரும் பஞ்சகிருத்தியங்களை நிலையாய்நின்று இயற்றிவரும் பரமபதி நானன்றி மற்றொருவரும் இல்லை என்று என் அடிக்கட்பொருந்தி ஒலித்துக்கொண்டிருக்கின்றது வேதம்" என்னும் அவ்வுண்மைதோன்ற - **சிலம்பணிசேவடியார்** எனவும், அன்றும், இன்றும், இனி என்றும் விடாதியற்றும் பஞ்சகிருத்தியங்களால் பஞ்சமலங்களைக் கழுவி நின்மலமாகிய பேரின்பத்தைத் தரும் அழிவிலியாகிய பரமபதியினிடத்திற் செலுத்தும் சைவத்துறையொன்றே நிலைபெற்றிருக்குமன்றி, அழிவுடைய பலதெய்வங்க ளிடத்தில் செலுத்தும் ஏனைச் சமயத்துறைகளெல்லாம் சில்லாண்டிற் சிதையும் அத்தெய்வங்களைப்போல் சில்

லாண்டிற்சிதையும் என்னும் அவ்வுண்மை தோன்ற - மன்னிய சைவத்துறை எனவும், அங்ஙனம் நிலைபெற்று நின்று தன்னைச்சார்ந்தவர்க்கு நிலைபெற்ற இன்பந் தரும் சைவத்துறையன்றி வேறு அவத்துறையின் வழிவராத நற்குடிப்பிறப்பாளராய்ச் செழுமையுடன் வாழும் மேம்பாடுடையார் என்னும் அவ்வுண்மை தோன்ற - சைவத்துறையின் வழிவந்த குடிவளவர் எனவும், சென்னிவளர்மதி யணிந்த சிலம்பணிசேவடியார் உயிர்களுக்குப் பேரின்பவளந்தருவதுபோலும், சைவத்துறை மங்கலமாகிய விபூதி உருத்திராக்க பஞ்சாக்கரங்களாகிய வளங்களைத்தருவதுபோலும், காவிரிநதி உடம்பு வளர்தற்குவேண்டிய பலபொருள்களையும் தரும் என்னும் அச்சிறப்புத்தோன்ற - பொன்னிவளந்தருநாடு எனவும், உயிருக்கும் உடலுக்கும்வேண்டிய பேரின்ப சிற்றின்பங்களைத் தந்து மலங்களைக் கழுவும் பிரமபுரத்தை அந்நாடு உடைத்தென்னும் அச்சிறப்புத்தோன்ற - கழுமல முதூர்பொலிவெய்த நிலவியது எனவும் கூறினர்.

இத்திருப்பாட்டான், சைவத்துறையின்வழிவந்த சோழரது சிறப்பும், அவர் நாடு மலங்கழுவும் ஊரையுடையது என்னும் சிறப்புங் கூறியவாறும். (உ)

அப்பதிதான் அந்தணர்தம் கிடைகள்அரு மறைமுறையே
செப்பும்ஒலி வளர்பூகச் செழுஞ்சோலை புறஞ்சூழ
ஒப்பில்நகர் ஓங்குதலால் உகக்கடைநாள் அன்றியே
எப்பொழுதும் கடன்மேலே மிதப்பதென இசைந்துளதால். ௩

(எ - து.) மன்னிய சைவத்துறையின் வழிவந்த சோழர்களால் ஆளப்பட்ட அந்நாடானது, பார்ப்பனச் சிறுவர்களுடைய கூட்டங்கள் அரியவேதங்களைப் பதம் கிரமம் சடை கனம் என்று சொல்லப்பட்ட முறைப்படியே ஓதுவதனால் உண்டாவதாகிய ஓசையும், வளர்ச்சியினையுடைய செழுமை பொருந்திய கமுகஞ் சோலைகளும் புறத்திலே சூழ்ந்திருக்க, புகலி என்றும், கழுமலம் என்றும் பெயருடைய ஒப்புசொல்லுதற்கரிய அந்நகரமானது மேலோங்கி யிருத்தலால், ஊழியிறுதி நாளல்லாமல் எப்பொழுதும் கடலின்மேன் மிதந்திருக்குந் தன்மையுடைத்து என்று சொல்லும்படி தோணிபுரம் என்னும் திருப்பெயருடன் பிரகாசிக்கின்றது என்பதாம்.

மேலே சொல்லிய கழுமலம் யுகாந்தமெனப்படும் ஊழிக்காலத்தில் தோன்றும் மஹாப்பிரளயத்தில் மூழ்கிஅழிந்துபோகாமல் அவ்வெள்ளத்தில் தோணியைப்போல் மிதந்து தவழ்ந்துகொண்டிருக்கும் சிறப்புடைத்தென்பது தோன்ற- அப்பதிதான் ஒப்பில் நகர் உகக்கடைநாள் அன்றியே எப்பொழுதும் கடன் மேலே மிதப்பதென ஓங்கியிசைந்துளது என்றார். எனவே, மேலெழுந்தோங்கும் மஹாப்பிரளயம்போல் கமுகமரங்களின் சோலை பிரளயமாயும், அந்தணர்தம் கிடைகளினின்றும் பதக்கிரமமாக ஒன்றின்மேல் ஒன்று மேன்மேலெழும் ஓசை அவ்வெள்ளத்திலெழும் ஓசையாயும் எப்பொழுதும் காணப்படலால் கழுமலமாகிய அந்நகர் உகக்கடைநாளில் தோணியாகவே காணப்படும் சிறப்புடைத்தென்பார் - வளர்பூகச் செழுஞ்சோலையோடும் அருமறைமுறையே செப்பும் ஒலியோடும் ஒப்பில்நகர் எப்பொழுதும் கடன்மேலே மிதப்பது என்றாரென்க.

முதற்பாசுரத்தில் காழிப்பதியைப் புகலி என்றும், உ-ம் பாசுரத்தில் கழுமலம் என்றும், இப்பாசுரத்தில் தோணிபுரம் என்றும் கூறிய சிறப்பு என்னை?

எனின், சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமும், பவமதனையற மாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமும், உவமையிலாக் கலைஞானமும், உணர்வரிய மெய்ஞ்ஞானமும் உணர்ந்து உய்யவேண்டுவோர்க்குப் புகலிடம் காழிநகரன்றி வேறுநகரில்லை என்னும் அச்சிறப்பும், அப் புகலியைத் தாம் புகும் புகலிடமாகப் புகுவோர்க்கு அனுதியாய் விடாதுவரும் மும்மலங்களும் இராவண்ணம் கழுவும் என்னும் அச்சிறப்பும், அங்ஙனங் கழுவப்பெற்ற சீவன்முத்தர்களைப் பிராரத்துவத் தொடக்கால் பிரபஞ்ச வாசனைகளில் அழுந்தாவண்ணம் தாமரையிலைக்கண் தண்ணீர்போல் பற்றற்று உலாவிவாழச் செய்யுமென்னும் அச்சிறப்பும் யாவரானும் அறியவந்து, அறியவந்தபடியே புகலியிற் புகுந்து, மலங்கழுவி, சீவன்முத்தராய்ப் பரமுத்தியின் பதத்தைப்பெற்று வாழ்ந்திருக்கவேயாம்.

அன்றியும், காழிப்பதியானது ஆளுடைய பிள்ளையார் அவதாரம் செய்வதற்கும், வேதசிவாகமங்கள் தழைத்தோங்குவதற்கும், ஞானபரம்பரை பொலிவதற்கும் இடமாயிருந்தபடியினுல் புகலி என்றும், கவுணியன் கட்டுரையாகிய திருநெறிய தமிழ் அங்குப் புகுவாரது நாவிற் புகுந்து அவர்களது தொல்வினையை எளிதாகப் போக்கி ஆணவத்தையுங்கழுவும் ஆற்றலுடைத்தாயிருக்கின்றபடியால் கழுமலம் என்றும், மலங்கழுவப்பெற்ற சீவன்முத்தர்களைப் பிறப்பிறப்புக்கிடமாகிய இந்நிலத்தினின்று நீக்கி முத்திக்கரையில் கிடத்துகின்றபடியால் தோணிபுரம் என்றும் கூறப்பட்டது.

இதனுல், பிள்ளையார் அவதாரஞ் செய்த ஊரை, முத்திக்கரையேற விரும்புவோர் புகுவராயின் அவர்களை மலங்கழுவி ஞானமென்னுந் தோணியிலேற்றி முத்திக்கரையாகிய இறைவனடியைச் சேரச்செய்யுமென்று கூறியவாறும். (ஙு)

**மதிலின் சிறப்பு**

அரிஅயனே முதலமரர் அடங்களழும் வெள்ளங்கள்
விரிசுடர்மா மணிப்பதண மீதெறிந்த திரைவரைகள்
புரிசைமுதல் புறஞ்சூழ்வ பொங்கோதம் கடைநாளில்
வரியரவ மந்தரஞ்சூழ் வடம்போல வயங்குமால். ச

(எ - து.) திருமால் பிரமன்முதலிய தேவர்கள் அடங்கும்படி மேலோங்கி எழுகின்ற நீர் வெள்ளங்கள், முதற்பிராகாரமாகிய மதிலின் புறத்தில் சூழ்ந்துள்ள, கிரணங்களை விட்டெரிக்கும் இரத்தினங்கள் அழுத்திய, உயர்ந்த மேடையின் மீது மோத, அவற்றின் அலைகளால் பொருந்தப்பட்டுள்ள கீற்றுகள், பொங்கி எழுகின்ற அலைகளையுடைய திருப்பாற்கடலைக் கடைந்த காலத்தில், அக்கடல் நடுவில் மத்தாக நாட்டிய மந்தரமலையிற் பூட்டிய வரிகளையுடைய வாசுகி என்னும் வடத்தைப்போல விளங்காநிற்கும் என்பதாம்.

அரியயனே முதலமரர் அடங்க எழும்வெள்ளங்கள், புரிசைமுதற் புறஞ்சூழ்வ விரிசுடர்மாமணிப்பதண மீதெறிந்த திரைவரைகள், பொங்கோதம் கடைநாளில், வரியரவ மந்தரஞ்சூழ் வடம்போல வயங்குமால் எனக்கொண்டு கூட்டுக.

இந்தக் கழுமலநகரமானது சலப்பிரளயத்தில் மூழ்கி அழுந்திப்போகாது அவ்வெள்ளத்தில் தோணிபோல் மிதந்திருக்கும் சிறப்புடைத்தாகலான், அங்ஙனம் மிதக்கும்போது, அந்நகரத்தின் மதிற்புறத்தில் அந்த வெள்ளம் மோது

கின்ற அலைகளால் பொருந்தப்படுங் கீற்றுகள் எவ்வாறு காணப்படுகின்றன வெனின், பூர்வத்தில் பாற்கடலில் நாட்டிய மந்தரமலையில் பூட்டிய வாசுகியாகிய வடத்தைப்போலும் காணப்பட்டன என்க.

எனவே, தோணிபுரம் மந்தரமலை எனவும், அந்தத் தோணிபுரத்தைச் சூழ்ந் திருக்கும் புறமதிலில், ஒவ்வொரு சலப்பிரளயங்கள்தோறும் அலைகள் மோது தலால் பொருந்திய கீற்றுகள் ஒன்றின்மேலொன்று வரிசை வரிசையாய்க்காணப் படும் தோற்றம் மந்தர மலையிற்பூட்டிய வாசுகியாகிய கயிற்றைப்போலு மெனவும் கூறப்பட்டன என்க.

வரிசைவரிசையாய் எங்ஙனங் காணக்கூடும் எனின், ஒவ்வொருவெள்ளத் திலும் முதலில் நீரானது மேலோங்கியும், பின்னர்ப் பிரளய நீக்கத்தில் சிறிது சிறிதாய் அந்நீர் குறைந்தும் வருங்காலத்தில் கீற்றுகள் அணிஅணியாய் கீழ்க் காணப்பட்டுப்போமாகலின் அங்ஙனங் காணக்கூடு மென்க.

இதனால், தோணிபுரம் ஆகலின் சலப்பிரளயம் இத்தனை ஆயிற்றென்று காட்டும் சிறப்பினை யுடைத்தென்று மதிலின் சிறப்புக்கூறியவாறும். (௪)

### பொய்கையின் சிறப்பு

வளம்பயிலும் புறம்பணைப்பால் வாசப்பா சடைமிடைந்த
தளம்பொலியும் புனற்செந்தா மரைச்செவ்வித் தடமலரால்
களம்பயில்நீர்க் கடன்மலர்வ தொருபரிதி எனக்கருதி
இளம்பரிதி பலமலர்ந்தாற் போல்பஉள இலஞ்சிபல. ௫

(எ - து.) தோணிபுரம் என்னும் அந்த நகர்ப்புறத்தின்கண்ணுள்ள, நீர்வள மிக்க விளைநிலங்களின்பக்கத்தில் நீர்நிறைந்து உள்ளனவாய பல பொய்கைகள், பசிய இலைகளின் நடுவில் நெருங்கியிருக்கின்ற, இதழ்களால் பொலிவுபெற்றிருக் கும் அழகினையுடைய நறுமணங்கமழும் செந்தாமரைமலர்களால் பிரகாசிப்பன எவ்வாறிருந்தன வெனின், இடமகன்ற நீர்மயமாகிய கடலின்கண் உதிப்பது ஒரு சூரியன் என்றெண்ணி, எண்ணிறந்த சூரியர்கள் உதித்தாற்போல் உளவாய்க் காணப்பட்டனபோல் இருந்தன என்பதாம்.

வளம்பயிலும் புறம்பணைப்பால், புனல்பல இலஞ்சி பாசடைமிடைந்த தளம் பொலியும் வாசச்செந்தாமரைச் செவ்வித்தடமலரால் களம்பயில் நீர்க்கடன் மலர்வ தொருபரிதி எனக்கருதி, இளம்பரிதி பலமலர்ந்தாற் போல்ப உள எனக் கூட்டுக.

இதனால், தோணிபுரமாகிய நகர்ப்புறத்தில் நீர்மயமாகிய பொய்கைகள் பல உள்ளன என்றும், அவைகளில் தாமரைகள் மலர்ந்திருத்தல் அந்தப்பொய்கை கள், "நாம் பல கடல்போலும் இங்கு சூழ்ந்திருத்தலால் இப்பூமியைச் சூழ்ந்திருக் குங் கடலில் சூரியன் உதிப்பதுபோல் நம்மிடத்திலும் உதித்தாலன்றோ நாம் கடல் என்பதொக்கும்" என்றெண்ணிச் செந்தாமரை மலர்களாகிய பல சூரியர் களைத் தங்களிடத்தில் உதிக்கச் செய்தனபோலும் என்றும் கூறியவாறும்.

சூரியன் கடலில் தோன்றும் அக்காலத்தில் அவனை இளஞ்சூரியன் என்று கூறல் உலகவழக்காதலால், அஃதேபோல் பொய்கையின் கண்ணே காணப்

படும் செந்தாமரைகள் நீரைவிட்டு நீங்காதிருத்தலால் அவைகளை இளஞ்சூரியர்கள் என்றார். அல்லதூஉம், மதிற்புறமானது தன்னிடத்து வந்துமோதும் அலைகளை உள்ளே புகவொட்டாது தடுத்து அவைகளால் ஆக்கப்படும் கீற்றுகளைக் காட்டி இத்தனைப் பிரளயமாயிற்றென்று யாவரையும் அறியச்செய்தல் போல், மதிற்புறத்தைச் சூழ்ந்திருக்கின்ற பொய்கைகளும், அந்தந்தப் பிரளயத்தில் அழிந்து போகத்தக்க சூரியர்களை அங்ஙனம் அழிந்து போகவொட்டாது தங்களிடத்திருத்தி இத்தனைப் பிரளயமாயிற்றென்று காட்டுவது போலுமாம் என்று கொள்ளலுமொன்று. (௫)

இரவும் பகலும் மிகையெனல்

உளங்கொள்மறை வேதியர்தம் ஓமதூ மத்திரவும்
கிளர்ந்ததிரு நீற்றொளியிற் கெழுமியநண் பகலும்மலர்ந்
தளந்தறியாப் பல்லூழி ஆற்றுதலால் அகலிடத்து
விளங்கியஅம் மூதூர்க்கு வேறிரவும் பகலும்மிகை. சா

(எ - து.) வேதங்களிற் கூறப்படும் மந்திரரூபமாகிய சொற்களையும், அவ்வவற்றிற் குரிய பொருள்களையும், அச்சொற்களுக்கும் பொருள்களுக்கும் ஏற்ற கிரியைகளையும் முறையே, சொற்களை வாயினுள்ளும், பொருள்களை மனத்தினுள்ளும், கிரியைகளைக் கைமுதலிய உடம்பின் உறுப்புக்களினுள்ளும் கொண்ட, அந்தணர்களாலே செய்யப்பட்டுவரும் யாகங்களினின்றும் உண்டாகின்ற புகையினால் இரவும், அவர்கள் சரீரங்களில் பிரகாசிக்கின்ற திருநீற்றினின்றும் உண்டாகின்ற நடுப்பகலும் பிரகாசித்து அளவிடுதற்கரிய பலவூழிக்காலத்தைச் செய்து வருதலால், இவ்வுலகின்கண் காணப்படுகின்ற அந்தப் பெரிய தோணிபுரத்திற்கு, வேறாக இரவும் பகலும் என்னும் இரண்டினையும் செய்வதற்குச் சூரியனுமில்லை இருளுமில்லை என்பதாம்.

உலகியல் நீரின்றி அமையாது, அந்நீர் வானின்றி அமையாது, அவ்வான் வேள்வியின்றி அமையாது, அவ்வேள்வி மறையின்றி அமையாது, அம்மறை மறையவரின்றி அமையாது; ஆகலான், அத்தோணிபுரத்திலுள்ள அந்தணர்கள் தண்ணளியுடையவராகலான், மறைகளை முறையே ஓதியுணர்ந்து, வேள்விகளை யியற்றி மழையைப் பெய்வித்து உலகியல் குன்றாவண்ணம் இயற்றுவிக்கும் பூசுரர்களென்பார்—உளங்கொள்மறை வேதியர் எனவும், அவ்வேதியர் ஓர் காலத்திலன்றி நாடோறும் முப்போதும் வேள்விகளை இயற்றுவோராகலான், அவ்வேள்வியினின்றும் எழும் கரியபுகை எங்கும் பரவுதலால் அது இரவைக் காட்டுமென்பார்—வேதியர்தம் ஓமதூமத்திரவெனவும், முப்போதும் வேள்வி இயற்றி ஓமதூமத்தை யுண்டாக்கி, அதனால் இரவை யுண்டாக்கி, அவ்விரவில் அவ்வந்தணர்கள் உறங்கி, மீண்டும் அவ்வுறக்கம் நீங்கி, நித்தியகருமங்களை முடித்து, உடம்பு முற்றும் வெண்ணீறு சண்ணித்தமேனியராய் எங்கும் உலாவி வருதலான், அவ்வெண்ணீற்றொளி தூமத்தாலுண்டாகிய இராப்போதைப் போக்கித் தமது ஒளியைப் பரவச் செய்தலால், அது பகலைக் காட்டுமென்பார்-**கிளர்ந்த திருநீற்றொளியின் கெழுவிய நண்பகலும் மலர்ந்து** எனவும், அவ்வேதியர் சண்ணித்திருக்கும் திருநீறு, எலவுடம்பு இடர் தீர்க்கும் இன்பந்தருவதாயும், தீப்பிணியாயின தீர்ப்பதாயும் உள்ளதாகலின் அத்தகைய திருநீற்றுக்கே தமது உடம்பை அவ்வந்தணர்கள் பை

யாக்கியபடியான், இடும்பைக்கு இடும் பையாயிருந்த அவ்விடும்பை யெல்லாம் ஒழிந்து, இன்பரூபமாய் அவ்வுடம்போடு காலவளவை யறியாது என்றும் வாழ்ந்து, பல ஊழியைக் காணும் அத் தோணிபுரத்தை விடாது அங்ஙனமே யிருந்து இர வைச் செய்யவல்ல ஓமதூமத்தையும், பகலைச் செய்யவல்ல திருநீற்றொளியையும் செய்து வருதலால், அவ்விரவையும் பகலையும் செய்வதற்கு வேறு பொருளும் செயலும் வேண்டாவென்பார்—அளந்தறியாப் பல்லூழி ஆற்றுதலால், அக லிடத்து, விளங்கிய அம்மழதூர்க்கு வேறிரவும் பகலும்மிகை எனவுங் கூறினர்.

இத் திருப்பாட்டான், தோணிபுரநாதன் நாளின் எல்லையைக்காட்டும் பிறப்பை யறியாது அனுதி நித்தியனுயிருப்பது போல், அத்தோணிபுரமும் பகல் இரவு என்னும் அளவினைக் காட்டும் சூரியனை வேண்டாமல், என்றும் அழிவின்றி யுள்ளது என்று கூறியவாறும். (சு)

### பொழிலின் சிறப்பு

பரந்தவிளை வயற்செய்ய பங்கயமாம் பொங்கெரியில்
வரம்பில்வளர் தேமாவின் கனிகிழிந்த மதுநறுநெய்
நிரந்தரநீள் இலைக்கடையால் ஒழுகுதலால் நெடிதவ்வூர்
மரங்களும்ஆ குதிவேட்குந் தகையவென மணந்துளதால். எ

(எ - து.) நெல்விளைகின்ற வயலிட முழுவதும் பரவியிருக்கின்ற செந்தாமரை மலர்களாகிய சுடர் விட்டெரிக்கின்ற ஓமத்தீயில், அவ்வயல்களின் பக்கங்களில் ஓங்கிவளர்ந்திருக்கும் தேமா எனப்படும் மாமரங்களில் உள்ள கனி கள் கிழிய அவற்றினின்றும் ஒழுகுகின்ற தேனுகிய நறுநெய்யானது, நீக்கமின்றி எந்நாளும் நீண்ட இலைகளென்னும் சிருக்கு சிருவங்களின் வழியாய் ஒழுகி விழு கின்றமையான், அத் தோணிபுரத்திலுள்ள நீண்ட மாமரங்களும் ஆகுதி கொடுத்த லாகிய யாகத்தொழிலைச் செய்யும் வைதிக நெறியினை யுடையன என்று சொல் லும்படி மங்கலத்தைப் பொருந்தியுள்ளன என்பதாம்.

இதனுல், தோணிபுரம் என்னும் அத்திருப்பதியினுள் உயர்ந்த அந்தணர்கள் ஓமாக்கினியில் நெய்யைச் சிருக்கு சிருவங்களால் முகந்து எப்பொழுதும் ஆகுதி கொடுத்து வாழ்ந்திருத்தல் போல, அத்திருப்பதியின் புறம்பிலுள்ள உயர்ந்திருக் கும் மாமரங்களும், தமது பக்கத்திலுள்ள வயல்களில் வளர்ந்திருக்கும் செந்தா மரை மலர்களாகிய தீயில், தம்மிடத்துள்ள கனிந்த கனிகளினின்றும் ஒழுகு கின்ற தேனுகிய நெய்யைத் தம்மிடத்துள்ள இலைகளாகிய சிருக்கு சிருவங்களின் வழியாய் எப்பொழுதும் சொரிந்து வாழ்ந்திருக்கு மென்று கூறியவாறும். (எ)

### சந்திரன் தோன்றும் சிறப்பு

வேலையழற் கதிர்படிந்த வியன்கங்குல் வெண்மதியம்
சோலைதொறும் நுழைந்துபுறப் படும்பொழுது துதைந்தமலர்ப்
பாலணைந்து மதுத்தோய்ந்து தாதளைந்து பயின்றந்தி
மாலையெழுஞ் செவ்வொளிய மதியம்போல் வதியுமால். அ

(எ - து.) இங்ஙனமான சிறப்பினையுடைய சோலைகள்தோறும், செங்கதிர்ச் சூரியன் மேற்கடலில் அத்தமிக்கும்பொழுது உண்டாகும் பெரிய இராக்காலத்

தில் உதயமாகின்ற வெள்ளிய சந்திரன் நுழைந்து நுழைந்து புறப்படும் பொழுது, அச்சோலையில் நெருங்கியுள்ள மலர்களிற் பொருந்தி, அம்மலர்களி லுள்ள தேன்வெள்ளத்தில் மூழ்கி, மகரந்தங்களை அளாவி, (இவ்வகையாக) அச் சோலையில் நெடும்பொழுது பழகி, அந்திப் பொழுதில் காணப்படும் சிவந்த கிரணங்களையுடைய செஞ் சந்திரன்போல நிலைபெற்று விளங்கும் என்பதாம்.

இதனால், வெண்ணிறமுடைய சந்திரன் அந்திப் பொழுதில் தோன்றும் அக் காலத்தில் மாத்திரம் செந்நிறமுடையவனாய்ச் செம்மதியனாய்க் காட்டிப் பின்னர்ச் செல்லச்செல்ல முன்போலும் வெண்மதியனாய்ப் பிரகாசித்தல் இயல்பாகலான், அவ்வியல்பினையுடைய சந்திரன், அந்நகரத்தில் செம்மதியனாய்ச் செல்ல வெண்ணி அந்நகர்ப்புறத்திலுள்ள சோலைகள்தோறும் நுழைந்து நுழைந்து அச்சோலையிலுள்ள செம்மலர்களை அடைந்து அம்மலர்களிலுள்ள செந்நிறம் தன் னுடலில் பொருந்தும்படி அவைகளிலுள்ள செவ்விய மதுக்களிற் படிந்து, மக ரந்தங்களை அளாவித் தன்னுடம்பில் செந்நிறம்படிந்த பின்னர்ச் செங்கதிரவன் போல், தானும் செம்மதியனாய்த் தோன்றுவனென்று கூறியவாறும்.

எனவே, அத்தோணிபுரம் இரவுபகலென்பது அற்று, என்றும் ஒருதன்மைய தாகிய காலத்தையுடையதாய்க் காணப்படும் சிறப்புடைத்தாகலான், அத்தகைய சிறப்பினைச் சந்திரன் அறிந்து "நாம் வெண்மதியமாய் இந்நகரினுள்ளே செல்வோ மாயின் நம் தகுதித்தன்மை விகுதித்தன்மையை யடைதலால், காலவேற்றுமை யறியாதது தோணிபுரமென்னும் அச்சிறப்பு ஒழிந்துபோம்; அங்ஙனம் போமாயின், கங்கையின் செருக்கடக்கி ஓர் பிறையளவாயிருந்த நம்மை வாழ்வித்த பெரு மானுக்குத் தீங்கிழைத்த பெரும்பாவம் வந்து சூழுமாகலின் அப்பாவத்துக்கு அஞ்சி மேலே சொல்லியவாறு செம்மதியனாய்ச் செல்லுவோம்" எனக் கொண்டு சென்றனன் என்று தெளிந்தறிதலும் ஒன்று. (அ)

### மலர்களின் சிறப்பு

காமர்திருப் பதியதன்கண் வேதியர்போற் கடிகமழும்
தாமரையும் புல்லிதழும் தயங்கிய நூ லுந்தாங்கித்
தூமருநுண் துகளணிந்து துளிவருகண் ணீர்ததும்பித்
தேமருமென் சுரும்பிசையாற் செழுஞ்சாமம் பாடுமால். கூ

(எ - து.) அழகிய தோணிபுரத்தின்கண் உள்ள அந்தணர்களைப்போல, நறு மணங்கமழும் தாமரைகளும், மெல்லிய புறவிதழ்களையும், நாளத்தில் நூலையும் மேற்கொண்டு, பரிசுத்தமாகிய நுண்ணிய மகரந்தங்களைப் பூசி, துளித்துளியாய் வருகின்ற தேனாகிய கண்ணீரைச் சிந்தி, தேனுண்ண வரும் மென்மையுடைய வண்டுகளின் இனிய ஓசையினால் இன்சுவை மிக்க சாம வேதத்தைப் பாடும் என்பதாம்.

இதனால், வெண்ணிறமுடைய சந்திரன் வெண்ணிற மொழிந்து செந்நிற முடையவனாய்ச் செங்கதிரவன் போல் தோன்றியபடியால், அதுகண்ட தாமரை மலர்கள், குவிதலை யொழிந்து மலர்ந்த முகத்தையுடையனவாய், நமக்குப் பகையாயிருந்த சந்திரன் நமக்கு இனனாயினனே என்று அகமகிழ்ந்து, அத் தோணிபுரத்தில் வாழும் அந்தணர்களைப்போல், புல்லிதழ்களையே பஞ்சகச்சமாக

அணியும் ஆடைபோல் அணிந்தும், நாளத்திலுள்ள நூலையே பூணூலாகத் தரித்தும், மகரந்தப் பொடியையே பரிசுத்தமாகிய திருநீற்றுப் பொடியாகப் பூசியும், துளிக்கும் தேனையே சிந்தும் கண்ணீராகச் சிந்தியும், தம்மிடத்தில் வந்து இசைபாடும் வண்டுகளின் இசையினையே தாம் பாடத்தகும் சாமவேதமாகப் பாடத் தொடங்கின என்று கூறியவாறும். (௯)

பார்ப்பனமகளிரின் சிறப்பு

புனைவார்பொற் குழையசையப் பூந்தானை பின்போக்கி
வினைவாய்ந்த தழல்வேதி மெழுக்குறவெண் சுதையொழுக்கும்
கனைவான முகிற்கூந்தல் கதிர்செய்வட மீன்கற்பின்
மனைவாழ்க்கைக் குலமகளிர் வளம்பொலிவ மாடங்கள். ௧௦

(எ - து.) அத் தோணிபுரத்திலுள்ள மாளிகைகள், பொன்னாலாகிய அழகிற் சிறந்த காதணிகள் காதுகளில் அசையவும், மெல்லிய பட்டாடையின் முன்தானையைப் பின்பக்கத்திற் செருகி, நாடோறும் செய்வதாகிய நித்தியாக்கினிக்குரிய யாகவேதிகைகளைத் திருமெழுக்கிட்டு, அதன்மேல் வெள்ளிய சுண்ணப்பொடியை நீரிற் குழைத்துக் கோலமிடுகின்ற, ஒலிக்கின்ற மேகம்போலும் கரிய கூந்தலையுடைய, ஒளிசெய்கின்ற அருந்ததிபோலும் கற்பினையுடைய, இல்வாழ்க்கைக்குரிய பார்ப்பனக் குலமகளிர் வாழும் வளப்பத்தினை யுடையனவாய்ப் பொலிவு பெற்றிருக்கின்றன என்பதாம்.

இதனால், அத் தோணிபுரத்திலுள்ள பார்ப்பன மகளிர் அருந்ததியைப் போலும் கற்பிற் சிறந்தவரென்றும், இல்லறநெறிகளை யுணர்ந்து அவைகளை வழுவா தியற்றவல்ல குலமகளிரென்றும், தம் கணவர்கள் வைதிக வொழுக்கம் பூண்டொழுக வல்லவராகலான் அவ்வொழுக்கத்திற்கு ஏற்ப ஆடையணிபவரென்றும், அவ்வைதிக ஒழுக்கத்தைக் காக்கவல்ல யாகமேடைகளைத் தாமே அலகிட்டுமெழுகிக் கோலமிட்டு அழகுபெறச் செய்பவரென்றும், அத்தகையோர் வாழும் வாழ்வினையுடையனவாய் மாளிகைகள் பொலிவு பெற்று விளங்கும் என்றும் கூறியவாறும். (௧௦)

பார்ப்பனச்சிறுவர் விளையாட்டுச் சிறப்பு

வேள்விபுரி சடங்கதனை விளையாட்டுப் பண்ணைதொறும்
பூழியுற வகுத்தமைத்துப் பொன்புனைகிண் கிணியொலிப்ப
ஆழிமணிச் சிறுதேருர்ந் தவ்விரதப் பொடியாடும்
வாழிவளர் மறைச்சிறுர் நெருங்கியுள மணிமறுகு. ௧௧

(எ-து.) தாங்கள் விளையாடும் இடங்கள்தோறும், (தங்கள் பெரியோர்களால் செய்யப்பட்டுவரும்) யாகச் செயல்களை, அங்குள்ள புழுதிமண்களைக் கொண்டு விதிமுறையாக வகுத்துச் செய்து சிறிது பொழுது விளையாடி, (அதன்பின்னர்) பொன்னாற் செய்த கிண்கிணிகள் கால்களில் சப்திக்க, சகடங்கள் பூட்டிய இரத்னமயமாகிய சிறு தேர்களை உருட்டுவதாகிய விளையாடலைச் செய்யும்போது, அச்சிறு தேர்களினின்றும் எழுகின்ற தூசுகளால் உடம்பு மூடப்பட்டு இருக்கின்ற வளரும் பருவத்தினையுடைய அப் பார்ப்பனச் சிறுவர்களால் அழகினையுடைய பார்ப்பன வீதிகள் நெருங்கப்பட்டுள்ளனவா யிருக்கும் என்பதாம்.

மேலே சொல்லியவாறு, அந்தணர்களெல்லாம் ஓதலாதிகளில் தலையான அறமாகிய வேள்வித் தொழிலில் தலைப்பட்டிருத்தலாகிய இல்வாழ்க்கையில் இருப்பவரென்றும், அவ்வறத்தை நடத்துதற்குரிய வாழ்க்கைத்துணைநலத்தை (மனையாட்டிகளை) உடையவர்களென்றும், அதைப்போல் புதல்வரைப் பெற்றிருத்தலாகிய பெருஞ் செல்வத்தையும் பெற்றிருப்பவர்களென்றும் அறிக.

மறைச்சிறர் நெருங்கியுள மணிமறுகு என்றதனால் அவ்வந்தணர்கள் கூட்டமன்றி வேறு வருணத்தவர்களுடைய கூட்டங்கள் அங்கு இராவென்றாயிற்று. வேள்விபுரி சடங்கதனை முன்னரும், சிறுதேருருட்டுவதைப் பின்னருங் கூறியதனால், விளையாட்டுப் பருவத்திற்கு ஏற்றவாறு விளையாடத் தொடங்கினும் அவர்களறிவு யாகச்செயலிலேயே ஊறிக் கிடக்கின்றதென்று அவர்களுடைய குலச்சிறப்பு எடுத்துக் கூறியவாறுமாம். (கக)

### மாளிகைக்ளின் சிறப்பு

விடுசுடர்நீண் மணிமறுகின் வெண்சுதைமா ளிகைமேகம்
தொடுகுடுமி நாசிதொறுந் தொடுத்தகொடி சூழ்கங்குல்
உடுவெனுநாள் மலர்அலர உறுபகலில் பலநிறத்தால்
நெடுவிசும்பு தளிர்ப்பதென நெருங்கியுள மருங்கெல்லாம். கஉ

(எ-து.) ஒளி வீசுகின்ற அழகிய பெரிய வீதிகளின் பக்கங்கள் எல்லாம், வெள்ளிய சுண்ணச்சாந்து பூசிய மேகமண்டலத்தை அளாவும் மாளிகைகளின் சிகர நாசிகள் தோறும் கட்டப்பட்ட கொடிகளால் உண்டாகிய இருளில் நக்ஷத்திரங்கள் என்கின்ற புதிய மலர்கள் அக்கொடிகளில் மலர்ந்தாற்போலும் மலர, (பின்னர்) பகற்காலம் வரும்பொழுது, பல நிறங்களுடைய அக்கொடிகள் பரந்த ஆகாயத்தின்கண் அசைந்து கொண்டிருத்தலால், அவ்வாகாயமானது பல நிறங்களையுடைய தளிர்களால் தளிர்த்திருப்பதுபோல நெருங்கியுள்ளன என்பதாம்.

இதனால், அழகிற் சிறந்து விளங்கி நீண்டு பரந்திருக்கும் வீதிகளின் இருபக்கத்தும் உள்ள மாளிகைகள் வெள்ளிய சுண்ணச்சாந்தினால் பூசப்பட்டிருத்தலால் அம்மாளிகைகள் மேகங்களைப்போல் காணப்படுமெனவும், அந்த மாளிகைச் சிகரங்களில் கட்டியிருக்கும் கொடிகள் நெருங்கி யிருளை விளைவித்தலால் அக்கொடிகள் இருள்போல் காணப்படுமெனவும், அவ்விருளில் நக்ஷத்திரங்கள் காணப்படலால் அந்த நக்ஷத்திரங்கள் மலர்கள்போல் அக்கொடிகளில் காணப்படுமெனவும், இரவில் இருளைப் பரப்பிய அக்கொடிகள் பகற்காலத்தில் ஆகாயத்தில் காணப்படலால் அவ்வாகாயமானது தளிர்களால் தளிர்த்திருப்பதுபோல் காணப்படுமெனவும் கூறியவாறும்.

கொடிகளானவை இரவில் ஆகாயத்தில் காணப்படும்பொழுது இருளுருவமாகவும், பகலில் காணப்படும் பொழுது தளிருருவமாகவும் காணப்படுகின்றனவென்க. (கஉ)

### நகரச் சிறப்பு

மடையெங்கு மணிக்குப்பை வயலெங்கும் கயல்வெள்ளம்
புடையெங்கு மலர்ப்பிறங்கல் புறமெங்கும் மகப்பொலிவு
கிடையெங்குங் கலைச்சூழல் கிளர்வெங்கு முரலளிகள்
இடையெங்கு முனிவர்குழாம் எயிலெங்கும் பயில்எழிலி. கரு

(எ - து.) நீர்மடைகள் தோறும் முத்துக்களின் குப்பையே குப்பையாகக் குவிந்திருக்கும்; வயலிடங்கள் தோறும் கயல்மீன்களின் கூட்டங்களே கூட்டங்களாக விருக்கும்; அந்தவயல்களின் பக்க இடங்களில் எல்லாம் பூக்களின் பிரகாசமே பிரகாசமாக விருக்கும்; அந்த நகரத்தின் வெளியிடங்களில் எல்லாம் யாகங்களின் சிறப்பே சிறப்பாகவிருக்கும்; கல்விகற்கும் பாடசாலைகள்தோறும் வேதங்களையும் வேதாங்கங்களையும் ஓதுகின்ற பார்ப்பனச் சிறுவர்களுடைய கூட்டங்களே கூட்டங்களாக விருக்கும்; பூஞ்சோலைகள்தோறும் ஒலிக்கின்ற வண்டின் கூட்டங்களே கூட்டங்களாக விருக்கும்; இவ்விடங்களொழிந்த எனைய இடங்களிலெல்லாம் முனிவர்களுடைய கூட்டங்களே கூட்டங்களாகவிருக்கும்; நகரத்தைச் சூழ்ந்திருக்கும் மதில்கள் தோறும் மேகங்கள் தவழ்ந்திருக்குங் கூட்டங்களே கூட்டங்களாக விருக்கும் என்பதாம்.

இத்திருப்பாட்டான், எந்த எந்த இடங்கள் எந்த எந்தப் பொருள்களால் பிரகாசிக்க வேண்டுமோ, அந்த அந்த இடங்கள் அந்த அந்தப் பொருள்களால் எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டிருக்கும் சிறப்பினை யடைத்து அந்தத் தோணிபுரமென்று கூறியவாறும். (கங)

### ஊர்த்திருநாமத் தொகை

பிரமபுரம் வேணுபுரம் பெரும்புகலி வெங்குருநீர்ப்
பொருவில்திருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால். கச

(எ - து.) பிரமபுர மென்றும், வேணுபுர மென்றும், திருப்புகலி யென்றும், பெரிய வெங்குரு என்றும், ஒப்பிடுவதற்குக் கூடாத நீர்வெள்ளத்தில் மிதக்கும் தோணிபுர மென்றும், திருப்பூந்தரா யென்றும், சிரபுர மென்றும், எல்லாத் தலங்களுக்கும் முற்பட்டுவருகின்ற திருப்புறவ மென்றும், சண்பைநக ரென்றும், அழிதலையறியாத சீகாழி யென்றும், கொச்சைவய மென்றும், போற்றப்படும் திருக்கழுமல மென்றும், ஒவ்வொரு காரணத்தால் வந்த பன்னிரண்டு திருநாமங்களைத் திருப்பெயர்களாக இந்நகரம் உடையது என்பதாம்.

இதனால், (1) பிரமன், (2) இந்திரன், (3) தேவகுரு, (4) சங்கநிதி, பதுமநிதி, (5) இராகு, (6) புறவு(புரு), (7) துருவாசர், (8) சர்ப்பம், (9) பராசரமுனிவர், என்று சொல்லப்பட்ட ஒன்பதின்மரும் பூசித்து வழிபட்ட காரணத்தானும், (10) தேவர்களுக்கெல்லாம் புகலிடமாயிருந்த காரணத்தானும், (11) பிரளயங்களில் அழிவுறாது தோணியாக மிதக்கும் காரணத்தானும், (12) ஆன்மாக்களுடைய மலங்களைக் கழுவுங் காரணத்தானும் பன்னிரண்டு திருநாமங்களைப் பெற்றது இந்நகரமென்று கூறியவாறும்.

இப்பன்னிரண்டு திருநாமங்களுள், பிரமபுரம், தோணிபுரம், கழுமலம் என்னும் மூன்று நாமங்கள் முதல் இடை கடைகளில் நிற்றலால், அது முத்திநகர மென்றும் அறியக் கிடக்கின்றமை காண்க.

எனவே, கழுமலம் என்றதனால் ஆன்மாக்களுக்கு அனாதி பந்தமாயுள்ள ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் பற்றறத் துடைக்கும் ஆற்ற

லுடைத்து அங்நகரமெனவும், தோணிபுரம் என்றதனால் இப்பிறவியில் இடைவிடாது மாறிமாறி வந்து வந்து அலைத்துத் துன்புறுத்துவதாகிய ஆதியான்மிகம் ஆதி தெய்விகம், ஆதி பவுதிகம் என்னும் மூவகைத் துன்பங்களுள் ஆழ்ந்து போகாது, சரியை கிரியை யோகங்களாகிய தோணிகளி லேற்றி இவ்வுலகின்கண் இன்பத்துடன் வாழச் செய்யும் ஆற்றலுடைத்து அங்நகரமெனவும், பிரமபுரம் என்றதனால் சரியையாதி மூன்று வழிபாட்டில் வழாதார்க்குச் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானத்தைத் தந்து, பாச க்ஷயம் பண்ணி, சீவத்தன்மையை யகற்றி, பவமதனையற மாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானத்தைத் தந்து அன்புருவாக்கி, அவ்வன்பே சிவமாய் (பிரமமாய்) அமர்ந்திருப்பதாகிய பெருவாழ்வினை யளிக்கும் ஆற்றலுடைத்து அங்நகரமெனவும் அறியக்கிடத்தலால் முத்தி நகரமென்பதில் ஐயமின்றென்க. (கச)

### சிவபாத இருதயரது வரலாறு

அப்பதியில் அந்தணர்கள் குடிமுதல்வர் ஆசின்மறை
கைப்படுத்த சீலத்துக் கவுணியர்கோத் திரம்விளங்கச்
செப்புநெறி வழிவந்தார் சிவபாத இருதயரென்
றிப்புவிவா ழத்தவஞ்செய் இயல்பினர் உளரானார். கரு

(எ - து.) மேலேசொல்லிய பன்னிரண்டு திருப்பெயருடைய அத் திருப்பதியிலிருக்கும் அந்தணர்களது குலத்தில் முதன்மைபெற்ற சிறப்பினையுடையவரும், தீநெறிகளை விலக்கி நன்னெறிகளைக் கூறும் வேதங்களால் கைக்கொள்ளப்பட்ட சைவ வொழுக்கங்களைக் கைக்கொண்ட கவுணியர் கோத்திரமானது ஏனைய கோத்திரங்களினும் சிறந்து விளங்கும்படி, அந்தக் கோத்திரத்திற்குரிய சூத்திரத்தான் விதிக்கப்படும் அந்த நெறியின்வழியே வந்தவருமாகிய, சிவபாத இருதயரென்று சொல்லப்படும் வேதியர்பெருமான் ஒருவர், இவ்வுலகமானது புறச்சமய நெறிகளொழிந்து சைவசமய நெறியில் வாழ, தாம் தவஞ்செய்யும்படியான இயல்பினையுடையவராய் இருந்தனர் என்பதாம்.

இதனால், சிவபாத இருதயர் என்று சொல்லப்படும் அரிய திருநாமத்தையுடைய அப்பெரியார், மேலேசொல்லிய துவாதச நாமங்களுடைய கழுமல நகரத்தில் அந்தணர் குலத்திலே வந்தவரென்றும், வேதங்களில் பூர்வபக்ஷிகளை நோக்கிக் கூறும் அவ்விதிகளைக் கைக்கொள்ளாது, சித்தாந்திகளை நோக்கிக் கூறும் அவ்விதிகளைக் கொண்டொழுகும் கவுணியகோத்திரமும் சூத்திரமும் உடையவரென்றும், இவ்வுலகமானது தாம் கொண்டொழுகவல்ல வைதிக சைவநெறியின் வழிப்பட்டு ஒழுகவேண்டும் என்று தவஞ்செய்யும் இயல்பினையுடையவரென்றும் கூறியவாறும்.

சிவபாத இருதயரென்னும் திருநாமத்துக்கு எற்றபடி அவர் அவதரித்த பதியும் கழுமலமாகிய பிரமபுரமே, அவரொழுக்கத்துக்குரிய கோத்திர சூத்திரங்களும் பிரஹ்ம சம்பந்தமுடையவைகளே, அவரது வாக்குக் காயங்களாற் செய்யப்படும் செயல்களும் வேதநெறி தழைத்தோங்கவும், சைவத்துறை விளங்கவும், பூதபரம்பரை பொலியவுமான தவச் செயல்களேயாம் என்று கூறியவாறுமாம். (கரு)

### சிவபாத இருதயரது வாழ்க்கைத்துணைநலம்

மற்றவர்தம் திருமனையார் வாய்ந்தமறை மரபின்வரு
பெற்றியினர் எவ்வுலகும் பெறற்கரிய பெருமையினர்
பொற்புடைய பகவதியார் எனப்போற்றும் பெயருடையார்
கற்புமேம் படுசிறப்பால் கணவனர் கருத்தமைந்தார். கசு

(எ - து.) அந்தச் சிவபாத இருதயரது மனையாட்டியாராகிய அம்மணியார், சிவபாத இருதயர் எந்த வேதத்தை அனுட்டித்தாரோ அந்த வேதத்தையே அனுட்டித்து வரும் அந்தணர் மரபிலே வந்தவரும், எந்த வுலகத்தாரானும் பெறுதற்கரிய சிறந்த பெருமையினை யுடையவரும், சிவசத்தி நாமங்களிற் சிறந்து அழகுபெற்றுடைய பகவதியார் என்று பெரியோரெல்லாம் போற்றப் படும் திருப்பெயருடையவரும், தம்மைக் கொண்ட கணவனர் கருத்துக்கு அமைந்த கற்பிலே மேம்பட்டவருமாய் இருந்தனர் என்பதாம்.

இல்வாழ்க்கைக்குத் துணைவியைக் கொள்ளுமவர் மனைவிக்குரிய கோத்திர சூத்திரங்கள் வேறுபட்டிருக்க வேண்டுமே யன்றி வேதசம்பந்தம் மாறுபட்டிருத்தல் கூடாதென்னும் அவ்வுண்மை தோன்ற - **மற்றவர் தம் திருமனையார் வாய்ந்த மறை மரபின்வரு பெற்றியினர்** என்றார். எனவே, அந்தணர்கள் ருக்வேதிகள், யஜுர்வேதிகள், சாமவேதிகள், அதர்வண வேதிகளென நான்கு வகைப்பட்டிருத்தல் இயல்பாதலால், பெண்ணைக் கொள்வோரும் கொடுப்போரும் ஒருவேத சம்பந்திகளாகவே இருத்தல் வேண்டுமென்க.

பகவதியார் தமக்கு உலகத்தாரால் வரும் சிறப்பு நலங்கருதி கற்பிலக்கணத்துக்குரிய குணங்களையும் செயல்களையுங் கொள்ளாது, தம்மைக் கொண்ட கணவனருக்கு உலகத்தாரால் வரவேண்டிய சிறப்பு நலங்கருதி கற்பிலக்கணங்களையும் செயல்களையுங்கொண்டு, இம்மை அம்மை வீடு என்னும்மூன்றிடத்தும் அவரடைய வேண்டிய பயன்களுக்குரிய அறங்களை அவரியற்றுதற்குத் துணையாயிருக்கும் வாழ்க்கைத்துணைநலத்திற் சிறந்தவரென்பது தோன்ற - **கற்பு மேம்படு சிறப்பாற் கணவனர் கருத்தமைந்தார்** என்றார்.

இதனல், சிவபாத இருதயர்தம் மனைவியார் அவர் கொண்டிருக்கும் வேத சம்பந்திகளிடத்தில் பிறந்தவரென்றும், பகவதியார் என்னும் திருநாம முடைமையால் யாவராலும் போற்றத்தகும் பெருமையுடையவரென்றும், கணவனர் கருத்துக்கு அமைந்த கற்பினையுடையவரென்றும் கூறியவாறும். (கசு)

### இல்லற வாழ்க்கைச் சிறப்பு

மரபிரண்டும் சைவநெறி வழிவந்த கேண்மையினர்
அரவணிந்த சடைமுடியார் அடியலால் அறியாது
பரவுதிரு நீற்றன்பு பாலிக்குந் தன்மையராய்
விரவுமறை மனைவாழ்க்கை வியப்பெய்த மேவுநாள். கள

(எ - து.) தாய்மரபு தந்தைமரபு என்னும் இரண்டு மரபும் வைதிக சைவ நெறியின் கண்வழுவாது வந்த உரிமை வாய்க்கப்பெற்ற அவ்விருவரும், பாம் பணிந்த சடைமுடியினையுடைய இறைவனது திருவடியல்லது மற்றென்றினையும்

பொருளென்றறியாது, பொருளென்று அறியவந்த அத்திருவடியை அடைவிக்க வல்ல திருநீற்றின்கண் விளைவிக்கவல்ல அன்பினையே பாதுகாத்துவருந்தன்மை யுடையவர்களாய், வேதங்களால் நல்லறமென்று தழுவப்பட்ட இல்வாழ்க்கை யோடு யாவரும் அதிசயிக்க வாழும் நாளில்.

விதையினை வேண்டினுன் பதர் முதலிய குற்றங்களற்ற விதையினையும், நிலம் வேண்டினுன் வித்தானது செழுமைகொண்டு விளையத்தக்க விளைநிலத்தையும் வேண்டல் முறைமையாதல்போல், மகளுக்குரியார் மகனின் தந்தையினுடைய நல்லொழுக்கங்களை ஆராய்ந்து நன்மகனையும், மகனுக்குரியார் மகளின் தாயி னுடைய நல்லொழுக்கங்களை ஆராய்ந்து நன்மகளையும் கொள்ளுதல் முறைமை என்பார் - **மரபிரண்டும்** என்றார். மகளுக்குரியார், மகனது தந்தையின் மரபும், மகனுக்குரியார், மகளது தாயின் மரபும் ஆகிய குலமரபு ஒத்திருத்தலைக் கண்ட பின்னர், அஃதேபோல் சமயமரபும் ஒத்திருந்தாலன்றி வைதிகத்தோடு சைவ வொழுக்கம் நடைபெறுதல் கூடாதாகலால், வைதிகநெறி வழுவாது நடைபெறு தற்குக் குலமரபு குன்றாதிருத்தலையும், சைவநெறி வழுவாது நடைபெறுதற்குச் சமயநெறி குன்றாதிருத்தலையும் ஆராய்ந்து நோக்குதல் முறைமை என்பார், **மரபு இரண்டும் சைவநெறி வழிவந்த கேண்மையினர்** என்றார்.

எனவே, மரபு இரண்டென்றதனால் குலமரபு ஒன்று, சமயமரபு ஒன்று ஆக இரண்டு மரபென்க. குலமரபும் சமயமரபும் ஒத்திருக்கப் பெறுதல் இறை வனது அடியன்றி வேறொன்று அறியா திருத்தற்கே என்பார்—**அரவணிந்த சடைமுடியார் அடியலால் அறியாது** என்றார். அஃதாவது, குலமரபும் சமய மரபும் ஒத்திருக்கப் பெறுதல் இல்லறத்தை வழுவாது நடத்தற்காம். அந்த அறமா வது தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என ஐந்தினையோம்புதல். இவ்வைந்தனுள் முன்னைய இரண்டும் கட்புலனால் அறியாதாரைநினைந்துசெய்வன. பின்னையவாகிய ஒக்கலும், தானும் பிறர்க் கீதலல்லாதன; ஆகவே, இடைநின்ற விருந்தோம்பலே சிறப்புடைத்து. அஃதாவது, இல்லறங்கட்கு முதலாயுள்ள பிறர்க்கீதலை மேற்கொண்டது விருந்தோம்ப லென்க. விருந்தோம்பலெனவே சிவனடியார்க்குவேண்டுவன கொடுத்து உண்டி முதலானவற்றால் உபசரித்தலாம். ஆகவே, அடியவரைப் பூசித்த லன்றி வேறொன்றறியார் என்றார்.

இனி, அடியவரைப் பூசித்தலன்றி வேறொன்றறியா ரென்ற இதனை வலி யுறுத்தவே - **பரவு திருநீற்றன்பு பாலிக்குந் தன்மையராய்** என்றார். எனவே, திருநீற்றினிடத்து அன்பு பாலித்தல் அடியாரிடத்தன்றி பாலித்தல் முடியாது என்க. அது இல்வாழ்க்கையில் வாழும் இயல்போடு வாழ்ந்தாலன்றி யமையா தென்பார் - **விரவுமறை மனைவாழ்க்கை வியப்பெய்த மேவுநாள்** என்றார்.

இதனால், அறங்களுட் சிறந்த அறம் விருந்தினராகிய அடியவரை ஓம்பலா கிய அறமென்றும், அவ்வறத்தை நடைபெறுவிக்கும் அறம் இல்லறமென்றும், அவ்வறத்தை நடத்துவோர் இல்வாழ்க்கைக்குரிய தலைவன் தலைவி என்பவர் என்றும், அவ்விருவரும் மரபினும் சைவ நெறியினும் தவறுதல் இல்லாதவராய், அரவணிந்த சடைமுடியார் அடியே திருவும் மெய்ப்பொருளும் செல்வமு மாகிய எல்லாப் பொருளாகவும், பரவு திருநீற்றன்பே அப்பொருளால் அடை யப்படும் பயனாகவும் எண்ணும் பண்புடையராயிருத்தல் வேண்டுமென்றும், இங் ஙனங் கூறிவந்த முறைப்படி காணப்பெறுவாராயின் அவர்களை உலகம் வியந்து

கூறுமென்றும், இங்ஙனம் வியந்து கூறும் சிறந்த நலமுடையார் இந்தச் சிவபாத இருதயரும், பகவதியாருமேயாமென்றும் இத்திருப்பாட்டான் கூறியவாறும்.

தெள்ளிதிற் சிறந்த இன்தமிழ்ப்புலவோர் தாம் எண்ணியதொன்றைச் சொல்லப் புகுவாராயின், நுதலிப் புகுதல் அவரது இயற்கை. அஃதாவது, தாம் எண்ணிய விரிந்த பொருளைச் சுருங்கச் சொல்லலென்னும் அழகுடைச் சொற்களில் விளங்கும்படியாக வைத்துப் பதங்களை விரிக்காது, தாம் எண்ணிய பொருளுக்கேற்ப ஒருபதத்தானே இருபதத்தானே முப்பதத்தானே முடித்து 'இதனைச் சொல்லத் தொடங்கினேன்' என்று ஆன்றோரெல்லாம் தொன்று தொட்டுக் கூறும் இயல்பும் மரபுமாம். ஆகலான், ஆன்றோர்களுட் சிறந்த ஆசிரியர் சேக்கிழார் திருஞானசம்பந்த மூர்த்திகளுடைய புராணத்தைச் சொல்லத் தொடங்கிய காலத்தில், அப்புராணத்தில் அடங்கியிருக்கும் விஷயங்கள் இவையாமென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் எடுத்தோதாராயின் வைதிக சைவ சித்தாந்த சைவர்களுக்கு இப் புராணத்தில் அவா எழாது. அது எழாதாயின், அப்பொருளை உணரவேண்டிய அவரது உணர்வுக்கு ஆற்றலுண்டாகாது. அது உண்டாகாதாயின், அம்மெய்ப்பொருளைச் சிந்தித்தற்கு அவரது சிந்தனை ஊக்கங் கொண்டெழாது. ஆகவே, அவாவும் ஆற்றலும், ஊக்கப்பாடும் ஆகிய மூன்றும் அவர்களுக்கு ஒருங்கே எழ - "வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க, பூதபரம்பரை பொலிய" திருஞானசம்பந்தர் "புனிதவாய் மலர்ந்தழுத திருத்தொண்டு பரவுவாம்" என்று முதற்றிருப்பாசுரத்தால் கூறியருளினர்.

எனவே, பிறவுயிர்களிடத்துக் கருணை செய்வதற்குரியாரிடத்தும், அக் கருணையை ஏற்றற்குரியாரிடத்தும் அவை இரண்டும் நிகழவருங் காலம் வருமாயின் அழுகை வெளிப்படுமென்பது நிச்சயம். அஃதாவது, தம்மக்களுக்கு வேண்டியவற்றைக் கருணையுடன் யாதும் செய்தற்குரியாராகிய அம்மையப்பரிடத்தும், அவ்வம்மையப்பரையே எதிர்பார்க்கும் அன்பினை இயல்பாகவுடைய அம்மக்களிடத்தும் அழுதலாகிய செயல் நிகழக் காண்கின்றோம். இவ்வுரிமை அன்பரெல்லாம் உணர்ந்து அகமகிழவே - புனிதவாய் மலர்ந்தழுத என்று தமக்கு ஞானசம்பந்தரது திருவாக்கிலுள்ள பேரன்பினை அறிவிக்க, தாமும் கண்ணீரரும்பிப் புனிதவாய் மலர்ந்து அங்ஙனங் கூறினரென்க.

முப்பொருளுண்மையை உண்மையாக வுணர்ந்து, மும்மலங்களு மொழிந்து, மலங்களைச் சுத்திசெய்யவந்த திரோதானசத்தியானும், ஆன்மாக்களைச் சுத்தி செய்யவந்த அருட்சத்தியானும், அருள் வசப்பட்டவர்களுக்குச்சிவமாந் தன்மைப் பெருவாழ்வளிக்கவந்த சிவத்தானும் பெறவேண்டிய முப்போகங்களும் பெற்று, ஆன்மாக்கள் வாழ வந்த சிவஞான குருமணியாகலான், முப்பொருளுண்மையையும், சிவத்தினாலும், சிவசத்திகளாலும் ஆகத்தகும் செயல்களையும், அச்செயல்களின் இறுதியில் அடையப்படும் முப்போகங்களையும், சுருதி முறையானும் யுக்தி முறையானும், சுவானுபவமுறையானும் நன்கு விளக்குவது அவரது புராணம் என்னும் அப் பெருந்தகைச் சிறப்புத்தோன்ற - திருத்தொண்டு பரவுவாம் என்றார்.

எனவே, இருவினையொப்பும் மலபரிபாகமும் உண்டாகக் கூறப்படும் வேத நெறிகளும், சத்திநிபாதம் வருவதற்கான சைவத்துறைகளும், அங்ஙனம் சத்திநிபாதம் வரப்பெற்றார்க்குச் சிவபெருமான் குருமூர்த்தியாய் வந்து சுருதி குரு சுவானுபவமாக உபதேசிக்கும் உபதேச முறைகளும் இப்புராணத்துள் ஆங்காங்

குப் பல முறையாக ஓதப்பட்டிருத்தலான், அவையிற்றை எடுத்துக் கூறி யாவருள்ளத்தும் பரவச் செய்தல் சிவனருட் சம்பந்தமாகிய பெரும்பணியாகும் என்று அத்தொண்டின் சிறப்புத் தோன்றவும் - திருத்தொண்டு பரவுவாம் என்றார்.

இதனால், திருஞானசம்பந்த மூர்த்திகள் பரமாசாரிய மூர்த்தியாய் வந்தவராகலான், அவரது புராணத்துள் அம்மூர்த்திகள் புகுந்த கோலத்துக்கேற்பப் புகலியிற் புகுந்து செய்யவந்த செயல்கள் இத்துணைத்தா மென்று முதற்பாசுரத்தானும்; புகலி என்னும் அப்பதி சகல ஆன்மாக்களுடைய மலங்களையும் கழுவும் இடமாயுள்ளதென்று இரண்டாம் பாசுரத்தானும்; அங்ஙனம் மலங்கழுவப் பெற்றவர்கள் எடுத்த இப்பிறவியினால் உண்டாகும் துன்பசாகரத்தில் அழுந்தா வண்ணம் தோணியாய்த் தாங்குந் தன்மை யுடைத்தாய்ப் பிரளயங்கள் தோறும் அழியாது தோணிபோல் மிதப்பதென்று மூன்றாம் பாசுரத்தானும்; எந்த ஊழியினும் தோணியாகவேயுள்ள தென்பதை யாவரும் அறியப் பிரளயங்கள்தோறும் வந்து மதில்களில் தாக்கும் அலைகளால் உண்டாகிய கீற்றுகளின் வரிசைகளே சான்றென்று நான்காம் பாசுரத்தானும்; அந்த அடையாளங்களே யன்றி அந்தந்தப் பிரளயங்களிலும் அழிவெய்த வேண்டிய சூரியர்கள் அழிந்து போகாமல் செந்தாமரைகளாய் அத்தோணிபுரத்தைச் சூழ்ந்துள்ள வயல்களில் உள்ளனர் என்று ஐந்தாம் பாசுரத்தானும்; பிரளயத்தால் அழிவெய்தாதிருக்கும் அத்தோணிபுரத்தில் இரவு பகல் என்பவற்றை, அத்தோணிபுரத்திலுள்ள அந்தணர்களால் உண்டாக்கப்படும் ஓமதூமப்புகையும், அவர்கள் உடம்பிற் பூசும் திருநீற்றினின்றும் உண்டாகும் ஒளியுமே செய்யுமென்று ஆறாம் பாசுரத்தானும்; அத்தோணிபுரத்திலுள்ள பொழில்கள் தாம் செழுமை யடைந்திருப்பது இங்குள்ள அந்தணர்கள் இடைவிடாது செய்துவரும் யாகங்களினாலன்றோ என்று உணர்ந்து அவைகளும் தாங்கள் செய்யக்கூடிய முறைப்படி யாகங்களைச் செய்வன என்று ஏழாம் பாசுரத்தானும்; அத்தோணிபுரம் பகல் இரவென்னும் காலத்துட் படாதது என்பதைச் சந்திரன் உணர்ந்து இராக்காலத்தைக் காட்டும் தன்னுருவத்தை மாற்றிக்கொள்ள அங்குள்ள சோலைகள் தோறும் புகுந்து புகுந்து மலர்களிலுள்ள மகரந்தங்களிற் படிந்து வெண்மதி என்பதை யொழித்து செஞ்ஞாயிறாய் அங்கு உலாவிச் செல்வானென்று எட்டாம் பாசுரத்தானும்; செந்தாமரைகள் தம்மினங்களைக் குவிந்திருக்கும்படி கவலையை விளைவித்து வந்த சந்திரன் சூரியனாய்ப் பிரகாசித்தலைக் கண்டு மகிழ்ந்து, அந்தணர்களைப்போல் சாமவேதத்தாற் பாடவனவா யிருப்பன என்று ஒன்பதாம் பாசுரத்தானும்; இங்ஙனமான வளப்பங்களில் மிகுந்திருக்கும் அத்தோணிபுரத்திலுள்ள பார்ப்பன மாதர்களெல்லாம், தங்களுக்குள்ள கற்புநிலையைக் காட்டுதலில் பெரிய சான்றாகவுள்ளது அக்கினியாதலால், அவ்வக்கினிக்கிடமாய்த் தங்கள் கிருகத்தில் அமைந்துள்ள யாகவேதியைத் திருமெழுகிடுதல் முதலியவற்றான் அலங்கரிக்குந் தொழிலில் மிக ஊக்கமுடையவரென்று பத்தாம் பாசுரத்தானும்; அவர்களுடைய சிறுவர்களும் யாகஞ் செய்வதையே தாங்கள் செய்யத்தகும் விளையாடல்களாக உடையவர்களென்று பதினொன்றாம் பாசுரத்தானும்; ஏனைய மாளிகை முதலியவற்றினுடைய சில பல சிறப்புகளையும் அந்நகரம் ஒருங்கே யுடையன என்று பன்னிரண்டு, பதின்மூன்று என்னும் இரண்டு பாசுரங்களானும்; அப்பதிக்குள்ள திருநாமங்கள் பன்னிரண்டென்று பதினான்காம் பாசுரத்தானும்; அத்திருப்பதியின்கண் நமது ஞானசம்பந்த மணிக்குத் தாதையாகும்

பெருந்தவமுடைய சிவபாத இருதயர், கோத்திர சூத்திர விசேடங்களையும் இவ்வுலகம் வாழும் வகைக்கு ஏதுவான தவஞ்செய்யும் இயல்பினையும் வாய்ந்தவர் என்று பதினைந்தாம் பாசுரத்தானும்; அச்சிவபாத இருதயருடைய பத்தினியாராகிய பகவதியாரது அடங்காப் பெருமை இவ்வகைத்தாமென்று பதினாறாம் பாசுரத்தானும்; அவ்விருவரும் மரபின்முறையினும், சைவநெறியின் வழியினும் ஒற்றுமையுடையராய்ச் சிவனடியே சிந்திக்கும் அழிவிலாச் செல்வமுடையராயும், திருநீற்றன்பே பாலிக்குந் தன்மையராயும் இல்லறத்தின்கண் இருந்து அவ்வாழ்க்கையை மேம்படுத்திய சிறப்பினரென்று பதினேழாம் பாசுரத்தானும் வியந்து கூறினாரென்க.

இனி, பதினெட்டாம் பாசுரம் முதல் சிவபாத இருதயர் வைதிக சைவ சமயம் குன்றியதைக்கண்டு அவர் மனங்குன்றி இடருழக்கின்றமையையும், அவ்விடர் நீங்குமாறு புத்திரப்பேற்றை விரும்புகின்றமையையும்;அவர் விரும்பியபடியே புத்திரப்பேறுண்டான முறைமையையும்; அப்பேற்றினைக் கண்டு பத்து மாதமும் அவர்கள் நடத்திவந்த சடங்கின் சிறப்புகளையும், பின்னர் அவதாரம் செய்தற்குக் கூடிய நாளின் சிறப்பினையும், பின்னர் வேதநெறியும் சைவத்துறையும் ஓங்கி விளங்க அவதாரஞ் செய்த சிறப்பினையும், அதன்பின்னர் உலகினரெல்லாம் மகிழும் மகிழ்ச்சியின் சிறப்பினையும், அம்மகிழ்ச்சியின் சிறப்பினால் அவரவரும் நகரத்தைச் சிறப்பிக்கும் சிறப்பினையும், அதன்பின்னர் நாமகரணச் சடங்கிற்குரிய அரியவைதிக சைவநெறியின்வழி நடத்திய சிறப்பினையும், அதன்பின்னர்ப் பாலூட்டல் முதலிய சடங்குகளின் சிறப்புகளையும், அவற்றின்பின்னர்த் தாலாட்டு செங்கீரை சப்பாணி தவழ்தல் வருகை முதலியனவற்றால் நிகழ்விக்கும் செயல்களால் ஆனந்தப் பெருக்கை விளைவித்தலையும், அதன்பின்னர்த் தளர்நடை முதலியவற்றின் சிறப்புகளையுங் கூறுவாராயினர். (கள)

புறச்சமயமேலீட்டைக் கண்டு வருந்தல்

மேதினிமேல் சமண்கையர் சாக்கியர்தம் பொய்ம்மிகுத்தே
ஆதிஅரு மறைவழக்கம் அருகிஅரன் அடியார்பால்
பூதிசா தனவிளக்கம் போற்றல்பெறு தொழியக்கண்
டேதமில்சீர்ச் சிவபாத இருதயர்தாம் இடருழந்தார். கஅ

(எ-து.) வைதிக சைவ ஒழுக்கத்தில் குன்றுதல் இல்லாத சிறப்பினையுடைய சிவபாத இருதயர், சைவமணம் வளர்ந்தோங்கும் இப்பரதகண்டத்தில், சமண்கையரும் சாக்கியருமாகிய உவலைச்சமயிகளுடைய பொய்ம்மார்க்க வொழுக்கமும் பொய்ஞ்ஞானமும் மிகுதிப்பட்டுப் பரவித் தொன்றுதொட்டுவரும் அரிய மறையொழுக்கங் குன்றி, சிவனடியார்கள்பால் போகயோக சாதனமாய் விளங்கும் விபூதி உருத்திராக்க பஞ்சாக்கரங்கள் பொலிவுபெற்றுப் பரிபாலிக்கப்பட்டு வராது ஒழிந்திருப்பதைக் கண்டு, பெருந் துன்பத்தில் ஆழ்ந்து வருந்தினர் என்பதாம்.

சிவபாத இருதயர் தாம், மேதினிமேல் சமண்கையர்......பொய்ம்மிகுத்தே, ......மறை வழக்கம் அருகி, அடியார்பால் பூதிசாதனம்......ஒழியக் கண்டு இடருழந்தார் எனக் கூட்டிப் பொருள்கொள்க.

இதனால், சமண சாக்கியாதி சமயங்களெல்லாம் இம்மேதினிமேல் இறந்துபடு கின்றன. அஃதேனெனின், அச்சமயத் தெய்வங்களெல்லாம் இப்பூமியின்கண் பிறந்திருந்து இறந்தமை புராணங்களால் கேட்கப்படுகின்ற காரணத்தாலென்க. "இவர்களெல்லாம் சாகுந் தெய்வங்களாகவே போக, சாவாத்தெய்வமாக என்றும் உள்ளவன் சிவன் ஒருவனே. ஆகவே, அச்சிவபெருமான் இவ்வுலகின்கண் ஆன்மாக்களுக்குத் தனது ஒழுக்க வழக்கமே வழங்கிவரக் கூறியதாகிய வேத வழக்கமும், வேதவொழுக்கத்தால் பிரகாசிப்பதாகிய சைவவழக்கமாகிய பூதிசாதனுதி விளக்கமும் ஓங்கிப் பிரகாசிக்க வேண்டியனவா யிருக்க, அவை குன்றி, சாகுந் தெய்வங்களுடைய நூல் வழக்கமும், அத்தெய்வங்களுடைய அடையாளக் குறிகளின் விளக்கமும் ஓங்கிப் பிரகாசிக்குமாயின், சிவபாத இருதயன் என நாம் பெயர் பெற்றது எற்றுக்கு? வைதிக சைவ அந்தணர் குலத்திற் பிறந்தது எற்றுக்கு?" என்று மனம் நொந்து பிறப்பிறப்பில்லாத் தெய்வமாகிய பரசிவத்தை நினைந்து வருந்தினர் சிவபாத இருதயரென்று கூறியவாறும். (கஅ)

### பரசமயங்களை நிராகரிக்கவல்ல மகப்பேறு வேண்டல்

மனையறத்தில் இன்பமுறு மகப்பெறுவான் விரும்புவார்
அனையநிலை தலைநின்றே ஆடியசே வடிக்கமலம்
நினைவுறமுன் பரசமயம் நிராகரித்து நீறுக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றும் தவம்புரிந்தார். கசு

(எ - து.) சமண சாக்கியாதி துர்ம்மதங்கள் ஒழியவும், அடியவர்கள்பால் பூதிசாதனங்கள் பொலிவு பெற்றோங்கவும் நினைந்த சிவபாத இருதயர், அவ்விரு செயலும் வேறொருவர்பால் நிகழாது தம்பாலே நிகழவேண்டுமென்று எண்ணி இல்லறத்தின்கண் இன்பம் அடைதற்குக் காரணமான புத்திரனைப் பெறவேண்டுமென்கிற ஆசையுடையவராய், அவ்வெண்ணத்திலேயே முற்பட்டு நின்று, (அவ்வெண்ணம் முற்றுப்பெறுமாறு) பொன்னம்பலத்தின் கண்ணே நடனஞ் செய்தருளுகின்ற தாமரைமலர் போன்ற குஞ்சிதபாதமானது தமது உள்ளத்திற் பொருந்த வைத்து, வேத பாஹ்யமா (புறம்பா) கிய சமணுதி சமயங்களை நிராகரணஞ் செய்து, அவருடைய ஒழுக்கங்களையும் தெய்வங்களையும் பாழ்படுத்தும், இரத்தினுபரணங்களால் அலங்கரிக்கப் பெற்றிருக்கும் அரிய மகனை யான் அடையும் படியாகச் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்துப் போற்றும்படியான தவத்தை எப்பொழுதும் செய்து வரலாயினர் என்பதாம்.

அருமறை யொழுக்கமும், பூதிசாதனப் பொலிவும் ஒழியக்கண்டு இடருழந்த சிவபாத இருதயர் அந்த இடரோடு தாம் நிற்கும் நிலையாகிய இல்லற நிலையில் தாம் பெறவேண்டிய புத்திரப்பேற்றைப் பெருமையாகிய இடரும் உடையவராதலால் அவ்விருவகை யிடரும் மகப்பே றொன்றினுலேயே நீங்கி இன்பம்பெற எண்ணினு ரென்பார் - **மனையறத்தில் இன்பமுறு மகப்பெறுவான் விரும்புவார்** என்றூர்

இனி, பரசமயம் நிராகரித்து நீறுக்கும் செயல் வேறொருவர்பால் நிகழாது தமக்குவரும் மகனுலேயே நிகழ எண்ணிய காரணம் யாது கருதியோ எனின், "நாம் இல்லறநிலையில் நிற்கின்றோம்; இந்நிலையில் நிற்கும் இன்பநிலை மகப்பே றன்றி வேறொன்றில்லை. ஏனெனின், 'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த

மக்கட்பே றல்ல பிற" என்ருர் ஆசிரியர் திருவள்ளுவனர். அம்மக்கட் பேறு அறிவறிந்த மக்கட்பேறென்றதனுல் வேத சிவாகமங்களில் அறியவேண்டு வனவற்றை அறிந்தமகனு யிருத்தல் வேண்டுமென்று வெளியாயிற்று. அங்ஙனம் வேதசிவாகமங்களில் அறியவேண்டுவன யாவையெனின், வேத சிவாகமங்கட்குப் புறமாயுள்ள சமயங்களை நிராகரணஞ் செய்ய உவமையிலாக் கலைஞானமும், உணர்வரிய மெய்ஞ்ஞானமும், அவைகட்கு அகமாயுள்ள சைவ சமயத்தைத் தாப னம் செய்யச் சிவனடியே சிந்திக்கும் சிவஞானமும், பவமதனை யறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமுமேயாம்.

"இங்ஙனமான மக்கட்பேறே அறிவுடையாரால் பேறென மதிக்கத்தக்கது; ஏனையவெல்லாம் மதிக்கத்தகாதனவாம். மதிக்கத்தக்க மக்கட்பேற்றைப் பெறுவோமாயின், எழுபிறப்புந் தீயவை நம்மைத் தீண்டா. அஃதாவது, வினைவயத்தால் விடாதுவரும் பிறப்பேழின்கண்ணும் தொடர்ந்துவரும் தீவினை வளராது தேய்தற்குக் காரணமாகிய நல்வினைகளைச் செய்வானுகலின், தீயவை நம்மைத் தீண்டாவாம். நமக்கு எழுபிறப்புந் தீயவை தீண்டாவாறு செய்வதே யல்லாமல், அவ்வறிவுடைமகனுல் அறிவுடை மன்னுயிர்க்கெல்லாம் நம்மினும் இனிமை உண்டாகும்.

"இனி, அறிவுடை மன்னுயிர் ஆவார்,யாவர்? எனின், ஈசன் அடியவரேயாவர். அவரெல்லாம் நாம் பெறும் இன்பத்தினும் மேம்படப் பெறுவரன்றே! அவ் வின்பமாவது, சமண சாக்கியாதி பொய்ச் சமயங்கள் அழுங்கி, பூதிசாதனம் விளங்கி, அருமறை யொழுக்கம் வழங்கி வருவதனுல் உண்டாகும் பேரின்பமே யாம். நாம் முன் எண்ணிய இன்பமும் இதுவே யாம். ஆகலின், நமக்கு எழு பிறப்புந் தீயவை தீண்டாவாறும், மன்னுயிர்க்கெல்லாம் நம்மினும் இன்பம் உண்டாமாறும் செய்யவல்ல புத்திரப்பேறே வேண்டு"மென்னும் அந்த ஆசையி லேயே நிலைபெற்று நின்றனரென்பார் அனையநிலை தலைநின்றே என்ருர்.

இனி, அங்ஙனம் நின்ற அவர் மற்ருென்று நினைவாராயினர். என்னை யெனின், "நாம் எண்ணிய ஆதிமறை யொழுக்கமும், பூதிசாதன விளக்கமும் உடைய சமயம் சைவ சமயமன்றே! அச்சமயத்தையுடைய தலைவர், சென்னி வளர் மதியணிந்த சிலம்பணி சேவடியாரன்றே? அவரது மன்னிய சைவத் துறையைச் சீர்திருத்தும் கடப்பாடு அவருடைய குமாரருக்கன்றி வேறு யாவருக் குளது? ஆகலின் அக்குமாரரே நமக்கு மகனுராக வருதல்வேண்டும். அவர் தமது தந்தையாரது ஆணையன்றி வருவரோ? வாரார். ஆகவே, நாம் முருகப் பெருமா னது தந்தையின் திருவடிக்கமலத்தை நமதுள்ளத்திலிருத்திப் போற்றுந் தவத்தை இடைவிடாமற் செய்யவேண்டு"மென்று எண்ணினுரென்பார் - ஆடிய சேவடிக்கமலம் நினைவுறப் போற்றுந் தவம்புரிந்தார் என்ருர் என்பதாம்.

இனி, சிவபாத இருதயர் முருகக்கடவுளையே தமக்கு மகனுராகப் பெற எண் ணினுரென்பது யாதுநோக்கி எனின், புனைமணிப்பூண் காதலனைப் பெற என்று கூறிய திருவாக்கினைக் கொண்டென்க. எனவே, ஒருவன் மகனைப் பெற்ற பின்னர் அம்மகன் மணிப்பூண் புனையப்பெறுவனே யன்றி, பிறக்கும் பொழுதே மணிப்பூண் புனைந்த மகனுக ஒரு மகனும் பிறவான்; ஆகவே, என்றும் மணிப் பூண் புனைந்திருக்கும் காதலன் சிவகுமாரனுகிய முருகனே யாவன். அத்துணிவு நாடியே சிவபாத இருதயர் முருகக்கடவுளையே மகனுக வர எண்ணினுரென்ரும்.

இத்திருப்பாட்டான், சிவபாத இருதயர் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர் குலத்துள் வந்தவராகலான் அக்குல வொழுக்கத்தையே கைக்கொண்டு தவம்புரியத் தலைப்பட்ட சிறப்புக் கூறியவாறும்.

எனவே, எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகத்தக்க அறம் இல்லறமென்றும், அவ்வறத்தில் இன்பம் பெறுதலென்பது புத்திரப் பேற்றினாலென்றும், அப்புத்திரன் வேத சிவாகமங்களில் அறியவேண்டியவற்றை அறிந்த அறிவுடையவனாயின் அப்புத்திரனால் தமக்கும் பிறர்க்கும் பேறு உண்டாகுமென்றும், அத்தகைய புத்திரனைப்பெறப் பேரவாக்கொண்டு, அம்பலத்தாடும்சேவடியானது வேண்டுவார்க்கு வேண்டுவதளிக்கும் அருளுடைத்தாகலின், அவ்வருட் சேவடியைத் தமது இருதயகமலத்தில் வைத்து மறவாது போற்றும் தவத்தை மேற்கொண்டனரென்றும் கூறியவாறும். (கக)

பெருத்தெழும்அன் பாற்பெரிய நாச்சியா ருடன்புகலித்
திருத்தோணி வீற்றிருந்தார் சேவடிக்கீழ் வழிபட்டுக்
கருத்துமுடிந் திடப்பரவும் காதலியார் மணிவயிற்றில்
உருத்தெரிய வரும்பெரும்பே றுலகுய்ய உளதாக. உ0

(எ - து.) மகப்பேறு வேண்டித் தவம் புரியும் சிவபாத இருதயர்தம் மனைவியாராகிய பகவதியார், தமது கணவனாருக்கு மகப்பேற்றிலுள்ள அன்பினும் மேம்பட்டெழுந்த அன்பினையுடையவராய் (தமது குல தெய்வமாகிய) தாம் வாழும் புகலித்திருத்தோணித் திருப்பதியிலுள்ள, பெரியநாச்சியாராகிய உமாதேவியுடன் எழுந்தருளியிருக்கும் சிவபிரானது திருவடியின்கண் வழிபாடுசெய்து, தமது கணவனார் எண்ணியிருக்கும் எண்ணமானது முற்றவேண்டு மென்று போற்றிவர, (அங்ஙனம் போற்றிவரும் அப் பகவதியாரது) அழகின் மிக்க உதரத்தின்கண் கருப்பச் சின்னமானது யாவரும் அறியும்படியான தன்மையோடுங் கூடி, உலகெல்லாம் உய்யும் வண்ணமாகக் காணப்பட்டது என்பதாம்.

தமது நாயகனால் விரும்பப்படுவது யாதொன்றாயினும் அதனிடத்தில் தாம் மிக்க விருப்புடையராயிருத்தலே கற்புடையாரது இலக்கணமாகலினானும் அவ்விலக்கணந் தோன்றவும், "நமது தலைவனார் அறத்தை நோக்கி இல்வாழ்க்கையைக் கைக்கொண்டவராகலினானும், அவ்வில்வாழ்க்கையி லிருந்து அறத்தை நடத்துவதற்கே வாழ்க்கைத்துணையாக நம்மைக் கொண்டாராகலினானும், அங்ஙனம் நடத்தப்படும் அறங்களில் புத்திரப்பேறு பெரும் பேறாகலினானும், அந்தப் பெரும் பேற்றினும் நமது தலைவர் விரும்பிய புத்திரப் பேறு யாவரானும் எண்ணுதற் கரியதாகலினானும், எண்ணுதற்கரிய அப்பேற்றிற்கு நாம் இடமாகவுள்ளோமாகலினானும், இங்ஙனமான பேறு எவ்வகைத்தான சிறப்புடைக் கற்புடையார்க்கும் கிடைத்தற்கு அரியதாக விருக்க, அது நமக்குக் கிடைக்கப் பெறுவது நமது தலைவனார் எண்ணிய எண்ணத்தினானன்றோ!" என்று அத்தலைவர்பாலும், அவரால் விரும்பப் பட்ட மகப் பேற்றிலும் அவா மிக்குடையராயினார் என்னும் அச்சிறப்புத் தோன்றவும் - பெருத்தெழும் அன்பால் என்றார். திருத்தோணியில் வீற்றிருக்கும் சிவபெருமான், இறைவன் கொள்ளும் திருமேனிகளுக்கெல்லாம் ஆதிமூர்த்தியாகிய அம்மையப்பர் ஆகலின், அப்பெருமானது

சத்தியும் சிவசத்திகளுக் கெல்லாம் தலையாயுள்ள பெரியதோர் சத்தி என்பது தோன்ற - பெரிய நாச்சியாருடன் வீற்றிருந்தார் சேவடிக்கீழ் என்றார். ஆன்மாக்களுக்குச் சிவமாம் பெருவாழ்வளிக்கும் சிவனார் புகலிடமாகக் கொண்டிருப்பதும், ஆன்மாக்களைப் பிறவிக்கடலினின்றும் எடுத்து முத்திக்கரையிற் சேர்க்கும் தோணியாகிய அருள் புகலிடமாகக் கொண்டிருப்பதும் பிரமபுரமே என்பது தோன்ற - புகலித்திருத்தோணி வீற்றிருந்தார் என்றார். தமது தலைவனார் வைதிக சைவராகலான் வைதிக தரும நெறிப்படி முனிவர், தேவர், பிதிரர் என்று சொல்லப்பட்ட மூவருடைய கடன்களையும் முறையே கேள்வியானும், வேள்வியானும், மகப் பேற்றினாலும் தீர்த்தற்கும், அஃதேபோல் சைவதரும நெறிப்படி வேதநெறி, சைவநெறி, பத்திநெறி என்று சொல்லப்பட்ட மூன்று நெறிகளுக்கும் வரும் இடர்களை, மெய்யினால் திருநீற்றுப் பொலிவையும், வாக்கினால் பஞ்சாக்கர வொலியையும், சிந்தையினால் சிவானுபவச் செல்வத்தையும், பரவி ஓங்கி வாழச் செய்து போக்கவும், அறிவறிந்த மக்கட்பேற்றை விரும்பியிருக்கின்றாராகலின் அவரது கருத்து முற்றுப்பெறும் வகையைத் தேடுவதே தமது கடனாகப் பகவதியார் கொண்டன ரென்னும் அச்சிறப்புத் தோன்ற - காதலியார் கருத்து முடிந்திடச் சேவடிக் கீழ் வழிபட்டுப் பரவும் என்றார்.

எனவே, "தெய்வந்தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை" என்ற பொய்யா மொழிப்படி கற்பிற் சிறந்தார் எதனை யெண்ணிச் சொல்கின்றார்களோ, அதனை எண்ணியபடியே முடித்தல் தெய்வத்தின் கடனாக இருத்தலான் அச்சிறப்புத் தோன்ற - (தலைவனார்) கருத்து முடிந்திட, காதலியார் சேவடி பரவும் என்றார். பகவதியாராகிய காதலியார் கருத்து முடிந்திடப் பரவியபடியே, புகலித் தோணியப்பர் பகவதியாரது உதரத்தின் கண் கருப்பச் சின்னந் தோன்றுமாறு அருள்செய்தன ரென்பது தோன்ற - காதலியார் மணிவயிற்றில் உருத்தெரிய வரும் பெரும்பேறு உளதாக என்றார்.

சிவபாத இருதயர் மகப்பேற்றை வேண்டியதும், பகவதியார் அப் பேறு முற்றுப் பெறுமாறு இறைவனை வழிபட்டதும், இருவரும் வேண்டி வழிபட்டபடியே கருப்ப வடிவினராய்க் காணப் பெற்றதும், அவ்விருவரே உய்யவன்றி உலகினரெல்லாரும் உய்யவேயாம் என்னும் அச்சிறப்புத் தோன்ற - உலகுய்யவுளதாக என்றார். "காதலியார் மணிவயிற்றில் உருத்தெரிய வரும்" என்றதனால் பகவதியாரது மனமும் அவரது தலைவனார் மனமும், கண்ணும், ஏனையோருடைய கண்களும் களிக்குமாறு அப்பகவதியார் கருப்ப முடையவராக தோணியப்பர் காட்டினரேயன்றி, நமது ஞானசம்பந்தர் கருப்ப வாசஞ் செய்தாரில்லை என்று நன்கு விளக்கியவாறும். கருப்பவாசங் கொண்டிருப்பாராயின் "காதலியார் மணிவயிற்றில், உருத்தெரிய உளரானார் ஆளுடையார் உலகுய்ய," என்று ஆசிரியர் சேக்கிழார் திருவாய்மலர்ந்திருப்பர். ஆளுடையார் கருப்பத்தையாள மணி வயிற்றில் வந்திருப்பாராயின், உலகினராகிய நம்மையெல்லாம் எங்ஙனம் ஆளும் வன்மையுடைய தெய்வமாவர்? எனவே, கருப்பத்தை ஆள்வதில் வன்மையுடையோ மாகிய நாம், நம்மைப் போலும் கருப்பத்தை ஆளும் வன்மையுடைய அவருக்கு அடிமையாதல் எற்றுக்கு? பிள்ளையார், மணிவயிற்றில் வந்தே வெளிவந்திருப்பாராயின், யாவரும் காணப் பிள்ளையார் வந்ததைப் பின்வரும், (உசு) வது திருப்பாட்டில் - சீவம் பெருக்கும் பிள்ளையார் திருவவதாரஞ் செய்தார்,

என்று சொல்லவேண்டியது இன்று; சிவம் பெருக்கும் பிள்ளையினை (சீர்பெற)ப் பெற்றனரால் என்று கூறியிருக்கலாம். அங்ஙனம் பகவதியார் வயிற்றின் வழியாகப் பெற்றிலராகலான் - **பிள்ளையார் திருவவதாரம் செய்தார்** என்றார்.

இவ்வுண்மை விளங்கவே, காதலியார் பிள்ளையினை மணிவயிற்றில் உளரானார் என்று கூறாது - **காதலியார் மணிவயிற்றில் உருத்தெரிய வரும்பெரும் பேறு உலகுய்ய வுளதாக** என்றார். இன்னமும் இதனுண்மையினை ஆங்காங்கு ஆசிரியர் சேக்கிழார் பிரகாசப் படுத்தியிருக்கின்றாராகலான் அவ்வவ்விடங்களில் யாவும் விளக்கத் திருவருள் பாலிக்கும் என்று ஈண்டிவ்வளவில் நிறுத்தலாயிற்று.

பகவதியாரும் மகப்பேறு வேண்டினாராகலான், அவர் வேண்டியதுபோல் கருப்பவுருவினையடைந்தா ரென்று இத்திருப்பாட்டாற் கூறப்பட்டது. (உ0)

**மாதந்தோறும் செய்யத் தொடங்கிய சடங்குகள்**

ஆளுடையா ளுடன்தோணி அமர்ந்தபிரான் அருள்போற்றி
மூளுமகிழ்ச் சியில்தங்கள் முதன்மறைநூன் முறைச்சடங்கு
நாளுடைய ஈரைந்து திங்களினும் நலஞ்சிறப்பக்
கேளிருடன் செயல்புரிந்து பேரின்பங் கிளர்வுறுநாள். உக

(எ - து.) பகவதியார்பால் கருப்பக் குறியைச் சிவபாத இருதயரும் ஏனைய சுற்றத்தினரும் கண்டு மகிழ்ச்சி மீதூர்ந்து, திருத்தோணிபுரத்தில் பார்வதியாரோடு எழுந்தருளியிருக்கும் பரமசிவத்தினது திருவருளை வாழ்த்தி, தங்களுக்குரிய ருக்வேத முறைப்படி, நாளெண்ணிக்கையையுடைய பத்துமாதத்தும் உண்டாகவேண்டிய நன்மைகளெல்லாம் சிறப்புற்றோங்க, தம்முடைய சுற்றத்தாரோடு அளவளாவிச் செய்யவேண்டிய சடங்குகளை விடாது செய்து, அடங்காத இன்பத்தோடுகூடி வாழுநாளில், என்பதாம்.

இறைவன் தம்மை வேண்டுவோர்க்கு வேண்டுவது அளிக்கவெண்ணும் எண்ணங்களையெல்லாம் ஆளும் இயல்பினையுடையராய் அவ்வெண்ணங்களை முடித்தருளுந் தேவியாதலின் - **ஆளுடையாளுடன் தோணி யமர்ந்தபிரான்** என்றார். அங்ஙனமான தோணியப்பர் தாம் வேண்டியபடியே தமக்கு மகப்பேறுண்டாகும் அடையாளங்களைத் தமது மனையாட்டியார்பால் காட்டினார் ஆகலின் - **அருள் போற்றி** என்றார்.

"நாம் இக்கருப்ப அடையாளத்தைக் காணப்பெற்றமையால், இனி இஃதே போல் யாவரிடத்தும் திருநீற்றுப் பொலிவினையும் காணப்பெறுவோம் அன்றோ!" என்று எண்ணி எண்ணி மகிழ்ச்சி மேற்கொண்டனராகலின் - **மூளுமகிழ்ச்சியில்** என்றார்.

ஆன்மாக்களுக்கெல்லாம் புறத்தும் அகத்தும் சேர்தலாகிய புண்ணிய பாவங்கள் புறத்தில் செய்யும் செயல் வகையான் சேர்வனவே யன்றி வேறு வகையான் அன்றாகலான், அங்ஙனம் ஆன்மாக்கள் செய்யும் ஒவ்வொரு செயலினும் பாவம் வரும் வழியைத் தடுத்து, புண்ணியம் வந்து கூடுமுறைமையை எடுத்துக் கூறுவது வேதமுறையாகலின் - **மறைநூன் முறைச்சடங்கு செயல்புரிந்து** என்றார்.

சிவபாத இருதயர் வேத நெறியே யன்றி, சைவ நெறியும் உடையவராக விருக்க, வேதநெறிச் சடங்கை முன்னே கைக்கொண்டது என்னை? எனின்,

வேதமானது புறச்சுத்தியை முன்னர் எடுத்துக் கூறிப் பின்னர் அகத்தின்கண் செய்யப்படும் சுத்தியைக் கூறுவதாகலினானும், சைவநெறியானது அகத்தின் கண் செய்யப்படும் சுத்தியை முன்னரும், புறத்தின்கண் செய்யப்படும் சுத்தியைப் பின்னரும் கூறுவதாகலினானும், அம்முறைமையை நோக்கி வேதச் சடங்கை முன்னே செய்யத்தொடங்கினராகலின் - **முதல் மறைநூல் முறைச்சடங்கு சேயல் புரிந்து** என்றார். சிவபாத இருதயர் முதல்வேதமாகிய ருக்வேதியாக லின், அந்த ருக்வேதத்திற் கூறியுள்ள சடங்கின்படியே செய்யத்தொடங்கினர் என்பது தோன்றத் - **தங்கள் முதன்மறை நூன்முறைச் சடங்கு** என்றார்.

அங்ஙனம் செய்யத் தொடங்கிய கருப்பச்சடங்கை, கருப்பங்கொண்ட நாளை யெண்ணி அதுகொண்டு அந்தந்த மாதச் சடங்கினைச் செய்யவேண்டுமே யன்றி, நாளின் வழியே மாதக்கணக்கை எண்ணுவதை விட்டு மாதத்தையே எண் ணிச் சடங்கினைச் செய்யின் அது வைதிக நெறியன்றாகலான் - **நாளுடைய ஈரைந்து திங்களினும் நலம் சிறப்பச் சேயல் புரிந்து** என்றார். வேதச்சடங்கு பலர்கூடிச் செய்தால் முற்றுப் பெறுமேயன்றி, சிலரான் முற்றுப்பெறாதாகலின்- **கேளிருடன் சேயல் புரிந்து** என்றார். அங்ஙனம் கேளிருடன் செய்யும் அச் செயல் தருமங்கூறும் வேதத்திற் கூறப்பட்டுள்ள தருமச்செயலாகலின், அச் செயல் செய்வார்க்குத் துன்பத்தை யொழித்து இன்பத்தையே மேலிடச்செய் வது தருமத்தின் செயலாகலின் - **பேரின்பங் கிளர்வுறுநாள்** என்றார்.

இத்திருப்பாட்டான், கருப்பக்குறி கொண்டிருக்கும் பகவதியாருக்கு அந்த அந்த மாதங்களிற் செய்யவேண்டிய வேதச்சடங்குகளைச் சுற்றத்தாருடன் செய்து சிவபாத இருதயர் பெரிதும் இன்பமுற்றிருந்தனரென்று கூறப்பட்டது. (௨௧)

அவதார நாளின் சிறப்பு

அருக்கன்முதல் கோளனைத்தும் அழகியவுச் சங்களிலே
பெருக்கவலி யுடனிற்கப் பேணியநல் லோரையெழத்
திருக்கிளரும் ஆதிரைநாள் திசைவிளங்கப் பரசமயத்
தருக்கொழியச் சைவமுதல் வைதிகமும் தழைத்தோங்க. ௨௨

(எ - து.) (பத்தாம் திங்களில்) ஞாயிறு முதலாகச் சொல்லப்பட்ட கோள்க ளெல்லாம், சிறப்பாகிய உச்சஸ்தானங்களிலே (பாவக்கிரகங்களுடைய பார்வை யற்று)மிக்கவலியோடு நிற்க, விரும்பத்தக்க நல்ல முகூர்த்தகாலம்வர, வியப்பினைத் தரத்தக்க திருவாதிரை நக்ஷத்திரங் கூட அச்சுபதினத்தில், புறச்சமயங்களுடைய அகங்காரம் அடியோடு ஒழியவும், சைவசமயத்தையே முதலாகக்கொண்ட சைவ சமயங்களும், வைதிக தருமத்தையே மேற்கொண்ட வைதிக சமயங்களும் தத் தம் கொள்கையில் தவறாது ஓங்கி எத்திசையிலும் விளங்கவும், என்பதாம். (௨௨)

தொண்டர்மனம் களிசிறப்பத் தூயதிரு நீற்றுநெறி
எண்டிசையும் தனிநடப்ப ஏழுலகும் குளிர்தூங்க
அண்டர்குலம் அதிசயிப்ப அந்தணர் ஆகுதிபெருக
வண்டமிழ்செய் தவநிரம்ப மாதவத்தோர் செயல்வாய்ப்ப. ௨௩

(எ - து.) சிவனடியார்களது மனம் களிப்பினாலே சிறந்திருக்கவும், பரிசுத்தத்தை விளைவிக்கும் பூதிசாதனநெறி எட்டுத்திக்கிலும் நிகரின்றி நடைபெறவும், எழுவகை உலகங்களில் உள்ள ஆன்மகோடிகளெல்லாம் புண்ணியச் செயலில் தலைப்பட்டு வாழவும், தேவகூட்டங்களெல்லாங்கண்டு அதிசயிக்கவும், வேதியர்களால் செய்யப்படும் யாகங்கள் மேன்மேல் வளரவும், வளமிக்க தமிழ்செய்த தவமானது குறைவின்றி நிரம்பவும், பெரிய தவமுடையோர் செய்யும் தவச்செயல்கள் அவர்களிடத்துப் பொருந்தவும், என்பதாம்.

வைதிக சைவநெறிகளைப் பாழ்படுத்தவல்ல புறச்சமயிகள் வாய்மதங்கொண்டு பேசும் அகங்காரம் ஒழியப்பெறுமாயின், வைதிக சைவநெறிகளில் இடைவிடாது ஈடுபட்டொழுகவல்ல அடியார்களுடைய மனம் - முன் புறச் சமயிகளுடைய புன்மொழிகளால் புண்பட்டிருந்த மனம்—அப்புண்ணாறிக் களி சிறந்திருக்குமாகலின் - **தோண்டர் மனங் களிசிறப்ப** என்றார். அங்ஙனம் களி சிறந்திருக்கும் அடியார் குழாங்கள் எதிர்ப்பார் ஒருவருமின்றி, சரீரத்தில் விளையும் வெந்துயர் தீர்த்து, போதந்தருவதாகிய பூதிசாதன நெறியை எந்தத்திசையிலுள்ளாரும் கைக்கொண்டு வாழ எத்திசைகளிலுஞ் சென்று நடைபெறச்செய்ய வல்லவ ராவாராகலான் - **தூய திருநீற்று நேறி எண்டிசையுந் தனிநடப்ப** என்றார். அங்ஙனந் திருநீற்று நெறியை எங்கும் பிரகாசிக்கச் செய்துவருங் காலத்தில் ஆங்காங்குள்ளவ ரெல்லாம் திருநீற்றுச் சாதன நெறியில் தலைப்பட்டுப் புறச்சமய நெறியாகிய தீநெறிகளால் விளைந்த பாவத்தினின்றும் நீங்கிப் புண்ணிய சீலராவாராகலின்-**ஏழுலகுந் துளிர்தூங்க** என்றார். இவ்வாறு எங்குள்ளாரும் சைவர்களாய்த் திருநீறு சண்ணித்த மேனியராய்ச் சிவபுண்ணியசீலராய்ச் சிவயோகிகளாய்ச் சிவபோகிகளாய்ப் பிரகாசித்தலை மேலுலக வாசிகளாகிய தேவர்கள் கண்டு தங்கள் செல்வத்தையும், போகத்தையும் வெறுத்து இகழ்ந்து சிவயோக போகத்தைப் போற்றி அதிசயிப்பாராகலின் - **அண்டர் குலம் அதிசயிப்ப** என்றார். அங்ஙனம் தேவர்களெல்லாம் திருநீற்றுச் செல்வத்தைக் கண்டு அதிசயித்தலை, இங்ஙனமுள்ள பூசுரர்கள் கண்டு மகிழ்ந்து, "அந்தோ ! இத்தேவர்களுக்கு நாம் உணவுகளைக் கொடுக்கவேண்டும். கொடுப்போமாயின் அது சிவதருமமே யாகு"மென்று யாகமுகமாக அத்தேவர்களுக்கு ஆகுதிகளை விசேடமாகக் கொடுத்துவருவாராகலின் - **அந்தணராகுதி பேருக** என்றார்.

இதுகாறுங் கூறிவந்த செயலெல்லாம், அஃதாவது, பரசமயத் தருக்கொழித்துச், சைவமுதல் வைதிகமுந் தழைத்தோங்கச்செய்தல் முதல், அந்தணர் ஆகுதி பெருகல் ஈறுகக்கூறிய செயலெல்லாம் வடமொழியிலிருப்பினும், அவை, தென்மொழிக்குரிய அந்தணர் முதலியோரிடத்தும் அமைந்து சிறப்புற்றிருத்தலின் - **தமிழ்சேய் தவம் நிரம்ப** என்றார். இங்ஙனமான சிறப்புத் தமிழுக்கு வந்த காரணம், எல்லா நன்மையும் செய்யவல்ல இறைவன் ஞானசம்பந்தராதியரைத் தமிழ் மறையே ஓதச்செய்தனனுகலான் அச்சிறப்புத்தோன்ற, தமிழென்னுது - **வண்டமிழ்** என்றார். இங்ஙனமான அருள்வளம் நிறைந்த தமிழ் வேதத்திற் குரியாரே பெருந்தவமுடையவராகலான் - **மாதவத்தோர்** என்றார். இவர் தமிழ் மறையைப் பெறும் பெருந்தவமுடையாராகவே இவர் செய்யும் செயல்களால் வாய்க்க வேண்டிய செல்வங்களெல்லாம் மிக எளிதாய் வாய்க்கப் பெறுவராகலான் - **சேயல் வாய்ப்ப** என்றார். (உகூ)

திசையனைத்தின் பெருமையெலாம் தென்திசையே வென்றேற
மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனிவெல்ல
அசைவில்செழுந் தமிழ்வழக்கே அயல்வழக்கின் துறைவெல்ல
இசைமுழுது மெய்யறிவும் இடங்கொள்ளும் நிலைபெருக. உச

(எ - து.) திக்குகள்தோறும் உள்ள பெருமைகளை யெல்லாம், தென்திசை யொன்றே கொள்ளைகொண்டு வெற்றி பெற்றேங்கவும், மேலுலகமாகிய தேவருலகங்களையும், கீழுலகமாகிய பாதல முதலிய உலகங்களையும், இந்த மண்ணுலக மொன்றே தனக்குத் தானே சமானமாய் வெற்றி பெற்று நிலைபெற்று நிற்கவும், எத்தகைய வன்மொழியாளாரானும் 'இம்மொழி இத்தன்மைத்து' என்று சோதிக்க வொண்ணுத செழுமையினையுடைய தமிழ்மொழி இடம் வழக்கொன்றே ஏனைய மொழிகளாற் கூறப்படும் துறைகளை யெல்லாம் வெற்றி கொள்ளவும், இசை நூற்பொருளுணர்ச்சி முழுவதும், மெய்ந்நூற் பொருளுணர்ச்சி முழுவதும் இடங் கொள்ளத்தக்க நிலையினையுடைத்தாய் இத்தமிழொன்றே பெருகவும், என்பதாம்.

எண் திசைக்குங் காரணமாய இறைவன் ஆனந்தத் தாண்டவஞ் செய்யும் அனுக்கிரக நோக்கத்திற்கு இடமாய் நின்றது தென்திசையொன்றே ஆகலான் **தென்திசையே வென்றேற** என்றார். எனவே, வெற்றியைக் கொடுக்கத்தக்கது அனுக்கிரகமேயாகலான் அந்த நோக்கத்திற்கு தென்திசை இடமாய் நின்றபோது இத்திசையின் அனுக்கிரக நோக்கினையே எத்திசையும் பெறவேண்டும். அதுவேயுமன்றி, எத்தகைய பெருமை வேண்டுமாயினும் இத்திசையின் அனுக்கிரகமே வேண்டும். ஆகவே, எத்திசைக்கும் வழங்கவேண்டிய அனுக்கிரகத்தையும், எவர்களும் பெறவேண்டிய பெருமையினையும் உடையது தென்திசையாய் முடிந்தபடியால் - **திசையனைத்தின் பெருமையெலாம் தென்திசையே வென்றேற** என்றார்.

எவ்வுலகங்களினும் அனுபவிக்கவேண்டிய சுகங்களுக்கெல்லாம் காரணமாகிய புண்ணியங்களைக் கொடுப்பது இம்மண்ணுலகமே யன்றி வேறோருலக மன்றாகலான் - **மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனிவெல்ல** என்றார்.

தமிழ்மொழியொன்றே அசைவில்லாதது, ஏனையமொழிகளெல்லாம் அசைவுடையது என்பதனையும், தமிழ் மொழியொன்றே ஏனைய மொழிகள் கற்பிக்கும் சமயத் துறைகளையெல்லாம் வெல்லும் ஆற்றலுடைத்தானது, ஏனையதுறைகளெல்லாம் வெல்லும் ஆற்றலில்லாதன என்பதனையும், யாவரும் என்றும் எளிதிலுணரவே இறைவனுக்கு இமயமலையில் நடந்த திருமணத்தில் மணவாளனாகிய இறைவன் தென்திசையை உயர்த்தியும், வடதிசையைத் தாழ்த்தியும் ஓரற்புத விளையாடலைச் செய்தனனாகலின் - **அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்ல** என்றார்.

எனவே, இறைவன் அருள்காரணமாய் மொழிந்த தமிழ்மொழி யொன்றையே உடையது தென்திசை; ஆன்மாக்கள் தத்தம் போதவழியால் உண்டாக்கிய பல மொழிகளையும் உடையது வடதிசை. அந்த வடதிசையில் நிகழ்ந்த திருமணத்தில் வந்திருந்தவரெல்லாம் பலமொழிகளிலும் வல்ல பல இருடிகள், பல சித்தர்கள், பல யோகிகள், பல தேவர்களாவார்; அக்கூட்டத்தில் தமிழில் வல்லவராய், தமிழுக்கே குரிசிலாயிருந்தவர் குறுமுனிவராகிய அகத்தியர் ஒருவரே.

அங்ஙனமிருக்க, வடதிசை தாழ்ந்தபோது மேலேசொல்லியவாறு நீண்ட உருவத்திலும் செயலிலும் வன்மையிலும் சிறந்த பலரும் இருக்க, அவரில் ஒருவரையேனும் தென்திசைக்கு ஏக விடாது, உருவிற் சிறிய தமிழ்க் குரிசிலாகிய அகத்தியரை இறைவன் அழைத்து "என்னேடொத்தவன் நீ யொருவனேயாகலான் நீ தென்திசைக்கு ஏகு" என்று சொல்லி ஏக விட்டனர்.

இதனுல், தமிழுக்குத் தெய்வம் சிவபெருமான் என்றும், தமிழுக்கு ஆசிரியர் குறுமுனிவரென்றும் வெளியாயிற்று ஆகவே, இருவரும் ஒத்தவராயினர். சிவபெருமானைத் தெய்வமாகவும், அகத்திய முனிவரை ஆசிரியராகவும் உடைய தமிழைத் தென்திசை தன்னிலத்துப் மொழியாகப் பெற்ற சிறப்பினையுடைத்தாயிருந்தபடியால் அது வன்மைபெற் ருேங்கிற்று. வடதிசையானது தமிழ் மொழியை யொழித்து ஏனைய மொழிகளைத் தன்னிலத்து மொழிகளாகவும், திருமால் முதலிய எல்லாத் தெய்வங்களையும் தனக்குத் தெய்வமாகவுங் கொண்டிருப்பதால்தான் தாழாது நிலைபெற்றிருக்குந் தன்மையைப் பெருமற்போயிற்று. தமிழையே தன்னிலத்து மொழியாகவும், தமிழ்த் தெய்வ மாகிய தன்னையே தனக்குத் தெய்வமாகவும் வடதிசை கொண்டிருப்பின் சிவபெருமான் அவ் வடதிசையைத் தாழ விடான். சிவபெருமானுக்கு மேலாகத் திருமால் முதலிய பல தெய்வங்களும், தமிழுக்கு மேலாகப் பலமொழிகளும் இருப்பின், தென் திசையை மேலெழுந்திருக்கச் செய்திரார். சமமாக இருப்பின் தென்திசை உயர்ந்தெழுந்தபோது வடதிசையைத் தாழ்ந்தநிலையிற் போகவிடார். இதனுல் சிவத்துக்குச் சமமாகவேனும் மேலாகவேனும் எந்தத் தெய்வமாவதும், தமிழுக்குச் சமமாகவேனும், மேலாகவேனும் எந்த மொழியாவதும் இல்லை என்பது ஐயமின்றி அறியக்கிடக்கின்றது. தெய்வங்களும் மொழிகளும் இந்நிலையிற் கிடக்க, தமிழ்த் தெய்வமும் தமிழுமே மேல்நிலையினின்று ஏனைத்தெய்வங்களையும் ஏனை மொழிகளையும் தாழ்த்தாது உயிர்பெற்று வாழச்செய்தன என்று அறியவுமாயிற்றென்க.

இனி, தமிழ்க்குரிசிலாகிய அகத்திய முனிவர் சிவபெருமான் ஆணையின் படி தென்திசையை நோக்கித் திரும்பிய காலத்தில் எந்தத் தேவர்களுக்கும் அஞ்சாமலும் அடங்காமலும் மேலெழுந்தோங்கிய விந்திய மலையைக் கண்டு, தமிழ்த் தெய்வத்தின் வலியால், அதனை எவ்வளவுக்கு மேலெழுந்தோங்கியதோ அவ்வளவுக்குப் பாதலத்தில் அழுத்தி அங்ஙனமே கிடக்கச் செய்தனர்.

அதுவேயுமன்றி, இவ்வகத்திய முனிவர், திருக்குற்றால மென்னும் திருப்பதியில் சென்றபோது ஆரிய மொழியில் வல்லவராகிய அந்தணரெல்லாம் தம்மை அவமதிக்க, அதுபொருது, அவர்களுக்குத் தெய்வமாய் எண்ணிறந்த காலம் நெடுமாலாய் நீண்டிருந்த திருமாலாகிய தெய்வத்தின் தலையில் கையை வைத்து "குறுகு குறுகு குற்றாலா" என்னும் தமிழ்மொழி மந்திரத்தைச் சொல்லி "எங்கள் தமிழ்த் தெய்வத்துக்கும், எங்கள் தமிழ் மந்திர மொழிக்கும் நீ பெரியோன் அல்லை. நீ மிகச் சிறியை. உன்னைப் போன்ருரும் இந்தப் பெரிய தெய்வ மாகிய சிவ சொரூபத்தி லடக்கம்; எல்லாமொழியின் மந்திரங்களும் தமிழ் மொழியாகிய மஹா மந்திரத்திலடக்கம்", என்று காட்டி அவ்வாரிய அந்தணர்களையும் ஒட்டி, மேலுயர்ந்தோங்கி யிருக்கும் பொதிய மலையில் என்றும் வீற்றிருப்பாராயினர்.

இதனால், தமிழ் மொழியும், தமிழ்த் தெய்வமும், தமிழாசிரியரும் தாழ்ந்த நிலையில் தங்குதலில்லை என்னும் உண்மையை வெளியாக்கியவாறும். இவ்வுண்மை தோன்றவே - அசைவில் செந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்ல என்றார். இப்புராணம் முற்றும் தமிழின் சிறப்பைக் கரதலாமலகம் போல் காட்டவல்ல தாகலின், இங்கு இவ்வளவில் நிறுத்தி இனிவரும் இடங்கள் தோறும் எடுத்துக் காட்டுவோம்.

இனி, இசைகளில் அமைந்துள்ள மொழிகள் சில, இசைகளில் அமையா மொழிகள் சில. மொழிகளெல்லாம் இவ்வாறு கிடக்க, தமிழ் மொழியோ எல்லா இசைகளுக்கும் இடங்கொடுத்து இசைந்ததாய், எல்லா மொழிகளிலும் இசையாத பண்ணிசையைத் தனக்கே உடைத்தாய், அப் பண்ணிசையையே கொண்டு நிலைபெற்றுப் பெருகி யிருத்தலின் - இசை முழுதும் இடங்கொள்ளும் நிலைபெருக என்றார்.

பொய்யறிவினையே பெருக்கி, பொய்ந்நிலையினையே நாட்டி, பொய்யுடலில் புகுவதற்கு இடங்கொடுக்கும் ஏனைய மொழிகள் போலல்லாமல், மெய்யாகிய சிவனறிவினையே பெருக்கி, மெய்யாகிய முத்தி நிலையினையே நாட்டி, பொய்யுடலிற் புகுதலொட்டாது, மெய்யாகிய சிவசொரூபத்தில் வாழ இடங்கொடுத்தலின் - மெய்யறிவும் இடங்கொள்ளும் நிலைபெருக என்றார்.

இதனால், இசை முழுவதுக்கும், மெய்யறிவு முற்றுக்கும் இடங்கொடுப்பதாகியும், அயல் வழக்கின் துறைகளை வெல்லுந் திறமுடையதாகியும் உள்ள இன்தமிழ்மொழிக்கு இம் மண்ணுலகம் இடங் கொடுத்திருப்பதாலும், தென்மொழி என வழங்குவதற்குத் தென்திசை இசைந்திருப்பதாலும்-மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனிவெல்ல எனவும், திசையனைத்தின் பெருமையெலாம் தென் திசையே வென்றேற எனவுங் கூறியவாறும்.

தீர்த்த விசேடத்தானும், க்ஷேத்திர விசேடத்தானும், மூர்த்தி விசேடத்தானும் சிறப்புற்று ஓங்குவது இம் மண்ணுலகமேயன்றி வேறு எந்த உலகமும் அன்றாகலான் - மேதினியே தனிவெல்ல எனவும், முத்திசையிலும் வழங்கும் மொழிகளை யெல்லாம் தான்கொண்டு அவ்வப்பெயரான் வழங்காது தமிழ் மொழி யொன்றினையே கைக்கொண்டு இடங்கொடுத்துத் தமிழ்நாடு எனச்சிறப்புற்று ஓங்குதலான் - தென்திசையே வென்றேற எனவும் கூறியவாறுமாம்.

எழுதா மறையாகிய ஆரிய வேதம் வழங்குந் திசைகளில் எல்லாம், எழுது மறையாகிய தமிழ்வேதம் சென்று தனது புகழை நாட்டி இருத்தலால் - திசையனைத்தின் பெருமையெல்லாம் தென்திசையே வென்றேற எனத் தேற்றத்தாற் கூறினரென்க. (உச)

தாளுடைய படைப்பென்னும் தொழிற்றன்மை தலைமைபெற
நாளுடைய நிகழ்காலம் எதிர்கால நவைநீங்க
வாளுடைய மணிவீதி வளர்காழிப் பதிவாழ
ஆளுடைய திருத்தோணி அமர்ந்தபிரான் அருள்பெருக. உரு

(எ - து.) முயற்சியை யுடைய சிருட்டி என்று சொல்லப்படும் தொழிலின் தன்மையானது முதன்மையைப் பெறவும், நாளை யெண்ணிக்கையாக

வுடைய நிகழ்காலமும் எதிர்காலமும், குற்றத்தினின்று நீங்கவும், ஒளிபொருந்திய இரத்தினங்களாற் பிரகாசிக்கும் வீதிகளை யுடைத்தாய் எக்காலத்தும் அழியாது வளரும் இயல்பினை யுடைய சீகாழிப்பதியானது வாழவும், யாவரையும் ஆளுந்தன்மையினையுடைய திருத்தோணியப்பரது திருவருள் பெருகவும், என்பதாம்.

ஆன்மாக்கள் இருவினையினின்று நீங்குதற்குப் புண்ணிய பாவங்களென்கின்ற தொழின் முயற்சி இன்றியமையாத செயலாகலானும், அம்முயற்சி பிறப்பானன்றி யமையாதாகலானும், அப்பிறப்பு சிருட்டித் தொழிலானன்றி அமையாதாகலானும், அந்த சிருட்டித் தொழில் பிரமனன்றி யமையாதாகலினும்-**தாளுடைய படைப்பென்னும் தொழிற்றன்மை தலைமை பெற** என்றார்.

நிகழ்காலம் என்பது இப்பிறப்பு; எதிர்காலம் என்பது இனிவரும் பிறப்பு என்க. இருவகைப் பிறப்பும் காலத்தினளவாகப் போவதும் காலத்தினளவாக வருவதுமாம். அக்காலம் நாளன்றி நடைபெறுவாகலான் - **நாளுடைய நிகழ்காலம் எதிர்காலம்** என்றார். இருவினையாகிய குற்றத்தை விளைவித்து மீண்டும் மீண்டும் பிறப்பிறப்பிலாழ்த்தும் புண்ணிய பாவச் செயல்களைச் செய்ய வொட்டாது, இப்பிறப்பில் வருந் துன்பத்தையும், துன்பத்துக் கேதுவாய் இனிவரும் பிறப்பையும் ஒழித்து, இனிப்பிறவா நெறிக்கேதுவாகிய முத்திநெறியைக் கூட்டும் சிவ புண்ணியங்களையே செய்யுங்காலம் வந்தமையான் - **நிகழ்காலம் எதிர்கால நவை நீங்க** என்றார். பிரளயங்கள்தோறும் வந்து மோதும் அலைகளால் குவிக்கப்படும் ஒளிவிடும் மணிகளெல்லாம் வீதிகள்தோறும் நிறைந்து பிரகாசித்துக் கொண்டிருக்கின்றமையான், **வாளுடைய மணிவீதி** என்றார். அழிக்கவரும் பிரளயங்கள் தோறும் அழிவுறாது வளர்ந்தோங்கி வருதலால் - **வளர் காழி** என்றார். இக்காழிப் பதியைப் போலும் ஊழிதோறோங்கும் இயல்பினையுடைய கயிலாய நாதன் மகனாராகிய ஆளுடைய பிள்ளையார் அவதாரஞ் செய்வதற்கு இக்காழிப் பதி இடமாயிருத்தலால் - **பதி வாழ** என்றார். இக்காழிப்பதி பிரளயந்தோறும் தோணியாகும் காலத்து அத்தோணிபுரத்தில் முத்தான்மாக்களைத் தன்னிடத் திருத்திக் காக்குந் தன்மையுடைத்தா யிருத்தலால் - **ஆளுடைய திருத்தோணி** என்றார். அங்ஙனந் தோணியில் வாழ்வார் அருள் வசத்தராய் அவருள்ளத்தில் அன்பு பெருக இறைவன் அம்மையப்பனாய் வீற்றிருக்கும் இயல்பினனாகலான் **அருள்பெருக அமர்ந்தபிரான்** என்றார்.

"தாளுடைய படைப்பென்னும் தொழிற்றன்மை தலைமை பெற - முயற்சியையுடைய மக்கட்படைப் பென்னும் பிரமனது தொழிற்குணமானது முதன்மை பெறவும்," என்று பதவுரையும், இப்பதத்திற்கே "இதுகாறு மில்லாத தலைமை மிக்க பிள்ளையாரது திருவவதாரம் அப்படைப்புத் தொழிலுள் அடங்குதலால் அத்தொழிற்றன்மை தலைமை பெறவும்," என்று விசேடவுரையும் முன் உரைகாரர் எழுதியுள்ளார். இஃதுபொருந்தா உரையாம்.

இவர் எழுதிய பதவுரையில் மக்கட்படைப்பு முயற்சியை யுடைய தென்றும், அப்படைப்புத் தொழில் பிரமனது என்றும், அத்தொழிற் குணமானது முதன்மை பெற என்றும் பொருளாயிற்று.

இனி, விசேட வுரையில், இதுகாறும் பிறவியை யறியாது தலைமை பெற்றிருந்த பிள்ளையார், பிரமன் செய்யும் படைப்புத்தொழிலில் அகப்பட்டுப் பிறக்க

வந்தாராகலின், அப்பிரமனது படைப்புத் தொழிற்றன்மை தலைமை பெருக என்றும் பொருளாயிற்று.

ஆளுடைய பிள்ளையார் அவதாரஞ் செய்ய வந்தது சிவபாத இருதயர் வேண்டுகோளின் பொருட்டேயன்றி-பிரமன் பொருட்டன்று. மேல் கஅ, ககூ-ம் செய்யுட்களை நோக்குக. அவற்றால், முன்னே இடருழந்த சிவபாத இருதயர் மகப்பேறு வேண்டினாரென்றும், அந்த மகன் பரசமயம் நிராகரித்து நீறாக்கும் வன்மையாளனா யிருத்தல்வேண்டுமென்றும், அங்ஙனமான மகனைக் கொடுக்கும் கடவுள் ஆடிய சேவடியையுடைய சிவபெருமானே என்றும், அவன் தவஞ்செய்தாலன்றி அருள்புரியானென்றும் எண்ணித் தவஞ் செய்தாரென்று கூறினாரேயன்றி, பிரமன் இவ்வாறெல்லாம் எண்ணித் தவம் புரிந்தானென்று கூறினாரில்லை.

ஆகவே, ஆடிய சேவடியனுய்ச் சிவபெருமான் நின்றருளுதல் சிருட்டி முதலிய பஞ்சகிருத்தியங்களையும் உடையவன் தானே என்று அறிவுடையார் அறிதற்கேயன்றோ! அங்ஙனமேயறிந்த பெரியாராகிய சிவபாத இருதயர் ஆடிய சேவடியானையே மகப்பேறு வேண்டினாரென்று வெளியாயிற்று. எனவே, சிவனது சிருட்டிக்குள் அகப்பட்டிருக்கும் மகனை, பிரமனது சிருட்டிக்குள் அகப்பட்டார் என்று விசேடங் கூறவந்தமை பொருந்தாது என்க. பிரமனுக்குச் சிருட்டிக்கும் ஆற்றலைக் கொடுத்தவர் சிவபெருமான். இதனை எந்த நூல்களிலும் பரக்கக் காணலாம். அங்ஙனமிருக்க, சிவபாத இருதயர் மகன் வேண்டு மென்று சிவனை வேண்ட, அச்சிவன் அச்செயல் தனக்கின்மையினால் பிரமனைத் தான் வேண்டி சிவபாத இருதயருக்கு மகனைக் கொடுக்குமாறு தவம்புரிந்தாரென்று பொருள்பட உரையெழுதல் பொருந்துமோ?

தன்தலையைச் சிவன் கிள்ளி எறிய வேறொரு தலையைப் பிரமன் தனக்கு உண்டாக்கிக் கொண்டானில்லை. தன் தலையைத் தானே படைத்துக் கொள்ள வகையறியாது இன்றளவுந் தலையற்றவனாகவே கிடக்கும் ஏழைப் பிரமனா, பரசமயம் நீறாக்கி, எங்கும் நீறு (விபூதிமயமா)க்கும் மகனைப் படைக்க வல்லவனாவன்? அந்தோ! பூதிசாதனம் விளங்காவண்ணம் செய்யவல்ல மக்களையெல்லாம் படைத்தவன் அப்பிரமனன்றோ? அம்மக்களைப் படைப்பதில் வன்மையுடைய அப்பிரமன் அம்மக்களை நிராகரித்து நீறாக்கும் மகனை என் படைக்க எண்ணுவான்! பூதிசாதனம் விளங்காவண்ணம் செய்யவல்ல மக்களெல்லாம் உலகில் வாழ்ந்திருந்தாலன்றோ, தாளுடைய படைப்பென்னும் தொழிற்றன்மை தலைமைபெற்றோங்கும்?

சிவபெருமான் தன்னைப் பிரமன் அருச்சித்த தொழிலுக்குக் கூலியாகச் சிறிது சிருட்டித் தொழிலைக் கொடுத்திருக்கும் உண்மையை மறந்து, அத்தொழிலுக்கு அவனைத் தலைவனாகவும் பிறப்பிலியாரது மகனை அவனது சிருட்டிக்கு உட்பட்ட மக்களுள் ஒருவராகவும் எண்ணிக் கூறிய உரையை மெய்யுரையுணர்ந்தாரெல்லாம் பொய்யுரையாகக் கொள்வர். விரிக்கிற் பெருகும்.

இனி, தாளுடைய படைப்பென்னும் தொழிற்றன்மை தலைமைபெற என்றருளிய அடியின் மெய்யுரை யாதோ எனின், ஆன்மாக்களுக்கு (1) இருவினை யொப்பு வருவதற்கும், அது வந்த பின்னர் (2) மலபரிபாகம் உண்டாதற்

கும், அது உண்டான பின்னர் (3) சத்திநிபாதம் பதிதற்கும், அது பதிந்த பின்னர் (4) சிவஞானம் விளங்குவதற்கும், அது விளங்கிய பின்னர் (5) சிவானுபவத்திற்கு வேண்டிய சிவானுக்கிரகத்திற்குரிய முயற்சிகளைச் செய்தாலன்றி இங்ஙனம் கூறிய ஐந்தும் ஆன்மாக்களுக்குச் சித்தியாதல் கூடாதாகலான் அம்முயற்சியைத் தாள் என்றும், அம்முயற்சி தனு, கரண, புவன, போகம் என்னும் நான்கும் வாய்க்கப் பெற்றாலன்றி அமையாதாகலான் அதனைத் தொழிற்றன்மை என்றும், அத் தாளுடைய தொழிற்றன்மை சிருட்டி என்னும் தொழிலை இறைவன் தலைமையாகக் கொண்டாலன்றி மேலே சொல்லிய இருவினையொப்பு முதலிய ஐந்தும் முற்றுப்பெறாதாகலான் அச்சிருட்டித் தொழிலைத் தலைமைபெற என்றுங் கூறினாரென்பதாம். (௨௫)

அவதாரத்தின் சிறப்பு

அவம்பெருக்கும் புல்லறிவின் அமண்முதலாம் பரசமயம்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்பட நல் லூழிதொறும்
தவம்பெருக்குஞ் சண்பையிலே தாவில்சரா சரங்களெல்லாம்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதா ரஞ்செய்தார். ௨௬

(எ - து.) பாவத்தைப் பெருகச்செய்யும் சிற்றறிவினையுடைய சமணசமய முதலாகிய புறச்சமயங்களால், பிறவித் தொந்தனையைக் குன்றாது பெருகச் செய்யும் தீயநெறிகள் பாழ்பட்டுப்போக, தவறாது வருகின்ற ஊழிக்காலங்கள் தோறும் கெடாது வருகின்ற இயங்கியற்பொருளும் நிலையியற் பொருளுமாகிய உயிர்களெல்லாம், சிவமாந்தன்மையைப் பெருகச் செய்யவல்ல சரியையாதி தவங்களை விடாது அதிகரித்துச் செய்யும் சண்பை என்னுந் திருப்பெயரினையுடைய சீகாழிப் பதியில் ஆளுடைய பிள்ளையார் திருவவதாரஞ் செய்தருளினர், என்பதாம்.

பவம் பெருக்கும், அவம் பெருக்கும் புல்லறிவின் அமண்முதலாம் பரசமயம், புரைநெறிகள் பாழ்பட எனவும், ஊழிதொறும் தாவில் சராசரங்களெல்லாம் சிவம்பெருக்கும் தவம்பெருக்கும் சண்பையிலே பிள்ளையார் திருவவதாரம் செய்தார் எனவும் கொண்டு கூட்டிப் பொருள் கொள்க.

இதனால், அமண்முதலாகச் சொல்லப்பட்ட புறச்சமயிகளெல்லாம், புண்ணிய பாவங்களை அறியும் அறிவற்ற சிற்றறிவினரென்றும், அவர்களால் கூறப்படும் சமயநெறிகளெல்லாம், துன்பத்துக்கிடஞ் செய்யவல்ல பிறவிபேதங்களையும் அங்ஙனமான பிறவிகளைக் கொடுக்கவல்ல பாவங்களையும் மேன்மேல் விடாது பெருகச் செய்யவல்ல தீயநெறிகளென்றும், அத்தீய நெறிகளை ஆன்மாக்களெல்லாம் அறியுமாறு செய்து அவர்களை அவைகளிற் புகவொட்டாது, அவைகளைப் பாழ்படுத்தப் பிள்ளையார் திருவவதாரஞ் செய்தாரென்றும், அவதாரம் செய்த இடம் சண்பை என்று சொல்லப்படும் சீகாழி என்றும், அப்பதி நல்ல ஊழிகள் தோறும் அழிவுறாது இருப்பதென்றும், அங்குள்ள சராசரங்களாகிய உயிர்களெல்லாம் சிவத்தன்மை பெருகும்படியான தவத்தைப் பெருக்கும் தவசீலமுடையனவென்றுங் கூறப்பட்டன.

ஆன்மாக்களெல்லாம், இமையளவும் உபகாரமல்லால் வேறொன்றியக்கா நிர்க்குணக்கடலாகிய பரசிவத்தைத் தம்முட்கொள்ளும் பேறறிவினை யிழந்து,

சிற்றறிவினராய்ச் சடமாகிய தத்துவ பேதங்களையும், பாசவசப்பட்டுழலும் ஆன்ம பேதங்களையும் பரமாகத் தம்முட்கொண் டுழல்கின்றனராகலான் அவர்களை யெல்லாம் - **புல்லறிவி(னையுடைய)ன் அமண்முதலாம் பரசமயம்** என்றார்.

உபகார குணமுடைய பரசிவனை யிழந்த அவர்கள் தானம் யாகம் தீர்த்தம் ஆச்சிரமம் தவங்கள் சாந்தி விரதம் கன்மம் யோகம் என்னும் இவைகளை விடாது செய்பவரா யிருந்தாலும், "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு" என்றபடி அவர்களெல்லாம் செய்ந்நன்றிகொன்ற மக்களாதலானும், அரனடிக்கன்பிலாதார் ஆகலானும், அவர்கள் செய்யும் அறச் செயல்களெல்லாம் பாவச்செயல்களாய் முடியுமாகலானும் அவர்கள் செயல்களை- **அவம்பெருக்கும்** என்றார்.

அவர்கள் இயற்றிய அறச்செயலெல்லாம் பாவச்செயலாய் முடிந்ததனால் அப்பாவத்துக்குப் பயன் இந்திரியங்களாலும், தெய்வங்களாலும், பூதபவுதிகங்க ளாலும் மாறி மாறித் தாபங்களை யடைந்து, வெயில் சகித்திடாப் புழுப் போல் வெம்பும் பிறவிகளுட் பட்டு வாழ்தலே யாகலான், அப்பயனை - **பவம் பெருக்கும்** என்றார். ஆகவே, பரசமயிகள் கூறும் கூற்றுகளும், செய்யும் செயல் களும் பாவத்தைப் பெருக்குவனவாயும், பிறவிகளைப் பெருக்குவனவாயும் இருத்த லால் அவருடைய நெறிகளை - **புரை நெறிகள்** என்றார்.

இங்ஙனமான தீநெறிகள் சிவபெருமானை மறக்கவும் இகழவுமாயிருக்கின்ற தீயோர்களுக்கே நெறியாயிராமல், சிவபெருமானை நினைக்கவும், புகழவுமாயிருக் கின்ற நல்லோர்களுக்கும் நெறியாக வரத் தலைப்படுமானால், அத் தீநெறிகளைப் பாழ்படுத்தி விலக்கி, அந்நல்லோர்களை வைதிக சைவநெறியாகிய நன்னெறிக் கண் போகவிடுத்தற்கு இறைவன் அருளுருவாகிய குருவடிவங்கொண்டு வருதல் அவனது கருணைத்திறமாகலான் - **பிள்ளையார் திருவவதாரஞ் செய்தார்** என்றார்.

அங்ஙனம் அவதாரம் செய்யுங்கால் அவமும் பவமும் பெருக்கும் அவக்கூட் டங்களுக்கும், பவக்கூட்டங்களுக்கும் இடமாயிருக்கும் பதியிலே அவதாரஞ் செய்யாமல், சிவமும் தவமும் பெருக்கும் சிவக்கூட்டங்களுக்கும் தவக்கூட்டங் களுக்கும் இடமாக இருக்கும் திருப்பதியில் அவதாரஞ் செய்தல் அருளுருவாகிய குரு வடிவத்திற்கு இயல்பாகலான்-**சிவம் பெருக்கும் தவம் பெருக்கு**(வனவாகிய) **சரா சரங்களெல்லாம்** (குடிகொண்டிருக்கும்) **சண்பையிலே திருவவதாரஞ் செய்தார்** என்றார்.

**சண்**பைநகர் பெருகுந் தன்மையை யுடைய சிவமும் தவமும் இடங்கொண் டிருத்தற்குப் பதியாயிருத்தலால், அந்நகரமும் நல்லூழி தொறும் அவ்வூழிக ளால் அழிவுறாது தவத்தையும்சிவத்தையும்பெருக்கிக் கொண்டிருக்கும் என்பார் **நல்லூழி தோறும் தவம்பெருக்கும் சிவம்பெருக்கும் சண்பை** என்றார்.

**நல்ல** வெயில், நல்லபாம்பு என்பது போல, அழிக்குந் தொழிலையுடைய **ஊழியினை நல்லூழி** என்றார். சரங்களெல்லாம் தவம் பெருக்கும் சிவம் பெருக்கும் என்னாது அசரங்களையும் உடன் எண்ணிக் கூறியதனால், அசரமாகிய எல்லாப் பொருள்களும் சரங்களாகிய சங்கமங்களுக்கு உபயோகப்படுதலால் அசரங்களை யும் உடன் சேர்த்து - **தவம் பெருக்கும் சிவம் பெருக்கும்** என்றார். (உ௬)

### சீகாழிப் பதியிலுள்ளார் யாவரும் மகிழ்தல்

அப்பொழுது பொற்புறு திருக்கழு மலத்தோர்
எப்பெயரி னோரும்அயல் எய்தும்இடை யின்றி
மெய்ப்படு மயிர்ப்புளகம் மேவியறி யாமே
ஒப்பில்களி கூர்வதொர் உவப்புற உரைப்பார். உ௭

(எ - து.) பிள்ளையார் திருவவதாரஞ் செய்த அந்நாளில், அழகு மிக்க சீகாழிப்பதியிலுள்ள எத்தனை வகைப்பட்டுள்ள வருணத்தவரும் ஒதுங்கி நிற்பதற்கும் செல்வதற்கும் இடைவெளியில்லாமல், பிள்ளையார் அவதாரஞ் செய்த அவ்விடத்தில் வந்துகூடி, தத்தம் உடம்புகளில் உண்டாகும் மயிர்ப்புளகம் உடையவராய், தம்மை யறியாமலே தங்கள் உள்ளத்தில் ஒப்பில்லாததாகிய ஓர் ஆனந்தம் மேலிடுவதால் மகிழ்ச்சியுறுவதை ஒருவரோடு ஒருவர் கூறிக்கொள்வார் என்பதாம்.

அவதாரஞ் செய்த பிள்ளையார் யாவராலும் போற்றப்படும் முருகப்பெருமானே என்று யாவரும் பின் எளிதின் உணர்ந்து களிக்குமாறு, அக் காழிப்பதியிலுள்ளார் யாவருக்கும் அவரவர் அறியாவண்ணம் அவரவர் உள்ளத்தில் களிப்பும், புளகாங்கிதமும் ஆகிய ஆனந்தச்செயல்களை இறைவன் விளைவித்தனன் என்று இத்திருப்பாட்டாற் கூறப்பட்டது.

யாவரிடத்தும் உண்டாகிய இவ்வானந்தச் செயல் தெய்வத்தின் செயலே என்பதைப் பின்வரும் திருப்பாட்டுகளானறிக.

தெய்வத்தினிடத்தில் யாவருக்கும் அன்புண்டாதல் இயல்பாகலானும், பிள்ளையாரும் தெய்வமே யாகலானும் எல்லா வருணத்தினருக்கும் அன்பும் ஆனந்தமும் உண்டாயிற்றென்க.

தெய்வச் செயலால் களிப்புண்டாகப்பெற்ற ஒவ்வொருவரும் "இன்று நம்முடைய சீகாழிப்பதியில் என்ன தெய்வச்செயல் உண்டாயிற்றோ! அதனை நாம் அறியா திருக்கின்றோமே!" என்று சொல்லிக்கொண் டிருக்கின்றபொழுது பிள்ளையார் அவதாரம் தெரியவரவே, அங்கு யாவரும் வந்து இடமின்றி நெருக்கமாகக் கூடினார்களாகலால் - அந்த எய்தும் இடையின்றி என்றார். (உ௭)

### கூட்டத்தார் கூறல்

சிவனருள் எனப்பெருகு சித்தமகிழ் தன்மை
இவண்இது நமக்குவர எய்தியதென் என்பார்
கவுணியர் குலத்தில்ஒரு காதலன் உதித்தான்
அவன்வரும் நிமித்தம்இது வென்றதி சயித்தார். உ௮

(எ - து) அங்கு நெருங்கிக் கூடிய கூட்டத்துள் சிலர், "நாம் மனமகிழுந் தன்மையாகிய இது, சிவபிரானது திருவருளைப்போல மனத்தின்கண் பெருகா நிற்பதற்குக் காரணம் யாது?" என்று கேட்டார்கள். அதற்குச் சிலர் "நம்முடைய சீகாழியில் கவுணிய கோத்திரத்தவராகிய சிவபாத இருதயர் என்னும் வேதியருக்கு ஒரு புத்திரர் வரப்போகின்றார்; ஆகலான், அவர் வருதற்கான

நன்னிமித்தமாகும் நம்மிடத்திலே தோன்றிய இவ்வானந்தம்" என்றார். "அவதாரமாயினரா?" என்று வினவினர் சிலர். "அவதரித்து விட்டனர்" என்றார் வேறு சிலர். அது கேட்ட யாவரும் அதிசயம் அடைந்தனர் என்பதாம்.

"இன்றுண்டாகிய மகிழ்ச்சி உலகக் காட்சியில் நமக்கு உண்டாகும் மகிழ்ச்சி போலில்லை. ஞானக்காட்சியில் இருப்பவர்க்கு அருளால் உண்டாகும் மகிழ்ச்சி போல் இருக்கின்றது. இம்மகிழ்ச்சி நமக்குண்டாதற்குக் காரணம் என்னை?" என்று அதிசயித்தனர் என்றும், அதற்குச் சிறந்த அறிவினையுடைய சில முதியோர் "தன்னளவில் காட்டும் ஒளியினையுடைய நக்ஷத்திரம் போலும், தேய்ந்தும் வளர்ந்தும் காட்டும் ஒளியினையுடைய சந்திரன் போலும், தானிருக்கும் இடத்தளவும் காட்டும் ஒளியினையுடைய தீபத்தைப்போலும் அருள்பெற்றோருடைய செய்தியாக இருப்பின், இன்று இவ்வருண் மகிழ்ச்சி நமக்கெல்லாம் உண்டாகாது; மற்றென்னெனின், அகண்டாகார ஒளியினைக் காட்டும் சூரியனைப்போன்ற அருளுருவுடையாரது செய்தியாக இன்றிருத்தலான் நமக்கும் இவ்வருண் மகிழ்ச்சியுண்டாயிற்று; அஃதாவது, ஆதிமூர்த்தியாகிய சிவனருளாயுள்ள முருகன் இங்கு இன்று இப்பொழுது அவதாரம் செய்திருத்தலால்" என்றும் கூறினரென்று இத்திருப்பாட்டான் கூறியவாறும்.

இவ்வுண்மை தோன்றவே, சிவனருளென ஒரு காதலன், கவுணியர் குலத்தில் உதித்தான், (அதனால்), இவண் நமக்கு - சிவனருளெனப் பெருகுசித்த மகிழ் **தன்மை வர எய்தியது** என்றும், அவ்வருளாளன் தன்னைப் பிள்ளையாகப் பெற்றாருக்கு மாத்திரம் அருள் செய்ய வந்தவனன்று; இவ்வுலகிலுள்ள எல்லா ஆன்மாக்களுக்கும் அருள்செய்ய வந்தவன், என்னும் அவனது அருட்பெருக்கந் தோன்ற முன் காட்டிய, நன்னிமித்தம் என்று—அதிசயித்தார் என்றுங் கூறினர். (உஅ)

### அசரப் பொருள்களும் மகிழ்ந்தமை

பூமுகை அவிழ்ந்து மணம் மேவுபொழில் எங்கும்
தேமருவு தாதொடு துதைந்ததிசை எல்லாம்
தாமருவு சோதிவிரி யத்துகள் அடக்கி
மாமலய மாருதமும் வந்தசையும் அன்றே. உகூ

(எ - து.) சரங்களாயுள்ள ஆன்மாக்களுடைய மகிழ்ச்சி மேலே சொல்லியவாறிருக்க, எட்டுத் திசைகளிலும் உள்ள சோலையிடங்கள் எங்கும் பொருந்தும்படி, பூவரும்புகள் முகையவிழ்ந்து வாசனை வீசி தேனோடு சேர்ந்திருக்கும் மகரந்தங்களை நெருங்கும்படி சிந்தின; அங்ஙனம் நெருங்கிச் சிந்திக்கிடக்கும் மகரந்தப் பொடிகளை, பெரிய பொதிய மலையிற்றோன்றும் இளந்தென்றற் காற்றானது அச்சோலையின்கண்வந்து வாரிக்கொண்டு அச்சோலையை வெள்ளிடையாக்கிப் பிரகாசிக்கச் செய்து சீகாழிப் பதியின்கண் நுழைந்து எவ்விடத்தும் வீசி உலவாநிற்கும் என்பதாம்.

இத்திருப்பாட்டான், சீகாழிப் பதியிலுள்ள அசரப்பொருள்களும் பிள்ளையார் அவதாரம் செய்த அந்நாளில் தாம்தாம் மகிழ்ந்து செய்யவேண்டியவற்றைச் செய்தனவென்று கூறப்பட்டது.

எனவே, சோலைகளிலுள்ள பூக்களில் அரும்பாயிருப்பன சிலவென்பது இன்றி, எல்லா அரும்புகளும் மலர்ந்து மகரந்தப்பொடிகளை அச்சோலைகள் முழுவதும் சிந்தின; மலயமாருதம் எனப்படும் தென்றற் காற்றானது அந்த மகரந் தப் பொடிகளை வாரிக்கொண்டு சீகாழிப் பதியினுள்ளே நுழைந்து அவற்றைச் சிந்தி, சிறு காற்றாக அசைந்து சுகஞ்செய்தது என்றவாறும். (௨௯)

தேவர்களும் மகிழ்ந்து செய்த செயல்

மேலையிமை யோர்களும் விருப்பொடு கரப்பில்
சோலைமலர் போலமலர் மாமழை சொரிந்தே
ஞாலமிசை வந்துவளர் காழிநகர் மேவும்
சீலமறை யோர்களுடன் ஓமவினை செய்தார். ௩௰

(எ - து.) மண்ணுலகில் சராசரங்களாயுள்ள ஆன்மாக்களெல்லாம் மகிழ்ந் தது போல, விண்ணுலகிலுள்ள தேவர்களும், முருகன் தங்களுக்குச் சேனுபதி யாய் வந்து தங்களுக்குள்ள பகைமையை ஒழித்துப் பொன்னுலகில் வாழச்செய் தது போல், இப்பொழுது ஆன்மாக்களுக்குள்ள மும்மலப்பகைமையைப் போக்கி அவர்களைப் பொன்னுர் மேனியன் வாழும் சிவலோகத்தில் வாழச் செய்ய இம்மண்ணுலகில் ஞானுசிரியனுய் வந்தனன் என்று மிக்க மகிழ்ச்சியுடையவர் களாய், மேகமானது வஞ்சனையின்றி நீர்மழையைக் கார்காலத்தில் பெய்வது போல், கற்பக மலர்களை வாரிவாரி இடைவிடாது பொழிந்து, பின், இந்நிலவுல கின் ஊழிக்காலத்தும் அழிவுறாது வளர்கின்ற காழிப் பதியின்கண் வந்து, அங்கு வாழும் வைதிக சீலர்களாகிய பூசுரர்களோடு தாங்களும் பூசுரர்களாய்க் கலந்து, அவர்கள் பிள்ளையார் அவதாரஞ் செய்ததற்காகச் செய்யும் ஓமச்சடங்கினைச் செய்தார்கள் என்பதாம்.

விண்ணுலகில் உள்ள சுரர்கள், "முருகப் பெருமானுல் போகத்துக்குள்ள பகைமையைப் போக்கிக் கொண்டு பொய்ப் பொருளாயுள்ள பொன்னுலகில் வாழும் பொய் வாழ்வினைப் பெற்றோமேயன்றி, போகத்துக்குள்ள பகைமை யைப் போக்கிக் கொண்டு மெய்ப் பொருளாயுள்ள பொன்னுலகில் வாழும் மெய் வாழ்வினைப் பெற்றோமில்லை. மண்ணுலகிலுள்ள பூசுரர்கள், நம்மைப் போலன்றி போகத்துக்குள்ள மும்மலப் பகையைப் போக்கிக் கொண்டு, மெய்ப்பொருளாயுள்ள பொன்னுலகத்தில் வாழ அம்முருகனைத் தம்பொருளாகக் கொள்ளத் தகும் மகனுகப் பெற்று அவனை உத்தேசித்து ஓமஞ் செய்யப் போகின்றார்கள். இந்த யாகஞ் செய்ய நமக்கு எப்பிறப்பில் கூடப் போகின்றது!" என்று அன்பு மேலிட்டவராய்ச் சுரர்களாயிருக்கும் அச்சரீரத்தை விட்டுப் பூசு ரர்களாய் அவர்களோடு கலந்து ஓமஞ்செய்யத் தலைப்பட்டார்களென்று இத் திருப்பாட்டான் கூறப்பட்டது. (௩௰)

வேதவொலி எங்கும் எழுந்த சிறப்பு

பூதகண நாதர்புவி வாழஅருள் செய்த
நாதன்அரு ளின்பெருமை கண்டுநலம் உய்ப்பார்
ஓதுமறை யோர்பிறி துரைத்திடினும் ஓவா
வேதமொழி யால்ஒலி விளங்கிஎழும் எங்கும். ௩௧

(எ - து.) சுரர்கள் பூசுரர்களோடு கலந்து ஓமச் சடங்குகளைச் செய்ய வந்ததுபோல், கைலாச வாசிகளாய் வாழும் சிவகணத் தலைவரெல்லாம், வேதநெறி சைவநெறி பத்திநெறி என்னும் இம்மூவகை நெறிகளினும் வாயும் மெய்யும் சிந்தையுஞ் சென்று சிவனடியைக் கூடிச் சிவானுபவச் செல்வராய் இவ்வுலகி லுள்ளார் வாழும் பொருட்டு ஆளுடைய பிள்ளையாரை இச்சீகாழியில் அவதாரஞ் செய்வித்த இறைவனுடைய திருவருளின் பெருமையை ஆராய்ந்துணர்ந் தவர்களாய்ச் சுரர்கள் பூசுரர்களோடு கலந்து ஓமச்சடங்கினைச் செய்யவந் ததுபோல், தாங்களும் அவ்விருவர்களோடுங் கலந்து சைவச் சடங்குகளைச் செய்வாராயினர். சிவகணத்தலைவர்கள் இவ்வாறு வைதிகச் செயலோடு சைவச் செயலையும் செய்துகொண்டிருக்க, வேதங்கள் நாம் செய்ய வேண்டியவற்றைச் செய்ய வேண்டுமென்று மிக்க ஊக்கப்பாடு உடையவைகளாய், அங்கு வேதம் ஓதும் வேதியர்கள் வேதமோதும் செயலைவிட்டு வேறொரு செயலைச் செய்யப் போவாராய்ப் பிறவார்த்தைகளைப் பேசுவாராயின், அதைப்பிறர் அறியாவண்ணம் தாங்கள் அந்த வேதபாகத்தை விடாது சொல்லவேண்டிய பதக்கிரமங்களை ஒன் றன்பின் ஒன்றாகப் பேரோசையோடு எங்கும் ஒலித்துக்கொண்டிருக்கும் என்பதாம்.

இத்திருப்பாட்டான், கைலாசத்தில் தங்களை ஆண்டு கொண்டிருந்த சாமி நாதன், பூவுலகிலுள்ள சிவனடியார்களை ஆளும்பொருட்டு இச்சீகாழியில் அவதா ரஞ் செய்ய வந்தனன் ஆகலான், சிவகணத்தலைவர்கள் அக்கயிலையிலிருக்க ஆற் றாதவர்களாய், அவதார நாளன்று அங்கு வந்து, தாங்கள் செய்யவேண்டிய சிவாகமச் சடங்குகளைச் செய்தனர் என்றும், அக்காலத்தில், வேதங்களும், தங் களுக்கு முதலாயுள்ள பிரணவத்திற்குப் பொருள் சிவனொருவனே என்று அவ்வேதத்திற்கு அவனையே பொருளாய் வைத்து, பிறதெய்வங்களை யொதுக் கிய அவ்வரிய செயலுக்கு "இதுகாறும் நாம் செய்யவேண்டிய கைம்மாறு செய்வதற்கின்றி கிடந்தோம். அச்செயலை இப்பொழுது செய்வோம்" என்று ஒருங்குகூடி சீகாழியில் வந்து, வேதம் ஓதும் வேதியர்கள் வாயளவே நில்லாது தாங்களே பேரானந்தத்தோடு பேரொலி செய்து கொண்டிருந்தன என்றும் கூறியவாறும்.

இதனால், ஆளுடைய பிள்ளையார் முருகனே என்று உலகினரெல்லாம் எளிதில் உணர, பூதகணநாதர், நாதன் அருளின் பெருமை கண்டு நலம் உய்ப் பார் என்றும், அந்தணர்களை நோக்காது, வேதங்களே எங்கும் ஒலிவிளங்கி எழும் என்றுங் கூறினர். (௩க)

### தருக்கள் முதலியவை செய்த நன்மையின் சிறப்பு

பயன்தருவ பஃறருவும் வல்லிகளும் மல்கித்
தயங்குபுன லுந்தெளிவ தண்மையுடன் நண்ணும்
வயங்கொளி விசும்புமலி னங்கழியும் மாறா
நயம்புரிவ புள்ளொலிகள் நல்லதிசை யெல்லாம். ௩௨

(எ - து.) சிவகணத்தலைவர்களும் வேதங்களும் தாம் தாம் செய்ய வேண் டியவற்றைச் செய்தவாறுபோல், அக்காழிப்பதியில் எத்திசையின் கண்ணும் உள்ள பலவகையான விருட்சங்களும், கொடிகளும் செழிப்புடையனவாய்த்

தாம் தாம் கொடுப்பனவாகிய பலன்களைக் கொடுப்பனவாயின, நீர்களும் இட வேற்றுமையானும் செயல் வேற்றுமையானும், வேற்றுமைப்படாது குளிர்ச்சி யுடன் தெளிவுடையனவாயிருந்தன, சூரிய சந்திரர்கள் செல்லுதற்கு மார்க்கமா யிருக்கின்ற ஆகாயமும் யாதொரு களங்கமுமின்றி நிர்மலமாய்ப் பிரகாசித்தது, பறவைகள் ஒன்றோடொன்று மாறுபடாமல் சுபங்களைக் காட்டும் ஒலிகளையே ஒலித்தன என்பதாம்.

தருக்கள் முதலியன பிறவி பேதங்களேயாயினும் அவைகளும் உயிர்வாழும் இடங்களே யாகலான் அவ்வவ்வுருக்களிலுள்ள உயிர்களும் பிள்ளையார் அவ தாரஞ் செய்தமையைக்கருதி மகிழ்ந்து நல்லனவற்றைச் செய்து நல்லனவாகவே யிருந்தனவென்று இத்திருப்பாட்டான் கூறப்பட்டது. (௩௨)

### வாத்திய முழக்கொலிச் சிறப்பு

அங்கண்விழ விற்பெருகு சண்பையகன் மூதூர்
சங்கபட கங்கருவி தாரைமுத லான
எங்கணும் இயற்றுபவர் இன்றியும் இயம்பும்
மங்கல முழக்கொலி மலிந்தமறு கெல்லாம். ௩௩

(எ - து.) அழகிய அவ்வவ் விடங்கள்தோறும் மேலே சொல்லியபடி சுப சகுனங்களாலும் மங்கல விழவினுலும் பெருமை பெற்றிருக்கின்ற அச்சீகாழிப் பதியில், சங்கங்களும் ஒருகட் பறைகளும் நரம்புக்கருவிகளும் திருச்சின்னங்களும் ஆகிய இவ்வாத்தியங்கள், எவ்விடங்களிலும் தம்மை எடுத்து ஊதல் கொட்டல் முதலிய செயல்கள் செய்வார் செய்யாதொழியினும், தாமாகவே முழங்குவதால் வீதிகள் எல்லாம் தெய்விகமான மங்கல வொலிகளால் நிறைந்திருந்தன என்ப தாம்.

உகூ-வது திருப்பாட்டில், "தவம் பெருக்கும் சண்பையிலே தாவில் சரா சரங்க ளெல்லாம், சிவம் பெருக்கும் பிள்ளையார் திருவவதாரஞ் செய்தார்" என்று கூறினாராகலான், அங்ஙனங் கூறியபடியே சரா சரங்களுக் கெல்லாம் சிவம் பெருக்கிய திறத்தை சீவனருள், எனத் தொடங்கும் உ௮-ம் திருப்பாசுர முதல், இத் திருப்பாசுரம் வரையில் எடுத்துரைத்தனர் என்க.

எனவே, சிவபெருமான் எங்கும் நிறைந்து வசித்திருப்பவனாகலானும், தன் மகனை ஆளுடைய பிள்ளையாராய்ச் சீகாழியில் வரச்செய்தன னாகலானும், வரச் செய்த அந்நாளில் அந்தந்த சராசரங்களில் நின்றும் செய்யவேண்டிய மங்கலச் செயல்களைச் செய்வித்தனன் என்றும், அங்ஙனம் செய்த அவைகளில் எல்லாம் தனது அருளால் விளையும் மகிழ்ச்சியை விளைவித்துப் பரவசமுற்றிருக்கச் செய்தனன் என்றும் ஒவ்வொரு திருப்பாட்டானும் வியந்து கூறினர் என்பதாம்.

எனவே, வேதங்களை நாற்புறமும் சூழ்ந்து விடாது ஒலித்திருக்கச்செய் தான், தேவர்களையும் சிவகணங்களையும் வைதிக சைவத்துக்குரிய சடங்கு களைச் செய்திருக்கச் செய்தான், வாத்தியபேதங்களை யெல்லாம் தாமாகவே இசையின்படி ஒலித்திருக்கச் செய்தான் என்பதாம். (௩௩)

### தந்தையார் மங்கலங் கொண்டாடல்

இரும்புவனம் இத்தகைமை எய்த அவர்தம்மைத்
தருங்குல மறைத்தலைவர் தம்பவன முன்றில்
பெருங்களி வியப்பொடு பிரான்அருளி னாலே
அருந்திரு மகப்பெற அணைந்தஅணி செய்வார். ௬௪

(எ - து.) சிவலோகத்திலும் விண்ணுலகத்திலும் இம்மண்ணுலகத்திலும் உள்ளயாவரும், இவரொழிந்த அசரவுயிர்களும் சிவபெருமானால் பெருகிய மிக்க மகிழ்ச்சியுடையவர்களாய் அந்நிலையில் இருக்க, இத்தகைய குதூகலத்தை உண்டாக்கிய ஆளுடைய பிள்ளையாரைப் பெறும் பாக்கியத்தைப் பெற்ற வேத பாரகராகிய சிவபாத இருதயர், சிவபெருமான் அருளினால் அப் பெருமானுக்கு மகனுமுள்ளாரைத் தமது மகனாகச்சொல்லும்படி பெறவந்த தாகிய, திருவிழாவிற் குப் பொருந்தியதாகிய மங்கலச் செயல்களை, மிக்க களிப்பினோடும் அதிசயத் தோடும் தமது திருமாளிகையின் முற்றத்தில் செய்வாராயினார் என்பதாம்.

மறைத்தலைவர் பிரான் அருளினாலே அருந்திருமகப் பெற அணைந்த அணி, பெருங்களிவியப் பொடுதம் பவன முன்றில் செய்வார் எனக் கூட்டிப் பொருள் கொள்க.

சிவபாத இருதயர் பெற்ற புத்திரப்பேறு தமது இல்லறவியல் ஓங்குவ தற்கேயல்லாமலும், பூதபரம்பரைகள், வேதநெறி, சைவத்துறை என்னும் இவற்றின் உண்மைகளை யுணர்ந்து ஓங்குவதற்கும் ஆகலான் - **பிரான் அருளினாலே அருந் திருமகப்பெற** என்றும், தாம் பெற்ற மகப்பேறொன்றே தமது குலம் ஓங்கவும், பூதபரம்பரைகள் ஓங்கவுமாகப் பெற்றமையான் - **பெருங்களி வியப்போடு** என்றும், இல்லறவியலுக்கு ஏற்றபடி புத்திரப் பேற்றை மிகச் சிறப்பாகப் பெற்றுக் களிப்படைந்தது போல் அதற்குரிய ஏனைச் சடங்குகளையும் வேதமுறைப்படியே செய்து களித்தல் இன்றியமையாத செயலாகலான் அக்களிப் பினையும் அடையுமாறு செய்யவேண்டிய செயல்களைச் செய்வார் என்பார் **அணைந்த அணிசெய்வார்** என்றும், மறைத்தலைவராகிய இறைவனுக்கு மகனாராகிய முருகனைத் தம்முடைய மகனாராகப் பெற்றாராகலான் சிவபாத இருதயரை - **மறைத்தலைவர்** என்றுங் கூறினார்.

இதனால், மறைத்தலைவராகிய சிவபாத இருதயர், மறைக்குத் தலைமை யாகிய பிரணவத்திற்குப் பொருளுரைத்த திருமகனாருக்கு, மறைச் சடங்கினை யாவரும் அறிய மறைக்காமற் செய்யத்தொடங்கினார் என்று கூறப்பட்டது. (௬௪)

### மங்கலச்செயல்களின் வகை

காதல்புரி சிந்தைமகி ழக்களி சிறப்பார்
மீதணியு நெய்யணி விழாவொடு திளைப்பார்
சூதகிகழ் மங்கல வினைத்துழனி பொங்கச்
சாதக முறைப்பல சடங்குவினை செய்வார். ௬௫

(எ - து.) பல மறையவர், சிவபாத இருதயருக்கு வாய்த்ததாகிய புத்திரப் பேற்றைச் சிந்தையில் நினைக்க, அச்சிவபாத இருதயரிடத்தில் மகிழ்ச்சியையும்,

பிள்ளையாரைக்கண்டு மேன்மேற் பெருகும் ஆசையினையும், "இப்பிள்ளையால் நமது குலம் ஓங்குமன்றோ?" என்று எண்ணுதலால் உண்டாகும் களிப்பினையும் உடையராய்ச் சிறப்படைந்திருப்பார்கள்; பல மறையவர், பிள்ளையார் அவதாரஞ் செய்ததற்கென முன்செய்வதாகிய உடம்பிற் பூசும் நெய்விழாக் கொண்டாடுதலாகிய அவ்விழாவினைச் செய்து திளைத்திருப்பார்கள்; பல மறையவர், அவதாரஞ் செய்த அன்று கொண்டாடுவதாகிய மங்கலச் செயல்கருதி, ஆரவாரங் காட்டுதலாகிய மங்கல வாத்தியங்களெல்லாம் ஒன்றின் மேலொன்று முழங்க, சாதகருமம் செய்யும் விதிக்குரிய பல சடங்குகளைச் செய்வாராயினர் என்பதாம். (நரு)

**பார்ப்பன மகளிர் செய்யும் மங்கலம்**

மாமறை விழுக்குல மடந்தையர்கள் தம்மில்
தாம்உறு மகிழ்ச்சியொடு சாயல்மயில் என்னத்
தூமணி விளக்கொடு சுடர்க்குழைகள் மின்னக்
காமர்திரு மாளிகை கவின்பொலிவு செய்வார். நசு

(எ - து.) நூல்களுக்கெல்லாம் முதல்நூல் எனப்படும் சிறப்பினையுடைய வேதம் வழங்கப்பெற்ற மேன்மையினையுடைய வேதியர்குலப் பெண்கள் தம்முள் இயற்கையா யுண்டாகும் மகிழ்ச்சியுடனே சாயலையுடைய மயில்போலும் நடையினையுடையவர்களாய், காதில் அணிந்திருக்கும் குழை முதலிய ஆபரணங்கள் பிரகாசிக்க, இரத்தின தீபங்களோடு பிள்ளையார் அவதாரஞ் செய்த அழகிய திருமாளிகையை அலங்கரிக்கத் தொடங்கினார்கள் என்பதாம்.

பிள்ளைப் பேற்றினால் உண்டாகிய மகிழ்ச்சி பகவதியாருக்கே யல்லாமல் பார்ப்பன மகளிர் யாவர்க்குமே உண்டானமையான் - **தம்மில் தாமுறு மகிழ்ச்சி** என்றும், அவர்களது நடை மயிலின் நடையை ஒத்திருத்தலால் - **சாயல் மயிலென்ன** என்றும், அவர்கள் கையில் ஏந்தியிருக்கும் இரத்தின தீபத்தோடு காதில் அணிந்திருக்கும் காதணியும் இரத்தினமா யிருத்தலால் - **தூமணி விளக்கோடு சுடர்க்குழைகள் மின்ன** என்றும், அழகுக்கு அழகு செய்வதுபோற் சிவபாத இருதயரது அழகிய திருமாளிகையை மேன்மேலும் அழகு செய்யத் தொடங்கினாராகலான் - **காமர்திருமாளிகை கவின் பொலிவு செய்வார்** என்றும் கூறினார். (நசு)

சுண்ணமொடு தண்மலர் துதைந்ததுகள் வீசி
உண்ணிறை விருப்பினுடன் ஓகை உரை செய்வார்
வெண்முளைய பாலிகைகள் வேதிதொறும் வைப்பார்
புண்ணிய நறும்புனல்கொள் பொற்குடம் நிரைப்பார். நஎ

(எ - து.) பொற்சுண்ணப் பொடிகளோடு, குளிர்ந்த மலரின்கண்ணுள்ள மகரந்தப்பொடிகளையுங் கலந்து திருமாளிகையின் முகப்பில் வீசி, வெள்ளிய முளைகளையுடைய பாலிகைகளைத் திண்ணைகள் தோறும் வைப்பார்கள்; காவிரி முதலிய புண்ணிய தீர்த்தங்களால் பூரிக்கப்பட்டுள்ள பொற்குடங்களாகிய பூர்ண கும்பங்களை அங்கங்கும் வைப்பார்கள்; இவ்வண்ணம் அழகு செய்து, அவைகளைக்

கண்டு உள்ளத்தில் நிறைகின்ற விருப்பத்தினால் ஒருவருக்கொருவர் உல்லாசமான வார்த்தைகளைச் சொல்லி மகிழ்வார்கள் என்பதாம்.

துதைந்த துகள்வீசி வெண்முளைய பாலிகைகள் வீதி தொறும் வைப்பார் என்றும், பொற்குடம் நிரைப்பார் என்றும், உண்ணிறை விருப்பினுடன் ஓகை உரை செய்வார் என்றும் கூட்டிப் பொருள் கொள்க. (ந.எ)

செம்பொன்முத லாயபல தானவினை செய்வார்
நம்பர்அடி யாரமுது செய்யநலம் உய்ப்பார்
வம்பலர் நறுந்தொடையல் வண்டொடு தொடுப்பார்
நிம்பமுத லானகடி நீடுவினை செய்வார். நஅ

(எ - து.) தானம் ஏற்றற்குரிய அந்தணர்களுக் கெல்லாம் பொன் முதலிய பல தானங்களைச் செய்வார்கள்; சிவனடியார்களுக்கு அமுதுபடைத்த லாகிய நல்லபணியில் தலைப்படும்படி பலரை ஏவுவார்கள்; அமுது கொண்டவர்களுக் கெல்லாம் செய்யவேண்டிய உபசார மரியாதைகள் கருதி, நறுமணங் கமழும் மலர்களை வண்டுகளோடு தொடுப்பார்கள்; காப்பாக வேப்பிலை முதலியவற்றை அங்கங்கும் செருகுதலாகிய பெரிய தொழிலைச் செய்வார்கள் என்பதாம்.

வண்டுகளோடு மலர்களைத் தொடுப்பார் என்றதனால் தேன் நிரம்பியுள்ள மலர்கள் என்றும், அதனால் அம்மலர்களில் மொய்த்திருக்கும் வண்டுகளை யோட்டினாலும் அவை ஓடாது அவற்றிற்றானே மயங்கிக் கிடக்குமென்றும் மலர்களின் சிறப்புக் கூறப்பட்டது. (நஅ)

ஐயவி யுடன்பல அமைத்தபுகை யாலும்
நெய்யகில் நறுங்குறை நிறைத்தபுகை யாலும்
வெய்யதழல் ஆகுதி விழுப்புகையி னாலும்
தெய்வமண நாறவரு செய்தொழில் விளைப்பார். நகூ

(எ - து.) வெண்கடுகுடனே குந்துருக்க முதலிய பல பொருள்களால் அமைக்கப்பட்ட காப்புப் புகையினாலும், நெய்யுடன் வாசனை யுடைய அகிலந் துண்டுகளால் நிறையச் செய்த புகையினாலும், கொழுந்து விட்டெரியும் ஓமத் தீயில் உண்டாகும் புகையினாலும் தெய்வமணங் கமழும்படியான நல்ல யாகச் செயல்களைச் செய்கின்றவராயிருப்பர் என்பதாம். (நகூ)

ஆயபல செய்தொழில்கள் அன்றுமுதல் விண்ணோர்
நாயகன் அருட்பெருமை கூறுநலம் எய்தத்
தூயதிரு மாமறை தொடர்ந்தநடை நூலின்
மேயவிதி ஐயிரு தினத்தினும் விளைத்தார். சo

(எ - து.) தேவர்கள்தலைவனாகிய இறைவனது திருவருளின் பெருமையை யாவரும் விசேடமாக அடைவதாகிய நன்மை பொருந்த, பரிசுத்தமாகிய அழகிய பெருமை பொருந்திய வேதங்களிற் சொல்லப்படும் நெறிகளை அனுசரித்தனவாகிய ஸ்மிருதிகளிற் கூறப்படும் விதிகளாயுள்ள, திருமாளிகைக்கண் காப்

பிடுதல் மாலைதொடுத்துக் கட்டல் முதலிய பல சடங்குகளைப் பிள்ளையார் திருவவதாரஞ் செய்தநாள்முதற் பத்து நாள்களினும் செய்தார்கள் என்பதாம்.

இவ்வேழு திருப்பாட்டானும், சிவபாத இருதயரும், அவரைச் சேர்ந்த ஏனைய வேதியர்களும் பிள்ளையார் அவதாரஞ் செய்ததாகிய பெரும் பாக்கியத்தையும், புண்ணியத்தின் மிகுதியையும் எண்ணி வேதத்திற் கூறும் விதிகளையும் வேதவிதிகளைத் தழுவிக் கூறும் ஸ்மிருதி தருமங்களையும் அனுசரித்துச் செய்யவேண்டிய சடங்குகளை யாகமுறையானும், சிவனடியார்களுக்கு அன்னம் அளித்தல் முதலிய தானவகையானும், சற்பாத்திரர்களாயுள்ள அந்தண சிரேஷ்டர்களுக்குப் பொன், ஆடைமுதலிய பல தான வகையானும் நிரம்பச் செய்தனர் என்றும், பார்ப்பன மகளிரெல்லாம் திருமாளிகைக்குச் செய்யவேண்டிய மங்கலச் செயல்களை மிக்க களிப்புடன் நிரம்பச் செய்தனரென்றும், இங்ஙனமாகப் பிள்ளையார் அவதாரஞ் செய்தநாள் தொட்டுப் பத்து நாள்வரையில் யாகத் திரவியங்களிலும், தானப் பொருள்களிலும் அறுசுவையோடு கூடிய உணவுகளிலும், அலங்காரஞ் செய்தற்குரிய பொருள்களிலும் குறை நேராவண்ணம் செய்துமுடித்தனரென்றுங் கூறியவாறும். (சO)

நாமகர ணத்தழகு நாள்பெற நிறுத்திச்
சேமவுத யப்பரிதி யில்திகழ் பிரானைத்
தாமரை மிசைத்தனி முதற்குழவி என்னத்
தூமணி நிரைத்தணிசெய் தொட்டிலமர் வித்தார். சக

(எ - து.) சிவம்பெருக்கும் பிள்ளையாருக்குப் பத்து நாட்களிலும் வேதத்தின்படியே செய்யவேண்டிய நற்சடங்குகளைச் செய்துவந்த பின்னர், பதினோராம் நாளில் வைதிக சைவம் அழகுபெறும் வண்ணம் ஆளுடைய பிள்ளையார் என்னும் திருநாமத்தை இட்டு, அத்திருநாமமானது வைதிக சைவருள்ளந்தோறும் நிலைபெறுமாறு நிறுத்தி, உலகினருக்கு இன்பத்தை விளைவிக்கும் வண்ணம் உதயஞ் செய்கின்ற பால சூரியனைப்போலப் பிரகாசிக்கின்ற ஆளுடைய பிள்ளையாரை, தாமரைமலரின்மேல் காணப்படும் ஒப்பில்லாத முதன்மையையுடைய பிள்ளையைப்போல, நல்ல இரத்தினங்களை வரிசைபடப் பதித்து அழகு பெறச் செய்திருக்கும் பூந்தொட்டிலின்கண் பொருந்தி வளரும் (இருக்கும்) படி செய்தனர் என்பதாம்.

இத்திருப்பாட்டால், நாமகரணஞ் செய்து, இரத்தினமயமாகிய பூந்தொட்டிலில் இட்டு யாவருள்ளமும் களிக்குமாறு செய்த சிறப்பு இத்துணைத்தென்று கூறியவாறும்.

ஆளுடையபிள்ளையார் என்னும் அரிய திருநாமம் வைதிக சைவருள்ளந்தோறும் நிலைபெற் றிருந்தாலன்றி வேதசிவாகமப் பொருளாய் விளங்கும் சிவம் அழகுபெற்று அவருள்ளத்தில் நிலைபெறாதாகலான் அவ்வுண்மை தோன்ற, நாமகரணம் இட்டார் என்னாது - நாமகரணத்து அழகுபெற நிறுத்தி [illegible]ன்றார்.

உலகினரைத் தமக்குரிய செயல்களைச்செய்யவொட்டாமலும், கா[illegible]ணவேண்டிய பொருள்களைக் காணவொட்டாமலும் பாழ்படுத்தி யிருக்கும் பேரிருளையோட்டி அவர்களுக்கெல்லாம் இன்பத்தை விளைவிக்கும் சூரியனைப்போல, வைதிக சைவர்

களைப் பாழ்படுத்தியிருக்கும் புத்தசமணமாதி புறச்சமயப் பேரிருளைப் போக்கி, அரன் நாமத்தை எங்கும் பிரகாசிப்பித்து, வைதிக சைவத்தால் விளையவல்ல பேரின்பத்தை விளைவிக்கவந்த ஞானசூரியனுகலின், அவ்வுண்மை தோன்ற - பரிதியிற்றிகழ் பிரானை யென்னுது - சேமவுதயப் பரிதியில் திகழ்பிரானை என்றார்.

கமலாசனனுய்ச் சிருட்டித் தொழிலைச் செய்யும் பிரமனை மலேமுழை யில் தளைபூட்டி இருத்தி, தானே முதற்றெழிலாகிய சிருட்டித் தொழிலைச் செய்யும் முதற்கடவுளாய்க் கமலாசனத்திருந்து அத்தொழி லியற்றிய பால சுப்பிரமணியனைப்போற் பிரகாசிக்கும் திருமேனியராகக் காணக்கிடத்தலின் அவ்வுண்மை தோன்ற, தாமரைமிசைக் கடவுள் என்ன என்னுது - தாமரை மிசைத் தனிமுதற்குழவி என்ன என்றார்.

இரத்தினமயமாய்ப் பிரகாசிக்கும் மேகலாபரணம் அணிந்திருக்கும் உமா தேவியாரது மடித்தலத்து அமர்ந்திருக்கும் காட்சியை இரத்தினத் தொட்டிலில் யாவருங் காணச் செய்தனராகலின் அச்சிறப்புத்தோன்ற - அணிசெய் தொட்டி லில் அமர்வித்தார் என்னுது-தூமணி நிரைத்தணிசெய் தொட்டிலமர்வித்தார் என்றார்.

இதனுல், இருதய குகையின்கண் வசித்து அவர்களை ஆளும் குகப்பெரு மானே இப்பெருமானென்பது தோன்ற, ஆளுடைய பிள்ளையாரென அழகு பெற நாமகரணம் நிறுத்தினுரென்றும், புற இருளைப் போக்குதல் சூரியனன்றி ஆகாமைபோல், புறச்சமய விருளைப் போக்குதல் இவ்வாளுடைய பிள்ளையா ரன்றி ஆகாது என்பது தோன்ற - பரிதியிற்றிகழ்பிரானை என்றும், புறச்சமய இருளைப்போக்கி, சிவநாமார்த்த ஸ்தாபனஞ் செய்யவல்ல பரமாசாரியர் இப் பிள்ளையாரன்றி வேறொருவரில்லை என்பது தோன்ற-தனிமுதல் என்றும். அங் ஙனமான பரமாசாரியன் கொண்ட குழவி வடிவத்திற்கேற்ற சிறப்பினை விடாது செய்தாரென்னும் அச்சிறப்புத்தோன்ற - தொட்டில் அமர்வித்தார் என்றுங் கூறினுர். (சக)

பெருமலை பயந்தகொடி பேணுமுலை யின்பால்
அருமறை குழைத்தமுது செய்தருளு வாரைத்
தருமறைவி யார்பரமர் தாள்பரவும் அன்பே
திருமுலை சுரந்தமுது செய்தருளு வித்தார். சஉ

(எ - து.) மலையரையன் மகளாராகிய பெரிய நாயகியார், விரும்பத்தக்க திருமுலைப்பாலோடு அரிய வேதப்பொருளையுந் தமிழ்மொழியிற் குழைத்து ஊட்ட அவ்வமுதை யுண்டருளும் பிள்ளையாரை, மகனுகப் பெற்ற சிவபாத இருதயருடைய மனைவியாராகிய பகவதியார், இறைவன் திருவடிகளையே போற் றும் பேரன்பையே தம் திருமுலைகளினின்றும் சுரக்கும் பாலாக உண்டருளு மாறு செய்வித்தனர் என்பதாம்.

இத்திருப்பாட்டான், பிள்ளையாரைத் தொட்டிலில் இருத்திச் சிறிது நேரஞ் சென்ற பின்னர்ப் பகவதியார் அப்பிள்ளையின்பாலுள்ள ஆரா அன்பால் பாலூட் டக்கருதி, கருதிப்படியே ஊட்டிய அச்சிறப்பைக் கூறியவாறும்.

தேவர் அரையன் வீற்றிருக்கும் திருக் கயிலாயமென்னும் பெரிய மலையைச் சார்ந்ததாகலின் அச்சிறப்புத் தோன்ற - பெருமலை என்றும், அப்பெருமலை கயிலாயநாதன் பேரருளுருவாகிய உமாதேவியை மகளாகப்பெற்ற அச்சிறப்புத் தோன்ற—பெருமலை பயந்த கோடி என்றும், அம்மகளாருடைய மகன் அவரது முலைப்பாலையே விரும்புதல் இயற்கை என்னும் அச்சிறப்புத் தோன்ற—பேணு முலையின் பால் என்றும், அப்பெரிய நாயகியார் இம்மண்ணுலகில் வந்த பிள்ளையாருக்கு ஊட்டிய பால் அருமறைப் பொருளாகிய தமிழ்வேதம் என்னும் அச்சிறப்புத் தோன்ற - அருமறை குழைத்து என்றும், செவியின் வழியாக உண்ண வேண்டிய தமிழ்ச் சொல்லாகிய பாலை வாயின் வழியாக வுண்ட அச்சிறப்புத் தோன்ற—அமுது செய்தருளுவாரை என்றும், சொற்பாலை வாயின் வழியாய் உண்ண வல்லாராகிய அவர்க்கு வாய்ப்பாலாகிய முலைப்பால் வேண்டாவாகலானும், பகவதியாரும் முலைப்பாலை யுண்ணும் மகனை வேண்டாது அருள்ஞானப்பாலையே யுண்ணும் மகனையே வேண்டினாராகலானும், அருள் ஞானப் பாலுண்ணும் அம்மகனாருக்குத் தாம் ஊட்டும் பால் அன்பாகிய பாலன்றி வேறுபால் இல்லாமையானும், அப்பாலுண்பார்க்குச் சிவனடியே சிந்திக்கும் அன்பே தோன்றுமன்றி வேறு தோன்றாவாகலானும், அவ்வுண்மையனைத்துந் தோன்ற—தருமறைவியார் பரமர்தாள் பரவும் அன்பே திருமுலை சுரந்தமுது செய்தருளுவித்தார் என்றுங் கூறினர்.

இதனால், தாய் மலர்ந்த முகத்தினளாய்த் தழுவி முலைதரவந்த, நோய் மலர்ந்த பிறவிதொறும் நுழையும் பிள்ளையன்று இவ் ஆளுடைய பிள்ளை என்பது தோன்ற 'பெருமலை பயந்த கொடி முலையின்பால் பேணும்' என்றும், இவ் ஆளுடைய பிள்ளை அங்ஙனம் விரும்பியுண்ட பாலும், மலைக்கொடியார் இரக்கத்துடன் வந்து ஊட்டிய இனிய தமிழ் வேதமே யன்றிப் பசிக்கு ஊட்டும் முலைப் பாலன்றென்பது தோன்ற 'அருமறை குழைத்தமுது செய்தருளுவாரை' என்றும், பெரியநாயகியார் அருமறை குழைத்து ஊட்டியது போல், பகவதியாரும் இறைவன் திருவருளுக்கு வேண்டிய அன்பினையே குழைத்து ஊட்டினரென்பது தோன்ற 'மறைவியார் பரமர்தாள் பரவும் அன்பே திருமுலை சுரந்து அமுது செய்தருளுவித்தார்' என்றும் கூறினர். (சஉ)

ஆறுலவு செய்யசடை ஐயர்அரு ளாலே
பேறுலகி னுக்கென வரும்பெரிய வர்க்கு
வேறுபல காப்புமிகை என்றவை விரும்பார்
நீறுதிரு நெற்றியில் நிறுத்திநிறை வித்தார். சங

(எ-து.) கங்காநதி உலாவப்பெற்ற சிவந்த சடைமுடியினையுடைய இறைவனது திருவருளினாலே, இந்நிலவுலகத்தாருக்குப் பேறென்று பெரியோரெல்லாம் சொல்ல வந்தருளிய பெரியோராகிய ஆளுடைய பிள்ளையாருக்கு மண்காப்பு முதலிய வேறு வேறு காப்புகள் இடின் அவை குற்றமாய் முடியுமென்று, அக்காப்புகளை நெற்றியில் இடுவதற்கு விரும்பாதவர்களாய்த் திருநீற்றுக் காப்பினை இட்டு நெற்றியை நிறைவித்தார்கள் என்பதாம்.

இறைவனது திருவுள்ளத்தில் தண்ணிய திருவருள் உலவு[illegible]தைப்போல், சடைமுடியில் தண்ணிய கங்கையாறு உலவும் சிறப்புடைத் தென்பது தோன்ற—ஆறுலவு செய்யசடை ஐயர் அருளாலே என்றும், பெருமலை பயந்த கொடி

பேணுமுலையின் பால் அமுது செய்தருளும் பெரியோரே இவர் என்னும் அச் சிறப்புத் தோன்ற—**பேரியவர்** என்றும், அங்ஙனமான சிறப்புடைய பிள்ளைக்கு இந்நிலவுகில் அப் பெரியநாயகியார் பாலூட்டும் பொழுது அருமறை குழைத்து ஊட்டுவாராகலானும், அங்ஙனம் ஊட்டுவது உலகினர் சிவப்பேறெய்துதற்கே ஆகலானும், அங்ஙனமான சிவப்பேற்றை உலகினரடைய இறைவன் திருவுளத் தெண்ணித் தமது பிள்ளையை ஆளுடைய பிள்ளையாராக வரச்செய்தனராகலானும் அச்சிறப்பின் வகையெல்லாம் தோன்ற- **ஐயர் அருளாலே பேறுலகினுக்கென வரும் பேரியவர்க்கு** என்றும், இம் மண்ணுலகினைக் காக்கும் கடவுளகவும், மண்ணுலகினர்க்குத் திருநீற்றுக்காப்பை இடும் பேராசிரியராகவும் வந்த இப் பெரியாருக்கு மண்காப்பு முதலியவற்றை இடுதல் பெருங்குற்றம் என்னும் அச்சிறப்புத் தோன்ற— **வேறுபல காப்பு மிகை என்றுளம் விரும்பார் (ஆகி) நீறு திருநெற்றியில் நிறுத்தி நிறைவித்தார்** என்றும், சமணரால் நீறழிபட்ட நெற்றியுடையார்க் கெல்லாம் நீற்றை நிறைவிக்கவே இப் பிள்ளையைப் பகவதியார் வேண்டினராகலின், அப் பகவதியார் அப் பிள்ளைக்கு நீற்றையிட விரும்புவரேயன்றி வேறொன்றையிட விரும்புவரோ? விரும்பார் என்னும் அவ்வுண்மை தோன்ற—**வேறு பல காப்பு விரும்பார்** என்றும், பகவதியார் பெரியநாயகியார் பிள்ளையைத் தாம் ஆளும் பிள்ளையாகப் பெற்று அப்பிள்ளையாரது நெற்றியில் திருநீற்றை நிறுத்தாராயின், இவ்வுலகில் நீறு நிறையாதாகலின், அச்சிறப்புத் தோன்ற - **நீறு திருநெற்றியில் நிறுத்தி நிறைவித்தார்** என்றுங் கூறினர்.

இத்திருப்பட்டான், ஆளுடைய பிள்ளையாராகிய பெரியார் இம்மண்ணுலகில் வந்தது இறைவன் திருவருளாணையால் எனவும், அங்ஙனமான ஆணை உயிர்கள் பெறுதற்கரிய சிவப்பேற்றை மிக எளிதிற் பெறுதற் கெனவும், அச்சிவப்பேற்றை யளிப்பது திருநீறாகலான் அத்திருநீறு உலகமுற்றும் நிறைந்தொளிர அப்பிள்ளையாரது திருநெற்றியில் அத் திருநீற்றைக் காப்பாக இட்டு நிறுத்தினரெனவுங் கூறியவாறும். (சங)

தாயர்திரு மடித்தலத்துந் தயங்கு மணித் தவிசினிலும்
தூயசுடர்த் தொட்டிலினுந் தூங்குமலர்ச் சயனத்துஞ்
சேயபொருள் திருமறையுந் தீந்தமிழுஞ் சிறக்கவரு
நாயகனைத் தாலாட்டு நலம்பலபா ராட்டினர். சச

(எ - து.) ஆளுடைய பிள்ளையாருக்குத் திருநீற்றைக் காப்பாக இட்ட பின்னர், வாக்குக்கும் மனத்திற்கும் எட்டாத பொருளின் திறமெல்லாம் நிறைந்துள்ள வேதங்களும் இனிய தமிழ் மொழியும் இவ்வுலகின்கண் சிறந்தோங்குமாறு வந்தருளிய அவ் ஆளுடைய பிள்ளையாரை, நற்றாய் முதலியோர் தமது ஆசை நிறையத் தமது மடியினிடத்தும், இரத்தினமயமாய்ப் பிரகாசிக்கும் சயனங்களினும், பரிசுத்தமாகிய ஒளிவீசும் தொட்டிலினும், அசைந்தாடுகின்ற பூந் தொட்டிலினும் இருத்தி, அப்பிள்ளையாருடைய பல நலங்களையும் பல முறையாய்த் தாலாட்டுஞ் செயல்வழியாய்ச் சொல்லிச் சொல்லி அன்பு பாராட்டினார்கள் என்பதாம்.

சேயபொருள் திருமறையும் தீந்தமிழும் சிறக்கவரும் நாயகனை, தாயர் திருமடித்தலத்தும் தயங்குமணித் தவிசினிலும், தூயசுடர்த் தொட்டிலினும்,

தூங்குமலர்ச் சயனத்தும், நலம்பல தாலாட்டுப் பாராட்டினர் எனக் கூட்டிப் பொருள் கொள்க.

பசுபாசங்களுக்கு அப்புறமாய், அஃதாவது, கண்ணருக்கன் போல் வேறாய் வேறல்லவா யிருக்கும் இறைவனது பொருட்டிறத்தையே பன்முறையும் பல வகையாய்ச் சிறந்தெடுத்தோதும் சிறப்பினையுடையது வேதமாகலின் - **சேய பொருள் திருமறை** என்றும், பொருளிலக்கணத்தால் வேறா யிருக்கப்பட்ட இறைவன், ஆன்மாக்கள் பந்தமுத்திப் பயனை எய்துமாறு உடலுயிர்போல் ஒன்றாயும் ஒன்றல்லவாயும், அறிவொளிபோல் உடனாயும் உடனல்லவாயும் இருக்கும் இறைவனது அத்துவித்த் திறத்தை மிக எளிதாயும் இனிமையாயும் சிறந்தெடுத்தோதும் சதுரப்பாடுடையது தமிழ்வேதமாகலின் - **தீந்தமிழ்** என்றும், இன்மை, அன்மை, மறுதலை என்னும் முப்பொருளுணர்த்தும் அத்வைதப் பொருளில், வேறு என்னும் அன்மைப் பொருளுணர்த்தும் சேயபொருள் திருமறைநெறியும், இன்மை மறுதலை என்னும் இருபொருளையும் ஒழித்து இறைவன் பாசபதார்த்தங்களில் ஒன்றாயிருந்து காட்டும் உபகாரத்தையும், பசுக்களாகிய ஆன்மவர்க்கங்களில் உடனாயிருந்து காணும் உபகாரத்தையும் இயற்றி வருந் தன்மையை உணர்த்தும் தீந்தமிழ்த்துறையும் தமது திருவாக்கால் சிறந்தெடுத் தோதவந்த தலைவராகலின் - **சேயபொருட்டிருமறையும், தீந்தமிழும் சிறக்கவரும் நாயகனை** என்றுங் கூறினர்.

அல்லதூஉம், சமண்முதலிய புறச்சமயங்கள் பாழ்பட்டொழியவும், சைவ சமயம் தழைத்தோங்கவுமே சிவபாத இருதயரும், பகவதியாரும், ஏனையரும் மகப்பேறு வேண்ட, வேண்டியபடியே அச்செயல் புரியவே வந்த மகனார் இவரென்று அவரெல்லாம் உள்ளத்துள்ளே அறிந்தவராகலின், தாம் முன் எண்ணியிருந்த செயல்களையும் எண்ணங்களையும் தாலாட்டுப் பாடும் பாடன் முறையில் பாடினராகலின்—**நாயகனைத் தாலாட்டு நலம் பல பாராட்டினர்** என்றார்.

நலம்பல பாராட்டினர் என்னும் விசேடத்தை இனிவரும் ௬௬, ௬௨, ௬௩-ம் திருப்பாடல்களிற் காணலாமென்க. தாலாட்டுப் பருவம் எட்டாவது மாதத்தில் நிகழ்வது. தாலம், நாவினை யசைத்தருளாய் என்னும் பொருள் மேனின்றது; தாலாட்டு என்பது பின்மொழி கெட்ட முன்மொழி நிலையல்; அமரசிம்மன் என்பது அமரம் எனவும் வீமசேனன் என்பது வீமன் எனவும் வருதல்போல.

இத்திருப்பாட்டான், ஆளுடையபிள்ளையாரது பிள்ளைமைப் பருவத்துக்கேற்பச் செய்யுஞ் செயல்களைச் செய்தனரென்றும், அச்செயலிலேயே தமது வேண்டுகோளையும் அவருக்கு அறிவுறுத்துவோர் போன்று தாலாட்டுப் பாடல்களைப் பாடினரென்றுங் கூறியவாறும். (௬௪)

### ஆளுடைய பிள்ளையார் செங்கீரை யாடுதல்

வருமுறைமைப் பருவத்தில் வளர்புகலிப் பிள்ளையார்
அருமறைகள் தலையெடுப்ப ஆண்டதிரு முடியெடுத்துப்
பெருமழுவர் தொண்டல்லால் பிறிதிசையோம் என்பார்போல்
திருமுகமண் டலமசையச் செங்கீரை யாடினர். ௬௫

(எ - து.) திருப்புகலி என்னும் சீகாழிப் பதியின்கண்ணே வளர்ந்தருளா நின்ற ஆளுடைய பிள்ளையார், முறையாக வருகின்ற சப்பாணிப் பருவத்தில் இறைவனுடைய அருமைகளை அருமையாக எடுத்தாளவல்ல வேதங்கள் தலை எடா நிற்க, தமது திருமுடியை மேலே எடுத்து, "பெரிய பரசாயுதத்தையுடைய இறைவனது திருத்தொண்டினையல்லாமல் மற்றொரு தொண்டினுக்கு யாம் இசையோம்" என்று மறுப்பார்போல், அழகிய திருமுகமண்டலம் அசையும்படியாகச் செங்கீரையாடி யருளினார் என்பதாம்.

புகலிவளர் பிள்ளையார் வருமுறைமைப் பருவத்தில் எனவும், ஆண்ட அருமறைகள் தலை எடுப்ப எனவும் கூட்டுக.

பாலிய, யௌவனாதி பருவங்களை யடையாது, என்றும் குமாரப் பருவத்தினையுடைய பிள்ளையார் சீகாழி என்னும் பதியிற்புகுந்து முறையாய் வளரும் பருவத்தையடைந்த அதிசயந்தோன்ற - புகலிவளர் பிள்ளையார் வருமுறைமைப் பருவம் என்றார்.

மூவரென்றே எம்பிரானொடும் எண்ணி விண்ணாண்டு மண்மேல் தேவரென்றே திரிபவராகிய தேவரது இறுமாப்பையும், அங்ஙனந் திரிவாரைக் கண்டு அவர்கட்கு ஆட்பட்டுழலும் உவலைச்சமயிகளது இறுமாப்பையும் அடக்குமாறு அவர்களைத் தியானஞ் செய்யும் ஆன்ம வர்க்கங்களிற் சேர்த்து நகாரணர்கள் எனக் கழித்தும், பரசிவப் பிரபுவைத் தியானிக்கப்படும் தியேயப் பொருளில் வைத்துப் போற்றி அருமை பாராட்டி ஆளும் அருமைதோன்ற - ஆண்ட அருமறைகள் என்றார்.

அங்ஙனம் அருமைபாராட்டி ஆளும் அரிய வேதங்கள் எண்ணிய எண்ணங்கள் புறச்சமயிகளால் தாழாவண்ணம், அஃதாவது பூர்வபக்ஷமாகா வண்ணம், அவற்றின் சித்தாந்த முடிபை எடுத்துக்காட்டி அவர்கள் தலையை யசைப்பிக்கத் தமது முடியை எடுக்கும் அவ்வாண்மை தோன்ற - அருமறைகள் தலையெடுப்ப திருமுடி எடுத்து என்றார். "கண்டஇவை யல்லேன்நான் என்றகன்று, காணுக் கழிபரமு நான்அல்லேன் எனக்கருதிக் கசிந்த, தொண்டினொடும் உளத்து அவன்தான் நின்ற கலப்பாலே சோகம் எனப் பாவிக்கத் தோன்றுவன் வேறின்றி, விண்டகலும் மலங்களெல்லாம் கருடதியானத்தால் விடமகலும் அது போல விமலதையும் அடையும், பண்டைமறைகளும் அது நானானேன் என்று பாவிக்கச் சொல்லுவது இப்பாவகத்தைக் காணே" என்ற சிவஞான சித்தித்திருவாக்குப்படி கசிந்த தொண்டினொடும் சோஹம்(அதுநான்)என்று பாவித்து என்னில் அவன் வேறாகாது, அவனில் நான் வேறாகாது இருத்தலாகிய அந்த நிலைக்கு இசைவோமன்றி, கசிந்த தொண்டினைவிட்டு அஹம்பிரஹ்மாஸ்மி (நான் பிரமமாயினேன்) என்று கருதி, பிரமநிலையை யடையாது அகங்கார நிலையை யடைதலாகிய அந்த நிலைக்கு இசையோம் என்னும் அவ்வதிசய சிவானுபவநிலை தோன்ற - பெருமழுவர் தொண்டல்லாற் பிறிதிசையோம் என்பார் போல், திருமுக மண்டலம் அசையச் செங்கீரையாடினர் என்றார்.

செங்கீரை என்பது, ஐந்தாம் மாதத்தில் நிகழ்வது; ஒரு கால் முடக்கி ஒரு கால் நிமிர்த்து இருகரங்களையும் நிலத்திலூன்றித் தலை நிமிர்ந்து திருமுகமசைய ஆடுதல்.

இத்திருப்பாட்டான், ஆளுடைய பிள்ளையார் திருமுடியை எடுத்தது, வேதத்தின் முடிபு இது என எடுத்துக்காட்டுதற் கெனவும், செங்கீரையாடியது சோஹம் என்னும் மகா வாக்கியத்துக்குப் பொருள் இது என உணர்த்துதற் கெனவுங் கூறியவாறும். (௪௫)

சப்பாணி கோட்டல்

நாமறியோம் பரசமயம் உலகிலெதிர் நாடாது
போமகல என்றங்கை தட்டுவதும் புனிதன்பால்
காமருதா ளம்பெறுதற் கொத்துவதுங் காட்டுவபோல்
தாமரைச்செங் கைகளினால் சப்பாணி கொட்டினார். ௪௬

(எ - து.) "இவ்வுலகின்கண் யாமும் சமயிகளென்று உலாவுகின்ற சமயிகளே! நீவிரெல்லாம் வேதசிவாகமங்களால் அங்கீகரிக்கப்பட்ட சமயிகளல்லீர்; ஏனெனில், வேதசிவாகமங்களின் உட்கிடைப் பொருளை ஆராயும் வன்மையுடைய யாம் அவைகளில் உங்களைக் கண்டோமில்லை. (ஆகலின்) எங்களெதிரில் நில்லாமலும், எங்களைப் பார்க்காமலும் தூரத்தே ஓடிப் போங்கள்" என்று அழகிய திருக்கரங்களைத் தட்டுதல்போலும், அனாதிமல முத்தன்பால் அழகிய பொற்றாளம் பெறுதற்கு ஒத்தறுத்தலைக் காட்டுதல் போலும் செந்தாமரை போன்ற திருக்கரங்களினால் சப்பாணி கொட்டி யருளினார், என்பதாம்.

உலகில் (உலாவுகின்ற) பரசம(யிகளே உங்களை)யம் நாம் அறியோம், (ஆகலின் எங்களை) எதிர் நாடாது அகலப்போம் என்று அங்கை தட்டுவது (போலும்) எனக் கொண்டுகூட்டுப் பொருள் கொள்க.

சப்பாணி கொட்டல், ஒன்பதாவது மாதத்தில் நிகழ்வது. இது கைசேர்த்துக் கொட்டும் பருவம். ச - சகிதம், பாணி - கை எனப் பொருள்படும்.

ஆன்றோர்களால் பிரமாணஉரையாக எடுத்தாளப்படும் பதிவாக்காகிய வேதசிவாகமங்களில் முத்திநெறி யடைதற்கு வகுத்த சமயம் சிவனது திருக்கடைக்கண் சேர்ந்துள்ள சித்தாந்த சைவம் ஒன்றே யன்றி வேறு சமயங்கள் இல்லையாகலான், அத்துணிபினை உலகினர் அறிய - **உலகில் பரசமயம் நாமறியோம்** என்றும், அங்ஙனம் முத்திநெறி யறியாத மூர்க்கராகிய கல்லாதாரது அறிவு கழிய நன்றாயினும், கொள்ளார் அறிவுடையார் ஆகலான், அத்துணிபு தோன்ற - **எதிர்நாடாது அகலப்போம்** என்றும், "எட்டுரு விரவியென்னை ஆண்டவன் ஈண்டு சோதி, விட்டிலங் கலங்கற்றில்லை வேந்தனைச் சேர்ந்திலாத, துட்டரைத் தூர்த்த வார்த்தைத் தொழும்பரைப் பிழம்பு பேசும், பிட்டரைக் காணுகண் வாய் பேசாது அப்பேய்களோடே" என்று **திருவிசைப்பாவிற்** கூறியபடி, வேதசிவாகமங்களாற் கூறப்பட்டுள்ள சித்தாந்த சைவநெறியை யிழந்து இகழ்ந்த மூர்க்கரைக் கண்களால் எதிரே காண்கினும், வாயால் எதிர் நின்று பேசினும் ஒழியாப் பாவத்தை விளைவிக்கும் என்னும் அக்கொடுமை தோன்ற - **அகலப் போமென்று அங்கை தட்டுவது** என்றுங் கூறினார். (௪௬)

தவழ்ந்து செல்லல்

விதிதவறு படும்வேற்றுச் சமயங்கள் இடைவீழ்ந்து
கதிதவழ இருவிசும்பு நிறைந்தகடி வார்கங்கை

நதிதவழும் சடைமுடியார் ஞானம்அளித் திடவுரியார்
மதிதவழ்மா ளிகைமுன்றில் மருங்குதவழ்ந் தருளினர். ௪௭

(எ - து.) வேத சிவாகமங்களிற் கூறப்படும் விதிமுறைகள் தவறுபடும்படியான தீயவொழுக்கங்களை மேற்கொண்டிருக்கும் புறச் சமயங்களிலே வீழ்ந்து போவதாகிய துர்க்கதியானது சைவசமயிகளை விட்டு நீங்கிப் புறத்தே நகர, ஆகாயவழி முழுவதும் நிறைந்து நறுமணம் வீசிவரும் கங்கையாறு தம் திருச்சடையில் தவழ்ந்திருக்குமாறு வைத்தருளிய பெரிய சடைமுடியினை யுடையாரது சிவஞானத்தை அருளுதற்குரிய ஆசிரிய மூர்த்தியாகிய ஆளுடைய பிள்ளையார், சந்திரன் தவழும் திருமாளிகையின் முற்றத்தின் பக்கத்தில் தவழ்ந்து செல்லும் பருவத்தினை உடையவராயினர், என்பதாம்.

வேத சிவாகமங்களிற் கூறப்படும் விதிமுறைகளை ஆராய்ந்தறியும் அறிவினைப் போக்கி, அவைகளில் குற்றங்களையே காணும் அறிவினை உண்டாக்கி, அவ்விதி முறைகளைக் கடந்து செல்வதில் துணிவினையும் உண்டாக்கி, அவைகளில் நிஷித்தமாகக் கூறப்படும் தெய்வங்களையும், புண்ணிய பாவங்களையும் இம்மை மறுமைகளையும் எண்ணிச் செய்வதாகிய நல்லொழுக்க நெறிகளையும் இகழும்படி செய்து, மனம்போனவா றெல்லாம் ஒழுக்கங்களைக் கற்பித்துக் கொண்டு, அவ்வொழுக்கங்களையே கைப்பற்றி ஒழுகும் வண்ணம் செய்து, இம்மை முதலாகச் சொல்லப்படும் மும்மைப் பயன்களை இழக்கச் செய்து பிறத்தல் இறத்தல் நரகிற் கிடத்தலாகிய மும்மைப்பயனைத் தரும் வன்மைப் பாட்டினை யுடைத்தாய்ச் சைவசமயிகளைத் தம் வசமாக்கிக் கொண்டு அரசாட்சி புரியவல்ல புறச்சமயிகள், வைதிக சைவம் அழகிதாக ஓங்கி யிருக்கும் சைவ ராஜதானியினின்றும் அகன்று மெல்லமெல்லத் தவழ்ந்து போகும் நெறியைத் தேடிக்கொண்டு போக, வைதிக சைவம் வழங்குவதாகிய முன்றிலின்கண் வந்தனர் ஞானமளித்திட வுரியாராகிய ஆளுடையபிள்ளையார் என்று இத்திருப் பாட்டாற் கூறப்பட்டது. (௪௭)

### வருகைப் பருவங் கண்டு வருகவென்றழைத்தல்

சூழவரும் பெருஞ்சுற்றத் தோகையரும் தாதியரும்
காழியர்தம் சீராட்டே கவுணியர் கற்பகமேயென்
றேழிசையும் பலகலையும் எவ்வுலகும் தனித்தனியே
வாழவரும் அவர்தம்மை வருகவருகென அழைப்ப. ௪௮

(எ - து.) வேதத்துக்குரிய ஏழிசைகளும், முதல்நூல், வழிநூல், சார்பு நூலாக விரிந்து கிடக்கும் பலநூல்களும், எல்லாவுலகங்களும் ஆகிய இவைகள் ஒன்றேனும் தத்தம் நிலைகளினின்றுங் கெடாமல் வாழும்படி வந்த ஆளுடைய பிள்ளையாரை, சூழும்படி வரும் பெரிய சுற்றத்தினரும், செவிலித்தாயரையொத்த தாதியரும் ஆகிய எல்லோரும் "காழிப்பதியின் கண் வாழ்வாரது செல்வமே! கவுணியகோத்திரத்தார் கொண்டாடும் கற்பகமே!" என்று சொல்லி "வருக வருக" என்றழைப்பதாகிய, வருகைப்பருவத்தை அடைந்தனர், என்பதாம்.

ஏழிசையும் பலகலையும் எவ்வுலகும் தனித்தனியே, வாழவரும் அவர்தம்மை, சூழவரும் கற்பகமே வருக வருக என அழைப்ப எனக்கூட்டிப் பொருள் கொள்க.

உலகின்கண்ணுள்ள எல்லா வுயிர்களும் தாம் தாம் செல்லும் நெறியினை யுணர்ந்து வாழுமாறு விதித்த வேதமாகச் சொல்லப்பட்ட மூவகை நூல்களும் வழங்கவொட்டாது பாழ்படுத்திய புறச்சமயிகளாகிய சமணராதியர் பாழ் பட்டுப்போகவும், அம்மூவகை நூல்களும் விதித்திருக்கும் அவ்வழியொழுகுதற்கு உரியாராகிய உலகினரெல்லாம் வாழவும் வந்தவராகிய பிள்ளையாரை, வைதிக சைவ மார்க்கத்தில் நிற்போராகிய சிவபாத இருதயருக்குச் சுற்றத்தினராயுள்ள பார்ப்பன மகளிரெல்லாம் "வைதிக சைவ மார்க்கம் பாழ்பட்டு வறுமையடைந்து கிடக்க, அவ்வறுமையைப் போக்க வந்த செல்வமே! கவுணியர் கோத்திரத் தில் வந்தவராகிய சிவபாத இருதயர், 'மேதினிமேற் சமண்கையர் சாக்கியர் தம் பொய்மிகுத்தே, ஆதி அருமறை வழக்கம் அருகி அரன் அடியார்பால், பூதிசாதனம் விளங்கப் போற்றல் பெறாது ஒழிந்ததே' என்று மிகவும் ஏக்கங் கொண்டு உம்மைப் பிள்ளையாகப் பெற்று அவர் ஏக்கமகன்று அவரெண்ணியிருக் கும் சைவ நலங்களையெல்லாம் எண்ணியவாறே அளிக்க வந்த கற்பகமே! எங்க ளிடம் வருக வருக" என்று அன்போடும் அவாவோடும் அழைத்தழைத்துக் களித்தனர் என்று இத்திருப்பாட்டாற் கூறப்பட்டது. (சஅ)

### வருகவென்று அழைத்தவரை மகிழச் செய்தல்

திருநகையால் அழைத்தவர்தம் செழுமுகங்கண் மலர்வித்தும்
வருமகிழ்வு தலைசிறப்ப மற்றவர்மேற் செலவுகைத்தும்
உருகிமனம் கரைந்தலைய உடன்அணைந்து தழுவியும்முன்
பெருகியஇன் புறஅளித்தார் பெரும்புகலிப் பிள்ளையார். சகூ

(எ - து.) பெரிய புகலி என்னுந் திருப்பெயருடைய சீகாழியின்கண் அவ தரித்த ஆளுடையபிள்ளையார், தம்மை 'வருகவருக' என்று அழைத்த சுற்றத்தின ருடைய முகமாகிய தாமரை மலர்களை, தமது புன்னகையால் மலரச் செய்து தம்மை வருகவருக என்று அழைக்கும் அவருக்கு அம்மகிழ்ச்சியானது அதிகரித் துச் சிறக்குமாறு, தவழ்ந்து தவழ்ந்து சென்று அவர்களருகிற் சென்றவுடன் தமது சிற்றடியை நீட்டி அவர்களை உதைத்தும், அவ்வடி பட்டவுடன் அவர்கள் மனம் உருகி அன்பினாற் கரைந்து கரைந்து அலைய, அதுகண்டு உடனே அவர் களை நெருங்கித் தம்முடல் அவர்கள் உடலிற் பொருந்த முன்சென்று தழுவியும், இவ்வகையாக அவர்கள் விரும்பிய இன்பத்தைப் பெருக்கமாகத் தந்தருளினர், என்பதாம்.

தம் வருகையை வேண்டி அன்பின் வசப்பட்டு 'வருக வருக' என்றழைக்கும் மெய்யன்பர்களைத் தமது திருக்கண்ணால் முன் நோக்கி, திருவருள் பாலித்து முகத்தை மலரச் செய்தலும், பின்னர் சமீபித்துத் திருவடி சூட்டுதலும், அதன் பின்னர், தமது திருமேனியிற் பொருந்த அவர்களைத் தழுவிப் பேரானந்தம் அளித்தலும் தீவிரதர சத்திநிபாதர்க்குச் செய்யும் தீக்ஷாக்கிரமமாகலான், அத் தீக்ஷா விதியையே இங்கு திருவிளையாட்டின் வழியாய் இம்மங்கையாராகிய சத்திநிபாதருக்குச் செய்தனரென்று இத்திருப்பாட்டாற் கூறப்பட்டது.

தவத்தான் வந்த அரும்பெறல் மகவை, அன்பு பாராட்டி 'வருக' என்று அழைக்குங்கால், அம்மகவானது புன்னகைகாட்டி அவர்களுக்கு முகமலர்ச்சி

யுண்டாக்கலும், 'வருக' என்று இருகையையும் நீட்டி அழைக்குங் கையில் மெல்ல மெல்ல வந்து சிற்றடியை முன்வைத்து மகிழ்வித்தலும், அவர்கள் தங்கள் கையில் வைத்த சிற்றடியைப் பற்றிக்கொண்டு அம்மகவை வாரியெடுத்து மார்புறத் தழுவத் தலைப்படுங் காலத்து அம்மகவானது களிப்பு மிகுதியினால் அவர்களுக்குமுன் அவர்களைத் தாம் தழுவி அணைத்துக் கொள்ளுதலும் இயல்பாகலான் அந்த லீலையும் செய்தனர் பிள்ளையாரென்க. (௪௯)

### தளர்நடைப் பருவம் அடைதல்

வளர்பருவ முறையாண்டு வருவதன்முன் மலர்வரிவண்
டுளர்கருமென் சுருட்குஞ்சி யுடன்அலையச் செங்கின்று
கிளரொளிக்கிண் கிணியெடுப்பக் கீழ்மைநெறிச் சமயங்கள்
தளர்நடையிட் டறத்தாமும் தளர்நடையிட் டருளினார். ௫௰

(எ - து.) இவ்வண்ணம் பருவங்கள் வருந்தோறும் அவ்வப்பருவத்தைக் கண்டு மகிழவேண்டியவ ரெல்லாம் மிக மகிழுமாறு அவர்களுக்கு மகிழ்ச்சி தந்து வளரும் பருவமுறையில் ஒரு வருடம் வருவதற்குமுன், மலரணிந்திருக்கும் கரிய மெல்லிய சுருண்ட குடுமியோடு, அம்மலரின்கண் நீண்டு மொய்க்கும் கீற்றுகளையுடைய வண்டுகளும் அலைய, தவழ்ந்து வரும் பருவம் நீங்கிச் செம்மையாய் நின்றருளி, திருப்பாதங்களில் அணிந்திருக்கும் கிரணங்களை வீசும் திருச்சதங்கைகள் ஒலிப்ப, கீழ்மைத் தன்மையுடைய புறச்சமயங்கள் தளர்ந்த நடையிட்டு வருந்திக்கெட, ஆளுடைய பிள்ளையாரும் தத்தும் அடியிட்டுத் தளர்நடைப் பருவத்தை அடைந்தருளினார் என்பதாம்.

கருமென்சுருட் குஞ்சியுடன், மலர் உளர் வரிவண்டும் உடன் அணைய எனக் கூட்டிப் பொருள் கொள்க.

பிள்ளையாரை வந்தடையும் ஒவ்வொரு பருவமும், பிள்ளைமைப் பேற்றை வேண்டினாருக்கு அளவிறந்த மகிழ்ச்சியையும், சைவத்தை வேண்டாத புறச்சமயிகளுக்கு அளவிறந்த துன்பத்தையும் விளைவித்து வந்தன என்று இத்திருப்பாட்டாற் கூறப்பட்டது. (௫௰)

### நடந்து விளையாடல்

தாதியர்தம் கைப்பற்றித் தளர்நடையின் அசைவொழிந்து
சோதியணி மணிச்சதங்கை தொடுத்தவடம் புடைசூழப்
பாதமலர் நிலம்பொருந்தப் பருவமுறை யாண்டொன்றில்
மீதணைய நடந்தருளி விளையாடத் தொடங்கினார். ௫௧

(எ - து.) பிள்ளையார் தளர்நடைப் பருவத்தை அடையவே, செவிலித்தாயருடைய கைகளைப் பிடித்துக்கொண்டு, தளர்ந்த நடையால் உண்டாகும் வருத்தம் நீங்கி, கிரணங்களைப் பரப்பி அழகு செய்யும் இரத்தினச் சதங்கைக் கோவை அரையினிடத்துச் சூழ்ந்து பிரகாசிக்க, பாததாமரையானது பூமியிற் பொருந்த, அதுகாறும் வந்த பருவ முறைப்படியே ஓராண்டின்மேல் விளையாடற்பருவம் வர, நடந்து விளையாடற்குத் தொடங்கினார் என்பதாம்.

முன் திருப்பாட்டில், 'கீழ்மை நெறிச் சமயங்கள் தளர்நடையிட்டற,' என்று கூறினாராகலான், இத்திருப்பாட்டில், மேன்மைநெறிச் சமயமாகிய சைவசமயிக ளாகிய செவிலித்தாயருடைய கைகளைத் தாம் பற்றிக்கொண்டு, தம் வழியே அவர்கள் மெல்ல மெல்ல சைவமார்க்கத்தில் வரும் பருவத்தைக் காட்டுகின்றவர் போல், தாதியர் தங்கைப்பற்றி நடந்தருளி விளையாடத் தொடங்கினர் என்னும் அவ்வுண்மைக் குறிப்பை இப்பாட்டான் குறிப்பிட்டனரென்க. எனவே, புறச் சமயங்களுடைய நடை அழிந்து, சைவசமயநடை நடைபெற வந்ததென்பதாம்.

செவிலித்தாயர் என்பார், பிள்ளைகளை வளர்க்குந் தாய்மார்கள். அஃதே போல், சைவசமயம் வளர்ந்தோங்க வந்த பிள்ளையாரைச் சைவசமயிகளாகிய செவிலித் தாயர்கள் அன்புகொண்டு, 'வருக வருக' என்றழைப்பதும், அழைக் கின்ற அவருள்ளங் களிக்குமாறு அவர் கரங்களைத் தாமே பற்றிக்கொண்டு வேதம் என்னும் பெரிய வீதிவழியே மெல்லமெல்ல நடப்பதும், நடந்து அவர் களையும் அவ்வழியே நடப்பித்து, அவ்வழியில் ஆங்காங்கு இருக்கும் பஸ்ம வைப வம், பஞ்சாட்சர நிதியம், அவ்வட்சர நிதிபதியாகிய சிவபரத்வ நிரூபணம், என்னும் இத்துறைகளில் நின்று களிப்பதும் ஆளுடையபிள்ளையாரது செயலாக லான், அச்செயலைச் செய்ய—ஆண்டோன்றின் மீதணைய, நடந்தருளி விளையாடத் தொடங்கினர் என்றார். (ருக)

தேருருட்டும் பருவம்

சிறுமணித்தேர் தொடர்ந்துருட்டிச் செழுமணிச் சிற்றில்களிழை
நறுநுதற்பே தையர்மருங்கு நடந்தோடி யடர்ந்தழித்தும்
குறுவியர்ப்புத் துளியரும்பக் கொழும்பொடியா டியகோலம்
மறுகிடைப்பே ரொளிபரப்ப வந்துவளர்ந் தருளுநாள். ருஉ

(எ - து.) தாதியர் கைப்பற்றி நடந்து அவர்களை மகிழ்வித்த பின்னர், இரத்தினங்கள் இழைத்திருக்கும் சிறுதேரைத் திருக்கரத்தாற் பற்றிக்கொண்டு தொடர்ந்துருட்டி, நல்ல மணிகளால் சிறிய வீடுகளைக்கட்டி விளையாடும் நல்ல நெற்றியையுடைய பேதைப் பருவத்தினராகிய சிறுமியர் பக்கத்து வேகமாகச் சென்று அவர்கள் கட்டியிருக்கும் அச்சிறு வீடுகளை யழித்தும், அங்ஙனம் காலால் அழிக்கின்றபோது திருமேனியில் சிறிய வியர்வைத்துளி யரும்ப, வீதியில் எழும் புழுதிகள் அவ்வியர்வையிற் படிந்து விளங்கும் திருக்கோலம் வீதியினிடத்துப் பெரிய ஒளியை வீச விளையாடி வளர்ந்தருளுங் காலத்தில், என்பதாம்.

பஞ்ச இலக்கணங்களோடு கூடிய காவியங்களை அழகுபெறக் கட்டி, அதில் பேதையர்களை மயக்கி விளையாடும் பேதையர்களாகிய புறச்சமயிகளிடத்திற் சென்று அவர்கள் பொய்யே கட்டி நடத்திய முத்திநிலையாகிய வீடுகளைத் தமது சிறிய திருவாக்கினாற் பாடும் திருப்பாட்டாகிய சிறிய தேரைச் செலுத்தி அழித்து, அங்ஙனம் அழிக்குங்காலத்து உண்டாகும் வாதங்களில் அவர்கள் கொடுமையைத் திருவுள்ளத்தில் நாடுங்காலத்தில் திருமேனியில் வியர்வும், அவர்கள் புல்லுரையாகிய புழுதிகள் தம்மிடத்துக் கலந்து, அப்புல்லுரைப் புழுதி களைத் தாம் பாடும் திருப்பதிகங்கள்தோறும் பிரகாசமாய்ச் சொல்லுதலுமாகிய செயல் உடையவராகலான், அக்குறிப்புத் தோன்ற, சிறுமணித்தேர் உருட்டி, பதையர் சிற்றிலை அழித்து, வியர்ப்புத் துளியரும்ப, கொழும்பொடியாடிய

கோலம் ஒளிபரப்பவந்து வளர்ந்தருளும் என்று இத்திருப்பாட்டாற் கூறப் பட்டது. (௫௨)

பிள்ளையார் மூன்றும் ஆண்டை அடைதல்

மங்கையோ டுடனாகி வளர்தோணி வீற்றிருந்த
திங்கள்சேர் சடையார்தம் திருவருட்குச் செய்தவத்தின்
அங்குரம்போல் வளர்ந்தருளி அருமறையோ டுலகுய்ய
எங்கள்பிரான் ஈராண்டின் மேலோர்ஆண் டெய்துதலும். ௫௩

(எ - து.) ஆளுடைய பிள்ளையார் சிறுதேருருட்டி வளர்ந்துவரும் நாளில், பெரிய நாயகியாரை உடன்கொண்டவராய், ஊழிதோறும் ஓங்கும் திருத்தோணி புரத்தில் வீற்றிருந்தருளிய, சந்திரனை யணிந்திருக்கும் சடைமுடியினையுடைய தோணியப்பரது திருவருளாகிய பயிருக்கு, எங்கள் பிரானாகிய ஆளுடைய பிள்ளையார், சிவபாத இருதயர் செய்த தவமாகிய வித்தினின்றும் தோன்றிய அங்குரம் (முளை) போல, அரிய வேதங்களும் உலகமும் உய்யும்படியாக இரண்டு வருடம் வளர்ந்தருள, அதன்மேல் மூன்றாம் வருடமானது வந்து அடையவும், என்பதாம்.

அருளுருவா யிருப்பவராகிய சிவபெருமான் மகனாராகிய பிள்ளையாரை - அங்குரம் என்றும், சிவபாத இருதயர் அச்சிவபெருமானது பாதத்தை இருதயத் திற் கொண்டு வாழும் தவமுடையவராகலின் இவருக்கு மகனாராய் முறையே யாகலான் - **செய் தவத்தின் அங்குரம்போல்** என்றும், பல்லாண்டென்னும் பதங் கடந்தவனது மகனாராகிய பிள்ளையார் ஓராண்டினையும் உடையவரன்றாகலான், ஆண்டினை யறியாத அப்பிள்ளையார்பால் ஆண்டுகள் உய்ந்து போக ஒவ்வொன் றாய் வந்து அடுத்ததாகலின் - **ஓராண்டின் மேலோராண்டு எய்துதலும்** என்றுங் கூறினார். (௫௩)

நாவாண்ட பலகலையும் நாமகளும் நலஞ்சிறப்பப்
பூவாண்ட திருமகளும் புண்ணியமும் பொலிவெய்தச்
சேவாண்ட கொடியவர்தம் சிரபுரத்துச் சிறுவர்க்கு
மூவாண்டில் உலகுய்ய நிகழ்ந்ததனை மொழிகின்றேன். ௫௪

சொல்வன்மை என்னும் நாவின் நலத்தை ஆள்வதாகிய பல நூல்களும், பல நூல்களுக்குந் தெய்வமாகிய நாவினை ஆள்கின்றவளாகிய கலைமகளும், பூவி னுக்கு அருங்கலமாகிய தாமரை மலரை ஆள்கின்றவளாகிய இலக்குமி தேவியும், சிவபுண்ணியங்களும், மேன்மையினையுடைய இடபக்கொடியையுடைய தோணி யப்பர் வீற்றிருக்கும் சிவபுரம் என்னும் திருப்பெயரினையுடைய சீகாழிப்பதியில் அவதரித்த ஆளுடைய பிள்ளையாருக்கு மூன்றாம் பருவத்தில் உலகம் உய்யும்படி யாக நடந்தருளிய செயலைச் சொல்லாநின்றேன், என்பதாம்.

சொல்வன்மை என்னும் அதிகாரத்தில் "நாநலம் என்னும் நல னுடைமை அந்நலம், யாநலத்து உள்ளதூஉம் அன்று" என்று பொய்யா மொழி யார் கூறிய அச் சொன்வன்மையை நாடி - **நாவாண்ட பல்கலை** என்றும், அந்நா நலத்தைக் கொண்டாரது நாவினையே தனக்கு உரிமை கொண்டு வாழ்கின்றவ ளாகலான் - **நாமகளும் நலஞ்சிறப்ப** என்றும், "நல்லார்கட்பட்ட வறுமையின்

இன்னுதே, கல்லார்கட் பட்ட திரு'' என்ற நூறட்பாவின்படி, ஏனைய மலர்களைத் தாம் வாழும் இடமாகக் கொள்ளாதது போல் கல்லாதாரிடத்து வாழக்கருதாது, மலர்களில் சிறந்த தாமரையை வாழும் இடமாகக் கொள்வதுபோல், மக்களிற் சிறந்த கற்றுரையே இடமாகக் கொண்டிருப்பவளாகலான் - **பூவாண்ட திருமகளும்** என்றும், சொல்வன்மை யுடையாரிடத்து வாழும் கலைமகளாலும், அறிவின் வன்மை யுடையாரிடத்து வாழும் திருமகளாலும் வளர்ந்து வாழும் சிறப்பினை யுடையது சிவபுண்ணியமாகலான், இருமகளாரையும் முன்கூறிப் பின்னர் - **புண்ணியமும்** என்றும், சிவநிந்தனை செய்பவர்களாகிய புறச்சமயிகளிடத்துக் கலைமகளும், கல்வி அறிவில்லாத அற்பர்களிடத்துத் திருமகளும், பசு புண்ணியம் உடையவரிடத்துச் சிவபுண்ணியமும் அகப்பட்டுப் பாழ்பட்டுத் தத்தமக்குரிய பொலிவு ஓங்குதற்கின்றிக் கிடத்தலான், அம்மூன்றும் முறையே சிவபரத்வத்தையே கொண்டாடவல்ல அகச்சமயிகளிடத்தும், அருட்கல்வியில் விருப்பம் உடையாரிடத்தும், சத்திநிபாதம் உடையாரிடத்தும் வாழ்ந்து பொலிவெய்தும் பருவமாகிய மூன்றும் பருவம் வந்து அடுத்ததாகலான் - **பொலிவெய்த** என்றும், எல்லாப் புரங்கட்கும் சிரமாயுள்ள சிவபுரத்தில் சிவபெருமானிடத்துப் பிள்ளையாராய் வாழ்வதுபோல் இம்மண்ணுலகிலும் சிரபுரமாயிருக்கும் இச்சீகாழியினும் தோணியப்பரோடு வாழும் வாழ்வினைப் பெற்றுள்ளவராகலான் - **சேவாண்ட கொடியார்தம் சிரபுரத்துச் சிறுவர்க்கு** என்றும், உலகுய்ய வந்த பிள்ளையாரிடத்து உலகுய்வதற்காந் திருவருட்செயல் நிகழ்வதற்கான மூன்றும் ஆண்டு வந்துவிட்ட சிறப்பான் அவ்வருட் செயலை இனிச் சொல்வதே எனது மெய்த்தொண்டாகலான் - **மூவாண்டின் உலதுய்ய நிகழ்ந்ததனை மொழிகின்றேன்** என்றுங் கூறினர்.

மேல் ருகூ-ம் திருப்பாட்டாலும் இத்திருப்பாட்டாலும் பிள்ளையாரிடத்து முதலாம் ஆண்டில் கலைமகட்செல்வி வந்து அங்குரித்தனள் என்றும், இரண்டாம் ஆண்டில் திருமகட் செல்வி வந்து வளர்ந்தனள் என்றும், மூன்றும் ஆண்டில் புண்ணியச் செல்வி அருளவந்தனள் என்றும் கூறியவாறும். (ருச)

### வெருக்கொண்டழல்

பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர்
மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டின் அளித்தருளத்
தொண்டின்நிலை தரவருவார் தொடர்ந்தபிரி வுணர்வொருகால்
கொண்டெழலும் வெருக்கொண்டாற் போல்அழுவர் குறிப்பயலாய்.

(எ - து.) அனுதிதொட்டுத் தமக்குப் பாலூட்டும் பரிவினையுடைய திருவருள் உருவாகிய உமாதேவியாரை மறவாத தன்மையை யுடைய முருகப்பெருமானாகிய தம்முடைய பிள்ளையாரை, விடாத பெருந்தவத்தினையுடைய வேதியர் குலத்து வந்தவராகிய சிவபாத இருதயர் செய்துவந்த வழிபாட்டின் விசேடத்தான் யாவர்க்கும் பரமாகிய அப்பரசிவன் தந்தருள, அவ்விறைவன் அருளியபடியே, முருகப்பிரானுர் நிலையாயுள்ள சைவத் தொண்டினை வைதிகசைவர்களுக் கெல்லாங் கொடுத்தருள அச்சிவபாத இருதயருக்குப் புத்திரர் என்று சொல்லும்படி ஆளுடைய பிள்ளையாராய் வருவாராயினர். அங்ஙனம் வந்தாராயி

னும், பரமனுரைத் தொடர்ந்திருந்த தொடர்நிலையும், இப்பொழுது பிரிந்திருக்கும் பிரிநிலையும் தமது உணர்வின்கண்ணே ஒருசமயம் தோன்ற, அத்தோற்றமானது இடைவிடாது மேற்கொண்டெழலும், அதுகாறும் தாய்தந்தை முதலாயினரிடத்து இருந்த அக்குறிப்புகளெல்லாம் வேறுபட்டுத் தாய்தந்தையரைப் பிரிந்த ஒரு மகவைப்போல் மருட்சியும் அச்சமுங் கொண்டு திருவாய்மலர்ந்து அழுவாராயினர், என்பதாம்.

இறைவனைப் பிரியாத பான்மையை நங்கையும், நங்கையைப் பிரியாத பான்மையை இறைவனும் எந்நாளும் கொண்டிருத்தல் போல், சிவமாயும் சத்தியாயும் இருக்கும் இவ்விருவரிடையில் ஆனந்த ரூபமாய் எந்நாளும் இருக்கும் பான்மையை முருகப்பெருமானும் உடையவராகலான் - **பண்டு திருவடிமறவாப் பான்மையோர்தமை** என்றும், இம்மண்ணுலகில் சைவத்தொண்டானது நிலைபெறச் சிவபாத இருதயர் தவஞ்செய்து வழிபட்டுவந்த அச்சிறப்புக் கிரங்கி அம்முருகப் பெருமானை அவரெண்ணியபடியே ஆளும்படி பிள்ளையாராகத் தந்தருளினராகலான் - **தோண்டினிலைதர, மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டின் பரமர் அளித்தருள வருவார்** - என்றும், ஆளுடைய பிள்ளையார் திருவருட்குரிய சன்மார்க்கத்தினர் என்பதுடன் அவர் சிவகுமாரரே என்பதை உலகினரெல்லாம் கண் கூடாய்த் தெள்ளிதின் உணர்ந்துய்ய - **குறிப்பயலாய்த் தொடர்ந்த பிரிவுணர்வு ஒருகாற் கொண்டெழலும் வெருக்கொண்டாற் போல் அழுவார்** என்றுங் கூறினர்.

இவ்வுண்மை பின்வரும் அருளிச்செயல்களான் அறியக் கிடக்கின்றமை காண்க. (ருரு)

### தந்தையாரோடு அழுது தொடர்ந்து போதல்

மேதகைய இந்நாளில் வேறொரு நாள் வேதவிதி
நீதிமுறைச் சடங்குநெறி முடிப்பதற்கு நீராடத்
தாதையார் போம்பொழுது தம்பெருமான் அருள்கூடச்
சோதிமணி மனைமுன்றில் தொடர்ந்தழுது பின்சென்றார். ருகூ

(எ - து.) பிள்ளையாரது குறிப்பு அயலாய், அம்மையப்பரைத் தொடர்ந்திருந்த பிரிவு உணரவந்ததாகிய மேன்மையாந் தகுதியமைந்த இந்த நாளில், ஒரு நாள், வேதங்களில் விதிமுகமாகக் கூறியிருக்கும் தருமத்திற்குரிய சடங்குகளை அந்தந்தச் சூத்திரப்படி நீதி முறையாகச் செய்யவேண்டிய நெறி தவறாமல் செய்துமுடிக்கக் கருதி, தந்தையாராகிய சிவபாத இருதயர் பிரமதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்வதற்குப் போகப் புறப்பட்டபொழுது, பிள்ளையாரை யழைத்துக் கொண்டு போதற்குத் தோணியப்பரது அருளானது வந்துகூட, பிள்ளையார் ஒளிபரப்பும் மணிகள் இழைத்திருக்கும் திருமாளிகையின் முற்றத்தில் வந்துநின்று தந்தையாரைப் பின்தொடர்ந்து அழுதுகொண்டே போவாராயினர் என்பதாம்.

பிள்ளையாருக்குப் பிரிவுணர்வு தோன்றிய பொழுதே பிரியா நிலைமையைக் கூட்ட, பிள்ளையாரைப் பிரிந்திருந்த தந்தையினிடத்து இருந்த அருளானது அவரைவிட்டுப் பிரிந்து பிள்ளையாரை அழைத்துக்கொண்டு போக அவர்பால் வந்து கூடிற்றென்று இத்திருப்பாட்டால் கூறப்பட்டது. (ருகூ)

**தடுத்துங் கேளாமையால் தாதையார் உடன்அழைத்துப் போதல்**

பின்சென்ற பிள்ளையார் தமைநோக்கிப் பெருந்தவத்தோர்
முன்செல்கை தனையொழிந்து முனிவார்போல் விலக்குதலும்
மின்செய்பொலம் கிண்கிணிக்கால் கொட்டியவர் மீளாமை
உன்செய்கை இதுவாகில் போதென்றங் குடன்சென்றார். ருஎ

(எ - து.) அழைக்கவந்த அருள்கூட, தந்தையார் பின்செல்லத் துணிந்து வருகின்ற பிள்ளையாரைப்பார்த்து, தம்மைப் பின்பற்றிப் பிள்ளையார் தொடர்ந்து வரும் பெரிய தவத்தினையுடையோராகிய சிவபாத இருதயர் தாம் பிள்ளையாருக்குமுன் போதலை யொழிந்து, திரும்பி அப்பிள்ளையாரைப் பார்த்துக் கோபிப்பவர்போலத் தம்முடன் வராவண்ணம் தடுத்து விலக்குதலைச் செய்யவும், பிள்ளையார் மின்னலைச் செய்கின்ற பொன்னாலாகிய கிண்கிணியணிந்த திருவடிகளைப் பூமியிற்றட்டித் தட்டிக்கொட்டி மாளிகைக்குத் திரும்பாது தம் பின்னே வருவதற்கே தலைப்பட, "உனது செய்கை இவ்வாறிருந்தால் நான் என்செய்வேன்! என்னுடன் வருவாயாக" என்று தந்தையர் அழைத்துக்கொண்டு சென்றனர், என்பதாம்.

பாசவசப்பட்ட பிள்ளையாராயிருப்பின் தந்தையார் பாசத்திற்குத் தடைபட்டுத் திருமாளிகைக்குத் திரும்புவார்; அருள்வசப்பட்டவராகலின் அவ்வருளுடைய தந்தையினிடத்திலேயே போகத் துணிந்தனர் என்றும், சிவபாத இருதயர் தம்மிடத்துள்ள பாசத்தை ஆளுடைய பிள்ளையார்பாற் செலுத்தி, அவரிடத்துள்ள அருளைப்பெற்று அவருடன் வாழவேண்டும் என்ற எண்ணம் உடையவராகலின்,—போது என்று அங்கு உடன் சென்றார் என்று இத்திருப்பாட்டாற் கூறியவாறும். (ருஎ)

**தீர்த்தத்துறையை அடைதல்**

கடையுகத்தில் தனிவெள்ளம் பலவிரிக்குங் கருப்பம்போன்
றிடையறுப் பெருந்தீர்த்தம் எவற்றினுக்கும் பிறப்பிடமாய்
விடையுயர்த்தார் திருத்தோணிப் பற்றுவிடா மேன்மையதாம்
தடமதனில் துறையணைந்தார் தருமத்தின் றலைநின்றார். ருஅ

(எ - து.) வேத தருமத்தை இயற்றுவதில் முற்பட்டிருப்பவராகிய சிவபாத இருதயர், யுகமுடிவுகள் தோறும் எழும் ஒப்பற்ற பெருவெள்ளம் எங்கும் பரவச் செய்யும் கருப்பத்தை யொத்ததாயும், இடைக்காலத்தில் நீங்காது செல்லுகின்ற மகா நதிகளுக்கெல்லாம் பிறப்பிடமாயும், இடபக்கொடியையுடைய இறைவன் வீற்றிருப்பதாயும் இருக்கும் திருத்தோணியாயுள்ள கோயிலை விடாது அக்கோயிலினுள் மேன்மையுடையதாயிருக்கும் பிரமதீர்த்தத்துறையைப் போய் அடைந்தனர் என்பதாம்.

யுகாந்தங்களில் வெளிப்படும் சலப்பிரளயம் உலக முற்றும் பரவும்போது, இச்சீகாழியானது அவ்வெள்ளத்தின் நடுவில் தோணிபோல் மிதந்திருத்தலால் அத்தோணிபுரத்தைக் கருப்பங்கொண்டிருக்கும் ஒரு மாதாகவும், நீர் வெள்ளம் அத்தோணிபுரத்தைச் சூழ்ந்திருத்தலால் தோணிபுரமாகியமாதினுடைய கருப்பத்தினின்றும் வெளிப்பட்ட மக்களாகவும் காணப்படலால் - கடையுகத்தில் தனி

வெள்ளம் பலவிரிக்தும் கருப்பம்போல் என்றும், கடல்பெருகும் அக்காலத்தில் மகாநதிகளும் பெருக்கெடுத்துத் தோணிபுரத்தைச் சூழ்ந்திருக்கும் அக்கடல் வெள்ளத்தில் ஒன்றாய்க்கூடிப் பின் அவ்வெள்ளம் அடங்கிய காலத்தே அக்கடலினின்றும் வெளிப்பட்டுப் போதலான் - இடையறப் பெருந்தீர்த்தம் எவற்றிற் கும் பிறப்பிடமாய் என்றும், விடையூர்ந்து செல்லும் இறைவனே அத்தோணியின் கண் மீகாமனைப்போல் வீற்றிருக்கின்றானாகலான் - விடையுயர்த்தார் திருத்தோணி என்றும், அத்திருத்தோணியப்பர் திருநோக்கத்திற் கெதிரில் இடங் கொண்டு ஆலயத்தினுள்ளே யிருத்தலால் - பற்றுவிடா மேன்மையதாம் என்றும், வேறொரு தீர்த்தத்திற்குப் போதலின்றி நாடோறும் அத்தீர்த்தத்திற்றானே நீராடச் செல்லும் நியமமுடையவராகலான் - தடமதனிற் றுறையணைந்தார் என்றுங் கூறினார். (ரு அ)

தந்தையார் நீரில் மூழ்கல்

பிள்ளையார் தமைக்கரையில் வைத்துத்தாம் பிரிவஞ்சித்
தெள்ளுநீர்ப் புகமாட்டார் தேவியொடும் திருத்தோணி
வள்ளலார் இருந்தாரை எதிர்வணங்கி மணிவாவி
உள்ளிழிந்து புனல்புக்கார் உலகுய்ய மகப்பெற்றார். ருகூ

(எ - து.) உலகெலாம் உய்யும் வண்ணம் ஆளுடையாரைப் பெற்ற சிவ பாத இருதயர், தம்மைவிடாது வந்த அப்பிள்ளையாரை அத்தீர்த்தக் கரையில் இருக்க வைத்து, பின் "இப்பிள்ளை நம்மைப் பிரிந்திருக்குமோ?" என்று பிரிந்து சென்று நீரில் மூழ்குவதற்கு அச்சமுற்றவராய், தெள்ளிய நீரில் மூழ்குவதற்கு மனம் உடன்படாதவராய், பெரிய நாயகியாருடன் திருத்தோணியில் வீற்றிருக்கும் தோணியப்பர் எதிரே நின்று அவரைத் தியானித்து, "தோணியப்பா! நீதான் இப்பிள்ளைக்கு அப்பன், நானன்று; உன்னிடம் ஒப்புவித்தேன்; நீ பாதுகாத்துக்கொள்வாயாக" என்று பிரார்த்தித்து வணங்கி, அத்தீர்த்தத்து ளுள் இறங்கினார், என்பதாம். (ருகூ)

தந்தையார் அகமருஷண ஸ்நானஞ் செய்தல்

நீராடித் தருப்பித்து நியமங்கள் பலசெய்வார்
சீராடுந் திருமகனார் காண்பதன்முன் செய்ததற்பின்
ஆராத விருப்பினால் அகமருடம்படிய அடி
பேராது மூழ்கினார் பெருங்காவல் பெற்றாராய். சூ0

(எ - து.) வேதநியமங்கள் பலவும் செய்யவல்லாராகிய சிவபாத இருதயர், தம்மைக் காணாமல் பிள்ளையார் சுற்றுமுற்றும் பார்த்துத் தேடுவதற்குமுன் ஆசமனமும் அதற்குரிய நியமாதிகளும் மகாசங்கற்பமும் செய்து, நீரில் மூழ்கி, ஸ்நான காலத்திலேயே செய்யவேண்டிய தருப்பணங்களையுஞ் செய்து முடித்து, அதன் பின்னர், தம் மகனார் எவ்வாறு இருக்கின்றார் என்று பார்க்க, அது வரையில் மகனார் தம்மைத் தேடாதிருப்பதைப் பார்த்துச் சிறிது மகிழ்ந்தவராய், இவ்வாறு தமது மகனைக் கலங்காவண்ணம் இருக்கச் செய்வது தோணியப்பரே என்று எண்ணினவராய், அத்தோணியப்பரே முற்றும் மகனைக் காப்பர் என்று தெளிந்து, அவரையே மகனாருக்குப் பெருங்காவலாகப் பெற்றவராய், இனித் தாம் செய்யவேண்டிய அகமருடச் சடங்கில் மிக்க விருப்புடையவராய், வேறு

இடத்தில் அடிபெயர்த்து வைக்காமல், நின்ற அவ்விடத்திலிருந்தே நீரில் மூழ்கினர் என்பதாம்.

இவ் ஆறு திருப்பாட்டானும், ஆளுடைய பிள்ளையார் மூன்றும் ஆண்டு வருமளவும், தம்மை மகவாகப் பெற்றெடுத்தார்க்கு இம்மையில் செய்யவேண்டிய இன்ப நலத்தை அவ்வப்பருவத்தினளவாகச் செய்து, பின், மூன்றும் ஆண்டெய் தவே, அதுகாறும் இருந்த குறிப்பினை விட்டுத் தாம் வந்தகாரணத்திற்கேற்ற செயலைச் செய்யுங் குறிப்புடையராயினர் என்றும்; அக்குறிப்பின்படியே இனிச் செய்யவேண்டிய செயலுக்கு அருள் துணைப்பட வேண்டுமாகலான் அவ்வருள் பிள்ளையார்பால் வந்து கூடிற்றென்றும்; அதுகூடவே, தந்தையார் திரு மாளிகையை விட்டு, திருவருட்டுறையாகிய தமது கோயிலிலிருக்கும் தீர்த்தத் துறையில் போவதற்கு மிக்க ஊக்கங்கொண்டு, அருட்டுறையில் போவார்க்கு உண்டாவதாகிய அழுகை முதலிய குறிகளெல்லாம் நிரம்பப் பெற்றவராய்த் தந்தையார் தம்மைப் பயமுறுத்துவதற்குச் சிறிதும் அஞ்சாது அவர் பின்னே சென்றன ரென்றும்; அவ்வாறு அஞ்சாது தம்முன் போவதற்கு அடியெடுத்து வைக்கத் தலைப்பட்டதைக் கண்ட தந்தையார் 'இப்பிள்ளை உருவத்தால் நமக்கு அடங்கியிருக்கும் செயலைக் காட்டவந்ததேயன்றிச் செயலான் நமக்கு அடங்கி யிருத்தலைக் காட்டவந்த தன்று' என்னும் அவ்வுண்மையினை நாடி, 'உன்செய்கை இதுவானல் அச்செய்கையை நான் விலக்கவல்லனே! அச்செய்கையைத்தானே நானுங்காண வேண்டியவனுயுள்ளேன்!' என்று பிள்ளையார் திருவுள்ளப்படியே அவரை யழைத்துக்கொண்டு தோணியப்பர் ஆலயத்துள் சென்றனரென்றும்; சீகாழிப்பதி கடல்வெள்ளத்தில் தான் முழுகிப்போகாது, அவ்வெள்ளம் புறத்தே நிற்கத் தான் மேலோங்கித் தோணிபோல் மிதந்தும், பின் வெள்ளம் சுருங்கி வருங்காலத்துத் தன்னுடைய கருப்பத்தினிடத்தினின்றும் வெளிப் பட்டுப்போவதுபோற் போய் முன் இருந்த நிலையில் நின்றும் தோணிபுரம் என்று பெயர் பெற்ற அத்திருநாமத்தின் சிறப்பினை விளக்குவதற்கே, அவ்வாலயத்துள் இருப்பதுபோல் என்றும் அழிவின்றி இருப்பதாகிய பிரமதீர்த்தத்துறையை அடைந்தன ரென்றும்; மகாநதிகளெல்லாம் பிரளயகாலத்தில் இங்குவந்து கூடி, பின் தாம்தாம் போகும்வழியே போகத் தலைப்படுங் காலத்து, அந்நீருக்கு அதிதேவதையாகிய வருணன், தோணியாய் மிதந்த சீகாழியின் கீழிருந்த நீர் வெள்ளத்தில் கலந்து, அத்தோணி கீழிறங்கியபோது தான் அதற்குக்கீழாகவே இறங்கி இத்தீர்த்தரூபமாய் யாவருங்காண அழியாது இருத்தலான அச்சிறப்புக் கருதி வேறொரு தீர்த்தத்தை நாடிச் செல்லாது அத்தீர்த்தத் துறையையே அடைந்தன ரென்றும்; அங்ஙனம் அடைந்த பின்னர் "நமக்குப் பிள்ளையாக வந்த இப்பிள்ளையின் செயலை நாம் அறிய வல்லோம் அல்லோம், இப்பிள்ளையைத் தந்த தோணியப்பர்தாம் அறிவார்; அவரோ, இத்தீர்த்தக் கரையின்மேல் இருக் கின்றார். கரையின்மேல் இருக்கின்ற அவர் கரையிலிருக்கும் பிள்ளையைக் காவா திருப்பரா? அன்றியும் பிள்ளையைக் கொடுத்த அவருக்கு இல்லாத கடமையா நமக்குள்ளது! ஆகலான் இவரே நமது பிள்ளைக்குப் பெருங்காவல்" என்று ஆராயும் அளவும் ஆராய்ந்து திண்ணிய மனத்தராய், தாம் நீரிற்சென்று முன் செய்வதாகிய நீராடல் முதலிய கருமங்களையும் பின் நீரில் மூழ்கிச் செய்வன வாகிய சடங்குகளையுஞ் செய்வான் அந்நீரின்கண் மூழ்கியிருந்தன ரென்றுங் கூறியவாறும். (௬௦)

## பிள்ளையார் திருவாய்மலர்ந்து அழத்தொடங்கல்

மறைமுனிவர் மூழ்குதலும் மற்றவர் தம் மைக்காணா
திறைதரியார் எனுநிலைமை தலைக்கீடா ஈசர்கழல்
முறைபுரிந்த முன்னுணர்வு மூளஅழத் தொடங்கினார்
நிறைபுனல்வா விக்கரையில் நின்றருளும் பிள்ளையார். ௯௧

(எ - து.) நீரில் சிவபாத இருதயர் மூழ்குதலும், நீர்நிறைந்திருக்கும் அத் தடாகக் கரையில் நின்றருளும் ஆளுடைய பிள்ளையார், மறைமுனிவராகிய தந்தையாரைக் காணாமல், தம் தந்தையாகிய சிவபெருமானை ஓர் இறைப்பொழுதும் பிரிந்திருக்க அறியார் என்னும் அந்நிலைமை அப்போதே அதிகரிக்கப் பெற்றவராய், அதிகரித்த அந்நிலைமைக் கேற்பத் தம் தந்தையின் கழலையே நினைப்பதாகிய முன்னுணர்ச்சியானது மேலிட, மேலிட்ட அவ்வுணர்ச்சியினால் செய்ய வந்ததாகிய அம்முறைப்படியே திருவாய்மலர்ந்து அழத் தொடங்கினார் என்பதாம்.

நிறைபுனல் வாவிக்கரையில் நின்றருளும் பிள்ளையார், மறைமுனிவர் மூழ்குதலும் மற்றவர் தம்மைக் காணாது, இறைதரியார் எனும் நிலைமை தலைக்கீடா, ஈசர்கழல் முன்னுணர்வுமூள, புரிந்தமுறை அழத்தொடங்கினார் எனக் கூட்டிப் பொருள் கொள்க.

அனாதிமல முத்தனாகிய இறைவனோடு அனாதிமல முத்தராய் ஏகராகிநிற்கும் பிள்ளையாராகலின், இறைவனோடு ஏகராகி நிற்றலாகிய முன்னுணர்வு அதிகரித்துத் தோன்றுதலும், அது தோன்றிய வழி, ஏகனாகி நிற்றலாகிய அந்நிலையினின்றும் நீங்க வந்த இப்பிரிவு நிலையில் இறைப்பொழுதும் தரியாமையும், அங்ஙனந் தரியாமையான் அன்பின் பெருக்கமாகிய அழுதலாதி செயல்கள் உண்டாதலும் அவருக்கு இயல்பாகலான், அந்நிலைமையை இத்திருப்பாட்டான் விளக்கிக் கூறினாரென்க.

இதனால், ஆளுடைய பிள்ளையார் முன்னிருந்த நிலை பாசசகிதராகிய ஆன்மநிலை யன்று, பாசரகிதனாகிய பதியோடுகூடி ஏகனாகி நிற்கும் நிலையே என்று கூறப்பட்டது.

இவ்வுண்மை தோன்றவே, ஆளுடைய பிள்ளையாருக்கு உணர்வு தோன்றியது பின்னாக இருக்க அதனைப் பின்னே தோன்றிய உணர்வென்னாது - முன்னுணர்வுமூள என்றார்.

ஆன்மாக்களுக்கு முன்னுணர்வு என்பது மூலமலத்தோடு ஏகமாகி, கன்ம மலத்தோடும், மாயாமலத்தோடும் கூடி அலமந்து சிவனை மறந்திருத்தலாகிய பாசவுணர்வே யாம். இப்பாச வுணர்வு, கேட்டல் முறையான் ஞானாசாரியன் ஞானத்தினை உணர்த்து முறையே யுணர்ந்து, பின் சிந்திக்கு முறையான் ஆன்ம சுத்தியைப் பெற்று, அதன்பின் தெளியு முறையான் தெளியுங்கால் நீங்கும்; அந்நிலையின் கண், இறைவனோடு ஏகனாகி நிற்றலாகிய அவ்வுணர்வு பின்னுணர்வாய் வந்துகூடும்.

இவ்வுண்மை சிவஞான போதம் ௮-௯-௰-ம் சூத்திரங்களால் உய்த்துணர்ந் தறிதற்பாற்று; ஈண்டு விரிக்கிற் பெருகும். (௯௧)

### பிரிவாற்றமையின் சிறப்பு

கண்மலர்கள் நீர்ததும்பக் கைமலர்க ளாற்பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய் மணியதரம் புடைதுடிப்ப
எண்ணில்மறை யொலிபெருக எவ்வுயிருங் குதுகலிப்பப்
புண்ணியக்கன் றனையவர்தாம் பொருமியழு தருளினர். சுஉ

(எ - து.) முன்னுணர்வான் ஈசர்கழல் உன்னிஅழத் தொடங்கியபோது, கண்களாகிய தாமரை மலர்களினின்றும் அன்பு நீரானது விடாது சொரிய, அக்கண் மலரைத் திருக்கைகளாகிய மலர்களாற் பிசைந்து, அழகிய செந்தாமரை மலரையும், கோவைக் கனியையும், ஒத்த திருவாக்கின் அழகிய அதரம் பல முறையும் துடிக்கவும், புண்ணிய வடிவான ஓர் யானைக்கன்றை யொத்த ஆளுடைய பிள்ளையார், எண்ணில்லாத வேதங்களின் ஓசை மேலிடவும், எல்லாவுயிர்களும் மகிழ்ச்சியை மேற்கொள்ளவும், பொருமிப் பொருமி அழுதருளினரென்பதாம்.

கண்களைப் பிசைதல், ஆனந்தமாகிய கண்ணீர் பெருகுதற்கும்; அதரம் துடித்தல் ஆனந்தம் பெருகுதற்கும் அங்கமாம் என்க. இவ்விரண்டும் இறைவனோடு ஏகமாகி நிற்கும் ஆவலுடையார்க்கு உண்டாகவேண்டிய இலக்கணமாகலின் அவ்விலக்கணத்தைப் பிள்ளையார் ஈண்டுக் காட்டியருளினர் என்க.

இறைவனது பொருள்சேர் புகழ்புரிந்தாலல்லது அன்புண்டாகாதாகலான், அவனது புகழைக் கூறும் எண்ணில் மறைகளை **ஒலிபெருக** என்றும், ஆனந்தாதீதம் வாய்விட்டரற்றினலன்றிக் கூடாதாகலான் - **பொருமியழுது** என்றும், பொருள் சேர் புகழ்புரிந்து, பொருமியழுதலால் ஆனந்தாதீதத்தைக் காட்டும் இனிய குறிப்பு, ஏகனாகி இறைபணி நிற்பார் எவர்க்கும் உண்டாகுமாகலான் —**எவ்வுயிருங் குதுகலிப்ப** என்றும், பொருள் சேர் புகழைக்கூறும் எண்ணில் மறை ஒலி பெருகவும், எவ்வுயிரும், எவ்வுயிருள்ளும் இருப்பவனோடு ஏகமாகிக் குதுகலிப்பவும் வந்த மூர்த்தியாகலான் - **புண்ணியக்கன்றனையவர்** என்றும் கூறினரென்க. திருமேனியின் வண்மையும் பொலிவுந் தோன்ற - **யானைக் கன்று** என்றார். (சுஉ)

### அம்மையப்பரை அழைத்தல்

மெய்ம்மேற்கண் துளிபனிப்ப வேறெங்கும் பார்த்தழுவார்
தம்மேலைச் சார்புணர்ந்தோ சாரும்பிள் ளைமைதானே
செம்மேனி வெண்ணீற்றர் திருத்தோணிச் சிகரம்பார்த்
தம்மேயப் பாவென்றென் றழைத்தருளி அழுதருள. சுங

(எ - து.) பிள்ளையார் தம்முடைய கைம்மலர்களால் கண்மலர்களைப் பிசைந்து அழுதருளத் தொடங்கியபோது, திருக் கண்களினின்றும் பெருகி வரும் நீர்த்திவலைகள் திருமேனியின்மேல் சிந்தி ஆறுயோட, சிவபாத இருதயர் இறங்கிய நீர்த்துறையைப் பார்த்து அழாது, மற்றையிடங்கள் முழுவதையும் பார்த்து அழுவாராயினர். எங்கும் பார்த்து அழத்தொடங்கியது, எங்கும் நிறைந்துள்ளானாகிய தம் தந்தையாகிய சிவபிரானிடத்து முன்னுள்ள பிரியாத்

தொடர்ச்சியினைக் கருதியோ, சிவபெருமானைக் கூடவேண்டும் என்று எங்கிருந்து நினைப்பினும் அக்கணமே கூடவல்ல முருகனுகிய இவர், அங்ஙனம் கூடப்பெருது எங்கும் பார்த்தழுதல் சிவபாத இருதயருக்குப் பிள்ளையாக வந்திருக்கும் பிள்ளைமைக் கோலத்தைக் கருதியோ, இவ்விரண்டனுள் எது கருதி என்று சொல்ல நாம் அறியோம்; அங்ஙனமிருக்க, அப்பிள்ளையாரே இந்த இரண்டில் இதுதான் என்று அறிவுடையார் தெள்ளிதின் உணர, எங்கும் பார்த்து அழுதபின்னர், சிவந்த திருமேனியில் வெள்ளிய விபூதியைச் சண்ணித்திருக்கும் தம் தந்தையார் வீற்றிருக்கும் திருத்தோணியின் சிகரத்தைப் பார்த்து - அம்மே அப்பா என்று அழைத்து அழுதருளினர் என்பதாம்.

பிள்ளையார், மேலே சொல்லியவாறு முன்னுணர்வினையே உடையவர் என்பதைப் பசுமரத்தாணி யறைந்தாற்போல் வலியுறுத்த, கீழிடத்தில் நீரில் மூழ்கியிருக்கும் தந்தையை நாடி "அப்பா, அப்பா" என்று அழைத்து அழாது, "அம்மையப்பர் எல்லாவுலகுக்கும் அப்புறத்தார் இப்புறத்தும், அல்லார்போல் நிற்பார் அவர்" என்று திருக்களிற்றுப்படியார் கூறியபடி, ஈருருவாகி அப்புறத்தும் இப்புறத்துமாகிப் பின் அவ்விரண்டும் அல்லவாய் ஒருருவாய் நிற்பவராகிய இறைவனே, தம் தந்தை என்றுணர, வேறெங்கும் பார்த்து அழுதபின் ஒருருவாய் நின்றருளும் திருத்தோணிச் சிகரம் பார்த்து—அம்மே யப்பா என்றழைத்தருளினர் என்பதாம்.

சிவபாத இருதயருக்குப் பிள்ளைமைச் சார்புடையராய் வந்ததனல், மேலைச் சார்பு அற்றவராய், கீழ்நிலைச் சார்பே யுடையவராயினர் என்று கீழ் நிலையாகிய பாசச் சார்புடையார் கூறத் துணிவாராகலான், அத்துணிபை, கிரவுஞ்ச கிரியையும், மாமரத்தையும் இருகூருகப் பிளந்ததுபோல் பிளக்க, மேலைச் சார்புணர்ந்து மேலைத் தந்தையையே அழைத்தனரென்க.

ஆகவே, திருத்தோணிச் சிகரம் பார்த்து, அம்மே யப்பா என்றழைத்தது, சாரும் பிள்ளைமைதானே தம்மேலைச் சார்புணர்ந்தோ! என்று பாசச் சார்புடைய அஞ்ஞானிகளை நோக்கி, "நீவிரே கூறும்" என்று வினவியதுமாம். இன்னும் விரிக்கிற் பெருகும். (௬௩)

### தோணியப்பர் தீர்த்தக்கரையில் எழுந்தருளல்

அந்நிலையில் திருத்தோணி வீற்றிருந்தார் அருள்நோக்கால்
முன்னிலைமைத் திருத்தொண்டு முன்னியவர்க் கருள்புரிவான்
பொன்மலைவல் லியுந்தாமும் பொருவிடைமேல் எழுந்தருளிச்
சென்னியிளம் பிறைதிகழச் செழும் பொய்கை மருங்கணைந்தார்.

(எ - து.) திருத்தோணியில் வீற்றிருக்கும் இறைவனர், பிள்ளையார் அழுகையைக் கேட்டு, அக்கணத்திலேயே இரங்கிய அருளுடையராய், அவ்வருளையே மேற்கொண்ட நோக்கினல், பிள்ளையார் தமது முன்னிலைமையைத் தாம் நினைந்ததுபோல், தமக்கும் தம்மை யுடையாளுக்கும் இடையே நின்று இருவர்க்கும் இனிய முகமும் இனிய நகையும் இனிய மழலை மொழியும் வழங்கிவந்த அத் திருத்தொண்டினைத் தாமும் நாடித் திருவுள மிரங்கிப் பிள்ளையார்க்கு அருள் செய்வானெண்ணி, பர்வதராஜ புத்திரியாகிய பார்வதியாருடன், சடைமுடியின்கண் இளம்பிறை கிரணங்கள் வீச, விரைந்து செல்லும் விடைமேல் எழுந்தருளி,

தாமரை முதலிய மலர்களால் பொலிவு பெற்றிருக்கும் பிரமதீர்த்தக் கரையின் கண் வந்தனர் என்பதாம்.

தந்தையாகிய தம்மையும், தாயாகிய பொன்மலை வல்லியையும் திருவுளத் தெண்ணிப் பிள்ளையார் சுற்றுப் பக்கங்களெல்லாம் பார்த்தும் காணப்பெறுமை யால் மெய்ம்மேல் கண்துளி பனிப்ப அழுது திருத்தோணிச் சிகரம் பார்த்து 'அம்மே யப்பா'வென் றழைத்தருளினராகையால் அப்பிள்ளையாருக்கு வேறு உருவங் கொண்டு பாலூட்ட வருவாராயின் இவர் நம் தாய்தந்தையர் அல்ல ரென்று எண்ணி மிகவுங் கவலைகூர்ந் தழுவாராகலின் அக்கவலைக்கு இடஞ் செய் யாமல் நம் அம்மையப்பர்தானென்று தம்மால் ஊட்டப்படும் பாலைக் களிப் புடன் உண்ண—**சென்னி யிளம்பிறை திகழ, பொன்மலை வல்லியும் தாழும் பொருவிடைமேல் எழுந்தருளி செழும்பொய்கை மருங்கணைந்தார்** என்றார்.

பாலுண்ணும் பருவமுடைய குழந்தைகள் தம் தாய்தந்தைகள் வந்து அழுகையை நீக்கிப் பாலூட்டினால் அப்பாலை அழுகை நீங்கி உண்ணுமேயல்லால், வேறொரு தாய்தந்தையர் வந்து பாலூட்டத் தலைப்படுவாராயின் உண்ணாமல் அழுகை மேலிட்டுத் தம் தாய் தந்தைகளையே அழைக்கத் தலைப்படுதல் கண்கூடாகலான் அம்முறைமை நாடியே இறைவன் தம் திருவுருவத்தை மாற்றாது, தம் அடையாளங்க ளெல்லாங் காண இடபாரூடராய்ப் பார்வதி சமேத ராய் வந்தனரென்று அறியக் கிடக்கின்றமை காண்க.

இதனால், நமது ஞானசம்பந்தப் பிள்ளையை ஞானேநேத்திரோத்பவராகிய ஷண்முகக் கடவுளென்றே நாமெல்லாம் எண்ணி வழிபடவே பசுமரத்தாணி யறைந்தாற்போல - **சென்னி யிளம்பிறை திகழ, பொன்மலை வல்லியும் தாழும் பொருவிடைமேல் எழுந்தருளிப் பொய்கை மருங்கணைந்தார்** என்று ஆசிரியர் சேக்கிழார் அருளாளும் அறிவுடையார் அறிந்துய்யக் கூறியருளினர் என்க. (௬௪)

### ஞானப்பாலைக் கொடுக்கக் கட்டளையிடல்

திருமறைநூல் வேதியர்க்கும் தேவியர்க்கும் தாம்கொடுத்த
பெருகுவரம் நினைந்தோதான் தம்பெருமைக் கழல்பேணும்
ஒருநெறியில் வருஞானம் கொடுப்பதனுக் குடனிருந்த
அருமறையாள் உடையவளை அளித்தருள அருள்செய்வார். ௬௫

(எ - து.) திருவினைத்தரும் வேதநூலை ஓதும் வேதியராகிய சிவபாத இருதயருக்கும், அவர் பத்தினியாகிய பகவதியாருக்கும் முன் தாம் கொடுத் தருளிய பெருகு வரத்தைத் திருவுளத்து எண்ணித்தானே, பெருமை பொருந் திய தமது திருவடியையே சிந்திக்கத்தக்க ஒரு நெறிய மனம் வைத்து உணர வருகின்ற ஞானத்தைச் (சத்திநிபாதர்க்கெல்லாம்) தம் மகனார் கொடுப்பத னுக்கு, தம்முடனிருந்து தம்மை ஆளுகின்றவராகிய உமாதேவியாரை நோக்கி, அரிய தமிழ்வேதத்தைக் கொடுக்குமாறு கட்டளை யிடுவாராயினர் ! என்பதாம்.

உடனிருந்த ஆளுடையவளை அருமறை அளித்தருள அருள் செய்வார் எனக் கூட்டிப் பொருள் கொள்க.

வேதநூலானது தன்னுண்மைப் பொருளை யுணர்ந்து ஓதுகின்ற வேதியர்க்கு அவரது உடம்பினிடத்தில் தமது வைதிக ஒழுக்கத்தால் உண்டாகும் ஓர்

அழகினைப் பொலிவுபெறக் காட்டுதலால் - திருமறைநூல் என்றும், வேதமானது வேதியனாகிய சிவபெருமானது திருவைந்தெழுத்தைத் தனது இருதயத்தில் கொண்டிருத்தல் போல் இவரும் அச்சிவனாரது அருளுருவாகிய பாதத்தையே தமது இருதயத்தில் கொண்டிருத்தலால் - வேதியர் என்றும், அவர் மனைவியார் பராசத்தியின் திருநாமமாகிய பகவதி என்னும் திருப்பெயரைக் கொண்டிருத்த லால் - தேவியார் என்றும், தம் பிள்ளையார் தமது சிகரம் பார்த்து "அம்மே யப்பா" என்று புனிதவாய் மலர்ந்தழுத மாத்திரத்தில், பஞ்ச கிருத்தியத்துட் பட்டிருக்கும் இறைவனது முற்றுணர்வெல்லாம் போய்த் தமுடைய மகனாரது அழுகையைப் போக்கும் ஒருணர்வே முன்னின்றதென்னும் அவ்வருமை வெளிப் படலால் - நினைந்து என்றும், மகனாரது அழுகையைப் போக்கும் அந்நினைவின் மாத்திரமாய் வந்த அவ்விறைவர், பிள்ளையை நெருங்கிய மாத்திரத்தில் "இவன் இக்கரையின்கண் நின்று அழுவதற்குக் காரணம் சிவபாத இருதயனுக்கும் அவன் மனையாட்டிக்கும் நாம் கொடுத்த வரமன்றோ?" என்று நினைத்தனராதலால் - வேதியர்க்கும் தேவியர்க்கும் தாம் கொடுத்த வரம் நினைந்தோ என்றும், கொடுத்த வரம் தம்முணர்வுக்கு வநதபோது சிவபாத இருதயர் கேட்ட பெரிய வரமெல் லாம் அவ்வுணர்வுள் வந்ததாகலான் - பெருதுவரம் நினைந்து என்றும், அப்பெரிய வரம், மேதினிமேல் அடியார்பால் பூதிசாதனம் விளங்கப் போற்றல் பெருது, சமண்கையர் சாக்கியர்தம் பொய்ம்மிகுத்தே வருதலால் அப்பொய்யெல்லாம் ஒழியப் பரசமயம் நிராகரித்து நீருக்கும் பெரிய வரமன்றோ என்று திருவுளத் தெண்ணினா ராதலால் - பெருதுவரம் நினைந்து என்றும், வரத்தின் வகையை நினைந்த மாத்திரத்தில், சிவபாத இருதயர் வேண்டியபடியே பரசமயம் நிரா கரித்து நீருக்க வேண்டுமாயின் அச்செயல் ஞானவகையினாலன்றி வேறு வகை யினால் ஆகாதாகலான் அந்த ஞான வகையை இவ்வருட்பாலோடு கலந்து ஊட்ட வேண்டுமென்று எண்ணினாராதலால், ஞானங் கொடுப்பதனுக்கு - நினைந்து என்றும், அருட்பாலை ஊட்டவேண்டியவளும் அவ்வருள் வழியே சிவஞானத்தை விளக்கவேண்டியவளும் தம்முடனிருந்து தம்மையாளும் சிவசத்தி யன்றித் தாமன் றாகலான் - உடனிருந்த ஆளுடையவனை அளித்தருள அருள் செய்வார் என்றும், அருளாகிய குணவடிவம் தேவியும், ஞானமாகிய குணவடிவம் தாமும் ஆகலானும், ஞானகுண வடிவமாகிய தாம் அருட்குண வடிவாகிய தேவியுடன் கலந்தே தம்மைச் சார்ந்தாருக்கு ஞானத்தைப் பிரகாசப்படுத்துவது அனாதி முறைமை யாகலானும், அம்முறைமைப்படியே இப்பொழுதும் செய்யத் திருவுளத்தெண்ணி, தேவியார் ஊட்டப்போகும் அருளாகிய திருமுலைப்பாலோடு தமது ஞானத்தை யுங் கலந்தூட்ட அத்தேவியாருக்குக் கட்டளை யிட்டனராதலால் - தம்பெருமைக் கழல்பேணும் ஒருநெறியில் வரும்ஞானம் கொடுப்பதனுக்கு உடனிருந்த ஆளுடைய வனை அளித்தருள அருள்செய்வார் என்றும், வடமொழியாகிய வேதத்தைத் தாம் உட்கொண்டு ஓதியது உயிர்களுக்கேயன்றித் தமக்கன்மைபோல், தம் பிள்ளையா ருக்கு இப்பொழுது அருட்பாலோடு சிவஞானங் கலந்தூட்டுவதும் உயிர்கள் பிறவிப் பசிப்பிணியினின்று நீங்கிச் சிவமாந் தன்மையாகிய பேரின்பம் நுகர தற்கே யன்றி அவருக்கன்றாகலான் - கழல்பேணும் ஞானம் (உயிர்களுக்கு) அளித்தருள அருள்செய்வார் என்றும் கூறினர்.

இறைவனுடைய பஞ்ச கிருத்தியத்துட்பட்ட முற்றுணர்வு பிள்ளையார் வழியில் ஒருணர்வாய் வரினும் ஐயுணர்வாய் நின்றதனை மேலே சொல்லிவந்த

முறையா னறிக. எங்ஙனமெனின், (க) தம் மகனாரது அழுகையைப் போக்கும் உணர்வாய் நின்ற நினைவொன்று, (உ) இப்பொய்கைக் கரையின்கண் பிள்ளையார் வந்து அழுதமைக்குக் காரணம் தாம் சிவபாத இருதயருக்குக் கொடுத்த வர மன்றோ என்று நினைந்த நினைவொன்று, (ங) அவர் வேண்டிய வரம் பெருகுவர மன்றோ, என்று அவ்வரத்தின் வகையை நினைந்த நினைவொன்று, (ச) அவ்வகை யாவது, பரசமயம் நிராகரித்து நீறுக்கி அடியார்பால் பூதிசாதனம் விளங்க வல்லவா என்று நினைந்த நினைவொன்று, (ரு) பரசமய நிராகரணமும், பூதி சாதனம் விளங்குவதும் ஆகிய செயல்கள் சிவஞானத்தாலன்றி ஆகாவாகலான் அதனைப் பாலில் கலந்தூட்ட வேண்டுமென்று நினைந்த நினைவொன்று; ஆக ஒருணர்வு ஐயுணர்வாயிற் றென்க.

இனி, “திருநெறியாவது, சித்தசித்தன்றிப் பெருநெறியாய பிரானை நினைந்து, குருநெறியாம் சிவமாம் நெறிகூடும், ஒருநெறி யொன்றாக வேதாந்தம் ஓதுமே” என்று **திருமந்திரம்** கூறியவாறு, வேதாந்தப் பொருளை யுட்கொண்டிருப்பது வேதமாகலின் மறைநூல் என்னாது - **திருமறைநூல்** என்றார். சிருட்டியாதி பஞ்சகிருத்தியங்களால் ஆன்மாக்கள் அடையப் படுவதாகிய சிவப்பேற்றைக் கேட்டல் சிந்தித்தல் தெளிதல் நிட்டை என்னும் நான்கினால் உணர்ந்து, பின்னர் உண்டாகும் அன்பினால் அச்சிவப் பேற்றைப் பெறவேண்டும் என்னும் உண்மை, இறைவன் தற்புருஷாதி நான்கு திருமுகங்க ளான் வடமொழியாற் கூறிய வேதங்களானும், ஈசான முகத்தாற் கூறிய சிவாக மங்களானும் ஓதப்பட்டிருப்பினும் அவ்வுண்மையை அறியாது தத்தம் மனம் போனவாறெல்லாம் பொருட்கொண்டு, மதமேற்கொண்டு, “இதுதான் வேத சிவாகமங்களின் சம்மதம், சம்மதம்” என்றுகூறி இடர்ப்படுத்துவோருடைய கூற் றுக்களை யெல்லாம் இடர்ப்படுத்தி, வேத சிவாகமங்களின் உண்மைச் சம்மதம் இதுவென்று வெளிப்படுத்தத் தென்மொழியாகிய திராவிட வேதத்தை அருள் செய்யத் திருவுளத்தெண்ணித் தம்மையாளும் அருட்சத்திக்குக் கட்டளையிடத் தொடங்கினாராகலின் - **ஆளுடையாளை அருமறை அளித்தருள அருள் செய் வார் என்றார்.**

இதனால், வடமொழியாகிய வேத சிவாகமங்கள் இறைவன் வாக்கே யாயி னும் அருட்டுணை யில்லையாயின் அவ்வேத சிவாகமங்கள் மெய்ப்பொருளை யுணர்த்தாது இடர்ப்படுத்துமெனவும், அருட்டுணை யுடையார்க்கு அவ்வேத சிவாக மங்கள் மெய்ப்பொருளை யுணர்த்தி இடர்ப்படுத்தும் பொருளையெல்லாம் தெளி வுறச் செய்யும் எனவும் விளக்கியவாறும். அன்றியும், ஆளுடைய பிள்ளையாரால் வெளிப்படுத்தக் கருதியது வடமொழியன்று தென்மொழியே என்றும், அத் தென்மொழியைத் தம் அருள் வழியானே வெளிப்படுத்தக் கருதினாரென்றும், அவ்வருளுக்கு வழி ஞானசம்பந்தப் பெருமானாரது திருவாக்கே யாகலான் அதனை அவ்வருட் சத்திக்கு உணர்த்தினாரென்றும் உண்மை விளக்கியவாறுமாம்.

ஆகவே, இறைவன் வாக்கின் வழியாய் வந்த வடமொழி வேத சிவாகமங் களின் உண்மைப் பொருளை, ஞானசம்பந்தரது திருவாக்கின் வழியாய் வந்தரு ளும் தென்மொழியாகிய அருண்மொழித் தேவாரம் நன்கு விளக்குமென்க. அஃதாவது, இறைவன் தன் பெருமைக் கழல்பேணும் ஒரு நெறியில் வரு ஞானத்தை உதிப்பித்து, இடர்ப்படுத்திய வேத சிவாகமங்களின் பொருளெல்

லாம் இடர்ப்படுத்தாது இடர்ப்பாட்டை யொழிக்கும் அரிய நுண்ணிய பொருளை உபகரிக்கச் செய்யுமென்க.

இவ்வுண்மை தோன்றவே, ஆசிரியர் சேக்கிழார் "வேதநெறி தழைத் தோங்க, மிகுசைவத் துறைவிளங்க, பூதபரம்பரை பொலிய" என்று ஆண்டுக் கூறினரென்க.

இனி, ஒரு நெறியில் வருஞானம் என்றது, சிவஞானம் என்க. எனவே, சைவ சமயத்திற் கூறப்படும் சிவஞான மொன்றே சிவனது பெருமையைப் பிரகாசப்படுத்தி அப்பெருமானது திருவடியை விரும்பச் செய்யும். ஏனைய சமயத்தாராற் கூறப்படும் பாசஞான பசுஞானங்கள் நெறியல்லா நெறிகளை நெறியாக நினைப்பித்து அத்தீநெறியில் புகச்செய்யு மென்று சைவசமய ஞானத் தின் சிறப்பும், ஏனைச் சமய ஞானங்களின் இழிவும் இதனுல் விளக்கியவாறு மாயிற்று. இதனை, "நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச், சிறுநெறி கள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்" என்றருளிய திருவாசகத்தா னறிக.

இத்திருப்பாட்டான், சிவபெருமான் ஞானசொரூபியாதலால்; ஞான முடையவன் சிவபெருமான் என்றும், உமாதேவியார் அருட்சொரூபியாதலால் அருளுடையவள் உமாதேவி என்றும், ஆகவே சிவஞானம் அருளொடு கலந்தால் சிவத்தை அறிய முடியுமென்றும், அருளொடு கலவாதாயின் சிவத்தை அறிய முடியாதென்றும் விளக்கி, இறைவர் தமது சிவஞானத்தை அருளொடு கலந்து தமது பிள்ளைக்குக் கொடுத்து அந்த அருட் சிவஞானத்தை அவர்வழியான் யாவர்க்கும் வழங்கத் திருவுளத் தெண்ணினரென்று கூறப்பட்டது.

அன்றியும், சிவபெருமான் வேத சிவாகமங்களை வடமொழியாற் கூறியது போல், அவ்வேத சிவாகமங்களின் உண்மைப் பொருள்களைத் தம் குமாரரது திருவாக்கால் தென்மொழியாற் கூறத் திருவுளத் தெண்ணினரென்றுங் கூறப் பட்டது. (௬௫)

### பொற்கிண்ணத்தில் பாலூட்டக் கட்டளையிடல்

அழுகின்ற பிள்ளையார் தமைநோக்கி அருட்கருணை
எழுகின்ற திருவுள்ளத் திறையவர்தாம் எவ்வுலகும்
தொழுகின்ற மலைக்கொடியைப் பார்த்தருளித் துணைமுலைகள்
பொழிகின்ற பால்அடிசில் பொன்வள்ளத் தூட்டென்ன. ௬௬

(எ - து.) பொய்கைக் கரையின்கண் வந்த இறைவனர் (தமது தேவியா ரைப் பார்த்து) 'பிள்ளைக்குப் பாலூட்டுவாய்' என்று சொல்லுவதற்குமுன், தம் மைப் பார்த்துப் பார்த்து அழாநின்ற பிள்ளையாரைப் பார்த்துப் பேரருளும் பேரிரக்கமும் மேன்மேற் பொங்கியெழுகின்ற திருவுள்ளத்தை யுடையவராய், (மிக்க விரைவுடன்) எல்லாவுலகமுந் தொழாநின்ற பார்வதி தேவியாரை அரு ளுடன் பார்த்து, "பெண்ணே! உனது இரண்டு தனங்களினின்றும் சொரிகின்ற பாலாகிய அமுதத்தைப் பொற்கிண்ணத்திற் கறந்து ஊட்டுவாய்" என்று சொல்ல, என்பதாம்.

தமக்குரிய தந்தைதாயரைக் காணுது அழும் பிள்ளைகள் அத்தந்தைதாய் களைக் கண்டுவிட்டால், முன்னையினும் மேலிட்டழுதல் இயற்கையாதல்போல்,

எங்கும் காணமல் சிகரத்தைப் பார்த்து அழுத பிள்ளையாரருகில் அவருக்கு முன் கரையின் கண்ணே அம்மையப்பர் வந்துவிட்டனராகலான், அவர்களைக் கண்ட மாத்திரத்தில் காணக்குறை தவிர்ந்து, பிரிவாற்றமை மேலிட்டு அழுதனரென்பார்—**அழுகின்ற பிள்ளையார்** என்றார். அவ்வழுகையானது "ஞானத்தை உனது பாலிற்கலந்து ஊட்டுவா"யென்று சொல்லுவதற்குத் தமது தேவியாரைப் பார்க்கத் தொடங்கிய இறைவரது திருமுகத்தைப் பிள்ளையாரைப் பார்க்கச் செய்ததென்பார்—**தமைநோக்கி** என்றார். அங்ஙனம் நோக்கியபொழுது, இதுகாறும் அழாத பிள்ளை இன்று அழவந்தது தாம் பிரிந்திருந்த காரணத்தினலன்றே என்று எண்ணிய அன்பினுலுண்டாகிய அருளும், அவ்வருளினுலுண்டாகிய பேரிரக்கமும் இறைவருள்ளத்தில் தோன்றின என்பார்—**அருட்கருணை எழுகின்ற திருவுள்ளத்திறையவர்** என்றார். "நம்மைப்பார்த்து அழுகின்ற இவனுடைய தாய், எல்லாவுயிர்களிடத்தும் கருணையையும், இரக்கத்தையும் மாறுமற் செலுத்தி அவ்வுயிர்களால் எப்பொழுதும் வணங்கப்பட்டிருக்கும் நம் தேவியன்றே! அங்ஙனமான அருட்கருணையையுடைய இவள் இவன் அழுகையைக் கண்டு தனது அருட்கருணையைச் செய்யாதிருத்தற்குக் காரணம் என்னையோ!" என்று தேவியைச் சிறிதே பார்த்தன ரென்பார்—**எவ்வுலகுந் தொழுகின்ற மலைக் கோடியைப் பார்த்தருளி** என்றார். அங்ஙனம் பார்த்தருளியபோது தேவியாரது இரண்டு திருமுலைகளிலும் சுரந்து வழிகின்ற பாலைக்கண்டு "இவள் தன் பிள்ளையினிடத்தில் அருளும் கருணையும் அற்றவளல்லள். அவ்விரண்டும் உடையவளாயிருந்தும் நமது சொல்லன்றி எத்திறத்தனவாகிய செயலையுந் தானே செய்தல் தனது கற்புக்குப் பழுதாமென் றெண்ணி நமது ஆணையை எதிர்பார்க்கின்றனள்" என்றெண்ணி மகிழ்ந்து, தேவியை அன்புடன் நோக்கி, "கற்புடையாளே! உனது மகனுக்குப் பாற்கலசமாகிய உன் தனங்களினின்றும் பொங்கி வழிகின்ற பாலை என் ஊட்டாமலிருக்கின்றாய்? இப்படியும் இருப்பாருண்டோ! இனித் தாழ்த்தல் முறையன்று, சுரக்கின்ற பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்து ஊட்டுவாய்" என்றருளின ரென்பார்—**துணைமுலைகள் பொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத்து ஊட்டேன்ன** என்றார்.

இதனுல், பிள்ளையார் பார்வதி பரமேஸ்வரர்களுடைய பிள்ளையாதலால், அப்பிள்ளைபால் அவ்விருவருக்கும் உள்ள அன்பின் பெருக்கும் அருட் பெருக்கும் முற்பட்டு வெளிவரும் அதிசயத்தையும், அவ்வதிசயச் செயலில் மகாதேவரது பதித்திறத்தின் செயலும் தேவியாரது கற்புத்திறத்தின் செயலும் மாறுபடாமல் விளங்கிநின்றமையையுங் காண்க.

இறைவனிடத்தும் இறைவியினிடத்தும் அருளும் கருணையும் வெளிப்பட்ட அதிசயம் என்னையெனின், பிள்ளையழுவதைக் கண்டு அருளும், அவ்வழுகைச் செயல் தம்மையே நோக்கி வருவதனுல் இரக்கமும் இறைவனுக் குண்டாயின; இறைவன்பால் உண்டாகிய அவ்விரண்டிற்கும் இடம் இறைவியின் இரண்டு தனங்களேயாகலான், அவ்விரண்டும் அவ்விரண்டு தனங்களினின்றும் சுரந்து பொழியத் தலைப்பட்டன என்பதாம்.

இவற்றுள், இறைவனுடைய பதிச்செயலும், இறைவியினுடைய கற்பின் செயலும் மாறுபடாதிருந்த அதிசயம் என்னையெனின், அது பின்வரும் இரண்டு திருப்பாசுரத்தால் அறியக்கிடக்கின்றமை காண்க. (கூகூ)

### பொற்கிண்ணத்தில் பாலைக் கறத்தல்

ஆரணமும் உலகேழும் ஈன்றருளி அனைத்தினுக்கும்
காரணமாய் வளம்பெருகு கருணைதிரு வடிவான
*சீரிணங்கு சிவபெருமான் அருளுதலும் சென்றணைந்து
வாரிணங்கு †திருமுலைபொன் வள்ளத்துக் கறந்தருளி. ௬௭

(எ - து.) வேதங்களையும் ஏழுலகங்களையும் படைத்தருளி எல்லாப் பொருள்கட்கும் காரணகர்த்தாவாய்ச் சிறப்புப் பொருந்திய வளம்பெருகாநின்ற கருணையே திருவுருவமான சிவபெருமான் தமது தேவியை நோக்கி "உன் துணைமுலைகள் பொழிகின்ற பாலடிசிலைப் பொன்வள்ளத்து ஊட்டு" என்று சொல்லிய மாத்திரத்தில், கச்சணிந்திருக்கும் உமாதேவியார் தம் திருத்தனங்களினின்றும் பெருகாநின்ற அருட்பாலைப் பொற் கிண்ணத்தில் கறந்தெடுத்துக்கொண்டு பிள்ளையாரிடம் நெருங்கி, என்பதாம்.

சிவபெருமான் அருளுதலும், வாரிணங்கு திருமுலை பொன் வள்ளத்துக் கறந்தருளி சென்றணைந்து, எனக் கூட்டிப் பொருள் கொள்க.

வேதங்களையும், எழுவகைப் பிறவியிற்பட்டுழலும் உயிர்களையும் படைத்துக் காக்கும் பதியாகிய முதற்காரணன் சிவனே என்பார்—**ஆரணமும் உலகேழும் ஈன்றருளி அனைத்தினுக்கும் காரணமாய்** நிற்பவன் சிவபெருமான் என்றார். அங்ஙனமான இறைமைத் தன்மையையுடைய சிவபெருமான் நீரில் தண்மையும், அனலில் வெம்மையும் போலத் தன்னை யகலாதிருக்கும் தாதான்மியசத்தியாகிய அருட்சத்தியையே தனக்குத் திருமேனியாகக் கொண்டு ஆரணங்கள் தழைத்தோங்கவும், உலகேழும் வளம்படப் பெருகவும் செய்யும் இயல்புடையவனென்பார் - **ஆரணமும் உலகேழும் வளம்பெருகு கருணைதிருவடிவான சீரிணங்கு சிவபெருமான்** என்றார். அருட்சத்தி சிவபெருமானுக்கு உடம்பாயிருக்கும் தன்மையுடைத்து என்று வெளிப்படலால் அவ்வுடம்பு, உடம்புடையான் செயல்வழி நிற்குமன்றித் தானே ஒரு செயலும் செய்யும் வழியில் நில்லாதென்பார்—**சிவபெருமான் அருளுதலும், வாரிணங்கு திருமுலை பொன் வள்ளத்துக் கறந்தருளி சென்றணைந்து** என்றார்.

இதனால், சிவபெருமான் தனது அருட்சத்தியையே தனக்கு உடம்பாகக் கொண்டு ஒரு கூற்றானே சிவனென நிற்பவனெனவும், மற்றொரு கூற்றானே அவனே சத்தியென நிற்பவனெனவும், அங்ஙனம் இரண்டுருவாய் நிற்பினும், அவ்விரண்டுருவிற்கும் தனித்தனி இருசெயல் உள என்பதின்றி ஒரு செயலே உளதெனவும் அறிவுறுத்தியவாறுமென்க. எனவே, சத்தி உடம்பளவாய் நிற்பதேயன்றிச் செயலளவையை மேற்கொண்டு நிற்பதன்றெனவும், செயலளவையை மேற்கொண் டிருப்பவன் சத்தியையுடைய சத்தனே எனவும் வெளியாயிற்று.

இத்திருப்பாட்டான், எக்கலைகளுக்கும் எவ்வுயிர்களுக்கும் காரணமாய் (ஆதி பகவனாய்) முன்னிற்பவன் சிவனே என்றும், அச்சிவன் கருணையாகிய தூய வுடம்பினனென்றும், தூய உடம்பாக இருக்கும் அச்சத்தியைத் தன்வயத்ததாகவே வைத்திருப்பவனென்றும் கூறியவாறும்.

வேதம் உயிர்களுக்கு மங்கலங்களைத் தருதலால், ஈண்டு ஆரணம் என்று சொல்லப்பட்டது. உலகு பலவாயிருக்க ஏழு என்றதனால், எழுவகைப்பட்ட

* சீரணங்கு என்றும் பாடம். † திருமுலைப்பால் என்றும் பாடம்.

பிறவியிலுள்ள உயிர்களின்மே லேற்றப்பட்டது. அனைத்தினுக்கும் காரணன் என்றதனல், நிமித்த காரணனுயிருப்பவனென்று கொள்ளக்கிடந்தது. இறைவனுக்கு உடம்பா யிருக்கும் சத்தி, உயிர்களிடத்துக் கருணை யுருவாய் வளம்படச் செய்தலால்—வளம்பெருகு கருணை திருவடிவான என்றார். (சுஎ)

**பொற்கிண்ணத்தை அளித்து அழுகை தீர்த்தல்**

எண்ணரிய சிவஞானத் தின்னமுதம் குழைத்தருளி
உண்ணடிசில் எனவூட்ட உமையம்மை எதிர்நோக்கும்
கண்மலர்நீர் துடைத்தருளிக் கையிற்பொற் கிண்ணமளித்
தண்ணலையங் கழுகைதீர்த் தங்கணனர் அருள்புரிந்தார். சுஅ

(எ - து.) இறைவன் கட்டளையிட்டபடியே பெரிய நாயகியார் தமது இனிய திருமுலைப்பாலில் எண்ணுதற்கரிய சிவஞானத்தைக் குழைத்துக் கலந்து, தம்மெதிரில் தம்மை நோக்கியழும் பிள்ளையாரது கண்ணீரைத் துடைத்து, அவரது திருக்கரத்தில் பொற்கிண்ணத்தைக் கொடுத்து "இதிலுள்ள பாலடிசிலை நீ உண்பாய்" என்று ஊட்ட, பாலுண்டருளும் பிள்ளையாரது அழுகையைச் சிவபெருமான் நீக்கினர், என்பதாம்.

மறையினல் அயனல் மனத்தினல் வாக்கால் மற்றும் குறைவிலா அளவினல் எண்ணுதற்கரிதாகி நின்ற சிவஞான மென்பார்—**எண்ணரிய சிவஞானம்** என்றார். அச்சிவஞானம் தானுயிருக்கும் சிவபெருமானிடத்து அன்பை விளைவித்து அவனையே இனிக்கச் செய்யும் இனிய அமுதம் என்பார்—**இன்னமுதங் குழைத் தருளி** என்றார். "அன்போடு கலவாத சிவஞானப்பாலை நீ உண்ணுயாகையால் அன்போடுகலந்த இனிய சிவஞானப் பாலாகும் இதனை நீ இன்பமுடன் உண்பாயாக" என்று தம் மகனுக்குத் தேவியார் ஊட்டினரென்பார்—"**உமையம்மை உண்ணடிசில் என ஊட்ட** என்றார். "இப்பாலை உனக்கு ஊட்டியது உன்பொருட்டன்று; வேண்டாதொன்றும் வேண்டாது, மிக்க அன்பேவேண்டிய மெய்கலந்த அன்பரும் சத்திநிபாதருமாகிய உயிர்களுக்கு நீ ஊட்டுதற்கே" என்பார்—**கையிற் பொற்கிண்ணமளித்து** என்றார். "மெய்கலந்த அன்பர்க்கு அன்புகலந்த சிவஞானத்தை நீ ஊட்டும்பொழுது, 'எம்மை ஆண்டாய்க்கு உள்ளந்தாள் நின்று உச்சியளவும் நெஞ்சாயுருகாதால், உடம்பெல்லாங் கண்ணுய் ஆனந்தவெள்ளந் தான் பாயாதால், நெஞ்சம் கல்லாம், கண் இணையுமரமாம் தீவினையேமுக்கு' என்றழும் அவர்களது கண்ணீரை இப்படித் துடைத்து, நெஞ்சுருகவும் கண்களில் ஆனந்த வெள்ளம் பாயவும் அருள் செய்வாய்" என்பார்—**கண்மலர்நீர் துடைத் தருளி** என்றார். அம்மையப்பராகிய தம்மைக் காணுது அழுத அவரது பரிபவத்தை ஒழித்தன ரென்பார் - **அண்ணலை அங்கு அழுகை தீர்த்து** என்றார். தம்மையே நோக்கி யழுத தமது கண்மணிபோன்ற மகனரிடத்துத் தமது அருட்கண்ணினைச் செலுத்திய கண்ணுள ரென்பார் - **அங்கணனர் அருள்புரிந்தார்** என்றார்.

இத்திருப்பாட்டான், இறைவன், தம் பிள்ளையாருக்கு ஊட்டக் கறந்த பாலில் குழைத்த சிவஞானம், பாசஞான பசுஞானச் சார்புகளால் குன்ற வரும் பொய் கலந்தார்க்கு உணர்த்தத் தகும் சிவஞானமன்று, மெய்கலந்த அன்பர்க்கு ஊட்டத்தகும் சிவஞானமென்றும், களிம்பு கலவாத பொற்கலம் போன்று

வேண்டப்படுவன வெல்லாம் வேண்டாது மறந்து மிக்க அன்பே வேண்டும் மெய் கலந்த அன்பராய அவரே இந்த இனிய சிவஞானத்துக் குரியாரென்றும், இந்த இனிய சிவஞானம் உண்ணப்பெற்ற அவர் உள்ளந்தாள் நின்று, உச்சியளவும் நெஞ்சாயுருகி உடம்பெல்லாங் கண்ணுய் ஆனந்தவெள்ளம் பாய்ந்து, அவ்வன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரென்றுங் கூறப்பட்டது. எனவே, இறைவன் அருளாகிய பாலில் குழைத்த சிவஞானமாகிய இனிய அமுதத்தின் சிறப்புக் கூறப்பட்டதென்க. (சுஅ)

யாவர்க்கும் தந்தைதாய் *எனுமவர்இப் படியளித்தார்
ஆவதனுல் ஆளுடைய பிள்ளையா ராயகில
†தேவர்க்கும் முனிவர்க்கும் தெரிவரிய பொருளாகும்
தாவில்தனிச் சிவஞான சம்பந்தர் ஆயினர். சுகூ

(எ - து.) எல்லா உயிர்களுக்கும் அம்மையப்பரா யிருக்கின்றவர் என்று யாவராலும் சொல்லத்தக்க சிவபெருமான் இப்பிள்ளையாருக்கு இவ்வண்ணமாகத் திருமுலைப்பாலை யூட்டி யருளி இவருக்கு மெய்யான அம்மையப்பராய் நின்ற காரணத்தினல், சிவபெருமானுல் பிள்ளையாக ஆளப்படும் பிள்ளையாரேயாய் எல்லாத் தேவர்கட்கும் எல்லா முனிவர்கட்கும் உணர்வதற்கரிய அரிய பொருளாகும் கெடுதலில்லாத சிவஞானத்தை எல்லா ஆன்மாக்களுக்கும் ஊட்டியருளிச் சிவசம்பந்தத்தைச் செய்யும் ஆசிரியரான காரணத்தினுல் திருஞான சம்பந்தரென்னும் திருநாமமும் உடையாராயினர், என்பதாம்.

சிவபாத இருதயருக்குப் பிள்ளையாய் வந்த பெருமான், அச்சிவபாத இருதயருக்குப் பிள்ளையன்று, 'யாவர்க்குந் தந்தைதாய்' என்று சொல்லப்பட்ட சிவபெருமானுல் ஆளப்பட்ட குமாரக்கடவுளேயாம் என்னும் அவ்வுண்மை தோன்ற - **யாவர்க்கும் தந்தை தாய் எனுமவரால் ஆளுடைய பிள்ளையார்** என்ருர். சிவபாத இருதயருடைய பிள்ளையைச் சிவகுமாரராகிய குமாரக்கடவுள் என்று எக்காரணத்தால் சொல்லக்கூடும் என்று, ஞானசம்பந்தப் பெருமான்பால் அன்பிலாராகிய. அன்பிலிகள் கூறுங்கூற்றை மறுப்பதற்கு - **இப்படி யளித்தார் ஆவதனுல் ஆளுடைய பிள்ளையாராயினர்** என்ருர். எனவே, சிவபெருமான் எல்லாவுயிர்களுக்கும் அம்மையப்பராயின பொழுது, பால் வேண்டியழும் எல்லாப் பிள்ளைகளுக்கும் இப்பிள்ளைக்கு வந்து ஊட்டியருளியதுபோல் ஊட்டியருள வரவேண்டும்; ஆனல், இப்படி வேறு ஒருவருக்கும் ஊட்டியருளிய தின்று. இப்பிள்ளையாருக்கு இப்படி ஊட்டியருளியதுபோல் ஊட்டியருளுதல் குமாரக்கடவுளாகிய கந்தருக்கேயாம். இவ்வுண்மையை, **கந்தபுராணம் திருவவதாரப் படலத்திற்** காண்க.

இவ்வொற்றுமை யாவரும் உணரவே - **இப்படியளித்தார்** என்ருர். குமாரக்கடவுளுக்கு இறைவன் அம்மை யப்பராய் வந்து ஊட்டியதை இம் மண்ணுலகினர் அறியார். விண்ணுலகினரோ இப்பிள்ளையார் குமாரக்கடவுளாகிய அப் பிள்ளைதான் என்பதை அறியார். காங்கேயராகிய குமாரக் கடவுளுக்குச் சரவணப் பொய்கைக் கரையில் இறைவன் அம்மையப்பராய் இடபாருடராய் வந்து பொன்வள்ளத்தில் பாலூட்டியது போல் இங்கு இப்

* எனுமிவர் என்றும் பாடம். † தேவருக்கும் முனிவருக்கும் என்றும் பாடம்.

பொய்கைக் கரையில் வந்து பொன் வள்ளத்தில் பாலைக் கறந்து ஊட்டியருளினர். ஆவதனால் (இப்படிச் செய்த காரணத்தினால்) விண்ணுலகினரெல்லாம், இப்பிள்ளை சிவபாத இருதயர் பிள்ளையன்று, யாவருடைய இருதயத்திலும் வசிக்கின்ற சிவனுருடைய பிள்ளையாகிய குமாரக்கடவுளே என்று அறியவும், மண்ணுலகினரெல்லாம் இப்பிள்ளை சிவனுருடைய பிள்ளையே யன்றிச் சிவபாத இருதயருடைய பிள்ளையன்று என்று அறியவுமாயிற்றென்க.

இனி, பிள்ளை என்னுஞ் சொல்லைத் தமக்கே உரிமையாக ஆளுகின்றவர் சிவகுமாரர்களே யன்றி ஏனையோரல்லர். எங்ஙனமெனின், விநாயகர் கோயிலைப் பிள்ளையார் கோயிலென்றும், சுப்பிரமணியரைக் குமாரக்கடவுள் என்றும் வழங்கும் உலக வழக்காற் காண்க. ஆகவே, சிவபாத இருதயருடைய பிள்ளை அவ்வேதியராலேயே ஆளும் பிள்ளையாகவே யிருந்து அவருடன் வாழாமல் சிவபெருமானல் ஆளும் பிள்ளையாராய் அவரது கோயிலாகிய வீடுகள் தோறும் இருந்து வாழ்வாராயினர். இவ்வொற்றுமையுணரவே - **ஆளுடைய பிள்ளையாராய்** என்றூர்.

இனி, பாலூட்டிய முறைமையினல் குமாரக்கடவுளே ஆளுடைய பிள்ளையாரென்று காட்டியதுபோல் குமாரக்கடவுளுடைய ஞானசம்பந்தமும் இப்பிள்ளையார் உடையாரென்று உணரவே—**தாவில் தனிச்சிவஞான சம்பந்தராயினர்** என்றூர்.

இனி, அங்கு, வேதம் ஓதுவோனகிய வேதா, வேதத்துக்கு முதலாகிய பிரணவத்துக்குத் தெய்வம் தானும் திருமாலுமே என்று சொல்ல, அவ்வேதியனைப் புடைத்து உருட்டிச் சிறையிலிட்டு வேதனைப் படுத்தி, தமது ஞானத்தால் சிவனைத் தெய்வமாக நாட்டியதுபோல், இங்கு, சமணசாக்கியாதி புறச்சமயிகள் தங்களுடைய சாகுந்தெய்வங்களைச் சாவாத்தெய்வங்களாகச் சொல்ல அவர்களைத் தாம் ஓதும் தமிழ்வேதத்தால் வேதித்துப் பேதித்துக் கழுவிடைப் படுத்தித் துன்புறுத்திச் சிவனையே தெய்வமாக நாட்டும் ஞானமுடையரா யிருத்தலால்—**சிவஞான சம்பந்தராயினர்** என்றூரென்க.

எனவே, பிள்ளை ஒற்றுமையினலும், ஞான ஒற்றுமையினலும் குமாரக்கடவுளாகவே விளங்கும் ஞானசம்பந்தரை ஆன்மாக்களில் ஒருவராகவும், பாலுண்டபின்னர் ஞானம் உணர்ந்தவராகவும் கூறும் நரகத்துட்படுத்தும் கூற்றுக்கள் பொருந்தாக் கூற்றுக்களேயாம்.

இனி, குமாரக்கடவுளுக்கே தந்தை தாயாக இருப்பவரை—**யாவர்க்குந் தந்தை தாய் எனுமவரை** என்றது என்னை யெனின், உலகினையாளும் அரசன் தன்னல் ஆளப்படும் உயிர்களைத் தன்னல், தன்பரிசனத்தால் ஊனமிகு பகைத்திறத்தால், கள்வரால், உயிர்தம்மால் ஆனபயம் ஐந்துந் தீர்த்து அறங்காக்குந் திறத்தால் உலகிலுள்ளா ரெல்லாம் அவனைத் தாய் தந்தையாகப் போற்றல் கண்கூடாகக் காணக் கிடத்தல்போல், இறைவன் ஊனய் உயிராய் உடலாய் உலகாய் இவ்வாறு அநந்நியமாய் நின்று காத்தருளுங் கருணைத் திறத்தை நோக்கி அங்ஙனங் கூறியதென்க.

அன்றியும், "யாவர்க்கும் தந்தைதாய் எனுமவர்" என்று சொல்லப்பட்ட இறைவர், எவர் ஒருவருக்காயினும் தாய் தந்தையாக வந்து பால்கொடுத்ததை ஒருவருங் கண்டதில்லை. அப்படி வராதவர் இப்பிள்ளையாருக்கு இப்படித் தந்தை தாயாகவந்து பால் கொடுத்தனரே இஃதென்ன அதிசயம்! என்று வியந்ததுமாம்.

அஃதேபோல், அகில தேவர்க்கும் முனிவர்க்கும் தெரிவரிய பொருளாகும் தாவில் தனிச் சிவனுருக்கு வேதமுதலாய் நிற்கும் பிரணவத்துக்குக் கூறிய இரகசியார்த்தத்தை அங்குத் திருச்செவியில் ஓதியது போல் இங்குத் திருக்கோயில்கள் தோறும் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான் கேட்க வேதார்த்த சாரமாகிய தமிழ் வேதத்தை ஓதியருளினராதலின், சிவஞான சம்பந்தரென்னுந் திருநாமம் உடையராயினர், இஃதென்ன அதிசயம்! என்று வியந்ததுமாம்.

அதுவேயுமன்றி, திருஞான சம்பந்தராகிய நமது குருமணி ஓதியருளிய தென்மொழி வேதத்தை வியந்து கூறியதுமாம். என்னை? வடமொழி வேதத்தைத் தேவர் முனிவர் முதலிய யாவரும் "ஆறங்கமாய் வரும் மாமறை யோதியைக், கூறு அங்கமாகக் குணம் பயில்வாரில்லை, வேறு அங்கமாக விளைவுசெய்து அப்புறம், பேறங்கமாகப் பெருக்குகின் றாரே", எனவும், "பாட்டும் ஒலியும் பரக்குங் கணிகையர், ஆட்டமரூத அவனியின் மாட்டாத, வேட்டு விருப்பார் விருப்பம் இல்லாதவர், ஈட்டும் இடம் சென்று இகலலுற்றாரே" எனவும் திருமந்திரங் கூறியபடி, வேதத்தின் உள்ளங்கமாய் விளங்கும் சிவபெருமானுடைய குண விசேடங்களைப் பயின்று அம்முறையே அவனை யோதிப்போற்றும் வகையறியாது தத்தம் போதம் போனவாறெல்லாம் இடம் செய்து பொருள்கொண்டு இகலிப் பகைத்து, சிவனுக்கு ஆட்படாது சிவஞான சம்பந்தத்தை யொழிகின்றனர்.

தென்மொழியாகிய வேதத்தை யோதுகின்றவர் அங்ஙனம் ஒழியாது, அத் தமிழ் வேதத்தில் இறைவன் சராசரமாகிய எல்லாப் பொருளிடத்தும் ஒன்றாயும், வேறாயும், உடனாயும் நின்று இருந்து ஆளும் உபகாரத்தை உணர்ந்து, அஃதாவது உயிர்களிடத்து வேறாகாது ஒன்றாய் நின்று காணும் உபகாரத்தையும், உயிர்கள் தமக்கு வேறாகக் காணப்படும் பொருள்களிடத்து ஒன்றாகாது வேறாய் நின்று காட்டும் உபகாரத்தையும், இவ் விருவகை உபாயத்தானும் உயிர்களுக்குப் பெத்தநிலை நீங்கி முத்திநிலை கூடுங்காலத்து இறைவன் அவர்களுடனாயும் அவர்கள் அவனுடனாயும் ஆவதாகிய அத்வைதானந்த உபகாரத்தையும் உணர்ந்து ஒன்று வேறு உடன் என்னும் அம்மூன்று நிலையினும் அறிய வருகின்ற இறைவனுடைய குணவிசேடங்களை உணர்ந்து, உணர்ந்தமுறையே ஓதிப் போற்றும் வகையறிந்து, வேத வேதாந்தங்களில் உணரவேண்டும் பொருள்களைப் பகையின்றி (மாறுகோளின்றி) உணர்ந்து, இறைவனுக்கு ஆட்பட்டுச் சிவஞான சம்பந்தத்தை அடைகின்றனரென்று வியந்து கூறியதென்க. (கூக)

### திருமுலைப்பாலுண்டு ஞானம் உணர்ந்தமை

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் அந்நிலையில். எ௦

(எ - து.) சரியை கிரியை யோகம் என்னும் அழிவிலாத் தவங்களை முறையே செய்து மேல் அடையப்படும் ஞானபேட்சை யுடையராய் ஞானாசிரியனை நாடி நிற்கும் சத்திநிபாதர்க்கு ஞானாசிரியனாய் வந்து அவர்கள் வேண்டிய சிவஞானமாகிய பதிஞானம் சம்பந்தமாமாறு அருள் செய்யவல்ல முதல்வராகிய

ஆளுடைய பிள்ளையார், உமாதேவியார் பொற்கிண்ணத்தில் கறந்த தமது அருள் முலைப்பாலில் எண்ணரிய சிவஞானங் குழைத்து ஊட்டிய அந்தநிலையி (அந்தப் பொழுதி) லேயே, சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகும் சிவஞானத்தையும், பிறத்தலை யறவே யொழிக்கும் வன்மையில் மிக்க ஞானத்தையும், ஒப்பு சொல்லக்கூடாத கலைஞானத்தையும், உணர்தற்கரிய மெய்ஞ்ஞானத்தையும் தமது அம்மையப்பனாகிய இறைவன் திருவுளப்படியே உணர்ந்தருளினர், என்பதாம்.

எனவே, ஆளுடைய பிள்ளையார் சமணசாக்கியாதி புறச்சமய இருளைப் போக்கி, சகல சமயாதீத சைவசமய ஞானம் பிரகாசிக்குமாறு செய்ய வந்த சிவ சூரிய மூர்த்தியாகிய ஆசாரியராகலின், பத்தி நெறியை வேண்டாது அருள் ஞானம் வேண்டும் சத்திநிபாதருக்கு - **சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவ ஞானமும்**, பத்திநெறி யறியாது முத்திநெறியை நாடும் சத்திநிபாதருக்குப் பிற வித்தொல்லையை அறவே யொழிக்கவல்ல சரியைகிரியா யோகமுறைகளில் பாங்காய்-**ஓங்கிவரும் ஞானமும்**, புல்லறிவிற் பட்டுழலும் உலகச் சமயிகள் மதங் கொண்டு பொய்யே கட்டிப் பிதற்றிய நூல் கொண்டு வாய்ப்பறை சாற்றும் அவர்களைச் சாப்பறைக்கு ஆளாக்கக் கருதும் சத்திநிபாதருக்கு - **உவமையிலாக் கலைஞானமும்**, புறச்சமய நெறி நின்று, (பின்னர்) புகலும் அகச்சமயம் புக்கு, புகல் மிருதி வழியுழன்று, புகலும் ஆச்சிரம அறத்துறைகள் அவை யடைந்து, அருந் தவங்கள் புரிந்து (அதன் பின்னர்) அருங்கலைகள் பல தெரிந்து, ஆரணங்கள் படித்து, சிறப்புடைய புராணங்கள் உணர்ந்து, வேதச்சிரப் பொருளை மிகத் தெளிந்து, சைவத்திறத்தை நாடும் சத்திநிபாதருக்கு - **உணர்வரிய மெய்ஞ்ஞான மும்** அனுக்கிரகஞ் செய்ய, திராவிடமாகிய ஞானத்தை இறைவனார் தமது அருட் பாலில் குழைத்து உண்பிக்க உண்டு, அக்கணமே தமிழ்வேதமெனப்படும் தேவா ரமாகிய கிரணங்களைப் பரப்பி, மேலே சொல்லி வந்த சத்திநிபாதருக்கு வேண் டிய ஞானங்களைச் சம்பந்தப் படுத்தி அவர்கள் உய்ய அருளினரென்க.

இத்திருப்பாட்டான், சரியை கிரியை யோகங்களாகிய அழிவில் தவங்களைச் செய்து, அவை முற்றிய பின்னர், ஞானத்தை நாடிநிற்கும் சத்திநிபாதத்து உத்தமர்க்கு ஞானாசாரியனாய் வரும் முதல்வனது மூலத்திருமேனியாகிய சண்முகனே ஆளுடைய பிள்ளை யென்பதும், மேலே சொல்லிய சத்திநிபாதருக்கு அனுக்கிரகிக்கவேண்டிய நால்வகை ஞானத்தையும் அருளுடன் அவர்களுக்கு அனுக்கிரகஞ்செய்ய அருட்பாலோடு ஞானத்தைக் கலந்து அம்மையாரால் ஊட்டச் செய்தன ரென்பதும், அவ்வருட்பாலை இறைவன் திருவுள்ளப்ப டியே சத்திநிபாதர்களுக்கு அனுக்கிரகஞ் செய்ய உண்டருளினரென்பதுங் கூறப் பட்டன.

அதுவேயுமன்றி, சிவபாத இருதயர்க்கும் அவர்தம் தேவியார்க்கும் "தாம் கொடுத்த பெருகுவரம் நினைந்தோதான்" ஞானங்கொடுப்பதனுக்கு "உடனிருந்த, அருமறையாள் உடையவளை அளித்தருள அருள் செய்வார்" என்று (சுகு)ம் திருப்பாசுரத்திற் சொல்லியபடி, ஆதியருமறை வழக்கம் அருகாது ஓங்க உவமை யிலாக் கலைஞானமும், உணர்வரிய மெய்ஞ்ஞானமும், பூதிசாதனம் விளங்கச் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமும், பவமதனையறமாற்றும் பாங்கி னில் ஓங்கிய ஞானமும் இறைவன் அருட்பாலில் கலந்து பிள்ளையாருக்கு

ஊட்டினாரென்பதும், அவ்வருள் ஞானத்தை உலகின்கண் வழங்கிச் சிவபாத இருதயரை மகிழ்விக்க அப்பிள்ளையார் உண்டன ரென்பதும் கூறப்பட்டன.

இவ்வுண்மையைப் பின்வரும் திருவிருத்தத்திற் கண்டுணர்க. (எ0)

### புறச்சமயங்களைத் துகளாக்க எழுந்தருளல்

எப்பொருளும் ஆக்குவான் ஈசனே எனும் உணர்வும்
அப்பொருள்தான் ஆளுடையான் அடியார்கள் எனும் அறிவும்
இப்படியால் இதுவன்றித் தம்மிசைவு கொண்டியலும்
துப்புரவில் லார்துணிவு துகளாகச் சூழ்ந்தெழுந்தார். எக

(எ - து.) உலகில் காணப்படும் எல்லாப்பொருள்களையும் ஆக்குவானுயுள்ள வன் ஈசன் ஒருவனே என்று உணர்கின்ற உணர்வும், ஈசன் என்னும் அப்பொருள் தான் யாவரையும் ஆளாக ஆள்கின்ற அடியார்களென்கின்ற அறிவும் என்று வேதாகமங்கள் உணர்த்துவனவாம். வேதாகமங்களுடைய துணிபு இப்படியாக இருக்க, வேதசிவாகமங்களின் வழி இசையாது, தத்தமது நினைவின் வழி இசைந்து, அந்நினைவின் வழியாய்த் துணிந்த பொருள்களைக்கொண்டு வாதமிட்டு நாட்டப்படும் பொருட்டுணிபு, நன்னெறியில் நில்லாதாரது துணிபாகும் என்று இறைவன் திருவுள்ளப்படியே பிள்ளையார் துணிந்து அவர்தம் துணிபுரைகள் துகளாகும் வகையை ஆலோசித்து அச்செயலைச் செய்யத் திருவுளங்கொண் டெழுந்தனர், என்பதாம்.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞான முதலாகக் கூறிய நால்வகை ஞானங்களையும் பாலூட்டியபொழுதே உணர்ந்த ஞான சம்பந்தப் பெருமானார் அந்த நால்வகை ஞானங்களும் இப்படியால் (இன்ன முறையால்) நிற்கின்றன என்று உணர்ந்து நிச்சயித்தறிந்தன ரென்பார் - **எப்பொருளும் ஆக்குவான் ஈசனே எனும் உணர்வும், அப்பொருள்தான் ஆளுடையான் அடியார்கள் எனும் அறிவும்** (என இரண்டாக அறிந்தார்) என்றார். எனவே மெய்கண்ட சாத்திரமென வும் சித்தாந்தமெனவும் கூறப்படும் ஆகமங்களாகிய உவமையிலாக் கலையில் ஞான பாதத்திற் கூறப்படும் சிந்தாந்த ஞானத்தைக் கொண்டு, "இங்குக் காணப்படும் எப்பொருளும் செய்வோனையன்றி யமைந்திலது; ஆகவே அச்செய்வோனாகிய வினைமுதல் செய்வினைக்கு உட்படாதவனாயிருத்தல் வேண்டும். அத்தன்மையான் ஈசனொருவனேயாதல் அமையும்; ஏனைய சமயிகளால் கூறப்படும் எவ்வகைத் தான வினைமுதல்களும் வினைமுதலாகா. அவையெல்லாம் பிறந்திறந்துழலும் வினைமுதலுக்கு முதலாயுள்ள உயிர்ப்பொருள்களும் உயிரில்பொருள்களாகிய சடப்பொருள்களுமேயாம்" என்று பூர்வபக்ஷிகளாகிய புறச்சமயிகளை நிராகரித்து அவர்களால் கூறப்படும் வினைமுதல்களைத் துகளாக்கி, பின்னர், சிந்தாந்த முகத்தாற் கூறப்படும் வினைமுதலாயுள்ள ஈசன், எப்பொருளிலும் பேதமா யிருப்பவனென்றும், அபேதமா யிருப்பவனென்றும் பேதாபேதமா யிருப்பவ னென்றும், உணர்வதற்கரியனாய், உடலில் உயிர்போலும், கண்ணொளியும் அருக்க னொளியும் போலும், அறிவொளிபோலும், பிறிவரும் அத்துவிதமாகிய மெய்ஞ் ஞான சொரூபியாயிருப்பவன் என்றும் உணர்த்துவதாகிய செயல் ஒன்றெனவும் அங்ஙனம் புறச்சமயிகளை நிராகரித்து, ஈசனுடைய மெய்ஞ்ஞான சொரூபத்

தைப் பொதுவகையான் அவர்களுக்கு உணர்த்திய அவ்வுணர்வினை, சித்தாந்த சைவர்களாகிய அகச்சமயிகள் உண்மையாக அறியுமாறு, சிவனடியே சிந்திக்கும் திருப் பெருகும் சிவஞானத்தையும், பவ மதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானத்தையும் விளங்கச் செய்தலாகிய செயலொன்றெனவும் அறிந்தனரென்க.

எனவே, சித்தாந்தமாகிய ஆகமம், தன்னுற் கூறப்படும் மெய்ப் பொருளின் கண் பூர்வபக்ஷிகளுக்குத் தோன்றிய ஐயப்பாடுகளையும், அவருடைய பக்ஷங்களை யும் மேற்கோளானும் ஏதுக்களானும் மறுத்து, மேல், உதாரண முகத்தாற் காட்டப் படும் இயல்பினை அறியுமாறு பிரகாசிக்கச் செய்வதாகிய செயலுடைத்தென்க.

அங்ஙனம் பிரகாசிக்கச் செய்யும் செயல் எத்திற மெனின், எவ்வகைப் பொரு ளும் ஆக்குவானுகிய ஈசனது உணர்வரிய மெய்ஞ்ஞான சொரூபத்தைத் திருப் பெருகு சிவஞானத்தால் சிவனடியே (சிவனருளே) சிந்திக்கும் திறத்தைப் பெற்றுத் தம் முள்ளத்தே பிரகாசமாய்க் காணப் பெறலாகிய திறமென்க. அத்திறமாவது "மேவும் உன்றன் அடியாருள் விரும்பி யானும் மெய்ம்மையே, காவிசேரும் கயற்கண்ணுள் பங்கா உன்றன் கருணையினல், பாவியேற்கும் உண் டாமோ பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து, ஆவியாக்கை யான் எனதென் றியாதும் இன்றியறுதலே" என்றும், "அறவேபெற்றுர் நின்னன்பர் அந்தமின்றி அகநெக வும், புறமே கிடந்து புலைநாயேன் புலம்புகின்றேன் உடையானே, பெறவே வேண் டும் மெய்யன்பு பேராவொழியாப் பிரிவில்லா, மறவாநினையா அளவிலா மாளா வின்பமாகடலே" என்றும், "கடலே யனைய ஆனந்தங் கண்டார் எல்லாங் கவர்ந் துண்ண, விடரே பெருக்கி ஏசற்று இங்கிருத்தல் அழகோ அடிநாயேன், உடை யாய் நீயே அருளுதியென்று உணர்த்தாது ஒழிந்தே கழிந்தொழிந்தேன், சுடரார் அருளால் இருள் நீங்கச் சோதீ இனித்தான் துணியாயே." என்றும் திருவாசகம் கூறியாங்கு, "மெய்ஞ்ஞான சொரூபியாகிய சோதீ! யான் இடரே பெருக்கி ஏசற்று இங்கிருந்தால் அழகோ? யான் பேராவொழியாப் பிரிவில்லா மெய்யன்பு பெறவே வேண்டும், (பெற்று,) பரமானந்தப் பழங்கடல் சேர்ந்து, ஆவியாக்கை யான் எனதென்று அறவே வேண்டும்; (ஆகலின் யான் வேண்டியவாறு பெறு தற்கு) நீ இனித் துணியாய்." என்று வேண்டுதலாம்.

இத்திறமான வேண்டுகோளால் சிவனருளையே சிந்தித்துப் பெற்றுரது உதாரணத்தைக் காட்டி, பெறுத தன்னியல்பை நாடிச் சிவனடியே சிந்தித்துப் புலம்பி ஆவியோடாக்கை யான் எனதென்பது அறவும் பரமானந்தப் பழங்கடல் சேரவும் அவாவும் திருப்பெருகும் சிவஞானமுடையார்க்கு, மெய்ஞ்ஞான சொரூபி யாகிய இறைவன், ஆவியோடு யாக்கை யான் எனதெனப்படும் பந்தச் செயல்க ளுக்கு இடமாயுள்ள பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானத்தைக் கொடுப்பதனுக்குச் சங்கம வேடங்கொண்டு அடியராய் வருவனென்க. (எக)

### பால் உண்டிருப்பதைக் கண்ட தந்தையார் கோபித்தல்

சீர்மறையோர் சிவபாத விருதயரும் சிறுபொழுதில்
நீர்மருவித் தாம்செய்யும் நியமங்கள் முடித்தேறிப்
பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார் தமைநோக்கி
யார்அளித்த பால்அடிசில் உண்டதுநீ எனவெகுளா. எ௨

(எ - து.) பரசமயத்தை நிராகரித்து, சைவசமய ஸ்தாபனஞ்செய்யத் திருவுளத்தெண்ணும் அக்காலை, வைதிகசைவராகிய சிவபாதஇருதயரும், முன்னெல்லாம் நீரில் மூழ்கி நெடும்பொழு திருப்பதுபோல் அந்நாளிராமல் சிறிய கால் அளவைக்குள்ளே, நீரில் மூழ்கியிருந்து இன்றியமையாது தாம் செய்துவரும் நியமங்களை முடித்துக் கரையேறி (தாம் நீரில் மூழ்கத் தொடங்கிய காலத்தில் இருந்த அவ்வுணர்வினராயிராமல்) முற்றுணர்வினராய் விளங்குகின்ற தம்முடைய மகனாரைப் பார்த்து, "ஏ குழந்தாய், உனது வாயினின்று ஒழுகாநின்ற இப் பால் அடிசில் யார் கொடுத்தது?" என்று கடுமையாய்க் கோபித்து, என்பதாம்.

சைவ ஒழுக்கத்தை விட்டு வைதிக வொழுக்க மாத்திரங் கொண்டொழுகும் வேதியர் போலன்றி, சைவ ஒழுக்கத்தோடு கூடிய வைதிக ஒழுக்கத்தைக் கைக்கொண்ட வைதிக சைவராகலின் - **சீர்மறையோர்** என்றார். எனவே, சைவத்துக்கு, வைதிகம் உடம்பும், வைதிகத்துக்குச் சைவம் உயிரும் ஆகலான் சைவத்தோடு வைதிக ஒழுக்கத்தைக் கொண்டவரே உயிருள்ள ஒழுக்கத்தைக் கொண்டவராவாரென்று வைதிகசைவத்தின் சிறப்பு இத்துணைத்தென அறிதற்கு - **சீர்மறை** என்றாரென்க.

வைதிக சைவத்துட்பட்டாரது நெஞ்சமே சிவனாருக்கு இனிய இடமாகலின் - **சிவபாத இருதயர்** என்றார். தாம் கொண்டிருக்கும் நியமத்தில் எவ்விடர் வரினும் அவ்விடருட்படாது காத்து இயற்றுவதில் காதலுடையவராயினும், அதன் பயன் தமது மகனாரென்றுணர்ந்த அறிவாளராகலின் - **நீர்மருவித் தாம் செய்யும் நியமங்கள் சிறு பொழுதில் முடித்தேறி** என்றார். தாம் நீரில் மூழ்க இறங்கிய போது தமது பிரிவஞ்சி இரங்கியவுணர்வோடிருந்த பிள்ளையார், இரங்கியவுணர்வொழிந்து, தம்மையும் தாயையுங் கண்டால் எழும் மகிழ்ச்சியுணர்வோடிருப்பது போல் இருக்கக் கண்டனராகலின் - **பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார் தமை நோக்கி** என்றார். நோக்கிய பொழுது திருவாக்கினின்றும் வழிந்தொழுகும் பாலைக் கண்டனராகலின்-**நீ யார் அளித்த பால் அடிசில் உண்டது?** என்றார். "நிலத்தியல்பால் நீர் திரிவதுபோல், வைதிக சைவவொழுக்கமற்றாரது பாலைக் குடித்தால் நம் அரிய மகனது நல்லுணர்வு மாறுமே! அதனை யறியாது பாலென்னும் அவ்வளவிலேயே இவனறிவு மயங்கித் தேக்கிடவுண்டு விட்டனனே! இவனறிவு இவ்வாறு மயங்கியும் போமோ! பாலைக் கண்டபோதே அறிவு மயங்கிப்போமாயின், அப்பால் வயிற்றினுள் தங்குமாயின் அவ்வறிவு எவ்வறிவாகும்! அங்ஙனம் மயங்கிய அறிவாயின் நாம் மகனைக் கொண்டு செய்ய வெண்ணிய அறிவின் செயல் எவ்வாறாகும்!" என்று ஏங்கிய ஏக்கத்தினால் வெகுளியுட்பட்டனராகலின் - **வெகுளா** என்றார். சிவபாத இருதயருக்கு மகனாராய் வந்த பிள்ளையார் பாலுண்டு தமக்குள்ள முற்றுணர்வோடு பிரகாசித்தன ரென்னும் அச்சிறப்புத் தோன்ற - **பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார்** என்றார். சிவனாருடைய மகனே தமக்கு மகனாக வரத் தவம்புரிந்த சீலராகலின், "சீலமுடைய மகனாருக்குப் பால் கொடுத்தவர் இன்னாரென்று தெரியவில்லையே, நமது தவம் பழுதுபட்டுப் போயிற்றே" என்றாற்றாதெழுந்த துக்கத்தினால் அத்துக்கம் நீங்கக் கோபத்துட்பட்டனரென்பது தோன்ற - **யார் அளித்த பாலடிசில் உண்டது நீ என வெகுளா** என்றார்.

(எஉ)

சுட்டிக் காட்டப்படாதானைச் சுட்டிக் காட்டல்

எச்சில்மயங் கிடவுனக்கீ திட்டாரைக் காட்டென்று
கைச்சிறிய தொருமாறு கொண்டோச்சக் காலெடுத்தே
அச்சிறிய பெருந்தகையார் ஆனந்தக் கண்துளிபெய்து
*உச்சியினில் எடுத்தருளும் ஒருதிருக்கை விரற்சுட்டி. எங

(எ-து.) கோபங்கொண்ட சிவபாத இருதயர் "உனது வாயெச்சில் கலந்து ஒழுகும்படியாக, உனக்கு இந்தப் பாலடிசிலை உண்பித்தவரைக் காட்டு வாய்" என்று கையிலேந்திய சிறிய கோலை மேலோங்கி நீட்ட, பெருந்தகுதி யுடையாராகிய அந்தச் சிறிய பிள்ளையார், கண்களினின்றும் ஆனந்த நீரைச் சிந்தி, இடக்காலைச் சிறிது மேலெடுத்துத் தூக்கி, அழகிய ஒரு திருக்கரத்தைத் தமது திருமுடியின் மேலே எடுத்து, காட்டியருளும் சுட்டுவிரலால் சுட்டிக் காட்டி, என்பதாம்.

இனிய பொருள் வாக்கிற்படுமாயின், நாக்கின்கண் ஊறும் நீரானது சுரந் தொழுகல் இயல்பாதல்போல், பிள்ளையார் இனிக்கும் சிவஞானப்பாலை யுண் டருளிய மாத்திரத்தில் அப்பாலோடு தமது திருவாக்கினின்றும் ஊற்றெடுக் கும் வாயமுதமுங் கலந்து வழிந்தொழுகுதலால் - **எச்சில் மயங்கிட** என்றார். பல சமயிகளுடைய தற்போதமாகிய எச்சிலுக்கு இடங்கொடுக்கும் வடமொழி வேதமானது அகச் சமயிகளுடைய அருட்போத ஞானத்திற்கு இடங்கொடுக் கும் சிவஞான மயமாகிய தமிழ்ப் பாலை யூட்டியபோது அப்பாலோடு கலந்து ஒழுகுதலால் - **எச்சில் மயங்கிட** என்றார். வேறொரு தாயின் முலைப்பாலை யுண் ணாத சீலமுடைய தம் மகனார் அன்று வேறொருவர் பாலுண்டதனைக் கண்டா ராதலால் - **உனக்கீதிட்டாரைக் காட்டு** என்றார். "இங்குள்ளார் யாவரும் நீ என் மகனென்பதை நன்றாயறிவார். எனவே, அவர்களில் ஒருவரேனும் உனக்குத் தம் பாலைக்கொடுக்கத் துணியார், ஆகலின் வேறு யாவர் வந்து உனக்குப் பாலூட்டினவர்?" என்று வினவினாரென்பார் - **இட்டாரைக் காட்டு** என்றார். பிறர் பாலை உண்டதனைக் கண்டு வெகுளி யெழுந்தும், அவ்வெகுளியினும் மகன் பால் தண்ணளியுடையவராகலான் தமது கையினால் அடிக்கத் துணியாது அடிப்பவரைப்போ லோச்சிப் பயமுறுத்தினராகலின் - **கைச்சிறிய தொரு மாறு கொண்டோச்ச** என்றார்.

எவற்றையும் எவரையும் அஞ்சச்செய்து, தாம் எவற்றாலும் எவரானும் அஞ்சு தலை அறியாத இவர் ஒரு சிறிய கோலுக்கு அஞ்சுவரோ? அஞ்சாராகலான்— **காலெடுத்தே** என்றார். "எச்சில் மயங்கிட உனக்கு ஈதிட்டாரைக் காட்டு" என்ற சிவபாத இருதயருக்கு, இட்டாரைக் காட்டுதற்குத் தொடங்கியபொழுதே ஆனந்தங் கொண்டு, கூத்துமாடி, கண்ணீர் பொழிந்து ஒரு கரத்தைத் தலைமேல் கூப்புவது போலும் நீட்டி, விரல்களை மடக்கி, சுட்டு விரலை நீட்டி, சுட்டிறந்த பொருளைச் சுட்டிக்காட்டினாராகலான்— **கண்துளிபெய்து உச்சியினில் எடுத்தரு ளும் ஒரு திருக்கைவிரற் சுட்டி** என்றார்.

பிள்ளையார் காலெடுத்ததும், ஒரு திருக்கை எடுத்து விரற் சுட்டியதும் ஏனோ எனின், தம்மை இன்னாரென்று உண்மையாய்ச் சிவபாத இருதயர் அறி

* உச்சியின்மேல்—என்றும் பாடம்.

தற்கென்க. அஃதாவது:—"சிவபாத இருதயரே, நீர் சமண சாக்கியாதி புறச் சமயங்கள் சைவ சமயத்தின் அடிக்கட்பட்டு அழுங்கிக் கிடக்கவும், சைவசமயம் மேலோங்கவும் எண்ணிச்செய்த தவத்துக் கீடாய்வந்த குமாரன் யான்; அங்ஙனம் வந்த யான் அதுபோல் உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானங் களால் புறச்சமயங்களை நிராகரித்துத் துகளாக்குமாறும், சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், பவமதனை யறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம் என்னும் ஞானங்களால் அடியார்பால் பூதிசாதனம் விளங்கிச் சைவசமயம் ஓங்கு மாறும் செய்ய பிரமபுரத்துறை பெம்மானாகிய தோடுடைய இறைவன் அருட் பாலில் சிவஞானங் குழைத்து என் தாயாகிய உமாதேவியுடன் இங்கு வந்து எனக்கு ஊட்டினான். அதனை நான் தேக்கிட உண்டேன். அந்தப் பாலாகும் நீர் 'எச்சின் மயங்கிட' என்று கூறிய இந்த ஒழுகும் பால். இனி, புறச்சமயங்களைக் கீழ்ப்படுத்தக் காலை எடுத்தேன்; எனக்கு ஊட்டிய தமிழ் ஞானப்பாலால் இதோ யானும் நீரும் காண நின்றருளும் இறைவனைப் பாடி, சைவசமயத்தை ஓங்கச் செய்யக் கையை மேலே எடுத்தேன்" என்று தம்மையும், தாம் செய்யப்போகும் செயலையும், தமக்குப் பாலூட்டினவரையும் அறிவித்தவாறும்.

முன் சிகரம் பார்த்து "அம்மேயப்பா" என்று விட்ட கண்ணீர் அவ்விரு வரையும் காணாமையால் வருந்திவிட்ட கண்ணீராகலான்—அழுதருள் என்றும், இப்பொழுது விட்ட கண்துளி அம்மையப்பரைக் கண்டு, பாலுண்டு விட்ட நீராகலின்—**ஆனந்தக்கண் துளி** என்றுங் கூறினார். (எங)

## சொல்ல முடியாதானைச் சொல்லல்

விண்ணிறைந்த பெருகொளியால் விளங்குமழ விடைமேலே
பண்ணிறைந்த அருமறைகள் பணிந்தேத்தப் பாவையுடன்
எண்ணிறைந்த கருணையினால் நின்றாரை எதிர்காட்டி
உண்ணிறைந்து பொழிந்தெழுந்த உயர்ஞானத் திருமொழியால்.

(எ - து.) (சிவபாத இருதயர் பாலூட்டினவரைக் காட்டென்று பிள்ளை யாரைக் கேட்க, அப்பிள்ளையார் அவரைக் காட்டுதற்கு ஒரு திருக்கை உச்சிமே லெடுத்து விரலாற்சுட்டிக் காட்டத்தொடங்கியபொழுது, பாலூட்டிய இறைவன்) ஆகாயப் பரப்பெல்லாம் நிறைந்த அளவிறந்த ஒளியோடு விளங்காநின்ற இளமை பொருந்திய இடபத்தின்மேலே, ஏழிசைகள் நிறைந்துள்ள அரிய வேதங்கள் நமஃ என்னும் பதத்தை முன்னாகக் கொண்டு போற்ற, உமாதேவியுடன், திரு வுள்ளத்துள் நிறைந்திருக்கும் பெருங் கருணையோடு (தாம் காணும்படி) எதிரே நின்றருளுகின்றாராதலால், சிவபாத இருதயரை நோக்கி, "ஐயா, எனக்குப் பாலூட்டினவர், இதோ! என்னெதிரே நிற்கின்றார், பாரும்" என்று காட்டி, தம துள்ளத்தில் நிறைந்து பொங்கி எழுந்த திருவருள் ஞானம் நிறைந்திருக்கும் திருவாக்கினால், என்பதாம்.

இறைவன் பிள்ளையாருக்குப் பாலூட்டிய காலமும், சிவபாத இருதயர் நீர்க் கடன் முடித்துக் கரையேறி வந்து பாலூட்டியது யாரென்று கேட்ட காலமும் சூரியனுதயமாதற்கு ஐந்து நாழிகையுள்ள காலமாதலால், அந்த இருளும் ஒளியு மல்லாத காலம் நடுப்பகல்போல் விளங்குமாறு எங்கும் பேரொளியைப் பரப்பி

யது இடபவூர்தி யென்பார் - விண்ணிறைந்த பெருகொளியால் விளங்குமழ விடை என்றார். "மண்ணுலகிலுள்ள ஒரு பார்ப்பனச் சிறுவன் 'அம்மே யப்பா' என்றழுதமாத்திரத்தில், நம்மால் என்றும் காணப்பெருத அகோசரப் பொருளா யிருக்கும் மகாதேவன் அம்மையப்பனுய் அருகே வந்துநின்று சிவஞானப் பாலூட் டினனே, இஃது என்ன அதிசயம்! இவ்வதிசயம் நாம் என்றும் எங்கும் கண்டும் கேட்டுமறியாத அதிசயமன்றே! இவ்வதிசயத்தை இன்று நாம் காணப்பெற் றேமே" என்று வேதங்கள் அகமகிழ்ந்து சப்தசுரமுங் குன்ருது வாயாரப் போற்றிச் சூழ்ந்துநின்றன என்பார் - பண்ணிறைந்த அருமறைகள் பணிந்தேத்த என்றார். "தமிழ் ஞானப்பாலூட்டப் பெற்ற நம் பிள்ளை அப்பாலுண்ட வாக்கான் குழலினும் யாழினும் மிக்க சுவையுடைத்தாகிய மழலைச் சொற்கள் ஒன்றேனும் நமது செவி இனிக்கும்படியாகச் சொல்லவில்லையே, எப்போது சொல்லுவான்?" என்று இறைவர் எதிர்பார்த்திருந்தனர் என்பார் - பாவையுடன் எண்ணிறைந்த கருணையினுல் நின்றாரை என்றார். பிள்ளையாரது திருவாக்கைக் கேட்டருள இறைவனும் இறைவியும் நின்ற நிலை, சிவபாத இருதயர் பிள்ளையாரைக் சேட்ட திருவாக்குக்குப் பெருந் துணையாயிற்று என்பார் - நின்றாரை எதிர்காட்டி என் றார். தமது மொழியை எதிர்பார்க்கும் இருவகைத் தந்தையார்க்கும் திருச்செவி இனிக்கும்படியாக அருள்ஞான மொழியை நீருண்ட மேகம்போலப் பொழியத் தலைப்பட்டன ரென்பார் - உயர்ஞானத் திருமொழியால் உண்ணிறைந்து பொழிந் தெழுந்த என்றார்.

இத்திருப்பாட்டான், விண்ணின்மேல் இடபாரூடராய்த் தென்மொழி மறை யைக் கேட்க ஆசையுடன் நிற்கும் சிவபெருமானும், மண்ணின்மேல், சிறிய தொரு மாறுகொண்டோச்சி 'பாலூட்டினவர் யார்'? என்றுகேட்டு நிற்கும் சிவ பாத இருதயரும் செவிகொளுமாறு, பாலூட்டினவர் மேன்மேற் கருணையையும், 'பாலூட்டினவர் யார்'என்றவர் மேன்மேல் அன்பையும் தம்பாற் செய்யத் திரு வாக்கைத் திறக்கத் தொடங்கினரென்று கூறப்பட்டது. (எசு)

சுட்டவும் சொல்லவும் எளிவந்தவன் செவி இனிக்கச் சொல்லல்

எல்லையிலா மறைமுதல்மெய் யுடனெடுத்த எழுதுமறை
மல்லல்நெடுந் தமிழாலிம் மாநிலத்தோர்க் குரைசிறப்பப்
பல்லுயிருங் களிகூரத் தம்பாடல் பரமர்பால்
செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து. (எரு)

(எ - து.) அளவுட்படாத வேதங்கள் முதலாக எடுத்த பிரணவத்தின் பொருள், இந்தப் பெருமை பொருந்திய நிலவுலகத்தார்க்கு நன்ருய் விளங்க வும், ஏனைய எல்லா வுயிர்களும் மிகக் களிப்படையவும் எழுதப்படும் வேதமாகிய வளப்பத்தில் மிக்க தமிழ்மொழியினுள்ள தகரமாகிய மெய்யெழுத்தோடு சேர்த் துப் பாடிய தமது பாடல் சிவபெருமானிடத்தில் செல்லும் முறையாகிய திருச் செவியினைப் பெறுவதற்கு அவரது திருச்செவியினைச் சிறப்பித்துக்கூறி, என்ப தாம்.

எல்லையிலா மறை, எடுத்தமுதல் உரை, மாநிலத்தோர்க்குச் சிறப்ப, பல் லுயிருங்களிகூர, எழுதுமறை மல்லல் நெடுந்தமிழ் மெய்யால் (பாடிய) தம்

பாடல் பரமர்பால் செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து எனக் கொண்டுகூட்டிப் பொருள்கொள்க.

எல்லை (அளவை) யுட்படாத சிவபெருமானது பெருமை யுணர்ந்து எல்லை யுட்படாதவனென்றே சொல்லி யிளைத்து விரிதலின் - **எல்லையிலா மறை** என்றார். அந்த வேதந் தோன்றுவதற்கு முன்னெழுத்தாய் நிற்றலின் - **மறைமுதல்** என்றார். எல்லையுட்படாத பெரிய வேதம் வழங்குதற்கு இந்நிலம் இடமாய் நிற்றலின் - **இம்மாநிலம்** என்றார். "நரர்பயில் தேயந்தன்னில் நான்மறை பயிலாநாட்டில் விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்கபுண் ணியந்தானுகும்" என்று **சிவஞான சித்தியார்** கூறியபடி அம்மாநிலத்தில் தோன்றினவர் மிக்க புண்ணியராகலின் அவர்க்கு மறைமுதலாகிய பிரணவத்தின் பொருளை விளங்கச் செய்தல் இன்றியமையாத செயலாகலான் - **இம்மாநிலத்தோர்க்குரை சிறப்ப** என்றார். எழுதா மறைக்கு முதலாகிய பிரணவத்தின் பொருள், எழுது மறையைக்கொண்டு விளக்கினுல் விளங்குமேயன்றி எழுதாமறையினுல் விளங்காதாகலான் - **எழுது மறை** என்றார். அம்மறை அருளையே தனக்கு வளமிக்க செல்வமாகவுடையதாகலின் - **மல்லல் நெடுந்தமிழ்** என்றார். அருட்செல்வத்தை மிக எளிதாய்த் தமிழ்மொழி ஆளப்பெற்றமைபோல் ஏனைய மொழிகளெல்லாம் ஆளப்பெறுமை யான் அச்சிறப்பு நோக்கி-**நெடுந்தமிழ்** என்றார். அத்தகைச் சிறப்புடைய தமிழ் என்னும் மொழியில் முன்னிற்கும் **த** என்னும் ஓரெழுத் தொருமொழியை எடுத்துக்கொண்டன ராகலின் - **மெய்** என்றார். தமிழ்எழுத் தொருமொழியாகிய **த** என்னும் இந்த எழுத்தே, எழுதாமறையின் உண்மைப் பொருளாய், உயிராய் விளங்கும் **தத்வமசி** எனும் மகா வாக்கியத்தின் மெய்ப்பொருளைக் காட்ட அதில் முன்னிற்றலின் தகர **மெய்யுடன் எடுத்த**, அஃதாவது, **தத்வமசி** என்றெடுத்த என்றார். தமிழ்எழுத் தொருமொழியாகிய தகர மெய்யெழுத்து, வடமறை முதலெழுத்தாகிய பிரணவத்துக்கு முதலெழுத்தாகிய அகர வுயிரெழுத்தோடு கலந்த மாத்திரத்தில் (தோ) என நிற்கப்பெற்று நடைபெறலான்— **எல்லையிலா மறைமுதல், எழுதுமறை மல்லல் நெடுந்தமிழால் மெய்யுடன் எடுத்த** என்றார். வடமொழி வேதம் அகர வுயிரெழுத்தை முதலாகவுடைய ஓங்காரத்தை முதலாகக்கொண்டு ஒவ்வொரு இருக்காய்ப் பரவியதுபோல், பிள்ளையார் தாம் பாடத்தொடங்கிய தென்மொழி வேதத்தையும் தன்னெடு கலந்த அகரவுயிரை ஓங்கச்செய்து (தோ) என உயிர்மெய்யாய் விளங்கிய பிரணவத்தையே முதலாகக்கொண்டு பாடினுராகலின் - **தம்பாடல்** என்றார். அஃதாவது மறைமுதல் - அகரம், தமிழ்மெய் - தகரம், உடனெடுத்தது-உயிரும் மெய்யுங் கலந்த தோ; இத் தோ என்னும் எழுத்தையே முதலெழுத்தாகக் கொண்டு திருப்பாடல் தொடங்கி அது பதிகங்களாய்ப் பரவியதென்க.

இனி, வடமொழிப் பண்ணெலி வடமொழி வேதத்தைப் பயின்றார்க்கு மாத்திரம் களிப்பினைத் தருமேயன்றி ஏனையோர்க்கு ஒரு சிறிதும் களிப்பினைத் தாராது. தென்மொழிப் பண்ணெலியோ, கற்றவர்க்கும், மற்றையோர்க்கும், ஏனைய எல்லா வுயிர்களுக்கும் இன்சுவை பயந்து அடங்காக் களிப்பைத் தருமாகலின் - **தம்பாடல் பல்லுயிருங் களிகூர** என்றார்.

இனி, வடமொழிவேதம் இறைவன் திருவாக்கினின்றும் வெளிவந்து, மல வசப்பட்டாராகிய பசுக்களின் செவிவழியே புகுந்து, அவர்கள் வாக்காகிய சிறைச்

களத்துள் சிக்குண்டு, பதிநிலையறியாது மயங்கித்தியங்கும் அவர்களோடு தானும் மயங்கித் தியங்கி, இறைவன் செவியிற்புகுந்து அவன் களிக்குமாறு செய்ய அறியாது, இறைவன் எங்கு எழுந்தருளிவரினும் அவ்விறைவனைத் தூரத்தே பின்புறத்திற் கண்டு, 'ஐயா! ஐயா!' என்று ஓவென்றலறிப் பின்தொடர்ந்து சென்று அவனை அண்ணி (சமீபி)க்க முயன்றாலும் அண்ணப்பெறாது அவ்விறைவன் செல்லத் தாம் வெளியிலேயே நின்று அலமருதல்போல், பிள்ளையார்தமது திருவாக்கினின்றும் வெளிவரும் தமிழ்மொழி வேதம் அலமராது, இறைவன்பால் மலரகிதராய் ஆரா அன்புடைய அடியார் செவிகளிற் புகுந்து, அவருள்ளத்துள் நிறைந்து, அவர் அறிவுகளைத் தம் வசப்படுத்திப் பின்னர் இறைவன் முன்னே கொண்டுபோய் நிறுத்தி, அதன்பின்னர், இன்னிசை பயின்ற வாக்கினின்றும் வெளிப்பட்டு, அவ்வழியே இறைவன்பாற் சென்று, அவன் திருச்செவியிற் புக்கு, அவன் திருவுள்ளத்தை மகிழ்வித்து, அவனுளம் ஆர, அவன் திருமேனியில் ஆரமாகப் பொருந்தி வாழவேண்டுமென்கிற திருவுளங் கொண்டு அத்திருவுள்ளத்தைக் கேட்டருளுதற்குரிய இறைவனது திருச்செவியைப் புகழ்ந்தெடுத்தோதத் தொடங்கினாராகலின் - **பரமர்பாற் செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து** என்றார்.

பசுபாசங்களாகக் காணப்படுகின்ற எல்லா வுயிர்களுடைய எல்லையைக் கடந்தவனும், அவைகளை எப்பொழுதும் தன்னுடைய பஞ்சகிருத்தியத்தால் ஆளும் பதியாயுள்ளவனும் பரசிவன் ஒருவனே என்று பல குறிகளானும், பல அடையாளங்களானும், எல்லாவுயிர்களும் போற்றிப்போற்றிப் புத்திமுத்திப் பயனைப்பெற்ற இடங்களாகக் காணப்படுகின்ற திருக்கோயில்களானும், புத்திமுத்திப் பயனைப் பெறுதற்கு அவரவர் கொண்டொழுகிய நெறிகளானும், அந்நெறிகளின் வழியே ஒருநெறிய மனம் வைத்து நின்ற நேர்மைகளானும், வெள்ளிடைமலைபோல் அறியக்கிடக்கின்ற உண்மையை வடமொழி வேதம் பலமுகமாகக் கூறினும், மாநிலத்தோர்களெல்லாம் அவைகளைத் தம்மனத்துட் புகுத்தாது, தம் மனத்தை அவ்வேதங்களுட் படுத்தி, மனம் போனவாறெல்லாம் பொருள் கொண்டு, திசைக்கு மிக்குலவு சீர்த்தித் தில்லைக் கூத்துகந்து தீய, நசிக்க வெண்ணீறதாடும் நமர்களை நணுகா (நாய்கள்) நாய்களாய், அசிக்க ஆரியங்களோதும் (ஆதரை) ஆதராய், (பேதவாதப் பிசுக்கரை) பிசுக்கராய், உலைச்சமயிகளாய், ஒன்றோடொன் றொவ்வாத சாத்திரங்களைக் கற்றுக் கொண்டவர்களாய், மாழ்கிப் பாழ்பட்டுப் போகின்றார்களாகலின் அங்ஙனம் போகாவாறு, அவ்வேதங்களின் உண்மைநெறி தழைத்தோங்க, அவ்வேதங்களின் உள்ளிடைப் பொருள்களைத் தெள்ளிதின் உணர்ந்து பரசிவனே பரம்பொருளென்றும், அவனடிக்கு ஆட்படுமாறு அப்பரசிவத்தினது திருமேனியின் விசேடங்களையும், அத்திருமேனியான் உண்டாகும் உபகாரங்களையும், அவனுடைய குணங்களையும், அக்குணங்களால் உண்டாகும் நிக்கிரக அனுக்கிரகங்களையும், யாவருக்கும் இனிக்கும்படியான தமிழ் மொழியால் ஓதத் தொடங்கிய வேதத்திற்கு, பிரணவத்தில் முதலெழுத்தாயுள்ள அகரத்தோடு, தமிழ் எழுத்தாகிய தகரவெழுத்தைச் சேர்த்து தோ என்றாக்கி அதனையே பிரணவமாகக் கொண்டு ஓதத் தொடங்கினாரென்றும், ஓதத் தொடங்கிய அவ் வேதமானது தமிழ்ச்சங்க இறைவன் திருச்செவியிற் புகுந்து யாவர்க்கும் அருள் பாலிக்குமாறு, திருச்செவியை முன்னதாகச் சிறப்பித்துக் கூறினாரென்றும் இத்திருப்பாசுரத்தான் கூறியவாறாம்.

இதனால், உயிர்களுக்கு முன்வினைவிளைவும், பின்வினையொப்பும், மலபரிபாகமும், சத்திநிபாதமும் உண்டாகும் பொருட்டு, இறைவர் தாமே தமது திருவாக்கான் வடமொழியாலாகிய வேதத்தை விதிமுகமாகக் கூறியருளினரென்றும், அவ்வுயிர்களுக்குச் சத்திநிபாதம் வந்தபின்னர், அவர்கள் அருள் வசத்தராய்த் தம்மடி கூடுமாறு ஆசிரியத் திருவுருக் கொண்டு தமிழ்மொழியாலாகிய தமிழ்வேதத்தை அந்தத் திருவாக்கினால் அருள்முகமாகக் கூறியருளினர் என்றும் அறியக்கிடக்கின்றமை காண்க.

விதிமுகமாகச் சொல்லத் தொடங்கியதாகலான், வடமொழிவேதம் உயிர்களுடைய வினைவேற்றுமை நோக்கியும், காலவேற்றுமை நோக்கியும் எடுத்துரைக்கப்பட வேண்டுதலின் எழுதாமறையாயிற்று. தென்மொழிவேதமோ வேற்றுமைப்படுத்தும் மலவேற்றுமை யொழிந்து, நிலைபெறுத்தவல்ல அருள் வசப்பட்ட உயிர்களுடைய அன்பினிலையை நோக்கி, அனுக்கிரக நிலையில் நிறுத்தச் சொல்லவந்த தாகலான் எழுதிய மறையாயிற்று. வினைவசப்பட்டார்க்கு எழுந்த வேதம் வினைவசப்பட்டாரால் கேட்கப்படவேண்டுமேயன்றி இறைவனாற் கேட்கப்படவேண்டியதன்றாகலின், இறைவன் அதற்குச் செவிசாய்க்கான். சத்திநிபாதர்க்கு எழுந்த வேதமோ அருள் வசப்பட்டாரால் சொல்லப்படுதலின், அவ்வருண் மொழிக்கு இறைவன் உரியனாகலின் இறைவன் அதற்குச் செவிசாய்ப்பானென்க. அவ்வுண்மை தோன்றவே **திருச்செவியைச் சிறப்பித்து** என்றார். (எடு)

**தமது திருவாயில் பாலொழுகச் செய்தவன் இவனெனல்**

செம்மைபெற எடுத்ததிருத் தோடுடைய செவியனெனும்
மெய்ம்மைமொழித் திருப்பதிகம் பிரமபுர மேவினரை
தம்மையடை யாளங்க ளுடன்சாற்றித் தாதையார்க்
கெம்மையிது செய்தபிரான் இவனன்றே எனஇசைத்தார். எசு

(எ - து.) (வடமொழி வேதப்பொருளானது யாவருள்ளத்தும்) தெளிவினையடைய, அந்த வேதம் தோன்றுவதற்கு முதலெழுத்தாயுள்ள பிரணவ அக்கரத்தோடு தமிழ்த் தகரத்தைச் சேர்த்து வியப்புடன் எடுத்த **தோடுடைய செவியன்** என்கின்ற மெய்ம்மை மொழியாகிய திருப்பதிகத்தில், பிரமபுரத்தில் எழுந்தருளி யிருக்கின்ற இறைவனை, அவர் பூண்டிருக்கும் அடையாளங்களோடும் "உனக்குப் பாலூட்டினவர் யாவர்?" என்று கேட்ட தந்தையார்க்குச் சொல்லிச் சுட்டிக்காட்டி, "என் வாயினின்றும் பால் வழிந்து ஒழுகும்படி செய்த இறைவன் இவனன்றோ?" என்று சொல்லியருளினர், என்பதாம்.

தந்தையார்க்குச் சாற்றி எனக்கூட்டுக.

எல்லாச் சமயிகளாலும் எடுத்தாளப்படுவது வேதமாயினும், அவ்வேதத்தில் பிறப்பென்னும் பேதைமை நீங்கக்கூறும், சிறப்பென்னும் செம்பொருள் காண்பதாகிய அறிவினையும் விட்டு, எய்திநின்ற நிலவுலகத்தினும் எய்தக் கடவதாகிய வீட்டுலகம் நணித்தாதலையும்விட்டு, ஐயவுணர்வுட்பட்டு, பின்னர் பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் விபரீத வுணர்வான் உளதாவதாகிய இன்பமில்லாத பிறப்பை யடைந்து, காமம் வெகுளி மயக்கம் என்னும் இம்மூன்று நோயை யுடையவராய் அலைந்தலைந்து, ஐயவிபரீத வுணர்வுகளினின்றும் நீங்கிய

செம்மையாகிய பேரறிவினையும், பேரின்பத்தையும் ஆன்மாக்கள் இழக்கின்றாராகலின், அங்ஙனம் இழக்காதவாறு மேலே கூறிய மூன்று நோய்களையும் போக்கி, அவற்றிற்கிடமாகிய இன்பமில்லாப் பிறவியையும்விட்டு, எய்தக் கடவதாகிய வீட்டினை அண்ணித்து, சிறப்பென்னும் செம்பொருள் காண்பதாகிய அறிவினைப்பெற, பொய்ம்மொழிகளை யொழிக்கும் மெய்ம்மொழித் தமிழால் "தோடுடைய செவியன்" என்னும் திருப்பதிகத்தை எடுத்தோதத் தொடங்கினாரென்பார்—செம்மைபெற திருத்தோடுடைய செவியனெனும், மெய்ம்மை மொழித் திருப்பதிகம் எடுத்த என்றார்.

வேதநெறியின்கண் ஐயவிபரீத வுணர்வுடையார்க்கு, அவைகளை யகற்றி, அவ்வேதத்தின் நன்னெறி தழைத்தோங்க, மெய்ம்மை மொழித் தமிழால் திருப்பதிகத்தை ஓதத் தொடங்கினாராயினும், அப்பதிகத்தானே சிவபாத இருதயருக் குண்டாகிய ஐயத்தையும் ஒழித்தருளத் திருவுளத்தெண்ணி, அவரை நோக்கி, "கட்குடியில் திறமுள்ளவனுக்கு அக்கள்ளையே வார்த்து அவனுள்ளிருக்கும் உண்மை மொழிகளை வெளிப்படுத்தி யாவருக்கும் அறிவித்துத் தானும் கேட்டு மகிழ்தல்போல், அருட்பாலையே உண்டிருக்கும் எனக்கு மேன்மேல் மகிழ்ச்சியுண்டாகச் சிவஞானத்தை நானுண்டுவரும் அருட்பாலில் குழைத்து, 'அம்மே யப்பா' என்று திருத்தோணிச் சிகரம்பார்த்து அழுத எனக்கு வார்த்து, என்னை உண்பித்து, அங்ஙனம் நான் உண்பதனால் எனக்குண்டாகும் பேரானந்தங் கொண்டு நான் வாக்கினாற் பொழியும் அருள்ஞானத் துண்மையைப் பிறர்க்கும் உணர்த்தித் தானும் கேட்டு மகிழ இவ்விளையாடலைச் செய்தான் இங்கெழுந்தருளியிருக்கும் நம் பெருமானாகிய பிரமபுரத் துறை நாதன்" என்பார் - தாதையார்க்கு எம்மை யிது செய்தபிரான் பிரமபுர மேவினர் (ஆகிய) இவனன்றே என இசைத்தார் என்றார்.

தாம் பாலுண்டருளிய செய்தியும், அச்செய்தியைச் செய்தவன் பிரமபுர மேவினனென்றும் கூறினாரேனும் அவ்வளவில் அவர் அறியக் கூடுமோ? கூடா; எனெனில், பிரமவாசகத்துக்குப் புரமா (இடமா)யுள்ள வேதத்தில் அப்பிரம வாசகத்துக்கு வாச்சியமாயுள்ள பரசிவத்தை சத்குரு வசனத்தினால் அறியக் கூடுமேயன்றித் தாமே யறிதல் கூடாதாகலின். இது சித்தாந்த உண்மையாகலின் ஞான சம்பந்தரும் ஆளுடைய பிள்ளையுமாகிய பரமாசாரியர் பிரம சப்தவாச்சியனாகிய உமா சகாயனை அவனுக்குரிய அடையாளங்களையும் சொல்லிச் சொல்லிச் சுட்டிச்சுட்டிக் காட்டி யருளினாரென்பார் - பிரமபுரமேவினர் தம்மை அடையாளங்களுடன் சாற்றி என்றார்.

இத்திருப்பாட்டான், ஞானசம்பந்தப் பிள்ளையார் தமக்குப் பிரமபுரத் துறை நாதன் அருள்ஞானப் பாலூட்டியதும், அதனால் பரசமய நிராகரணஞ் செய்யக் காலை எடுத்ததும், சிவபரத்துவஞ் செய்யத் தக்ஷிண கரத்தை மேலோச்சித் திருப்பதிக வாயிலாய்ச் சத்தியஞ் செய்யத் தொடங்கியதுமாகிய சிவனருட் செயலை எடுத்துக் கூறப்பட்டதென்க. (எசு)

### குற்றம் பாராட்டாது அருளும் அருள் வள்ளற்றன்மை விளக்கல்

மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையில்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும் எனக்காட்ட

எண்ணமிலா வல்லரக்கன் எடுத்துமுறிந் திசைபாட
அண்ணலவற் கருள்புரிந்த ஆக்கப்பா டருள்*செய்தார். எஎ

(எ - து.) இந்நிலவுலகில் வாழும் ஆன்மாக்கள் தவறுகள் செய்தாலும், தம்மைச் சரணமென்று அடைவாராஞல் (அவர்களை) இறைவன் தமது பேரருளுடைமையால் ஆண்டுகொண்டருளும் தன்மையுடையான் என்பதை யாவருக்குந் தெரிவிக்க, தனக்கு வாழ்வளித்த இறைவன் என்று எண்ணும் எண்ணமில்லாத சீர வன்மையுடைய இராவணன் கயிலேயங்கிரியை எடுத்து (அதனுல்) இருபது தோளும் நெருக்குற்று முறிந்து, இசையுடைய சாமவேதத்தைப் பாட, அவ்விசையை இறைவன் கேட்டு அந்த இராவணனுக்கு அனுக்கிரகஞ் செய்தருளிய கருணை மிகுதியை வியரிலங்கு என்னும் பதிகத்தில் ஓதியருளினுர், என்பதாம்.

மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காயம், ஆனிடத்து ஐந்தும் ஆடும் அரன்பணிக்காக என்பதை மறந்து, யாக்கைக்கே யிரைதேடி யலமந்து, காக்கைக்கே யிரையாகிக் கழியுஞ் செயலுடையார் வாழ்நாளை யொழித்து இறக்கநேருங் காலத்து "யானேதும் பிறப்பஞ்சேன்; இந்த இறப்பதனுக்கு என்செய்யக் கடவேன்? நான் ஆமாறு உன் திருவடிக்கு அகம் குழையாதொழிந்தேன், அன்பினுல் நெஞ்சம் உருகாதொழிந்தேன், உன் திருமேனியில் பூமாலே புனேந்து ஏத்தாதொழிந்தேன், புகழ்ந்துரையா தொழிந்தேன், நின் திருக்கோயில் தூவாதொழிந்தேன், மெழுகாதொழிந்தேன், கூத்தாடா தொழிந்தேன், சாமாறே விரைந்து சாவுக்கே ஆளாயினேன்" என்று அவன் திருவடியை நினைந்து போற்றுவராயின் சாகச்செய்ய வருகின்ற நமன்றமர்களை "இறைவன் இவன் மற்றென்னடியானென விலக்கி" ஆண்டுகொண்டருளும் பெருங் கருணையுடையானென்பது தோன்றவும்,இத்தன்மையான அருச்சனைச் செயலிலும் போற்றுஞ் செயலிலும் தான் மிக்க ஆசையுடையவன் என்பது இராவணனுக்குச் செய்த அறக்கருணை, மறக்கருணை என்னும் இருவகைப் பட்ட செயலால் தோன்றவும் "தோடுடைய செவியன்," எனத் தொடுத்த திருப்பதிகத்து "வியரிலங்குவரை," என்னும் எட்டாவது திருமொழித் தேவாரத்தில் அருளிய அருளிப்பாடென்று இத்திருப்பாசுரத்தால் கூறப்பட்டதென்க.

இனி, இவ்விடத்து அறக்கருணை மறக்கருணை என்றமை என்னையோ எனின், இராவணன் அன்புடன் தன்னடியை அருச்சித்த செயலுடையவனுகலின் இராவணனுக்கு வியரிலங்குவரையை உந்தத் தோள்களுக்கு வீரங் கொடுத்தது அறக்கருணையும், அந்த வீரத்தைக்கொண்டு தான் வாழிடமாகிய மலையை எடுத்த அந்த மிக்க தீச்செயலினும் அவ்வருச்சனைச் செயலேயே திருவுளத்தெண்ணி, அவனுயிரைப் போக்காது, அவனுக்கு அந்த வலியைத் தந்த திருவடியின் பெருவிரலாலேயே சிறிதே யூன்றி அவன் தோள்வலி முறிந்துபோம்படி செய்தது மறக்கருணையுமாம். அதுகண்டு அவன் போற்றிச் சாமவேதத்தை இசையுடன் பாடி இறைவனுள்ளத்தைக் கவர்ந்தமையால் மீளவும் அவனுக்கு ஆயுளாகிய நாளும், வீரவாளும் தந்தது அறக்கருணையாமென்க.

இவ்வுண்மை தோன்றவே - எண்ணமிலா வல்லரக்கன் எடுத்து முறிந்திசை பாட, அண்ணலவற் கருள்புரிந்த ஆக்கப்பாடு அருள் செய்தார் என்ருர்.

* புரிந்தார் - என்றும் பாடம்.

இராவணன் தனக்குள்ள தோள்வலியை, இறைவனை அருச்சித்த அருச்சனை வலி என்றெண்ணு தொழிந்தமையான்—எண்ணமிலா வல்லரக்கன் என்ருர்.

### தொழாதார்க்கு அருள்செய்யான் என்னும் உண்மை

தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாகும் கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்தும் *துதித்துயர்ந்த படிவிரித்தார். எஅ

(எ - து) தம்மைப் பூவாலும் நீராலும் வழிபட் டருச்சிப்பவர்க்கே சிவ பெருமான் திருவருள் செய்வது என்று எண்ணுதவராய்த் திருமாலும் பிரமனும் பிரமப் பொருளாகாத தம்மையே பிரமமாக நினைத்த, குற்றம் பொருந்திய மனத்தினல், "பிரமனு பிரமம்? அவனல்லன்; அவனைப் படைத்த திருமாலாகிய நாம்தாம் பிரமம்" என்றும், "நம்மால் படைக்கப்பட்ட இத்திருமாலா பிரமம்? அவனல்லன், நாம்தாம் பிரமம்" என்றும் பிரமத்தன்மையை அறியாது மயங்கிய மயக்கத்தினுல் இழிந்தபிறப்பாகிய பன்றியும் அன்னப்பறவையுமாய் அடியையும் முடியையுங் காணுந்தன்மையை அடையப் பெருவாயின தன்மையும், இறைவன் திருநாமத்தை உச்சரித்துப் போற்றி அடிபணிவார்கள் உயர்ந்த தன்மை அடையப் பெற்றமையுமாகிய அவற்றினுண்மையை, "தாணுதல் செய்திறை" என்னும் திருப்பாசுரத்தால் விரித்தோதியருளினர், என்பதாம்.

சிவபெருமான் தொழுவார்க்கே அருளுவது எனத் தொழார் எனவும், அஞ்செழுத்துந் துதித்து விழுவார்கள் (வணங்குவார்கள்) உயர்ந்தபடி விரித்தார் எனவுங் கூட்டுக.

அஞ்செழுத்துந் துதித்து வணங்குகின்றவர்களுக்கே, இறைவன் சிவமாந் தன்மைப் பெருவாழ் வெனப்படும் பிரமமாந்தன்மையில் மாருது உயர்ந்திருக்க அருளுவது எனவும், அங்ஙனந் தொழாதார்க்குப் பிரமமாந்தன்மையாகிய பெருவாழ்வளிக்காது, கருவிலங்கும் பறவையுமாகிய இழிவாழ்வளித்துத் தம்மை எய்தாவகையைச் செய்வது எனவும் இத்திருப்பாசுரத்தால் விரித்துக் கூறப்பட்டன.

இதனல், பிரமமாயிருப்பது சிவனே எனவும், பிரமன் திருமால் முதலியோர் ஆன்மாக்களாயிருப்பவ ரெனவும், அங்ஙனம் ஆன்மாக்களாயிருப்பவர் பிரமம் ஆகவேண்டுமானல் பிரமமாகிய பரசிவத்தைத் தொழுதால் அச்சிவபெருமான் தனதருளால் ஆக்குவானெனவும், பரசிவத்தைத் தொழுது பெறுவதைவிட்டுத் தாமே எவ்வளவு விழுந்தெழுந்து தங்கள் ஆற்றல்களைக் காட்டினுலும் அவர்கள் மலந்தின்னும் பன்றியாயும் பறக்கும் பட்சியாயும் ஆவரேயன்றிப் பிரமமாகா ரெனவும் பிரகாசப் படுத்தியவாறும்.

இனி, ஐந்தெழுத்தும் துதித்து விழவார்கள் உயர்ந்தபடி விரித்தார் என்றதனைச் சிறிது விரித்துக் கூறுவாம். அஃதாவது, அஞ்செழுத்துந் துதித்து என்றது அஞ்செழுத்தையும் எண்ணல் எனவும், விழவார்கள் என்றது அத

---

*துதித்துய்ந்த - என்றும் பாடம்.

னுண்மையை யுணர்ந்து அவ்வுண்மை வழியில் அடங்கி நிற்றல் எனவும், உயர்ந்த படி என்றது அங்ஙனம் நிற்கு நிலையில் பன்றியைப்போல் ஆணவமலத்தை யுண்டு, பட்சியைப்போல் மாயாமல சரீரியாய், கன்மமல வசப்பட்டுச் சுவர்க்க நரகங் களில் மாறிமாறிப் பறந்து செல்லும் சீவத்தன்மை போய்ச் சிவமாந் தன்மையைப் பெற்று உயர்ந்தபடியில் நிற்றல் எனவும் உணர்க.

இனி, **விரித்தார்** என்றது மேலே சொல்லிய எண்ணல் முதலியவற்றை என்று வெளிப்படலால் அதனை விதந்து கூறுவாம். அஞ்செழுத்தையும் எண்ணல் எனவே, முதலில் ஆன்மாவாகிய தனக்குக் கீழுள்ள திரோத எழுத்தும் மல வெழுத்தும், தனக்குமேலுள்ள அருளெழுத்தும் சிவ எழுத்தும் நிற்கும் நிலையை எண்ணிப் பார்த்தல்; அதன் பின், தனக்குமேல் தன்னை யடுத்திருப்பது அருளும், அவ்வருளுக்குமேல் இருப்பது சிவமும், தனக்குக் கீழ் தன்னை யடுத்திருப்பது திரோதமும், அதற்குக் கீழிருப்பது மலமும் எனப் பொருள்நிலையை எண்ணிப் பார்த்தல்; அதன்பின், தனக்குக் கீழ்நிலையில் தன்னை அடுத்திருக்கும் திரோதம், தனக்கு மேல்நிலையில் தன்னை அடுத்திருக்கும் அருளே என ஆராய்ச்சி வழியான் எண்ணிப் பார்த்தலாம்.

இனி, **விழுவார்கள்** என்றதால், ஐந்தெழுத்து நிற்கு நிலையும், அவ்வெழுத் தின் பொருள் நிற்கு நிலையும், அப்பொருள் நிலையில் தனக்கு முன்னும் பின்னும் அருளிருந்து தன்னைக் காக்கும் முறைமையும் ஆராய்ந்துணர்ந்து, பின்னர், தனக்கு மேலிருக்கும் அருள் கீழ் நிற்கும் திரோதமாக வந்து, மலத்தோடு கிடந்த நம்மை அம்மலத்தினின்றும் வேறுபடுத்தவும், வேறுபட்ட நம்மை, அம்மலம் மீளவும் வந்து தாக்காதிருக்கவும் என்ற உண்மைகள் பெறப்படும். அங்ஙனம் காக்கும் அருள் மலத்தால் தாக்காது நாம் நின்ற பின்னர் நம்மைச் சிவத்தோடு ஐக்கியமாக்கிச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வளித்தற் பொருட்டு நம்மொடுகலந்து நாம் சிவத்தை நோக்கவும், சிவம் நம்மை நோக்கவும் செய்வதால் அவ்வருளையே நோக்கி அவ்வருட் செயலில் அடங்கி நிற்போம்என்பதும் இனிது பெறப்படும்.

இனி, **உயர்ந்தபடி** எனவே, அங்ஙனம் அவ்வருட் செயலில் அடங்கி நிற்கும் ஆன்மாக்களுடைய நோக்கம் சிவத்தினிடத்தும், சிவத்தினுடைய நோக்கம் ஆன் மாக்களிடத்தும் அநந்நியமாய்க் கலந்து நிற்கும் நிலையை அவ்வருள்கூட்ட, அந் நிலையால் அவர்கள் சிவமேயாய், முன்னிருந்த சீவத்தன்மையாகிய தாழ்வு போய், உயர்ந்த சிவத்தன்மையுடையராய் வாழ்தலாமென்க.

இனி, இங்ஙனமான அஞ்செழுத் துண்மையை அரிபிரமர்கள் உணராது, தங்களுக்குள்ள தேவவடிவத்தையும் இழந்து கருவிலங்கும் பறவையுமாயின காரணத்தைக் கூறுவாம்.

என்னையெனின், அஞ்செழுத்துள்ளிருக்கும் ஆன்ம அக்கரமாயிருக்கும் அவர்கள் தாம், அவ்வஞ்செழுத் துள்ளிருக்கும் பிரமத்தை அஞ்செழுத்துள்ளிருக் கும் அருளால் தம்முள் அடையப்பெற்றுப் பிரமமாயிருக்கப்பெறாது, அவ்வஞ் செழுத்தின் கீழிருக்கும் மலகாரியமாகிய அண்டத்தின் கீழும்மேலும் நீண்டு நீண்டு, கீண்டு கீண்டு, பறந்து பறந்து, போய்ப் போய்ப் பிரமம் பிடித்தவராய்த் தம் மையே பிரமமாக எண்ணிய எண்ணத்தில் எய்த்து, அஞ்செழுத்துள்ளிருப்பதை விட்டுக் கருவிலங்குள்ளும், பறவையுள்ளும் புகுந்து ஒழிந்தனரென்க.

எனவே "பிரமம் தாம்" எனச் சொல்லும் அப்பிரமத்திற்கும், "தாம் பிரமம்" எனச் சொல்லும் தமக்கும், பிரமத்திற்கும் தமக்கும் வேருகக் காணப்படும் பிரபஞ்சபாசத்திற்கும் இடம் அஞ்செழுத்தே என்றுணராது, அவ்வெழுத்தை விட்டுத் தமக்கும் பிரமத்துக்கும் இடம் வேறுவேறெனக் கருதினர். பிரமம் தானெனக் கூறினல் பிரமம் இவனுக வருமா? "பிரமம் வேறில்லை, நானே பிரமம்" என்ருலும் இவன் பிரமம் ஆவனு? ஆகான். ஏனெனில், கூறுவாம். ஆன்மாவாகிய இவர்களுக்கிடம் அஞ்ஞானமாகிய மலம். பிரமத்துக்கு இடம் ஞான மாகிய அருள். ஆகவே இவர்களுக்கிடமாகிய மலம் இவர்களை விட்டுப் பிரியாது. இவர்களும் அந்த மலத்தை விட்டுப் பிரிதற்குச் சுதந்தர ரல்லர். சுதந்தர ரல்ல ராயினும் அதனைப் பிரிக்கும் சுதந்தர சத்தியுடைய வேறு துணையும் உளரோ எனின், இல்லை. பிரமம், இவர்கள், பிரபஞ்சமென்னும் மூன்றனுள், இவர்களே உள்ளவராய்ப் பிரமமும் பிரபஞ்சமும் இல்லாதவாயின், இவர்களே பிரமமாயிருக்க வல்லராவர். அன்றி இவர்களே பிரமமாயின், 'பிரமம், நாம்' என்றிரண்டாகச் சொல்லி, பின்னர் 'பிரமமே நாம்' என்று சொல்லவேண்டியதில்லை. அன்றியும் 'பிரமம் நாம்' என்னும் போது, இது நாமல்லம் என்று மற்ருெரு பொருளும் தொனித்தல் வேண்டும். என்னை? இப்போது 'நாம் பிரமம்' என்று சொல்லுவத ஞல், இவ்வாறு சொல்லுவதற்குமுன் இவர்கள் எதுவாயிருந்தனர் என்ற வினு நிகழுமாதலின். *அவ்வினுவின் வழியானே ஐயவுணர்வும், விபரீதவுணர்வும் வந் துலாவி மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்திச் சார்தராது ஒழியக்கடவனவாகிய நோய்களெல்லாம், அஃதாவது, பிறப்பு அனுதியாய் வருதலின் உயிரான் அள வின்றி ஈட்டப்பட்ட வினைகளின் பயன்களுள் இறந்த வுடம்புகளான் அனுபவித் தனவும், பிறந்த வுடம்பால் முகந்து நின்றனவும் ஒழியப் பின்னும் அனுபவிக்கக் கடவனவாய்க் கிடந்தனவாய துன்பங்களெல்லாம், சாரவந்து மாணுப் பிறப்பில், (இன்பமில்லாத இழிந்த பிறப்புகளில்) புக்கு உழலச் செய்யுமென்னும் உண்மை போல் அவ்வரிபிரமர்கள்பால் வந்தடுத்தனவென்று அறிவுறுத்தியவாறும்.

அன்றியும், காட்டிற்றிரிவது பன்றி, தாமரையைத்தேடிப் போவது அன்னப் பறவை. ஆகவே, திருமால் அன்னப்பறவையின் வடிவெடுத்துத் திருவடித்தாமரை யைத் தேடத் தொடங்காது, பன்றி வடிவெடுத்துத் தேடத்தொடங்கினனுத லால் இறைவன் திருவடித் தாமரையைக் காணுதொழிந்தனன். பிரமன் பன்றி வடிவெடுத்துத் திருச்சடைக் காட்டைத் தேடத் தொடங்காது, பறவையின் வடிவெடுத்துத் தேடத் தொடங்கினனுகலான் இறைவன் சடைமுடிக் காட்டைக் காணு தொழிந்தனன் என்றலுமாம்.

இதனுண்மை யாதெனின், "ஆதனமும் ஆதனியுமாய் நிறைந்து நின்ற வனைச் சேதனனைக் கொண்டே தெளிவுற்றுச், சேதனனைச், சேதனனிலே செலுத்திச் சிற்பரத்தரா யிருப்பர், ஏதமறக் கண்டவர்களின்று" என்று சித்தாந்தமாகிய திருக்களிற்றுப்படியாரிற் கூறியபடி பிரமதேவன் காணப் பெருது, நீரைப்பிரித்துப் பாலுண்ணும் அன்னப் பறவையின் வடிவெடுத்து எப்பொருளுக்கும் தானே ஆதனமாகியும், அப்பொருளாகிய ஆதனியாகியும் முடி விறந்துநிற்கும் அவ்விறைவனது முடியைக்காணத் தொடங்கினனுகலான் அவன் காணுதொழிந்தன னென்க.

---

*திருக்குறள் ருசு-ம் அதி. மெய்யுணர்தலிற் காண்க.

அஃதேபோல், வேதம் வேதாந்தம் விளக்கஞ்செய் விந்துவுடன், நாதம் நாதாந்தம் நடுவேதம், போதத்தால் ஆமளவும் தேடத்தலைப்படின் அளவிறந்த அப்பாலாய், சேமவொளியாயிருக்கும் பரப்பிரமம், வேதத்தால் ஆன்மாக்களுள் ஒருவனாக எண்ணப்பட்ட திருமால் ஆணவங்கொண்டு தற்போதத்தால் அடியைக் காணத் தொடங்கின்,போதம் இறந்தவர்கள் உள்ளத்துட் கிடந்துறங்கும் அவ்வடி எங்ஙனங்காணக் கூடும்? ஆகலான் காணுதொழிந்தது. (எஅ)

சமணர் வழி குற்றம் எனல்

வேதகா ரணராய வெண்பிறைசேர் செய்யசடை
நாதன்நெறி அறிந்துய்யார் தம்மிலே நலங்கொள்ளும்
போதமிலாச் சமண்கையர் புத்தர்வழி பழியாக்கும்
ஏதமே எனமொழிந்தார் எங்கள்பிரான் சம்பந்தர். எசு

(எ-து.) எங்கள் தெய்வமாகிய திருஞான சம்பந்த மூர்த்திகள், வேதத்திற்குக் காரணகர்த்தாவாகிய வெள்ளிய பிறை யணிந்த, சிவந்த சடைமுடியினையுடைய சிவபெருமான் கூறியருளிய வைதிக நெறியின் உண்மையை உணர்ந்து அவ்வழியே சென்று உய்வகை யறியாராகிய சமயிகளுக்குள்ளே, தத்தமக்கு வேண்டும் நன்னெறியைக் கொள்ளும் அறிவில்லாத சமண்கையர்களும், புத்தர்களும் தத்தம் நூன்முகங்களாற் கூறும் நெறிகளெல்லாம் பாவங்களை மேன்மேல் விளைவிக்கும் தீநெறிகளே யாமென்று "புத்தரோடு பொறியில் சமண்" என்னும் திருப்பாசுரத்தால் கூறியருளினு ரென்பதாம்.

வேதம் சிவபெருமானுலேயே சொல்லப்பட்டதாகலானும், அந்த வேதமும் அச்சிவபிரானையே தன்னுல் தியானிக்கப்படும் தியேயப் பொருளாய் அது பல நெறிகளினும் கூறிவருதலானும்-வேதகாரணராய என்ருர். இவ்வுண்மை நன்கு விளங்கவே, மதியிற் சிறந்த சந்திரன், தனது கலைதேய்ந்து ஒற்றைக் கலையோடு நின்ற காலத்து,வேதத்துள் நாராயணர் முதலியோரைக் காரண வாக்கியங்களால் காரணர்களாகக் கூறப்பட்டிருப்பதை அறிந்தவனுக இருந்தும், தேர் முதலாயின பலராற் செய்யப்படினும், அப்பலரும் ஒருவனுடைய ஏவல்வழி நின்றே பணியைச் செய்தல் போல், சிவபெருமான் ஏவல்வழி நின்றே நாராயணராதியர் செய்பவரெனவும், குயவன்போல் அவாந்தர காரணரெனவும், அவரெல்லாம் ஆகுபெயரால் சங்கார காரணராகிய முதற் கடவுளையே உணர்த்தி நிற்பவரெனவும், ஆகலான், செய்தும் செய்வித்தும் எல்லாத் தொழிற்கும் வினைமுதலாய் நிற்கும் முதற்கடவுள் சங்காரகர்த்தாவாகிய சிவபெருமானே என்று தனது களங்கமற்ற மதியால் உணர்ந்து அப்பெருமானைச் சரண் புகுந்து அவனருளால் சடைமுடிமேற் சேர்ந்தனனுகலான்—வெண்பிறை சேர்செய்யசடை என்ருர்.

உலகின்கண் காணப்படும் அரசன் தனது ஆளுகையிலுள்ள ஆன்மாக்களுக்கு அமைந்துள்ள அறிவினளவிற்கும் செய்யுஞ் செயலினளவிற்கும் ஏற்றவாறு ஒவ்வொரு தலைவரை ஏற்படுத்தி, எவரெவர் வழியில் எவரெவர்களை நிறுத்தவேண்டுமோ அவரவர்களை அங்ஙனமே நிறுத்தி, அவ்வத்தலைவர்களும் தாமாகவே நினைக்கவும் அவரவர்கள் விதிக்கும் விதிவழியில் தவருது ஒழுகவுமான நியமனங்களையெல்லாம் நியமித்து, அந் நியமனத்தின் வழியே அவரவர்கள் செய்யுஞ்

செயலைச் செய்வித்து அவரவர்களையும் உய்ந்து பிழைக்கும் வண்ணம் செய்வது போல், வேதகாரணனுய சந்திரசேகரன், தனது சத்திவியாபகத்துள் இருக்கும் ஆன்மாக்களுடைய அறிவு செயல்களுக் கேற்றவாறு திருமால் பிரமன் இந்திரன் முதலிய தேவர்களை நியமித்து, அவர்களிடத்தில் தனது ஆணையை நிறுத்தி, அவர்கள் வழியில் அந்த ஆன்மாக்களை நிறுத்தி, அவரவர்கள் வழியாய்ச் செய்ய வேண்டுவனவற்றைச் செய்து, தாங்கள் தாங்கள் அடையவேண்டிய பிரயோ ஜனங்களை யடைந்து, உய்ந்து பிழைக்கும் வகையைக் கற்பித்திருக்கின்றான்; ஆதலின் அவ்வுண்மையை அறிந்து தத்தமக்கு நியமித்திருக்கும் கடவுளர்கள் வழியே நின்று அக்கடவுளர்களால் அடையப்படும் நலங்களைப் பெற்றுய்யாத வரும், தமது உபகாரத்தை அறியும் அறிவில்லாதவரும் புறச்சமயிகளேயாக லான்—**செய்யசடை நாதனெறி அறிந்துய்யார் தம்மிலே நலங்கொள்ளும் போத மிலாச்சமண் கையர்புத்தர்** என்றார்.

"உய்யும் வகையும், உபகாரத்தைக் கருதும் கருத்தும் அறியா அறிவிலிக ளாகிய அப்புன்சமயிகள் தத்தம் புல்லறிவைக் கொண்டு பிதற்றிய பித்துரை நெறிகள் தீவினைகளையே மிகுவித்து இன்பமிலாத் தீப்பிறவிகளிலும் அம்மையில் தீநரகங்களிலும் செலுத்தும் ஆகலான், அந்நெறிகளிற் சென்று நில்லாதீர்கள்" என்று எங்கள் ஞானசம்பந்தமணி விதிக்கவே "புத்தரோடு பொறியில் சமணும் புறங்கூற நெறிநில்லா" என்று திருவாய் மலர்ந்தருளினாராகலான் - (புத்தராதியர்) **வழிபழியாக்கும் ஏதமே என மொழிந்தார் எங்கள்பிரான் சம்பந்தர்** என்றார். (எக)

### தேவர்கள் தமிழ்வேதத்தைக் கேட்டுப் பூமழை பொழிதல்

திருப்பதிகம் நிறைவித்துத் திருக்கடைக்காப் புச்சாத்தி
இருக்குமொழிப் பிள்ளையார் எதிர்தொழுது நின்றருள
அருட்கருணைத் திருவாளன் ஆரருள்கண் டமரரெலாம்
பெருக்கவிசும் பினிலார்த்துப் பிரசமலர் மழைபொழிந்தார். அ௦

(எ - து.) வேத மொழிகளையே தம்முடைய வாய்மொழிகளாகவுடைய ஞானசம்பந்தப்பிள்ளையார் (அம்மையப்பரைப் பார்த்துத் திருவாய்மலர்ந்தருளிய) "தோடுடைய செவியன்" என்னுந் திருப்பதிகத்தை முற்றுப்பெறச் செய்வித்து, (அங்ஙனம் நிறைவித்த திருப்பதிகத்தைத்) திருச்செவி சாத்தி, எதிரே நின் றிருந்த உமாசகாயனாகிய இறைவனை இருகையுங் கூப்பித்தொழுது நிற்க, ஆகாயத்தின்கண்ணுள்ள தேவர்களெல்லாம், அருள் நிறைந்துள்ள கருணைப் பெருஞ்செல்வனாகிய இறைவனது பெருங்கருணைத் திறத்தைக்கண்டு, அடங் காத ஆரவாரஞ்செய்து தேன் சிந்தும் மலர்மாரியைச் சொரிந்தனர், என்பதாம்.

இறைவன் திருவாக்கினின்றும் வெளிவரும் சொற்களெல்லாம் விதிவாக் கியமாகிய வேதங்களே என்பது திண்ணமாதல்போல், அவ்விறைவனுடைய ஞானப்பிள்ளையாகிய இவர் வாக்கினின்றும் வெளிவரும் மொழிகளும் அவ் வேதங்களன்றி வேறல்ல என்னும் அவ்வுண்மை தோன்ற—**இருக்கு மொழிப் பிள்ளையார்** என்றார்.

"தோடுடைய செவியன்" என்று தொடுத்து, "அருநெறிய மறை" என்று கடைக்காப்பாகச் சொல்லும் திருப்பாசுரத்தைச் சொல்லுமளவும், இறைவனும் திருவுருக் கரந்துபோவதை மறந்து பிள்ளையார் ஓதியருளும் வேதத்தின் உட்பொருளை யெல்லாம் கவரும் கள்வனாய் எதிரே நின்றனன் என்பது தோன்ற —**எதிர்நின்றருள** என்றார்.

தாம் ஓதப்புகும் தமிழ்வேதம் இறைவனுள்ளத்திற் புகுமாறு திருச்செவியைத் "தோடுடைய செவி" என்று சிறப்பித்தபடியே இறைவனும் தோடுடைய செவியைச் சாத்தி நின்றருளினனாகலான், பிள்ளையார் அவ்விறைவன் திருமேனியைத் தமது உள்ளத்துக் கவர்ந்து அவன் அடையாள விசேடங்களை ஏழு திருப்பாசுரத்தாற் கூறி, எட்டாந் திருப்பாசுரத்தான், யாவராயினும் நானென்றெழும் ஆணவமலங் குறைந்து அடைவாராயின், அவர்களைத் துன்பத்துள் ஆழாவண்ணம் காக்கும் அருட்டிறத்தைக் கூறி, ஒன்பதாந் திருப்பாசுரத்தான், அடிமையாகத் தன்னைச் சாராது பிரமமானாரை இழிந்த பிறப்பினைச் சாரச் செய்து அஞ்சச் செய்வதும், அடிமையாகத் தம்மைச் சார்ந்தவரை அஞ்செழுத்தால் சிவமாக்கி அஞ்சா திருக்கச் செய்வதும் ஆகிய, மறம் அறம் என்னும் இருவகையாய் நிற்கும் அருட்டிறத்தைக் கூறி, பத்தாம் திருப்பாசுரத்தால், அவரவரது பக்குவ அபக்குவம் நோக்கி நாதன் கூறிய நெறியினை யறிந்து அந்நெறிவழியே அவரவரையும் உய்ந்துபோம்படி செய்து, தாமும் உய்ந்து போகாது, நாதன் கூறிய நன்னெறிகளைப் பழித்து, தாம் சில நெறிகளைக் கற்பிப்பாராயின், அவர்களால் கற்பிக்கப்படும் அந்நெறி பாவத்தை விளைவிக்கும் தீயநெறியேயாமென்று கூறிப் பதிகத்தைப் பூர்த்தி செய்து, பின்னர், இறைவன் கூறிய வேதமொழி உலகினர்க்கெல்லாம் இடைக்காலமாகிய திதி காலத்தில் வருந் துன்பங்களைப் போக்கிக்கொள்வதற்கு எப்படிக் காப்பாகவுள்ளதோ, அப்படியே திருநெறித் தமிழ்வேதமாகிய இது சத்திநிபாதர்க்கெல்லாம் மீண்டும் பிறப்புக் கிடஞ்செய்யவல்ல கொடுந் தீவினையாகிய தொல்லை வினையை எளிதாகத் தீர்த்தற்கு ஆணைமொழியாகக் கூறுவதாகிய திருப்பாசுரத்தைத் திருக்கடைக்காப்பாகச் செய்தனர் என்பது தோன்ற - **திருப்பதிக நிறைவித்துத் திருக்கடைக் காப்புச் சாத்தி** என்றார்.

இவ்வாறு திருப்பதிகத்தை நிறைவித்துத் திருக்கடைக்காப்பைப் பிள்ளையார் அருளியதையும், அவ்வரிய திருநெறித்தமிழை, தமிழ்க்கிறைவனாகிய பெருநெறிய பிரமாபுர மேவிய பெம்மான் திருச்செவி சாத்தி, இனித்து அத்திருப்பதிகத்தை ஓதுவார்க்குப் பிள்ளையார் அருளிச் செய்தவாறே தொல்வினையை எளிதாகத் தீரும்வண்ணம் செய்வதில் அருள் நோக்குடையரா யிருத்தலையும் தேவரெல்லாங் கண்டு, "இதுகாறும் நாம் ஓதிவந்த வடமொழி வேதத்தை இவ் விறைவன் இப்படி திருச்செவி சாத்திக் கேட்டதுண்டோ? அருட்கருணைத் திருவாளனா யிருந்ததுண்டோ? இஃது என்ன அதிசயம்! இஃது என்ன ஆனந்தம்! இஃது என்ன கண்காட்சி!" என்று பேரொலியோடு ஆரவாரஞ் செய்து மேகம்போல் ஆகாயமெல்லாம் பரவித் தேன் நிறைந்துள்ள மலர்களை முகந்து முகந்து மழை பொழிவதுபோல் புஷ்பாஞ்சலி செய்தார்கள் என்பது தோன்ற - **அமரரெலாம் அருட்கருணைத் திருவாளனாருள் கண்டு பெருக்க விசும்பினில் ஆர்த்துப் பிரசமலர் மழை பொழிந்தார்** என்றார். (௮0)

### சிவநாமத்தின் ஒலிப் பெருக்கம்

வந்தெழுமங் கலமான வானகதுந் துபிமுழக்கும்
கந்தருவர் கின்னரர்கள் கானவொலிக் கடன்முழக்கும்
இந்திரனே முதல்தேவர் எடுத்தேத்தும் இசைமுழக்கும்
அந்தமில்பல் கணநாதர் அரஎனுமோ சையி லடங்க. அக

(எ - து.) ஆகாயத்தின்கண் வந்து எழுகின்ற மங்கலகரமாகிய துந்துபி முதலிய தேவவாத்தியங்களின் முழக்கங்களும், கந்தருவர்களும் கின்னரர்களும் கடல் ஒலியைப்போல ஒலிக்கின்ற இசைப்பேதங்களின் முழக்கங்களும், இந்திரன் முதலிய தேவர்களெல்லாம், ஒருவர்மேல் ஒருவர், மேன்மேல் ஓசைபடப் போற்றுகின்ற முழக்கங்களும் ஆகிய ஓசைப்பெருக்கங்க ளெல்லாம், எண்ணிறந்த பலவகைப்பட்ட சிவகணநாதர்கள் பேரானந்தங்கொண்டு ஹரஹர என்று விடாதொலிக்கும் சிவநாமப் பேரோசையில் அடங்கி ஒலிக்கும், என்பதாம்.

இதனால், மங்கல வாத்தியங்களாகிய துந்துபி முதலிய தேவ வாத்தியங்களினும், கந்தருவர் கின்னரர் முதலியோர் பாடிய கானவோசை மேலெழுந்ததெனவும், அவ்வோசையினும் இந்திரன் முதலிய தேவர்கள் வாக்கினால் துதிக்கும் தோத்திரவோசை மேலோங்கி ஒலித்ததெனவும், அத்தோத்திர வொலியினும் மேற்பட்டு எண்ணிறந்த பலவகையான சிவகணங்கள் எடுத்தோதிய சிவநாம ஒலி ஒலித்த தெனவும் கூறப்பட்டன.

எனவே, சிவனாகிய ஹரன் எத்தேவர்களினும் அடங்காது எவ்வாற்றானும் மேலோங்கி யிருத்தல்போல், அவனுடைய நாமமாகிய ஹரஹர என்னும் ஒலியும் எவ்வொலிகளினும் அடங்காது மேம்பட்டொலித்ததென்க. அதுவேயுமன்றிக் கந்தருவர் கின்னரர் தேவர் முதலிய யாவரினும் மேம்பட்டவர் பூதகணங்களாகலின் அவரது ஒலியும் மேலோங்கி ஒலித்ததெனவும், பாலுண்டருளப் பிள்ளையார் இப்பாருக்கு (உலகத்திற்கு) வந்தது அச்சிவநாமம் பரவுதற்கேயாகலின் அவ்வொலியே மேலோங்கி ஒலித்ததெனவும், இனி, சமண்கையர் முதலிய புறச்சமயத்தாருடைய பேரொலி சிற்றொலியாய்ப் போம் எனவும் அவ்வுண்மையைக் குறித்ததென்க. (அக)

வேறு

### வந்துகூடிய கூட்டத்தின் சிறப்பு

மறைகள் கிளர்ந்தொலி வளர முழங்கிட வானோர்தம்
நிறைமுடி உந்திய நிரைமணி சிந்திட நீள்வானத்
துறையென வந்துல கடைய நிறைந்திட ஒவாமெய்ப்
பொறைபெரு குந்தவ முனிவ ரெனுங்கடல் புடைசூழ. அஉ

(எ - து.) நான்கு வேதங்களும் செழுமையுடன் வளர்ந்து ஓசைமிகுந்து ஆரவாரிக்கவும், அங்கு நிறைந்துள்ள தேவர்கள் ஒருவரோடொருவர் நெருங்குதலால் அவர்களுடைய கிரீடங்களும் ஒன்றோடொன்று உராய்ந்து அவைகளிற் பதித்துள்ள இரத்தின வரிசைகள் சிதறிச் சிந்த, அவை, ஆகாயத்தின்கண் பரவும் மேகங்களினின்றும் சிதறுகின்ற நீர்த்துளிகள்போல அவ்விடத்திலே

யல்லாமல் உலகமுற்றும் வீழ்ந்து பிரகாசிக்கவும், மெய்ம்மையும் பொறையும் எப்பொழுதும் பெருகி வளராநின்ற சிறப்பினையுடைய முனிவர்கள் என்கின்ற கடல் பக்கங்களிற் சூழவும், என்பதாம்.

வேதங்களெல்லாம், "இனி, நம்மால் விதிக்கப்பட்டிருக்கும் நெறிகள் வளர்ந்தோங்கும் காலம் வந்துவிட்டது" என்று மனவூக்கங் கொண்டு பேரொலியோடு மகிழ்ந்தொலித்தன என்பார் - **மறைகள் கிளர்ந்து ஒலிவளர முழங்கிட** என்றார். தேவர்கள், "இனி, வேதங்கள் வளர்ந்தோங்க வந்ததனால் உலகின்கண் வேள்விகளும் நிறைந்து நம்பால் அவியாகிய உணவுகள் வந்து நிறையப் பெறுமாகலான், நமது உலகிலுள்ள செல்வப் பெருக்கை அம்மண்ணுலகில் நிரப்ப வேண்டும்" என்றெண்ணி, இரத்தினங்களை மேகங்கள் நீர் மழையைப் பொழிவன போலும் பொழிந்தனர் என்பார் - **வானோர் நீள்வானத்துறையென நிரைமணி வந்து உலகடைய நிறைந்திட சிந்திட** என்றார். மேகங்கள் ஒன்றோடொன்று உராய்ந்து நெருங்கி நீர் மழையைப் பொழிவது போலத் தேவர்களுடைய கிரீடங்கள் ஒன்றோடொன்று உராய்ந்து இரத்தின வரிசைகளைச் சிந்தின என்பார் - **வானோர்தம் நிறைமுடியுந்திய நிரை மணிசிந்திட** என்றார். "மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு, தானஞ் செய்வாரிற் றலை,' என்றும், "பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை, எல்லா அறமும் தரும்," என்றும், "பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று," என்றும், "புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை, வாய்மையாற் காணப் படும்," என்றும், "யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத் தொன்றும், வாய்மையி னல்ல பிற," என்றும், "எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப், பொய்யா விளக்கே விளக்கு" என்றுஞ் சிறந்தெடுத்தோதப்படும் மெய்ம்மையும், "நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை, போற்றி யொழுகப் படும்," என்று கூறப்படும் பொறையும் எப்பொழுதும் தமதுள்ளத்துள் பெருகியிருத்தலே தவமாகவுடைய முனிவரெல்லாம் "நமது தவம் முற்றுப்பெற்று நமக்குப் பயனளிக்க வந்தது" என்றெண்ணி மகிழ்ந்து கடல்போல் பக்கங்களில் சூழ்ந்தனர் என்பார் - **ஓவாமெய்ப் பொறை பெருகுந்தவ முனிவரெனுங்கடல் புடைசூழ** என்றார். (அ௨)

### இறைவன் உமாதேவியோடு எழுந்தருளல்

அணைவுற வந்தெழும் அறிவு தொடங்கின அடியார்பால்
இணையில் பவங்கிளர் கடல்கள் இகந்திட இருதாளின்
புணையருள் அங்கணர் பொருவிடை தங்கிய புணர்பாகத்
துணையொ டணைந்தனர் சுருதி தொடர்ந்த பெருந்தோணி. அ௩

(எ - து.) இருவினைநீக்கத்தின்கண் வரும் இயல்பினையுடைய அடியரைக் கண்டு இன்புறுதலாகிய அன்பும், அவ்வன்பு பின் முறையே முதிரும் முதிர்வில் வரும் நெறியினையுடைய சத்திநிபாதமும், அச்சத்தி பதிவில் தோன்றவரும் மெய்யறிவின்கண் அவாவும் முறையே தொடங்கும் அறிவின் தொடர்பினையுடைய அடியவர்களிடத்தில், வேறோருவமை சொல்லுதற்கில்லாமல் விளங்குகின்ற எழுவகைப் பிறவி என்னும் கடல்களைத் தாண்ட, பெரிய திருவடிகளென்னும் ஓடத்தைக் கொடுத்து உதவி செய்யும் பெருங்கருணையுடைய இறை

வனர், பெரிய தோணிபுரமென்று வேதங்கள் தொடர்ந்திருக்கும் அக்கோயிலி னுள்ளே, போர்செய்யும் வன்மையுடைய இடபவூர்தியின்மேல் தமது இடப் பாகத்தைவிட்டுப் பிரியாது உடனிருக்கின்ற உமாதேவியோடு எழுந்தருளினர், என்பதாம்.

இருதாளின் புணையருள் அங்கணர், சுருதிதொடர்ந்த பெருந்தோணி, (யில்) பொருவிடை தங்கிய புணர்பாகத் துணையொடு அணைந்தனர் எனக்கொண்டு கூட்டிப் பொருள்கொள்க.

இதனால், பிறப்பிறப்பிற்பட்டுழலச் செய்யும் இருவினையுடையார்க்கு அடி யார்பால் அன்பு தோன்றாதென்றும், அடியவரிடத்து அன்பு பதியாதவருக்குத் திருவருள் பதியாதென்றும், அங்ஙனம் திருவருள் பதியாதார்க்கு மெய்ஞ் ஞானமாகிய சிவஞானத்தில் அவாத் தோன்றாதென்றும், இங்ஙனமான அன்பும் அருட்பதிவும் மெய்யுணர்வும் தோன்றாதார்க்கு இறைவன் தனது திருவடியாகிய தோணியை, பிறவிக்கடலைக் கடத்தற்குக் கொடானென்றும் கூறியவாறும். அன்பினால் அடியார் சம்பந்தமும், அருளால் சிவசம்பந்தமும், இவ்விருசம்பந்தத் தால் மெய்ஞ்ஞான சம்பந்தமும் உடையார்க்கே பெருந்தோணிபுரத்தனாகிய உமாசகாயன் தன்னுடைய திருவடிகளாகிய இரண்டு சிறு தோணிகளைக் கொடுத்து, எழுபிறப் பென்னும் பெருங்கடலைக் கடப்பித்து, முத்திக்கரையிற் சேர்ப்பனென்று அறிவுறுத்தியவாறும்.

அடியார்களுக்குப் பிறவி யொழிப்பதில் கருணையுடையவர் என்பார்- **அங்கணர்** எனவும், அவரது விடை பாவப் பகைவரோடு போர்செய்வதில் திறமுடைய தென்பார் - **பொருவிடை** எனவுங் கூறினர்.　　(அரு)

**திருக்கோயிலுக்கு எழுந்தருளல்.**

அண்ணல் அணைந்தமை கண்டு தொடர்ந்தெழும் அன்பாலே
மண்மிசை நின்ற மறைச்சிறு போதக மன்னுரும்
கண்வழி சென்ற கருத்து விடாது கலந்தேகப்
புண்ணியர் நண்ணிய பூமலி கோயிலின் உட்புக்கார்.　　அச

(எ-து.) யானைக் கன்றினை யொத்திருக்கும் அந்தணச் சிறுவராய்ப் பூமியின் கண் நின்றருளும் ஆளுடைய பிள்ளையாரும், (தமக்குத் திருத்தோணிச் சிகரத் தின்மீது காட்சி தந்த) அம்மையப்பராகிய இறைவர் (சிகரத்தை விட்டுத்) திருக் கோயிலினுள்ளே எழுந்தருளினமையைத் தமது கண்ணானது பார்த்து அவரது காட்சியை விட்டுப் பிரியாது செல்ல, அக்காட்சியைக் கண்ட தமது உள்ளத்தில் அன்பானது எழ, அவ்வன்பினைக் கண்ட மனமானது அவ்வன்பினை விடாது அக்கண்ணினைக் கலந்து பின்தொடர்ந்து போக புண்ணிய சொரூபியாகிய இறைவர் எழுந்தருளிய பூக்கள் நிறைந்துள்ள கோயிலினுள்ளே புகுந்தனர், என்பதாம்.

மறைச்சிறு போதக மன்னு(ராகிய) மண்மிசை நின்றாரும், அண்ணல் அடைந்தமை கண்டு எனக்கொண்டு கூட்டிப் பொருள் கொள்க.

ஞானமதங் கொண்டிருக்கும் யானைக் கன்றென்பார் - **மறைச்சிறு போதக மன்னரும்** என்றார். ஞானக் கன்றாகிய ஆளுடைய பிள்ளையார், தாம் சிகரத்திற்

கண்ட அம்மையப்பர் அச்சிகரத்தை விட்டுக் கோயிலினுள்ளே எழுந்தருளின மையைக் கண்டனர் என்பார் - **அண்ணல் அணைந்தமை கண்டு** என்றார். அங்ஙனம் எழுந்தருளியபோது அவரது காட்சியைக் கண்ட பிள்ளையாருடைய கண்களும், அக்கண்களைக் கலந்த அவரது மனமும் அவ்விறைவனைப் பின் தொடர்ந்து அவர் புகுந்த பூங்கோயிலினுள்ளே புக அவ்விரண்டுடன் தாமும் புகுந்தன ரென்பார் - **தொடர்ந்தெழும் அன்பாலே கண் வழி சென்ற கருத்து விடாது கலந்தேக கோயிலி னுட்புக்கார்** என்றார். ஆளுடைய பிள்ளையாருக்குச் சைவந்தழைத் தோங்க ஞானப் பாட்டைப் பாலாக வூட்டியருளினர் என்பார் - **புண்ணியர்** என்றார். (அச)

**தந்தையார் பிள்ளையார் ஓதிய தமிழ்வேதத்தின் குறிப்பறிதல்.**

ஈறில் பெருந்தவ முன்செய்து தாதை யெனப்பெற்றார்
மாறு விழுந்த மலர்க்கை குவித்து மகிழ்ந்தாடி
வேறு விளைந்த வெருட்சி வியப்பு விருப்போடும்
கூறும்அ ருந்தமி ழின்பொரு ளானகு றிப்போர்வார். அரு

(எ-து.) அழிதலை யறியாத சிவ புண்ணிய சம்பந்தமாகிய பெரிய தவத்தைச் செய்து, பிள்ளையாருக்குத் தந்தை என்று சொல்லப் பெற்றாராகிய சிவபாத இருதயர், (ஞானப் பாலுண்ட பிள்ளையாரை) அடிப்பதற்கு எடுத்த பிரம்பானது தம்மை யறியாது தமது கையினின்றும் நழுவிக் கீழே விழுந்து போக, மலர் போன்ற இரண்டு கைகளையும் அஞ்சலியாகக் குவித்து, மகிழ்ச்சி யடைந்து, ஆனந்தக் கூத்தாடி, "இங்ஙனமான ஆனந்தத்தை விளைவித்த அருட் செயல் நமது உள்ளத்தில் வேறு வகையாக விளைந்ததே; இஃதென்ன பாவம்!" என்று அச்சமும், "இங்ஙனமான அருட் செயல் மருட் செயலாகக் கண்ட அறிவினை யுடைய நாம், யாவரானுங் காண்டற்கரிய இவ்வற்புதக் காட்சியைக் காணப் பெற்றோமே!, ஈது என்ன அருள்!" என்று வியப்பும், "நாம் பரசமயம் நிராகரித்துப் புனித நீற்றைப் பொலிவு பெறச் செய்யும் குமாரனை விரும்பினோமே! விரும்பியபடி அக்குமாரனே நமது கலிதீர வந்தனனே" என்று விருப்பும் ஆகிய இம்மூன்றனோடும், திருவாக்கான் எடுத்தோதும் திருநெறித்தமிழாகிய அரிய தமிழின்கண் அமைந்து கிடப்பதான அரிய வேதப்பொருளின் உண்மைச் சூசனையை ஆராய்வாராயினர், என்பதாம்.

சிவபதத்துக்கு இடஞ் செய்யாது பாசத்துக் கிடஞ் செய்யும் மகனைப் பெறுதற்குரிய பசு புண்ணியங்களைச் செய்யாது, பாசத்துக் கிடஞ்செய்யாது சிவபதத்துக் கிடஞ்செய்யும் அறிவறிந்த மகனைப் பெறப் பதிபுண்ணியங்களைப் பிறவிதோறும் விடாது செய்து வந்தவரென்னும் அவரது தவத்தின் அருமை தோன்ற - **ஈறில் பெருந்தவ முன்செய்து** என்றார். அங்ஙனமான பெருந் தவத்தையுடையா ரென்பதை உலகமெல்லாம் எளிதிலுணர, யாவர்க்குந் தந்தைதாய் என்னும் இறைவனைத் தந்தையாக ஆளும் பிள்ளையார்க்குத் தாம் தந்தை என்றழைக்கப் பெற்றார் என்னும் அச்சிறப்புத் தோன்ற - **தாதை எனப் பெற்றார்** என்றார்.

தம்மை அடிக்கட்படுத்த (அஃதாவது தாம் பிரம்பாலடிக்கும் அடிக்குட் படுத்த) பிரம்பெடுத்தோச்சினவரை, தம்முடைய தாதையாகிய இறைவனது

அடிக்கட்படுத்துமாறு திருக்கரத்தை ஓச்ச, அவர் ஓச்சிய அத்திருக்கரத்தின் வழியானே தமது இதயத்தின்கண் வாழும் சிவபதத்தைக் கண்டு தற்போத மிழந்து அருள்வசப்பட்டு இருகரமும் ஓச்சி ஆனந்தாதீதத்தை அடைந்தன ரென்னும் அவர்பெற்ற சிவானந்தத்தின் சிறப்புத் தோன்ற - **மாறுவிழுந்த மலர்க்கை துவித்து மகிழ்ந்தாடி** என்றார்.

இங்ஙனம் நீங்காச் சிவானந்தத்திற்கிடஞ் செய்த இவ்வருட்செயல், நீங்காப் பவத்துன்பத்துக் கிடஞ்செய்யவல்ல மருட்செயலாய் நம்முள்ளத்தில் தோன் றிற்றே என்று எண்ணி எக்குற்ற அவ்வச்சத்தின் மிகுதி தோன்ற - **வேறு விளைந்த வெருட்சி** என்றார்.

நம்மிடத்திற் றோன்றிய மருட்செயல் பேரருட்காட்சிக்கு இடஞ்செய்ததே இஃது என்ன அதிசயமென்று அவர் தற்போதமிழந்த திறந்தோன்ற-**வியப்பு** என்றார்.

நமது மருட்செயலில் அருட்செயலும், நமது தற்போதத்தில் சிவபோத மும் தோன்ற அருட்செயலையும் சிவபோதத்தையும் ஆளும் இவ்வாளுடைய பிள்ளையை நாம் ஆளத்தகும் பிள்ளையாகப் பெற்ற பெருந்தவத்தினாலன்றோ என்று எண்ணுங்காலத்து, அப்பிள்ளையார் பாடும் பாட்டு, குழலினும் யாழினும் இனித்துப் பேரின்ப வீட்டுக்கு வாயிலைக்காட்டும் வேதவுண்மைப் பொருளா யிருத்தலால் அப்பொருளின்மீது ஆசைப்பட்டு அப்பாட்டின் பொருட்குறிப்பைத் தமது மதிநுட்பத்தால் அன்புடன் ஆராயத்தொடங்கிய அவரது விருப்பந் தோன்ற - **கூறும் அருந்தமிழின் பொருளான குறிப்பு விருப்போடும் ஓர்வார்** என்றார்.

இதனால், சிவஞானபோத முண்ட பிள்ளையாரைப் பிள்ளையாகப் பெறுதல், ஈறிலாச் சிவபுண்ணிய முடையார்க்கே கூடும் என்னும் உண்மையும், கலை ஞானம் வந்த காலத்தும், சிவஞான அனுபவம் நிகழும் காலத்தும் விட்டொழி யாத தற்போத ஞானம் விதி வாக்கியங்களால் இது என்று ஆசிரியன் தனது கருணையினால் சுட்டிக் காட்டக் காணப்பெறுவார்க்கே கூடுமென்னும் உண்மை யும், தற்போத ஒழிவில் வெருட்சி வியப்பு விருப்பாக வரும் செயலெல்லாம் சிவச் செயலாகவே ஆகப் பெறுதலாகிய அதுவும் அவர்க்கே கூடுமென்னும் உண்மையும் கூறப்பட்டன.

இங்ஙனம் கூறிவந்த முறைப்படி கூடுதற்கரிய சிவபுண்ணியத்தையும், ஒழித் தற்கரிய தற்போத ஒழிவையும், அவ்வொழிவோடு தம் செயலில் சிவச்செயலை யும் சிவபாத இருதயர் வரப்பெற்றாராதலால், பிள்ளையார் கூறியருளும் அரிய தமிழ் வேதத்தின் உட்கிடைப் பொருள்களின் குறிப்பை ஆராயும் அறிவுடையா ராயினர் என்றுங் கூறப்பட்டது.

இதனால், ஆளுடைய பிள்ளையாரது திருநெறித்தமிழை ஓதியுணர்வோரது இலக்கணமுங் கூறியதுமாம். அஃதாவது, சிவபுண்ணிய விசேடத்தான் தற் போதமற்று அருள்வசப்பட்டு நிற்கும் நிலையினை யுடையராயிருத்த லென்க. (அ௯)

**தந்தையார் பிள்ளையார்பின்னே போதல்**

தாணு வினைத்தனி கண்டு தொடர்ந்தவர் தம்மைப்போல்
காணுதல் பெற்றில ரேனு நிகழ்ந்தன கண்டுள்ளார்

தோணி புரத்திறை *தன்னரு ளாத லறிந்தார்தம்
பேணு மனத்தொடு முன்புகு காதலர் பின்சென்றார். அகூ

(எ - து.) ஆளுடைய பிள்ளையார் ஓதியருளிய திருப்பதிகத்தின் உள்ளக் குறிப்பினை உணரும் உணர்விற் றலைப்பட்ட சிவபாத இருதயர், இடப வூர்தியின் மேல் பெரிய நாயகியாரோடு எழுந்தருளிவந்த தோணியப்பரைத் தனியே தீர்த்தக்கரையில் கண்டு தரிசித்து அவர்பின் சென்ற அவ்வாளுடைய பிள்ளையார் போல, தாம் தரிசனஞ் செய்யப் பெற்றிலராயினும், அங்குத் தோணியப்பர் நிகழ்த்திய அற்புதச் செயலைத் தரிசித்தவராயுள்ளார் ஆகலானும், அங்ஙனங் காணப்பெற்றது தம் முயற்சியளவானன்றித் தோணியப்பர் தம்மிடத்து வைத்த திருவருளாலேயேயாகலானும், தாணுவினைத் தனிகண்டு தொடர அறிந்தாராகிய ஆளுடைய பிள்ளையார் கோயிலுள் முன்செல்லுகின்றபடியால் அவர் போகும் வழியே போகும் விருப்பினையுடைய மனத்தோடு அவர் பின்னே விடாது செல்வாராயினர், என்பதாம்.

நீரில் மூழ்கிக் கிடத்தல் முதலிய நெறிகளானும் விரதாதிகளானும், வேத முதலிய நூலறிவுகளானும், கேட்டல் முதலிய ஞான நெறிகளானும், காணப்படுகின்ற தோணியப்பரை அவற்றில் ஒன்றேனுங்கொள்ளாது தமக்குள்ள முன்னுணர்வினாலே கண்டு அவரைவிடாது பின்தொடர்ந்தவரைப்போல், சிவபாத இருதயர் காணப் பெற்றிலர்; எனவே, தாம் பலநாளும் அத் தீர்த்தக் கரையிலே வந்து நின்றிருந்தும் அந்நீரில் மூழ்கியிருந்தும், பிரமாபுரமேவிய பெம்மானை அவர் அதுகாறுங் கண்டவரல்லர்; நீரில் மூழ்கிக் கரையேறிவந்து பாலுண்டிருக்கும் பிள்ளையாரைக் கண்டபோதாவது, "இப்பிள்ளைக்குப் பால் கொடுத்தவர் யார்?" என்று தாமே தேடிக் கண்டவருமல்லர்; அஃதாவது, நீரில்மூழ்கித் தியானிக்கின்றபோது தமதுள்ளத்தில் பிரமபுரத்திறைவனைக் கண்டிருத்தல் வேண்டும், அங்கும் ஒருநாளுங் கண்டாரில்லை; கரையேறிவந்த போதாவது தமக்குரிய அடையாளங்களோடு வரக்கண்டிருத்தல்வேண்டும், அங்குங் கண்டாரில்லை. பிள்ளையாரோ, தீர்த்தக்கரையில் வந்தது அன்றொரு நாள்தான். தோணியப்பரை அவருடைய அடையாளங்களோடு ஒருவர் காட்டக் காணாது தாமே கண்டதும் அந்நாளே; ஆகலான் **தாணுவினைத் தனிகண்டு தொடர்ந்தவர் தம்மைப் போல் காணுதல் பெற்றிலர்** என்றும், தமது அகத்தும் புறத்தும் காணப்பெறாத இவர், "உனக்குப் பால் கொடுத்தவர் யார்?" என்று கேட்டபோது, ஒரு காலைத் தூக்கி, ஒருகையை உயர்த்தி, ஒரு விரலைச்சுட்டி, அடையாளங்களைக்கூறி "விடையேறி இதோ வந்திருக்கின்றான்" என்றும் சொல்லி, "அவன் என்னுள்ளத்தை முன்னமே கவர்ந்த கள்வன்: அக்கள்வன் நீர் நாடோறும் வழிபடும் பிரமபுரத்துறை பெம்மான்தான்; அவன்தான் என்னிடம் அம்மையாய் வந்து பாலூட்டினவன்; அம்மையாய் வந்து ஊட்டினவன் அவன்தான் என்று நீர் சந்தேகமில்லாமல் அறியவே அம்மையப்பனாய் இரண்டுருவாகக் காணப்படுகின்றான்," என்று காட்டியபின்னர், அம்மையப்பனாய் வந்தவனையும் பாலூட்டிய அருட்டிறத்தையுங் காண்பவராயினாராகலான் - **காணுதல் பெற்றிலரேனும் நிகழ்ந்தன கண்டுள்ளார்** என்றும், இக்காட்சியை நாம் காணப்பெற்றதும், இக்காட்சியைக் காணும்படி காட்டிய பிள்ளையாரை நாம் பிள்ளையாகப் பெற்றதும், தோணியப்

* தன்னருளாதல் தணிந்தார்வம்—என்றும் பாடம்.

பன் திருவருள் காரணமேயன்றி நமது தவம் காரணமன்று என்று துணிந்தன ராகலான் - தோணி புரத்திறை தன்னருளாதல் துணிந்து என்றும், "அவனருள் என்பதை, இன்று இப்பிள்ளை நாம் செய்த தடைக்கு அஞ்சாது முன்வந்து, கரையின்கண் நின்று, நீரில் நம் உருவம் மறைந்து போக, தனது தந்தை உரு வத்தை எண்ணித் திருத்தோணிச் சிகரம்பார்த்து "அம்மேயப்பா" என்று அழுது அழைத்தபடியினுலன்றோ அறிந்து இவ்வானந்தத்துக்கு ஆளாயினேம்?" என்ப தையும், இவ்வானந்தத்தை விளைவித்த அப் பிள்ளையின் வழிப்பற்றிப் போவதே இன்பமா மென்பதையும் உளத்திற்கொண்டு பின்சென்றனராகலான் - பேணு மனத்தோடு முன்புகு காதலர் பின் சென்றார் என்றுங் கூறினார்.

இத் திருப்பாட்டான், தோணியப்பரைப் பிள்ளையார் தனிகண்டு தொடர்ந்த காட்சியின் சிறப்பும், அப்பிள்ளையார் காட்டக்கண்ட சிவபாத இரு தயரது சிறப்பும், அவர் "நாம் இதுகாறும் அகமருடணஜபஞ் செய்துவந்த தவத் தின் பயன் இன்று முற்றுப் பெற்றபடியான் இனி இப்பிள்ளையின்பின் போவதே இன்பமாம்" என்று மகிழ்ந்து பின்போன சிறப்பும் கூறியவாறும். பிள்ளையின் பின்போவோமாயின், அருளையும் அரியகாட்சியையும் காணப் பெறுவோ மென்று பின்தொடர்ந்து போயினர் என்பதாம். (அசு)

### யாவரும் ஆலயத்தை யடைதல்

அப்பொழு தங்கண் அணைந்தது கண்டவர் அல்லாதார்
முப்புரி நூன்மறை யோர்கள் உரோமமு கிழ்ப்பெய்தி
இப்படி யொப்பதொர் அற்புதம் எங்குள தென்றென்றே
துப்புறழ் வேணியர் கோயிலின் *வாயில் புறஞ்சூழ. (அஎ)

(எ - து.) பிரமதீர்த்தக் கரையில் ஆளுடைய பிள்ளையார் பொருட்டு அச் சமயத்தில் நிகழ்ந்ததாகிய தெய்வச் செயலைக் கண்டவர்களும், அச்செயலைக் கேட்டவர்களும், முப்புரிநூ லணிந்திருக்கும் வேதியர்களும் ஆகிய இவரெல்லாம் சரீரமுற்றும் மயிர்ப்புளகம் கொண்டவர்களாய், "இத்தன்மை யொத்ததாகிய ஆச்சரியம் எவ்விடத்தில் நடந்திருக்கின்றது!" என்று பவளம்போலும் சிவந்த சடைமுடியார் கோயிலின் புறத்தில் பன்முறையுஞ் சொல்லிச் சொல்லிச் சூழ்ந்து நிற்க, என்பதாம்.

துப்புறழ் வேணியர் கோயிலின் வாயில்புறம் இப்படி யொப்பதோர் அற்புதம் எங்குளது என்றென்றே சூழ என்று கொண்டு கூட்டிப் பொருள் கொள்க. (அஎ)

### பிள்ளையார் பெருமான் இருந்த திருக்கோலம் அருளல்

பொங்கொளி மால்விடை மீதுபு குந்தணி பொற்றோணி
தங்கியி ருந்தபெ ருந்திரு வாழ்வுத லைப்பட்டே
இங்கெனை யாளுடை யான்உமை யோடும்இ ருந்தான்என்
றங்கெதிர் நின்றுபு கன்றனர் ஞானத் தமுதுண்டார். அஅ

(எ - து.) அழகிய தோணியின்கண் முன்னமே யிருந்த பெருந்திருவாழ் வாகிய தோணியப்பனும், இப்பொழுது என்னை ஆளுடையவனும் ஆகிய என்

*வாய்தல் - என்றும் பாடம்.

னப்பன் புகழாகிய ஒளிமிக்க திருமால் என்னும் விடையின்மேல் ஆரோகணித்துப் பெரியநாயகியோடும் என்முன்னே முற்பட்டு வந்து இங்கிருந்தானென்று, ஞானப்பாலுண்ட பிள்ளையார், அத்தோணியப்பர் முன்னே நின்று அங்குள்ளார் யாவரும் கேட்கும்படி திருவாய் மலர்ந்தருளினர் என்பதாம்.

பொங்கொளிமால் விடைமீது புகுந்து அணிபொற்றோணி தங்கியிருந்த பெருந்திருவாழ்வும் இங்கெனையாளுடையானும் உமையோடும் தலைப்பட்டு இருந் தான் என்று ஞானத்தமுதுண்டார் அங்கெதிர் நின்று புகன்றனர் என்று கொண்டு கூட்டிப் பொருள் கொள்க.

மேல் அஎ-ம் திருப்பாட்டானும் இத்திருப்பாட்டானும், சீகாழிப்பதியிலுள் ளார் யாவரும், "தோணியப்பர் பால்கொடுத்த அதிசயமும், அதனைப் பிள்ளையா ருண்டருளிய அதிசயமும் கண்டு, சிவபாத இருதயருக்கு முருகனே பிள்ளையாக வந்தன ரென்பதை உபசாரமாக எண்ணியிருந்தோம்; அதனை இங்கு உண்மை யாகக் கண்டோம்; இப்படி ஒப்பதோர் அற்புதம் எங்குளது!'' என்றென்று அக் கோயிலைவிட்டுப் போவதற்கு மனமில்லாதவராய் அப்பிள்ளையாரையே சூழ்ந்து பார்த்திருந்தனர் என்றும், ஆளுடைய பிள்ளையாரும் அவர்கள் எண்ணிய எண் ணத்தை யுணர்ந்து, "தோணியில் தங்கியிருந்த பெருந்திருவாழ்வு, இங்கு எனையாள உமையாளோடு தலைப்பட்டிருந்தான்'' என்று அவர்களுக்கெல்லாம் தம் உண்மையை எடுத்துக்கூறி யருளினரென்றுங் கூறியவாறும்.

பாலைக்கொடுக்க ஏவிய இறைவனும், பாலை உண்பிக்கவந்த பிராட்டியும், பாலையுண்ட பிள்ளையும் ஞானசம்பந்தம் உடையவரே யாகலான்-ஞானத்தமுதுண் டார் என்றார். (அஅ)

### பிள்ளையார் கோயிலைவிட்டுப் புறப்படல்

இன்னிசை யேழும்இ சைந்தசெ ழுந்தமிழ் *ஈசற்கே
சொன்முறை பாடுதொ ழும்பருள் பெற்றதொ டக்கோடும்
பன்மறை வேதியர் காணவி ருப்பொடு பால்நாறும்
பொன்மணி வாயினர் கோயிலில் நின்றுபு றப்பட்டார். அகூ

(எ - து.) பிள்ளையார் தம்முடைய தந்தையாகிய தோணியப்பர் அங்கு எழுந்தருளியிருந்த பெருமையை, யாவருங் கேட்கச் சொல்லி யருளிய பின், தந்தையாகிய சிவபெருமானுக்கே உரிய ஐஸ்வரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்று சொல்லப்படும் ஆறு முறைகளும், இம்முறை களைச் சிறிதேனும் உணரப்பெறாத சமண சாக்கியராதிகளுடைய இழிவுரைக ளாகிய இஃதொன்றும் ஆகிய இவ்வேழினையும், இனிய ஏழிசைகளும் இனிமை யாகப் பொருந்தியிருக்கின்ற இனிய தமிழ்ப் பதிகத்தில் முறையாக வைத்துப் பாடும் தொண்டாகிய திருவருளைப் பெற்ற அவ்வருள் தொடக்கோடும், ருக்வேதிகள், யஜுர்வேதிகள், சாமவேதிகள் என வழங்கப்படும் எண் ணிறந்த வேதியர்களும் காணும்படி, ஞானப்பால் மணக்கும் அழகிய சிவந்த மாணிக்கம் போன்ற திருவாயினை யுடையவராய்த் திருக்கோயிலினின்றும் மிக்க விருப்பத்தோடு புறப்பட்டனர், என்பதாம்.

---

*ஈசர்க்கே - என்றும் பாடம்.

ஞானமுண்ட பிள்ளையார் பாடத் தொடங்கிய தமிழ்ப் பதிகங்கள் வேதப் பொருளாகலின், இத்தமிழ் வேதமும் வடமொழி வேதம்போல் ஏழிசைகளை யுடைத்தென்றும், இசையை ஏழாகவுடைத்தா யிருப்பதுபோல், அப்பதிகங் களிற் கூறப்படும் பொருள்களும் ஏழுவகையாயுள்ளன என்றும், இங்ஙனமான சிறப்புடைய தமிழ் வேதமே எங்கும் பரவப் பாடியருளும் அருளையே மேற் கொண்டு சீகாழித் தலத்தைவிட்டுப் புறப்பட்டன ரென்றும் இத்திருப்பாட்டால் கூறியவாறும்.

புறச்சமயிகளுடைய பால் (கொள்கைகள்) நாறும்படி செய்யும் வன்மை யினையுடையது பிள்ளையாருண்ட ஞானப்பால் ஆகலின் - **பால் நாறும்** என்றும், அந்த ஞானப்பாலுக்குப் பாத்திரமாயிருந்தது பிள்ளையாரது திருவாக்காகலின் - **பொன்மணிவாயினர்** என்றும், எனவே, அந்த ஞானசம்பந்தமாகிய அவ்வாக்கில் நின்று வெளிவருந் திருப்பதிகங்கள் செம்பிற் காளிதம்போல் வியாத்தமாயிருக் கும் ஆன்மாக்களிடத்திருக்கும் மலத்தைப் போக்கிப் பொன்னைப்போல் பிர காசிக்கச் செய்தலின் - **பொன்** என்றும், அதன்பின் ஆன்மாக்களுடைய அறிவு களை நின்மலமாகிய மணியைப்போல் பிரகாசிக்கச்செய்தலின் - **மணி** என்றும், வட மொழி வேதத்தில் காணப்படும் ஏழிசைகளும் அப்பதிகங்களாகிய தமிழ் வேதத்தில் பொருந்த அவ்வேழிசைகளோடு ஏழு பொருள்களும் வேதியர்கள் காணும்படி ஓதுதலின் - **பன்மறை வேதியர் காண** என்றும், அவ்வேழு பொருள்களுள் சீவன்முத்தர்களுக்கு விதித்திருக்கும் ஞான யோகக் கிரியா சரியைகளாகிய நால்வகைத் தொண்டின் தொடர்பினை எடுத்துக்காட்டி விளக்குதலின் - **தோழம்பு அருள்பெற்ற தோடக்கோடும்** என்றும், வடமொழி வேதத்தில் திருமால் முதலிய யாவரையும் தியானஞ் செய்யும் ஆன்மாக்க ளென்று கழித்து ஈசனொருவனையே தியேயப் பொருளாகச் சொல்லும் அம் முறைப்படியே பதிகங்கள்தோறும் எடுத்துச் சொல்லுதலின் - **செழுந்தமிழ் ஈசற்கே** என்றும் கூறியவாறும். (அகூ)

### சீகாழியில் வாழ்வாரெலாம் எதிர்கொண்டு போற்றல்

பேணிய அற்புத நீடருள் பெற்றபி ரான்முன்னே
நீணிலை யிற்றிகழ் கோபுர வாயிலின் நேர்எய்தி
வாணில விற்றிகழ் வேணியர் தொண்டர்கள் வாழ்வெய்தும்
தோணிபு ரத்தவர் தாம்எதிர் கொண்டு துதிக்கின்றார். கூ0

(எ - து.) தோணியப்பராகிய தம் தந்தையாரிடத்துத் தாம் விரும்பிய படியே அற்புத மிக்க திருவருளாகிய ஞானப்பாலை உண்டருளப் பெற்றவராகிய ஆளுடைய பிள்ளையார், பலநிலைகளோடு நீண்டு மேலோங்கி விளங்கும் கோபுர வாயிலின் முன்னே நின்றருள, அங்கு ஒளியுடைய இளம்பிறையினால் விளங் கும் சடைமுடியினை யுடையாருடைய அடியார்களும் அழியாத வாழ்வினைப் பெற்றிருக்கும் அத் திருத்தோணிபுரத்தில் வீற்றிருக்கும் யாவரும் நேராக வந்து எதிர்கொண்டு போற்றத் தொடங்கினர், என்பதாம்.

மல சம்பந்தமாகிய மானுடப் பிள்ளையைப்போல் திருவுருவத்தைக் காட்டி, அன்று அருள்ஞான சம்பந்தமுடைய திருமேனியில் கொண்டருளும் அருள்

ஞானப்பாலை யுண்டு அப்பாலையூட்டிய அம்மையப்பரோடு தமது அருள்ஞான சொரூபத்தைக் காட்டினாராகலான் - பேணிய அற்புத நீடருள் பெற்றபிரான். என்றார். (கூ0)

வேறு

**போற்றுஞ் சீறப்பு**

காழியர் தவமே கவுணியர் தனமே கலைஞானத்
தாழிய கடலே அதனிடை அமுதே அடியார்முன்
வாழிய வந்திம் மண்மிசை வானோர் தனிநாதன்
ஏழிசை மொழியாள் தன்திரு அருள்பெற் றனைஎன்பார். கூக

(எ - து.) திருத்தோணிபுரத்தில் வாழ்கின்ற அடியார் முதலிய யாவரும் ஆளுடைய பிள்ளையாரது பொருள் சேர்ந்த புகழையே புகழ்ந்து போற்றத் தொடங்கி, முதலில் தாங்கள் சீகாழியில் வாழப்பெற்ற தவத்தையே எண்ணி, "இச்சீகாழியில் நீ வந்து அவதாரஞ் செய்தது யாங்களெல்லாம் செய்த பெருந் தவத்தின் பயனன்றோ? எங்கள் தவரூபமாய்க் காணப்படும் நீ, வேள்வியைப் பெருக்கி, அதன் வழியாய் நீரைப்பெருக்கி உலகினருக்கெல்லாம் பெருஞ் செல்வத்தை யளிக்கும் கவுணியர் கோத்திரத்தாராகிய அந்தணர்பால் வந்த பெருஞ் செல்வமே! சத்திநிபாதர்கள் ஆராய்ந்துணர வேண்டிய கலைஞானப் பெருக்கினை யுடைய ஞானசமுத்திரமே! அச்சமுத்திரத்தினிடத்திலே தோன்றிய சிவானந்த ரூபமாகிய ஆனந்த அமுதமே! புறச்சமயங்களால் ஒளிமாழ்கி வாட்டமுற்றுப் பிற்பட்டிருக்கும் அடியார்களெல்லாம் முற்பட்டு வந்து திருநீற்றொளி பெற்று வாழ, இந்நிலவுலகில் ஆளுடைய பிள்ளையாய் வந்து தேவர்களுக்கெல்லாம் பெரிய நாதனாகிய சீகாழிநாதன் தனது ஞானத்தை, ஏழிசைபோல் இனிக்கும் இனிய மொழியை யுடையாளாகிய பெரிய நாயகியினது முலைப்பாலாகிய அருட்பாலிற் குழைத்துக்கொடுக்க, அந்த அருள் ஞானப்பாலை உலகமெல்லாம் வழங்க உனது திருவாக்காகிய பொற்கிண்ணத்தில் வைத்திருக்கப் பெற்றனை" என்று போற்றினர், என்பதாம்.

இத்திருப்பாட்டான், காழியர் தவமென்றும், தனமென்றும், கலைஞானக் கடலென்றும், அதனிடை அமுதென்றும் இவ்வண்ணம் நான்கு வகையாகப் போற்றும் அடியார்களுக்கு முறையே உள்நின்று உணர்த்திவரும் பரம்பொருள், இறப்பில் தவமாகிய சரியையாதி தவங்கள் முற்றுப் பெற்றவழி அப்பரம் பொருளுக்கு அந்நியமாயிருக்கும் அவ்வடியார்கள் அப்பரம்பொருளோடு அநந்நியமாய்க் கலந்திருக்குந் தன்மையை உணர்த்துவதாகிய கேட்டல் என்னும் ஞானத்தையும், அந்த ஞானத்தால் பாசத்தை யொருவி அப்பதிஞானத்தைப் பெற்று நேயத்தைக்கண்ட காட்சி சலியாமைப் பொருட்டு அப்பொருள் பயக்கும் திருவஞ்செழுத்தினை விதிப்படி யறிந்து கணித்தலாகிய சிந்தித்தல் என்னும் ஞானத்தையும், இங்ஙனமான சிந்தனை என்னும் ஞானத்தால் சுட்டுணர்வினாலாகிய ஏகதேச நோக்கத்தை யொழித்துப் பாசவிடுதியைச் செய்துகொள்ளுமாறு மேற் சிந்தனைசெய்த பொருளாகிய அம்முதல்வனோடு ஒற்றுமைப்பட்டு வேறு காணப்படுமாறின்றி நிற்றலாகிய தெளிதல் என்னும் ஞானத்தையும், அத் தெளிதல் என்னும் ஞானத்தால் அறிவு இச்சை செயல் என்னும் இம்மூன்றும்

அயரா அன்பினை மேற்கொண்டு அரன்கழலில் செல்லும் சிவப்பேற்றினைக் கூட்டுதலாகிய நிட்டை என்னும் ஞானத்தையும், அனுக்கிரகஞ் செய்தற்கு - **வானோர் தனிநாதன், ஏழிசை மொழியாள் தன்திருவருள் பெற்று** வந்தன னென்று கூறப்பட்டது.

எனவே, ஆளுடைய பிள்ளையாரைத் **தவமே** என்று போற்றுவார்க்கு மேலே சொல்லிய ஞானம் நான்கனுள் கேட்டல் என்னும் ஞானமும், **தனமே** என்று போற்றுவார்க்குச் சிந்தித்தல் என்ற ஞானமும்; **கலைஞானத்து ஆழிய கடலே** என்று போற்றுவார்க்குத் தெளிதலாகிய ஞானசாகரமும், **அதனிடை யமுதே** என்று போற்றுவார்க்கு நிட்டையாகிய ஞானமிர்தமும் உண்டாம் என்றதாம். இந்நால்வகை ஞானமும் ஒன்றற்கு ஒன்று ஏதுவும், பயனுமாய் நிற்பதாமென்க. இவ்வுண்மையைச் **சிவஞான போதம்** அ-ஆம் சூத்திரம் முதற்காண்க.

அங்கு உமாதேவியார் பெரிய நாயகி என்னும் திருநாமம் உடையராகலின் அவரையுடைய இறைவனும் பெரிய நாயகன் என்பார் - **வானோர்தனி நாதன்** என்றார்.

தவத்தான் வருவது தனம், தனத்தின் மேம்பட்டது கலைஞானம், அதனினும் மேம்பட்டது சிவானந்தம் என்னும் இம்முறை நோக்கியும், **தவமே, தனமே, கலைஞானத்து ஆழியகடலே, அமுதே** என ஒன்றின்மேல் ஒன்றாக வியந்து கூறியவாறுமாம். (கக)

மறைவளர் திருவே வைதிக நிலையே வளர்ஞானப்
பொறையணி முகிலே புகலியர் புகலே பொருபொன்னித்
துறைபெறு மணியே சுருதியின் ஒளியே வெளியேவந்
திறையவன் உமையாள் உடனருள் தரஎய் தினையென்பார். கஉ

(எ - து.) "இறைவன் திருவாக்காகிய வேதங்கள் வளர்தற்குரிய பெருஞ் செல்வமே! அவ்வேதங்களிற் கூறப்படும் வைதிக நெறி நிலைத்திருக்கும் நிலைக்களமே! பதிஞானமாகிய பாலை வாய்நிரம்பக் கொண்டு இனிய தமிழாகப் பொழிகின்ற அழகிய மேகமே! வேதங்களை மறவாது புகலு (ஓது)கின்ற கவுணிய கோத்திரத்தைப் புகலிடமாகக்கொண்டு வந்த எங்கள் புகலிடமே! வெப்பத்தை வெற்றிகொள்ளவல்ல காவிரிநதி, துறைவழியாகப் பெற்றெடுத்த முத்தமே! வேள்வியின் அந்தங்களில் **சுப்பிரமண்யோம்** என்று ஒலமிட்டுச் சொல்லும் ஒளிவடிவமே! தோணியப்பனாகிய இறைவன் பெரிய நாயகியாரோடு யாங்கள் எல்லாம் காணும்படியாக இவ்வெளியிடத்திலே வந்து சிவஞானப்பாலைத் தர நீ இச்சீகாழியின் கண்ணே எழுந்தருளினை " என்று போற்றினர் என்பதாம்.

தொட்டனைத்து ஊறும் மணற்கேணிபோல், மலநீங்கப் பெற்ற அறிவுடையார் வேதத்தில் கூறப்படும் பொருளைத் தமது அறிவால் நோக்குந்தோறும் அவ்வேதம் முன் அறியவந்த பொருளேயன்றிப் புதிது புதிதாய்த் தோன்றும் இயல்பினையுடையதாகலின் - **மறைவளர்** என்றும், அவ்வேதப்பொருளை அந்தணரேயன்றித் தமிழ்மொழிக் குரியாரெல்லாம் விரும்பி ஓதி அதிசயித்து உணர்வது கருதித் தமிழ்மொழியான் வளருமாறு ஓதினமையான் - **திருவே** என்றும்,

ஆன்மாக்களுடைய சித்தத்தின்கண் நிகழும் புண்ணியங்கள் வளரவும், பாவங்கள் தேயவுமான முறைகளை நெறிப்பட விதித்திருக்கும் வைதிக தருமங்களில் பற்றுண்டாய் நிலைபெற்று வாழ, தாம் ஓதியருளும் தமிழ்வேதத்தில் வலியுறுத்து தலின் - வைதிக நிலையே என்றும், அழுதது சிவபாத இருதயருக்கன்று அம்மை யப்பரைக்காண எனவும், உண்டபால் பாசப்பாலன்று, ஞானப்பால் எனவும் அந்த ஞானப்பாலுண்டதும் தன்பொருட்டன்று, வேதநெறி தழைத்தோங்கி வளரவும், மிகுசைவத்துறை விளங்கி வளரவும், பூதபரம்பரை பொலிந்து வளர வுமே எனவும், இம்மூன்றும் வளர உண்ட அந்த ஞானப்பாலை, மேகமானது கடல் நீரையுண்டு, நிறையக் கருக்கொண்டு சிறிதளவும் தன்னுள் வைத்திராது நீர் முழுவதையும் உலகில் வாழும் உயிர்களுக்கே பொழிவதுபோல், இனிய தமிழாக இத்தென்புவி முழுவதும் பொழிந்தனராகலின் - வளர்ஞானப்பொறை யணி முகிலே என்றும், பஞ்ச கிருத்திய மூர்த்தியாய் எழுந்தருளியிருக்கும் நட ராசனது பொன்னம்பலத்துக்கடுத்த சீகாழிப்பதியில் தாமும் அனுக்கிரகஞ் செய்ய குருமூர்த்தியாய் வேதங்களைப் புகலும் அந்தணர் குலத்திற் புகுந்தன ராகலின் - புகலியர் புகலே என்றும், கருப்பவாசஞ் செய்யாது (பகவதியாராகிய) காதலியார் மணிவயிற்றில் உருத்தெரிய உளதாகக் காட்டி, தவம் பெருக்கும் சண்பையிலே அவதாரஞ் செய்தனரென்று உ0-வது திருப்பாட்டில் கூறியிருக் கின்றனராகலின் - பொன்னித்துறை பெறுமணியே என்றும், வேதங்கள் சதாசி வோம் என்று சிவபிரானைத் துதிப்பதுபோல் சுப்பிரமண்யோம் என்று யாவரும் அறியப்போற்றும் அவ்வொளியே பிள்ளைமை உருக்கொண்டு வந்திருத்தலின் - சுருதியின் ஒளியே என்றும், தான் சிவன்மகன் என்று யாவரும் பிரத்தியக்ஷ மாய் அறிய இறைவன் தேவியோடு வந்து பால் கொடுக்குஞ்செயலைச் செய்வித் தனராகலின்-இறையவன் உமையாளுடன் அருள்தர எய்தினை என்றுங் கூறினர்.

இத்திருப்பாட்டான், ஆளுடைய பிள்ளையார் வள்ளிக்கொடி படர்ந்து, தெய்வ அம்மை மணங்கமழும் சுப்பிரமண்ய மூர்த்தியே என்று அனுபவமுகத் தால் விளக்கியவாறும். (கஉ)

புண்ணிய முதலே புனைமணி அரைஞா ணொடுபோதும்
கண்ணிறை கதிரே கலைவளர் மதியே கவின்மேவும்
பண்ணியல் கதியே பருவம தொருமூ வருடத்தே
எண்ணிய பொருளாய் நின்றவர் அருள்பெற் றனைஎன்பார். கங

(எ - து.) "மேதினிமேல் சமண்கையர் சாக்கியர்தம் பொய் மிகுத்தே, ஆதி அருமறை வழக்கம் அருகி, அரன் அடியார்பால் வளரவேண்டிய பூதிசாதனங் கள் வளர்ந்து ஓங்குவதற்கு ஒரு முதலாய் வந்த புண்ணிய முதலே! மணிகளால் இழைக்கப்பட்ட அரைஞாணை அணிந்திருக்கும் கோலத்தோடும் கண்ணுக்கு நிறைந்த காட்சியாய் வந்த இளஞ்சூரியனே! வளருங் கலையினையுடைய சந்திரனே, இசைகளிற் சிறந்த பண்ணின் வரிசைகளுக்குக் கதியாயிருக்கின்றவனே! ஒரு மூன்றெனப்படும் ஆண்டில், நீ எண்ணிய அம்மையப்பராய் வந்துநின்றவராகிய அவ்விறைவரிடத்து இனிய தமிழாகிய அருண்மொழியைப் பெற்றனை" என்று போற்றினர் என்பதாம்.

இத்திருப்பாட்டான், ஆளுடையபிள்ளையாரைச் சிவபுண்ணியங்களுக்கு அழியாத ஒரு முதல் என்றும், முதிராத இளம்பருவத்தோடு என்றும் இருந்து இருகதிராய் விளங்கும் இறைவனுடைய கண்களை நிறைவிப்பதுபோல் எங்கள் கண்களையும் நிறைவிக்க வந்த இளஞ்சூரியனே சந்திரனே என்றும், பண்களின் இலக்கணம் அமைந்துள்ள திருப்பாடல்களை ஆன்மாக்களுக்குப் பரகதியைத் தருதற்கு வைத்திருக்கும் திருவாக்கினையுடையவரென்றும், யாங்களெல்லாம் மும்மலங்களும் நீங்கி எண்ணியிருக்கும் பரம்பொருளை யடைதற்கு, நீ மூவாண்டில் அப்பரம்பொருளையே யாங்களெல்லாம் காண இங்கு அழைத்து, அவனைக் காணச் செய்ததுபோல அவனது அருளையும் பாலுருவாய்க்காணும் அருளையும் பெற்றனை யென்றுங் கூறியவாறும். (கூ௩)

வேறு

### தந்தையார் தோளின்மேல் பவனி போதல்

என்றினைய பலகூறி இருக்குமொழி அந்தணரும் ஏனை யோரும், நின்றுதுதி செய்தவர்தாள் நீண்முடிக்கண் மேலேந்தி நிரந்த போது, சென்றணைந்த தாதையார் சிவபாத இருதயர்தாம் தெய்வ ஞானக், கன்றினைமுன் புக்கெடுத்துப் பியலின்மேல் கொண்டுகளி கூர்ந்து செல்ல. கூச

(எ - து.) "காழியர் தவமே" என்றற் றொடக்கத்தனவாகிய பல தோத்திரங்களை வேதத்தை ஓதும் அந்தணரும் ஏனைய அடியார்கள் முதலாகச் சொல்லப்பட்ட பலரும் கோபுரவாயிலின்கண் நின்று சொல்லித் துதித்து, பின், பிள்ளையாருடைய அரிய திருவடிகளைத் தங்களுடைய பெரிய தலைகளின்மேல் வைத்துக்கொண்டு சூழ்ந்து நின்றனர்; அங்ஙனம் நின்றபோது, முன் அப்பிள்ளையாரைப் பின்தொடர்ந்துவந்த தாதையாராகிய சிவபாத இருதயர், தெய்வ ஞான சொரூபமாய் விளங்கும் அந்த இளங்கன்றினை முன்னே சென்று இரு கரங்களாலும் எடுத்துத் தமது தோளின்மேலேற்றி வைத்துத் தாங்கிக்கொண்டு கோபுர வாயிலைவிட்டுச் செல்ல, என்பதாம். (கூச)

மாமறையோர் குழாத்தினுடன் மல்குதிருத் தொண்டர்குழாம் மருங்கு சூழ்ந்து, தாம்அறுவை உத்தரியந் தனிவிசும்பில் எறிந்தார்க்கும் தன்மை யாலே, பூமருகு சிவானந்தப் பெருக்காறு போதவதன் மீது பொங்கும், காமர்நுரைக் குமிழியெழுந் திழிவனபோல் விளங்கு பெருங்* காட்சித் தாகும். கூரு

(எ - து.) சிறந்த வேதியர்களாகிய அந்தணர் கூட்டங்களுடன், நிறைந்திருக்கும் திருத்தொண்டர் திருக்கூட்டங்களும் இரண்டு பக்கங்களினும் நெருங்கிச் சூழ்ந்து, தாங்கள் உடுத்திருக்கும் உடையின்மேற் சுற்றிய ஆடையினையும், தோளில் அணிந்திருக்கும் உத்தரீயங்களையும் பரந்திருக்கும் ஆகாயத்தின்கண் பரப்பி வீசி ஆரவாரஞ் செய்வார்கள். அங்ஙனம் செய்யும் அத்தன்மையால் தோன்றும் தோற்றமானது எவ்வாறிருக்கின்றதெனின், இலக்குமி வாசமாகிய

* காட்சித்தாக—என்றும் பாடம்.

சீகாழி வீதியானது, சிவானந்தம் என்னும் ஆறு பெருக்கெடுத்துச் செல்ல, அப் பெருக்கின்மேல் பொங்கித் தோன்றும் ஆசை என்னும் நுரைகளோடு அவ் வாசையிற் றடிக்கும் குமிழிகளும் தோன்றிவருவதுபோல் விளங்குகின்ற பெரிய காட்சியினை உடைத்தாயிருக்கும், என்பதாம்.

இதனுல், சீகாழி வீதியில் சிவபாத இருதயருடைய தோளின்மேல் சிவ ஞானப்பாலுண்ட ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளிப் போகும்போது, இரு பக்கங்களினும் அந்தணர்களுடைய கூட்டங்களும், ஏனைய அடியார்களும் நெருங் கிச் செல்லும் தோற்றம் சிவானந்தம் என்னும் ஆறு பெருக்கெடுத்துப் போவது போலும், அவர்கள் மேலே எறியும் உத்தரீயமானது பிள்ளையார் கோலத்தைப் பார்க்குந் தோறும் அவர்களிடத்தில் மேலிட்டெழும் அவாவானது அப்பெருக்கில் நுரையைப்போல் போவதுபோலும், அவ்வாசையிற்றடிக்கும் அன்பின் றடிப் பானது நீர்க்குமிழியைப்போலுங் காணப்பட்டதென அலங்கரித்துக் கூறிய வாறும். ஆகாயம் ஒன்றினுலும் தடைபடும் தன்மையுடைத்தன்றுகலான் - தனி விசும்பென்றார். (கடு)

நீடுதிருக் கழுமலத்து நிலத்தேவர் மாளிகைமேல் நெருங்கி அங் கண், மாடுநிறை மடவார்கள் மங்கலமாம் மொழிகளால் வாழ்த்தி வாசத், தோடுமலி நறுமலரும் சுண்ணமும்வெண் பொரியினெடும் தூவிநிற்பார், கோடுபயில் குலவரைமேன் மின்குலங்கள் புடைபெயரும் கொள்கைத் தாக. கூசு

(எ - து.) மேன்மேற்பெருகும் செல்வத்தினையுடைய கழுமலமென்னும் திருநாமம் பெற்ற சீகாழிப் பதியிலுள்ள, மண்ணுலகின்கண் வாழும் பூசுரர்களு டைய ஒன்றின்மேல் ஒன்றாக நெருங்கியிருக்கும் அத்திருமாளிகைகளின் பக்கங் களில் நிறைந்திருக்கும் பார்ப்பன மகளிர், மங்கலங்கூறும் மங்கலப்பாடல்களால் வாழ்த்தி, வெண்பொரிகளோடு நறுமணங்கமழும் இதழ்நெருங்கிய மலர்களையும் பொற்சுண்ணப்பொடிகளையும் எடுத்துக்கொண்டு கொடுமுடிகளையுடைய சிறந்த குலபர்வதங்கள்மேல் மின்னற்கூட்டங்கள் புடைபெயர்ந்து நடப்பதுபோல் அங் கங்கும் சென்று தூவிநிற்பார்கள், என்பதாம்.

வெண்பொரியினெடு வாசத்தோடுமலி நறுமலரும் சுண்ணமும் (எடுத்துக் கொண்டு) கோடு பயில் குலவரைமேல் மின்குலங்கள் புடைபெயரும் கொள்கைத் தாக தூவி நிற்பார் எனக்கூட்டிப் பொருள் கொள்க.

அப்பதியில் வாழும் அந்தணர்களுடைய வைதிக ஒழுக்கத்தின் சிறப்புத் தோன்ற - நிலத்தேவர் என்றார்.

இதனுல், பார்ப்பன மகளிர் செய்யும் மங்கலச்செயல்களும் அவர்கள் உரு வத்தின் சிறப்பும், அவர்கள் வாழும் திருமாளிகைகளின் சிறப்புங்கூறியவாறும்.

மங்கலதூ ரியம்துவைப்பார் மறைச்சாமம் பாடுவார் மருங்கு வேதிப், பொங்குமணி விளக்கெடுத்துப் பூரணகும் பமுநிரைப்பார் போற்றி செய்வார், அங்கவர்கள் மனத்தெழுந்த அதிசயமும் பெரு விருப்பும் அன்பும் பொங்கத், தங்குதிரு மலிவீதிச் சண்பைநகர் வலஞ்செய்து சாரும் காலே. கூஎ

(எ - து.) போதலை யறியாமல் எக்காலத்துந் தங்கியிருக்கும் செல்வம் நிறைந்துள்ள வீதியையுடைய, சண்பை என்னும் திருநாமமுடைய, சீகாழி நகரத்தை ஆளுடைய பிள்ளையார் பிரதக்ஷிணம் செய்துவரும்பொழுது, அச் சீகாழியில் இருக்கின்றவர்கள் தங்கள் மனத்தின்கண் தோன்றிய அதிசயமும் ஆசையும் அன்பும் மேன்மேல் உண்டாக, மங்கல வாத்தியங்களை முழங்கு வார்கள், சாமவேதத்தைப் பாடுவார்கள், திண்ணைப் பக்கங்களில் சுடர்விட் டெறிக்கும் இரத்தினதீபங்களை வைத்துப் பூரணகும்பங்களை வரிசையாக வைப் பார்கள்; போற்றுவாரெல்லாம் போற்றுவார்கள், என்பதாம்.

தங்கு திருமலிவீதிச் சண்பைநகர் வலஞ்செய்து சாருங்காலை அங்கவர்கள் மனத்தெழுந்த அதிசயமும் பெருவிருப்பும் அன்பும் பொங்க மங்கலதூரிய முழங்க எனக்கூட்டிப் பொருள் கொள்க.

சண்பை நகரத்தில் சிவதருமங்கள் என்றுந் தங்கியிருத்தலால் உண்டாகும் செல்வப் பெருக்கமும் என்றுங் குன்றாது ஒருநிலையாயிருக்கும் சிறப்பினை யுடைத்து என்பார் - **தங்குதிருமலி சண்பைநகர்** என்றும், சாமவேதத்தின் ஒலி வாத்திய வோசைகளோடு ஒத்தொலிக்கும் சிறப்பினை உடைத்து என்பார் - **மங்கலதூரியந் துவைப்பார் மறைச்சாமம் பாடுவார்** என்றும், பெரிய நாயகி யார் திருமுலைப்பாலை உண்ணும் பிள்ளையாகிய சண்முகப்பெருமான் நம்முடைய நகரமாகிய இச்சீகாழியில் ஆளுடையாராய் வரப்பெற்றோமே என்று எண்ணு வதனால்-**அதிசயமும்**, ஆளுடைய பிள்ளையாய் வந்ததேயல்லாமல், அமுது பாலுண் ணும் செயலையும் நாமெல்லாம் கண்டுகளிக்க இத்தீர்த்தக்கரையில் செய்த அருட்செயல் என்னே என்று எண்ணுவதனால் - **பெருவிருப்பும்**, தாம் உண் டருளிய பாலை, நாமெல்லாமும் உண்டுகளிக்க, பாலைத் திருவாக்கினின்றும் ஒழுகவிட்டு அவ்வழியாய் அப்பாலின் ஞானமணத்தை ஊட்டுகின்ற கருணை என்னே என்று எண்ணுவதனால் - அன்பும் முறையாய் உண்டாயிற்றென்பார் - **அவர்கள் மனத்தெழுந்த அதிசயமும், பெருவிருப்பும், அன்பும் பொங்க** என்றுங் கூறினர்.

அதிசயம் மனத்தின்கண்ணும், போற்றுவதனால் உண்டாகும் பெரு விருப்பு வாக்கின்கண்ணும், அன்பு உடம்பின்கண்ணும் நிகழ்ந்தனவென்று கொள்ளலுமாம். (கஎ)

### திருமாளிகைக்கு எழுந்தருளல்

* தந்திருமா ளிகையின்கண் எழுந்தருளிப் புகும்பொழுது சங்க நாதம், அந்தரதுந் துபிமுதலா அளவில்பெரு கொலிதழைப்ப அணைந் துபுக்கார், சுந்தரப்பொன் தோணிமிசை இருந்தபிரான் †உடனணைந்த துணைவியாகும், பைந்தொடியாள் திருமுலையின் பாலறு மதுரமொழிப் பவள வாயார். கஅ

(எ - து.) பொன்மயமாய்ப் பிரகாசிக்கும் அழகிய தோணியின்மீது எழுந் தருளியிருந்த பெருமானுடன் பிரியாதிருந்த பிராட்டியாகும் பெரிய நாயகி யாரது திருமுலைப்பால் மணக்கும் மதுரமொழியோடுகூடிய பவளம் போன்ற

* தங்கு திருமாளிகை - என்றும் பாடம். † உடனமர்ந்த - என்றும் பாடம்.

திருவாக்கினையுடைய ஆளுடைய பிள்ளையார் தமது திருமாளிகையின்கண் சென்று உள்ளே எழுந்தருளும்போது சங்கநாதங்களும், தேவருலகில் துந்துபி முதலிய அளவில்லாத பேரொலிகளும் முழங்கச் சென்றருளினர், என்பதாம்.

சுந்தரப்பொற் றோணிமிசை இருந்தபிரான் உடன்அணைந்த தேவியாகும், பைந்தொடியாள் திருமுலையின் பாலரு மதுரமொழிப் பவளவாயார், தந்திரு மாளிகையின்கண் எழுந்தருளிப் புகும்பொழுது எனக்கூட்டிப் பொருள் கொள்க.

பவளவாயார் உண்டருளிய பால் பாசபரம்பரை பொலிய பசிப்பிணியார் உண்ணும் பாலன்று, ஞானபரம்பரை பொலிய அருள் தாகங்கொண்டு உண்டருளிய ஞானமொழி நீங்காத பால்ஆகலான் - **மதுரமொழி அறப்பால்** என்றார். பவளவாயாரது ஞானமொழி மாயாசத்தி சம்பந்தமுடைய பாசபசுஞான மொழிகளன்று, சிவசம்பந்தமுடைய சிவசத்தியின் சிவஞான மொழியாம் என்றுணர - **தோணி மிசையிருந்த பிரான் உடனணைந்த துணைவியாதும், பைந்தொடியாள் திருமுலையின் பால்** என்றார். (௬அ)

## தோணியப்பர் கோயிலுக்கு எழுந்தருளல்

தூமணிமா ளிகையின்கண் அமர்ந்தருளி அன்றிரவு தொல்லை நாத,
மாமறைகள் திரண்டபெரும் திருத்தோணி மன்னிவீற் றிருந்தார் செய்ய,
காமருசே வடிக்கமலம் கருத்திலுற இடையறாக் காதல் கொண்டு, நாம
நெடுங் கதிர்உதிப்ப நண்ணினார் திருத்தோணி நம்பர் கோயில். ௬௬

(எ - து.) ஆளுடைய பிள்ளையார் சீகாழிநகர வீதியின் கண்ணே உலாப் போந்து, சகல சம்பிரமத்துடன் சகல வாத்தியங்களும் ஒலிக்கத் தமது பரிசுத்தமான அழகிய திருமாளிகைக்குள்ளே புகுந்து, அந்நாள் இரவில் அநாதியாயும் நாதவடிவமாயும் உள்ள பெரிய வேதங்கள் திரண்டு ஒருருவாய் விளங்கும் பெரிய திருத்தோணியில் என்றும் வீற்றிருந்தருளும் தோணியப்பருடைய அருண்மயமாய் அழகு செய்யும் திருவடித்தாமரைகள் தமது திருவுள்ளத்தில் தோன்றிக்கொண்டிருக்க, அத்திருவடிகளில் நீங்காத ஆசை கொண்டவராய் அவ்வாசையுடன் இருந்தருளினர்; மறுநாள் பெரும்புகழினையுடைய அளவிறந்த கிரணங்களையுடைய சூரியன் உதயஞ் செய்ய உடனே திருத்தோணியப்பர் திருக்கோயிலை அடைந்தருளினர், என்பதாம்.

மேல் ஆறு திருப்பாட்டானும், ஆளுடைய பிள்ளையார் திருமுலைப்பாலுண்டு களித்துக் கோபுரவாயிலின்கண்ணே நின்றருளியபோது நகரத்தாரெல்லாம் போற்றிக் கொண்டிருக்க, அத்தருணத்தில் சிவபாத இருதயர் "நாம் காணுதற்குரியதாகிய திருவருளுருவாகிய பெரிய நாயகியையும், அந்நாயகியின் அருட்செயலையும், நாம் காணுதற்கு உரிமையுடையோமோ! அங்ஙனமிருக்க நமக்குப் பிள்ளையாய் வந்த முருகன், **காட்டாதனவாகிய** அவையெல்லாங் **காட்டினன்**, அதற்கப்பால் சுட்டிச் **சிவங்காட்டினன்**, அதன் பின்னர் அவனது **தாட்டாமரையுங் காட்டினன்**; அதன் பின்னர், "தோடுடைய செவியன்" என்றற்றொடக்கத்தனவாகிய தன்கருணைத் தேன்காட்டினன்; இங்ஙனங்கூறிய முறைப்படி காட்டிய இப்பிள்ளைப் பெருமானுக்கு நாம் என் செய்யக் கடவோம்!"

என்று பேரன்புடையராய், "இப்பெருமானை மயிலூர்தியைப்போற் சுமந்து அப் பிள்ளையின் திருவுள்ளப்படி எங்கெங்கு செல்லவேண்டுமோ அங்கங்கும் செல் வோ"மென்று பிள்ளையார் அருகே சென்று, அச் செல்வப் பிள்ளையை இரு கையாலும் எடுத்துத் தோளின்மேல் வைத்துக்கொண்டு, நகரத்தை வலமாக வந்து திருமாளிகைக்குப் போவோமென்று புறப்பட்டனர் என்றும், அங்ஙனம் புறப்பட்ட அவரது திருவுள்ளக் குறிப்புணர்ந்து, அந்தணர் கூட்டங்களும் அடியவர் கூட்டங்களும் ஏனைய நகரவாசிகளும் ஆனந்தங் கொண்டவர்களாய்த் தாங்கள் உடுத்திருக்கும் வஸ்திரங்களை ஆகாயத்தின்மேல் வீசிச் சென்றனர் என்றும், அங்ஙனம் செல்லும்போது, இருபக்கத்தும் மலைபோல் ஓங்கியிருக்கும் மாளிகைகளின்கண்ணுள்ள பிராமண ஸ்திரீகளெல்லாம் மின்னற் கூட்டங்கள் வந்து வரிசைப்பட நிற்பதுபோல் நின்று மங்கலப்பாடல்களைப் பாடி வாழ்த்தி, மலர்ப்பொடி, பொற்பொடி, பொரிப்பொடி முதலிய மங்கலப் பொடிகளைத் தூவினர்கள் என்றும், மங்கல வாத்தியங்களும் துந்துபி முதலிய தேவ வாத்தியங் களும் சாமவேத கானமும் ஒன்றோடொன்று மாறுபடாது முன்னும் பின்னு மாகச் சென்றன என்றும், இங்ஙனமான பேரதிசயத்தோடும் பேரவாவோடும் பேரன்போடும் வீதியை வலமாக வந்து பிள்ளையார் தமது திருமாளிகை வந்தடைந்தனர் என்றும், அடைந்தவுடன் தந்தையார் தோளினின்றும் பிள்ளை யார் இறங்கிச் சங்கநாத முதலிய நாத பேதங்களெல்லாங் கலந்தொலிப்ப அம் மாளிகைக்குள்ளே எழுந்தருளியிருந்து, தமது உள்ளத்தே தோணியப்பருடைய திருவடிகளை இருத்தி அவ்வடிகளோடு கூடிக் கலந்து, மகிழ்ந்து மறுநாள் சூரியன் உதயமானவுடன் சிவசூரியன் வீற்றிருக்கும் ஆலயத்தை அடைந்தனர் என்றுங் கூறியவாறும். (கக)

### திருக்கோலக்காவுக்கு எழுந்தருளல்

காதலுடன் அணைந்துதிருக் கழுமலத்துக் கலந்துவீற் றிருந்த தங் கள், தாதையா ரையும்வெளியே தாங்கரிய மெய்ஞ்ஞானம் தம்பால் வந்து, போதமுலை சுரந்தளித்த புண்ணியத்தா யாரையுமுன் வணங்கிப் போற்றி, மேதகைய அருள்பெற்றுத் திருக்கோலக் காவிறைஞ்ச விருப் பிற் சென்றார். க00

(எ - து.) திருத்தோணி நம்பர் கோயிலுக்கு வந்த பிள்ளையார் பிரியா நட்புடையாரை நெடுநாள் பிரிந்திருந்து பின் தெய்வகதியாய்க் காணவருமாயின் அவர்களிடத்து எப்படி காண்பதில் அவா மேலிடுமோ அதுபோல் அவா மேற் கொண்டு கோயிலுக்குள்ளே சென்று, தாம் இம்மண்ணுலகில் வருங் காரணத்தை நாடியே சீகாழிப்பதியின்கண் தம்மைப்போலவே தெய்வ உருக்கொண்டு அத் திருவுருவிற் கலந்து எழுந்தருளியிருந்த தங்கள் தந்தையாராகிய தோணியப் பரையும், தீர்த்தக் கரையில் நின்று திருவாய் மலர்ந்தழுதபோது தாமும் வெளிப் பட்டுத் தம்மிடத்து வந்து, எச்சமயிகளாலுங் கொள்ளுதற்கரிய மெய்ஞ்ஞான போத ரூபமாகிய திருமுலைப்பாலைச் சுரந்தளித்த புண்ணிய ரூபியாகிய பெரிய நாயகியாரையும் சந்நிதியின் முன்னே வீழ்ந்து வணங்கித் துதித்து, இனித் திருத் தலங்கள்தோறும் சென்று தமிழ்வேதமாகிய திருப்பதிகங்களைப் பாடியருள்வ தாகிய மேன்மை பொருந்திய திருவருளைப் பெற்று, அருள் பெற்றபடியே அவ்

வருளை வழங்க முதலில் திருக்கோலக்கா என்னும் திருத்தலத்தைச் சென்று வணங்க மிக்க விருப்போடும் எழுந்தருளினர், என்பதாம்.

இத்திருப்பாட்டான், வைதிக சைவத்தான் ஆன்மாக்களுடைய மலங்களைக் கழுவுமாறு சிவபாத இருதயர் வேண்டிய வேண்டுகோளுக்கிரங்கித் திருக்கயிலையி னின்றும் தம்முடைய தாய்தந்தையரை விட்டுச் சீகாழிக்குத் தாம் எழுந்தருளிய போதே, தம்மைப் பிரிந்த தாய்தந்தையராகிய அவ்விருவரும் கயிலையை விட்டுத் திருத்தோணிபுரத்துச் சிகரத்தில் வந்திருக்கும் அக்கோலத்தின் சிறப்புத் தோன்ற - **திருக்கழுமலத்துக் கலந்து வீற்றிருந்த தங்கள் தாதையாரையும் தாயாரையும்** என்றும், சிகரம் பார்த்துத் தாம் அழுதபோது இருவரும் வெளிப் பட்டுத் தந்தையார் இருந்த இடத்திலேயே இருந்து, தம்முடைய தாயாகிய தேவியைத் தம்மிடத்தனுப்ப அவ்வம்மையார் தம்மிடத்து வந்து அதுகாறும் தாம் உண்ணுதிருந்ததனுல்; தாங்குதற்கரிதாகி யிருந்த அப் பால் வெள்ளத்தைப் பொற்கிண்ணத்திற் கறந்து தமக்கே அளித்த அச்சிறப்புத் தோன்ற - **தாங்கரிய மெய்ஞ்ஞானம் போத முலை சுரந்தளித்த புண்ணியத் தாய்** என்றும், தம் தாயினிடத்துத் தாங்குதற் கரிதாகியிருந்த அந்த மெய்ஞ்ஞானப்பால் தம் மிடத்து வந்த போது, அப்பாலைத் தாமும் தாங்குதற்கரிதாகிச் சத்திநிபாதர்க் கெல்லாம் வழங்க, தம்முடைய தாய்தந்தையரிடத்து அனுக்ஞை பெற்ற அச் சிறப்புத் தோன்ற - **வணங்கிப்போற்றி மேதகைய அருள்பெற்று** என்றும், தமது திருவருட் கோலத்தை இனி ஆங்காங்குள்ள அடியார்களெல்லாங் கண்டுகளிக்கக் கருதி, பெருமானது திருக்கோலக்கா அருகே முன்னிருத்தலால் அங்கு முன் செல்லத் திருவுளங்கொண்ட சிறப்புத் தோன்ற - **திருக்கோலக்கா இறைஞ்ச விருப்பிற் சென்றார்** என்றுங் கூறினர்.

தாய்தந்தையரிடத்துக் கலந்திருந்த தாம் கழுமலத்தில் வந்து கலந்தது போல், அத்தாய்தந்தையரும் அக்கழுமலத்திலேயே வந்து கலந்தனராகலான், **கழுமலத்து கலந்து வீற்றிருந்த தந்தை தாயார்** என்ருர் என்றலுமாம். ஒன்ருய், வேருய், உடனுய் என்னும் மூவகைக் கலப்பில், கயிலையிலிருந்த கலப்பு ஒன் ருய்க் கலந்திருந்த கலப்பு, கழுமலத்தில் வேறய்க் கலந்திருக்குங் கலப்பு, ஓதிய ருளும் திருப்பதிகத்தின் வழியாய்க் கலந்திருக்குங் கலப்பு உடனுய்க் கலந்திருக் குங் கலப்பு என்க. (க00)

**திருப்பதிகம் ஓதத்தொடங்கல்**

பெருக்கோலிட் டலைபிறங்கும் காவிரிநீர் பிரசமலர் தரளம் சிந்த, வரிக்கோல வண்டாட மாதரார் குடைந்தாடு மணிநீர் வாவித், திருக் கோலக் காஎய்தித் தேவர்பிரான் கோயில்வலம் செய்து முன்னின் றிருக்கோலிட் டறிவரிய திருப்பாதம் ஏத்துவதற் கெடுத்துக் கொள் வார். க0க

(எ - து.) வெள்ளங்கொண்டு ஆரவாரஞ் செய்து அலைகளை யெறியும் காவிரிநீரானது தேன் நிறைந்துள்ள மலர்களையும் முத்துக்களையும் கரையின் ஒருபால் சிதற, இசைபாடும் அழகிய வண்டுகள் கூந்தலிற் சூடியிருக்கும் பூக்க ளில் உள்ள தேனை உண்ணும் பொருட்டு நீங்காது ஒன்றின்மேல் ஒன்ருட, பெண் கள் நீரிற் படிந்துஆட, அழகிய நீர் நிறைந்துள்ள தடாகங்களால் சூழப்பட்டிருக்

கும் திருக்கோலக்கா என்னும் திருத்தலத்தை அடைந்து, தேவர்பெருமான் வீற்றிருக்குங் கோயிலை வலமாகவந்து, சந்நிதியின் முன்னே நின்று, வேதங்கள் எல்லாம் ஓலமிட்டலறியும் அறிதற்கு அரிதாயுள்ள திருவடித் தாமரைகளைத் தாம் துதிப்பதற்குப் பதிகத்தை ஓதத் தொடங்குவாராயினர், என்பதாம்.

இத்திருப்பாட்டான், மலர்களோடு முத்துக்களையும் கரையில் மோதும்படியான அலைப்பெருக்கினையுடைய காவிரிநதியை ஒருபக்கத்திலும், கூந்தலிற் குடியிருக்கும் மலர்களில் தேனைக் குடைந்து வண்டுகள் நிறைந்து ஆட, பெண்கள் நீரிற்குடைந்தாடும் தடாகங்களை எப்பக்கங்களிலும் உடைய திருக்கோலக்காவை ஆளுடைய பிள்ளையார் அடைந்து, இறைவன் சந்நிதானத்திலே நின்று, இறைவனது திருமுடியைக் காணவேண்டு மென்னும் அவாவுடைத்தாய் ஓலமிடத் தொடங்கிய வேதத்தைப்போல் ஓதத்தொடங்காது, சரணுகதியடைவதற்கு ஆதாரமாய், ஆனந்தம் விளையும் விளைவிடமாயுள்ள திருவடியைத் தமிழ் வேதத்தால் ஓதத்தொடங்கினர் என்று கூறப்பட்டது.

எல்லாப்பொருளிலும் கலந்து நிறைந்திருக்குந் தன்மையைக் காட்டுவது இறைவன் திருவடி, எல்லாப் பொருளையும் கடந்துநிற்குந் தன்மையைக் காட்டுவது திருமுடி; ஆகவே, கடந்துநிற்கும் தன்மையை எடுத்துச் சொல்லத் தலைப்பட்ட வேதம் "இதுவல்ல, இதுவல்ல" என்று மேன்மேற் கடந்துபோகும் முடி நிலையிற் போகுமே யன்றிக் கலந்துநிற்குந் தன்மையைக் காட்டுவதாகிய திருவடி நிலையில் வாராதாகலான், அந்நிலையினைக் குறித்துணர - இருக்கு ஒலிட்டு அறிவரிய திருப்பாதம் என்றார். (கoக)

மெய்ந்நிறைந்த செம்பொருளாம் வேதத்தின் விழுப்பொருளை வேணிமீது, பைந்நிறைந்த அரவுடனே பசுங்குழவித் திங்கள்பரித் தருளுவானை, மைந்நிறைந்த மிடற்றானை மடையில்வா ளைகள்பாய என்னும் வாக்கால், கைந்நிறைந்த *ஒற்றறுத்துக் கலைப்பதிகம் கவுணியர்கோன் பாடுங்காலை. கoஉ

(எ - து.) கவுணியர் தலைவராகிய ஆளுடைய பிள்ளையார், எப்பொருளிடத்தும் எவ்வடிவங்களிடத்தும் செவ்விய பொருளாகி நிறைந்திருப்பவனென்று வேதங்களாற் போற்றப்படும் மேலாகிய பொருளாயுள்ளவனை, திருச்சடைமேல் விரிந்திருக்கும் படத்தையுடைய பாம்புடனே இளம்பிறையைத் தரித்திருப்பவனை, கரிய விடம் நிறைந்துள்ள கண்டத்தையுடையவனை, "மடையில் வாளைபாய" என்றெடுத்த சொல்லான் வேதத்தின் பொருள்களை உட்கொண்டு திருப்பதிக முறையாக, திருக்கரங்களான் பண்ணிறைந்த தாளத்துக்குரிய மாத்திரையின் காலத்தை வரையறுத்து ஓதத் தொடங்கியபொழுது, என்பதாம். (கoஉ)

### திருப்பொற்றாளம் பெறுதல்

கையதனல் ஒற்றறுத்துப் பாடுதலும் கண்டருளிக் கருணை கூர்ந்த, செய்யசடை வானவர்தம் அஞ்செழுத்தும் †எழுதியசெம் பொற்றாளங்கள், ஐயரவர் திருவருளால் எடுத்தபா டலுக்கிசைந்த அளவால் ஒற்ற, வையமெலாம் உய்யவரும் மறைச்சிறுவர் கைத்தலத்து வந்த வன்றே. கoங

* ஒத்தறுத்து - என்றும் பாடம். † எழுதியநற் செம்பொற்றாளம் - என்றும் பாடம்.

(எ - து.) தமது திருக்கரத்தையே ஓசையைத்தரும் தாளமாகக் கொண்டு தாளத்துக்குரிய மாத்திரையின் கால அளவினை அளவுபடுத்தி, தாம் ஓதத் தொடங்கிய திருப்பதிகத்தை ஓதலும், திருக்கரங்களைத் தட்டிப் பாடுதலைத் திருக் கோலக்காவில் எழுந்தருளியிருக்கும் சிவந்த சடையினையுடைய இறைவன்கண்டு, மிக்க கருணையுடையவராய்த் தமது திருநாமமாகிய திருவைந்தெழுத்தையும் எழுதிய செம்பொன்னாலாகிய தாளங்கள், மூன்றுவயதுடைய திருமேனியுடன் உலகெலாம் உய்யவந்த அவ்வாளுடைய பிள்ளையாரது திருக்கரத்தில் வரச் செய்ய அத் தாளங்கள் வந்தன. வந்த அத்தாளங்கள், அவ்விறைவனது திருவரு ளாலேயே, அப்பிள்ளையார் எடுத்த பாடலுக்கு இசைந்த பண்முறைப்படி மாத்தி ரையின் அளவு குறையாமல் ஓசைபட ஒலித்தன, என்பதாம்.

கையதனால் ஒற்றறுத்துப் பாடுதலும், செய்யசடை வானவர் கண்டு கருணை கூர்ந்தருளி, தம் அஞ்செழுத்தும் எழுதிய செம்பொற்றாளங்கள், வையமெலாம் உய்யவரும் மறைச்சிறுவர் கைத்தலத்து, ஐயர் அவர் திருவருளால் வந்த, (வந்த அவை) எடுத்தபாடலுக்கு இசைந்த அளவால் ஒற்ற என்றுகொண்டு கூட்டிப் பொருள்கொள்க.

இதனால், உலகெல்லாம் உய்யவந்த ஆளுடைய பிள்ளையார், மூன்றாண் டுடைய இளம் பருவத்தினராய்த் திருக்கோலக்காவில் எழுந்தருளியிருக்கும் இறைவன் முன்னேநின்று, பண்ணிசை நிறைந்த திருப்பதிகத்தைப் பாடத் தொடங்கியபோது, அப்பண்ணுக்குரிய மாத்திரையின் கால அளவினை அளவு படுத்தி ஒலிப்பதற்குத் தாளம் இல்லாமையினால், தம்முடைய திருக்கரங்களையே தாளமாகக்கொண்டு கைகளைத்தட்டிப் பதிகத்தைப் பாடவே, அவ்வரியசெயலை அவ்விறைவன்கண்டு திருவுளம் இரங்கித் திருவைந்தெழுத்தை எழுதியுள்ள ஒரு பொற்றாளத்தை அப்பிள்ளையார் திருக்கரத்தில் வரச்செய்ய, அப்பிள்ளையார் அதனைத் திருக்கரத்தில் தாங்கி பாடத்தொடங்கி, மாத்திரையினளவைத் தாம் கருதாமல் தட்டியபோது அத்தாளத்தில் எழுந்த ஓசை மாத்திரையினளவாக ஒத்து ஒலித்ததென்று கூறியவாறும்.

இவ்விரண்டு திருப்பாட்டானும், மெய்ம்மைப்பொருளைத் தம்மால் அறியத் தலைப்படுவோர்க்கு அவர்கள் அறியவேண்டிய மெய்ம்மை வாசகத்தையும் செம் பொருளையும் உணர்த்தவல்ல வேதத்தால் மேன்மைப்பொருளாக எடுத்தாளப் பட்டவனும், ஒரு கலையையுடைய இளம்பிறையைச் சடையிலே வைத்து, அப் பிறையினருகே விரிந்த படத்தையுடைய பாம்பினை வைத்துக் கலைநிறைந்த மதி யாகக் காட்டவல்லவனும், கண்டத்திலிருக்கும் விடத்தை விடமாகக் காட்டாது ஒரு கறுப்பாகக் காட்டவல்லவனும் ஆகிய இறைவனை "மடையில்வாளை பாய மாதரார்," என்று திருக்கரங்களைத்தட்டித் திருப்பதிகம் பாடத்தொடங்கினார் என்றும், அங்ஙனம் பாடும்போது அப்பதிகத்தில் அமைந்திருக்கும் பண்ணின் நிறைவையும், கரங்களாகிய தாளத்தைத் தட்டும்போது அத்தாளத்தில் பண்ணை நிறைவிப்பதாகிய ஓசை அளவுபட ஒலிப்பதையும் இறைவன் கண்டுகளித்து, "இப்படி நம்முடைய பிள்ளை கைதட்டிப்பாடுவானானால் கைகள் கன்றிப்போமே" என்று திருவுளம் இரங்கி, பஞ்சாக்கர ஓசை நிறைந்துள்ள பொற்றாளம் ஒன் றைக் கொடுத்தனனென்றும் கூறியவாறும். (க0௫)

### திருக்கடைக்காப்பு ஓதிய சிறப்பு

காழிவரும் பெருந்தகையார் கையில்வருந் திருத்தாளக் கருவி கண்டு, வாழியதந் திருமுடிமேல் கொண்டருளி மனங்களிப்ப மதுர வாயில், ஏழிசையுந் தழைத்தோங்க இன்னிசைவண் தமிழ்ப்பதிகம் எய்தப் பாடித், தாழுமணிக் குழையார்முன் தக்கதிருக் கடைக்காப்புச் சாத்தி நின்ருர். க0௪

(எ - து.) சீகாழியில் அவதரித்த பெருந் தகுதியினையுடைய ஆளுடைய பிள்ளையார், தமது திருக்கரத்தில் வந்த அரிய பொற்றாளமாகிய இசைக்கருவியைக் கண்டு, "இது நமக்கு வாழ்வினைத் தரக்கடவது" என்று தமது திருமுடிமேல் கொண்டருளி, தமது திருவுள்ளமானது களிப்பினையடைய, தமது உள்ளம் களிப்பினை யடைந்ததுபோல் திருத்தாளத்தை அருளிய இறைவன் திருவுள்ளமும் களிப்பினை யடையும்படி, திருமுலைப்பாலின் சுவை தங்கியிருக்கும் திருவாயில் நின்றும் ஏழிசைகளும் நிரம்பி மேலிட்டொலிக்க, இனிய இசையையுடைய பொருள் வளப்பம் திருப்பதிகத்தில் பொருந்தப் பாடியருளி, தாழ்ந் தசைகின்ற அழகிய குண்டலத்தையுடைய இறைவன் முன்னே தகுதியாகிய திருக்கடைக்காப்பைச் சாத்தி நின்றருளினுர், என்பதாம்.

பிரமனைச் சிறையிலிட்டுப் பிரணவத்தை அப்பிரணவப் பொருளானுக்கே [உ]பதேசித்து உபதேசகர்த்தாவாகி, சூரனைச் சங்கரித்து, தேவர்களைக் காத்து, [வ]ள்ளிகளை மணந்து, இப்பொழுது இம்மண்ணுகில் வேதப் பொருளை வழங்க [வந்]த முருகப் பெருமான் என்பார் - காழிவரும் பெருந்தகையார் என்றும், "[ம]ருள் நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின், பொருள்நூல் தெரியப் புகின்" [எ]ன்று திருவருட்பயனில் கூறியபடி, ஆளுடைய பிள்ளையார் ஓதவந்த தமிழ் [வே]தத்தில் திருவைந்தெழுத்தின் பொருளன்றி வேறு பொருள் தொனிப் [ப]தில்லை யாகலான், சத்திநிபாதத்து உத்தமரெல்லாம் இத்தமிழ் வேதத்தை [ப]ஞ்சாக்கரமந்திரமாகக் கொண்டு போற்றவேண்டும் என்பதை யாவரும் [அற]ிய, ஸ்ரீ பஞ்சாக்கரந் தீட்டியுள்ள பொற்றாளத்தைத் தந்தனர் என்பார் - திருத் [தா]ளக் கருவி கொண்டருளி என்றும், ஸ்ரீ பஞ்சாக்கரத்தை ஓதுவார்க்கு வினை [மாய்]தலும் வாழ்வு ஓங்கலும் உண்மையாதல்போல், இத்தமிழ் வேதத்தை ஓது[வா]ர்க்கும் அவ்வாழ்வே உண்டாம் என்பதைத் தாம் பாடியருளிய பதிகத் திருக் [கடை]க்காப்பில் "வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார், உலங்கொள் வினை [மா]ய் ஓங்கி வாழ்வரே" என ஓதியருளினுர் என்பார் - தக்க திருக்கடைக் [கா]ப்பு என்றுங் கூறினுர்

இத்திருப்பாட்டான், ஆளுடைய பிள்ளையார் ஓதும் பாடலில் பண்ணும் [அத]ற்கிசைந்த இசையும், எல்லாக் கலைகளின் பொருளும், ஸ்ரீ பஞ்சாக்கரமாகிய [ம]ந்திரமும் அமைந்திருக்கும் சிறப்பு இத்தன்மைத் தென்று கூறப் [பட்]டது. (க0௪)

### சண்பை நகருக்கு எழுந்தருளல்

உம்பருலக கதிசயிப்ப ஓங்கியநா தத்தளவின் உண்மை நோக்கித், தும்புருநா ரதர்முதலாம் சுருதியிசைத் துறையுளோர் துதித்து மண் மேல், வம்பலர்மா மழை பொழிந்தார் மறைவாழ வந்தருளும் மதலை யாரும், தம்பெருமான் அருள்போற்றி மீண்டருளிச் சண்பை நகர் சாரச் செல்வார். க0௫

(எ - து.) விண்ணுலகில் உள்ளார் அதிசயிக்க, ஓதும் பதிகத்தின்கண் ஓங்கிய இசையின் அளவினது உண்மையைச் சுதியோடுகூடிய இசைத்துறையில் வல்லவராகிய தும்புருநாரதர்கள் பார்த்து, ஆளுடைய பிள்ளையாரை வாழ்த்தி, இந்நிலவுலகில் பொருந்தும்படி நறுமணங் கமழும் மலர்மழையைப் பொழிந்தார்கள்; வேதங்கள் வாழ அவதாரஞ் செய்த ஆளுடைய பிள்ளையாரும், தம் பெருமானுகிய இறைவனது திருவருளைப் போற்றி, திருக்கோலக்காவினின்றும் நீங்கிச் சீகாழிக்கு எழுந்தருளுவாராயினர், என்பதாம்.

திருக்கோலக்காவில் எழுந்தருளிய பெருமான், பண்ணிசை பொருந்த ஒலிக்கும்படி பொற்றாளந் தந்தனராகலான் தாளபுரீசர் என்னுந் திருநாமம் உடையராயினர். பொற்றாளத்தினின்றும் எழும் ஓசை தும்புருநாரதர்கள் வைத்திருக்கும் யாழ்முதலிய கருவிகளினும் எழாத இனிய ஓசையாய்ப் பேரின்ப சுகத்தைத் தருதலின் - **தும்புருநாரதர் முதலாம் சுருதியிசைத் துறையுளோர் துதித்து வம்பலர்மா மழைபொழிந்தர்** என்று இத்திருப்பாட்டான் கூறப் பட்டது. (க0இ)

செங்கமல மலர்க்கரத்துத் திருத்தாளத் துடன்நடந்து செல்லும் போது, தங்கள்குலத் தாதையார் தரியாது தோளின்மேல் தரித்துக் கொள்ள, அங்கவர்தம் தோளின்மிசை எழுந்தருளி அணைந்தார்சூழ்ந் தமரர் ஏத்தும், திங்கள்அணி மணிமாடத் திருத்தோணி புரத் தோணிச் சிகரக் கோயில். (க0ரு)

(எ - து.) ஆளுடைய பிள்ளையார், சிவந்த தாமரை மலர்போலும் செந்நிற முடைய திருக்கரத்திற்கொண்ட திருத்தாளத்துடன் பூமியில் திருவடி பொருந்த நடந்தருளும்போது, தங்கள் குலத்திற்கு (ஒழுக்கத்திற்கு) உரிய தந்தையாராகிய சிவபாத இருதயர்கண்டு மனம்பொறுது "நமது தோள் எதற்காக இருப்பது?" என்று அன்புகொண்டு தோளின்மேல் வைத்துக்கொண்டு செல்ல, பிள்ளையாரும் மகிழ்ந்து அவரது தோளின்மேல் எழுந்தருளி, தேவர்கள் வலஞ்செய்து துதிக்கும், சந்திரன் தவழும் இரத்தினமயமாய்ப் பிரகாசிக்கும் மாளிகைகள் நெருங்கிய திருத்தோணிபுரத்தில், திருத்தோணியப்பர் வீற்றிருக்கும் சிகரத்தை யுடைய திருக்கோயிலை அணைந்தருளினர், என்பதாம்.

இதனல், பிள்ளையார், திருக்கோலக்காவினை விட்டுத் தந்தையார் தோளின் மீது ஆரோகணித்தவராய்த் தமது சீகாழிப்பதியில் ஆதிதந்தையார் வீற்றிருக்கும் திருக்கோயிலை வந்தடைந்தனர் என்று கூறப்பட்டது. (க0ரு)

## திருப்பதிகம் ஓதல்

திருப்பெருகு பெருங்கோயில் சூழவலங் கொண்டருளித் திருமுன் னின்றே, அருட்பெருகு திருப்பதிகம் எட்டொருகட் டளையாக்கி அவற் றுள் ஒன்று, விருப்புறுபொற் றிருத்தோணி வீற்றிருந்தார் தமைப் பாட மேவு காதல், பொருத்தமுற அருள்பெற்றுப் போற்றியெடுத் தருளினர் பூவார் கொன்றை. (க0எ)

(எ - து.) யாவரும் அதிசயிக்கவல்ல அருட்செல்வமிக்க பெரிய திருக் கோயிலை வலம் வந்தருளி, இறைவன் சந்நிதியின் முன்னே நின்று, இறைவனிடத் துள்ள அருளைப் பெருகச் செய்யும் திருப்பதிகம் எட்டினையும் ஒரு கட்டளை

யாக்கி, அந்த எட்டினுள் ஒன்றை, விருப்பினைத் தருகின்ற பொன்மயமாய் விளங்கும் திருத்தோணியில் எழுந்தருளி யிருக்கின்ற இறைவனைப் பாடவேண்டு மென்னும் ஆசையானது தமது உள்ளத்தில் பொருத்தமாய் உண்டாக, உண்டானபடியே பாடும் அருளைப் பெற்று "பூவார் கொன்றை" என்னும் அடியைத் தொடுத்துப் பதிகத்தைப் பாடியருளினர் என்பதாம்.

அருள்பெற்றுப் பூவார் கொன்றை போற்றி எடுத்தருளினர் எனக் கூட்டுக.

திருப்பதிகங்களைப் பாடுதற்கே, தோணியப்பன் பாலைத் தந்தருளினன் என்று எண்ணுந்தோறும் அன்பு மேலிடுதலான், பண்களிற் சிறந்த பண்ணை யமைத்து, இசை நிறைக்கத் தந்த பொற்றாளத்தைக் கொண்டு இன்னிசை நிறைத்து எட்டுப்பதிகங்களைப் பாட எண்ணி, "பூவார் கொன்றை" என்னும் பதிகத்தைப் பாடியருளினர் என்று இதனாற் கூறப்பட்டது. (க0எ)

### திருமாளிகைக்கு எழுந்தருளல்

எடுத்ததிருப் பதிகத்தின் இசைதிருத்தா ளத்தினால் இசைய வொற்றி, அடுத்தநடை பெறப்பாடி ஆர்வமுற வணங்கிப்போந் தலைநீர்ப் பொன்னி, மடுத்தவயற் பூந்தராய் அவர்வாழ மழவிளங்கோ லத்துக் காட்சி, கொடுத்தருளி வைகினர் குறைவிலா நிறைஞானக் கொண்ட லார்தாம். க0அ

(எ - து.) கேட்டல் முதலிய நால்வகை நிலையில் நிற்போர்க்கு வேண்டும் ஞான முழுவதும் குறைவில்லாமல் நிரம்பக்கொண்ட ஞானமேகமாகிய ஆளுடைய பிள்ளையார், தாம் பாட எடுத்தருளிய திருப்பதிகத்தின் ஓசை திருத்தாளத்தினால் பொருந்தும்படி வரையறுத்து, வரையறுத்த அவ்வோசையைப் பொருந்திய நடையின்படி திருப்பதிகத்தைப் பாடியருளி, தோணியப்பராகிய தம் தந்தையை அன்போடு வணங்கி வெளியேவந்து, அலைப்பெருக்கினையுடைய நீர்வளமிக்க காவிரி நதியைத் தன்னுட்கொண்ட வயல்களையுடைய பூந்தராய் என்னும் திருப்பெயரினையுடைய சீகாழிப்பதியிலுள்ளார் பேரானந்தம் உடையராய் வாழ, தமது திருமாளிகையில் இளமைப்பருவத் திருக்கோலத்திற்கு இசைந்துள்ள அக்காட்சியினைக் கொடுத்து எழுந்தருளியிருந்தனர் என்பதாம்.

குறைவிலா நிறைஞானக் கொண்டலார் தாம் எடுத்த திருப்பதிகத்தின் எனக் கூட்டுக.

இத்திருப்பாட்டான், உலகெலாம் உய்ய நால்வகை ஞானங்களையும் ஒருங்கே வழங்கவந்ததுபோல், வேதப்பொருளையுள்ளிட்டு இசைத்தற்குரிய பாட்டும், பாட்டுக்கிசைந்த பண்ணும், பண்ணுக்கிசைந்த இசையும், இம்மூன்றினையும் இசைவிக்கும் திருமந்திரம் அமைந்த பொற்றாளமாகிய இசைக்கருவியும் ஆகிய நான்கினையும் ஒருங்கே இசைவித்துத் திருப்பதிகங்களை ஓதி வழங்கி, அச்சீகாழிப் பதியார் இன்னும் சில நாள் மழ இளங்கோலக் காட்சியைக் கண்டுகளிக்குமாறு சிவபாத இருதயர் திருமாளிகையில் எழுந்தருளியிருந்தனர் என்று கூறப்பட்டது. (க0அ)

சுற்றத்தார் பிள்ளையாரைத் தரிசிக்க வருதல்

அங்கிலையில் ஆளுடைய பிள்ளையார் தமைமுன்னம் அளித்த தாயார், முன்னுதிக்க முயன்றதவத் திருநன்னி பள்ளிமுதன் மறை யோர் எல்லாம், மன்னுபெரு மகிழ்ச்சியுடன் மங்கலதூ ரியந்துவைப்ப மறைகள் ஓதிக், கன்னிமதிற் சண்பைநகர் வந்தணைந்து கவுணியர்கோன் கழலிற் ருழ்ந்தார். க0௯

(எ - து.) ஆளுடைய பிள்ளையார் சீகாழியில் எழுந்தருளியிருக்கின்ற காலத்தில், அப்பிள்ளையாரைப் பெற்றருளிய பகவதியாரும் தம்மரபில் தமக்கு முன்னே அவதாரஞ் செய்ய முன்னே செய்த தவத்தினையுடையவராகிய திரு நனிபள்ளி முதலிய தலங்களில் உள்ள வேதியர்கள் எல்லோரும், தங்கள் மனத் தின்கண் நிலைபெற்ற பெரிய சந்தோஷத்துடன் தத்தம் பதிகளிலிருந்து புறப் பட்டு மங்கல வாத்தியங்களெல்லாம் ஒலித்துக் கொண்டுவர தாங்களெல்லாரும் வேதகோஷஞ் செய்து, அழியாத மதில் சூழ்ந்திருக்கும் சீகாழிப்பதியை வந்து சேர்ந்து கவுணியர் கோத்திரத்திற்குத் தலைவராய் வந்த ஆளுடைய பிள்ளை யாரைத் தரிசித்து வணங்கினர்கள், என்பதாம்.

ஆளுடைய பிள்ளையார் திருஞானப்பாலுண்டு திருப்பொற்றாளம் பெற்றுத் திருப்பதிகங்களைப் பாடி, சீகாழியில் எழுந்தருளியிருக்குங் காலத்தில், அவர்தம் தாயாராகிய பகவதியாரைச் சேர்ந்த பந்துவர்க்கத்தினரெல்லாம் ஆளுடைய பிள்ளையாரின் மகிமைகளைக் கேள்வியுற்றுப் பெருமகிழ்ச்சியும் பேரானந்த மும் கொண்டவராய்த் திருநனிபள்ளி முதலிய பல க்ஷேத்திரங்களிலிருந்து புறப் பட்டு, "அப்பிள்ளையாரைப் பெற்ற பகவதியார் நம்மரபில் அவதரிப்பதற்கு நாம் முன்செய்த தவம் யாதோ!" என்று அவரைப் புகழ்ந்து கொண்டாடி மங்கலவாத் தியங்கள் முழங்கி முன்செல்ல, தாங்கள் வேதகோஷங்களைச் செய்து சீகாழிப் பதிக்கு வந்து, பகவதியார் பெற்றெடுத்த பிள்ளையாரைக் கண்டு, அவர் திருவடி களில் விழுந்து வணங்கினர்களென்று இத்திருப்பாட்டால் கூறப்பட்டது.

ஆளுடைய பிள்ளையாரைப் பெற்றதனால் பகவதியார் பெருந்தவமுடைய வரென்று வெளிப்பட்டமைபோல் பகவதியாரைப் பெற்ற பந்துவர்க்கத்தினரும் பெருந்தவமுடையாரே யென்பது இதனால் குறிப்பித்ததுமாம்.

பிள்ளையாரிடத்துப் பிள்ளைத் தன்மையில்லாமல் தெய்வத்தன்மையே யாவருங்காண விளங்கினமையான் தங்கள் கவுணியர் கோத்திரத்தில் வந்த அருமந்த பிள்ளையென்று எண்ணாமல் தோணியப்பர்தம் தெய்வமகனாராக எண்ணி அவர்தம் திருவடிகளில் விழுந்து வணங்கினரென்க. (க0௯)

மங்கலமா மெய்ஞ்ஞானம் மண்களிப்பப் பெற்றபெரு வார்த்தை யாலே, எங்கணும்நீள் பதிமருங்கில் இருபிறப்பா ளரும்*அல்லா ஏனை யோரும், பொங்குதிருத்தொண்டர்களும் அதிசயித்துக் குழாங்கொண்டு புகலி யார்தம், சிங்கஇள ஏற்றின்பால் வந்தணைந்து கழல்பணியும் சிறப் பின் மிக்கார். கக0

---

* எல்லா ஏனையோரும் — என்றும் பாடம்.

(எ - து) அமங்கலமாகிய மலங்களைப் போக்கி மங்கலமாக்கவல்ல மெய்ஞ் ஞானத்தை இந்நிலவுலகிலுள்ளார் அடைந்து களிப்படையும்படியாக, தோணியப் பரோடு பெரிய நாயகியார் வந்து அருளப் பெற்றதாகிய பெரிய வார்த்தையைக் கேட்டதனாலே எவ்விடத்திலும் உள்ள பெரிய தலவாசிகளாகிய அந்தணர்களும் ஏனைய வருணத்தவர்களும், பூதிசாதன முதலியவற்றால் பொலிவு பெற்றிருக்கும் அடியவர் திருக்கூட்டத்தவர்களும் "இது என்ன அற்புதம்!" என்று அதிசயித்து அவரவர்களும் கூட்டங்கூட்டமாகக் கூடி, சீகாழியில் உள்ளவர்க்கு இளமை தங்கிய ஆண் சிங்கத்தை யொத்து விளங்கும் ஆளுடைய பிள்ளையாரிடத்து வந்து அவருடைய திருவடிகளை வணங்கும் சிறப்பினால் மிக்க மேன்மையுடையவ ராயினர், என்பதாம்.

மெய்ஞ்ஞானமாகிய சிவஞானத்தைப் பால் வடிவமாக ஒரு கிண்ணத்தி லேற்று வாயினால் உண்டார் என்பதும், மெய்ஞ்ஞானத்தை யடைந்த பின்பு காணத்தக்கவர்களாகிய பார்வதி பரமேஸ்வரர்களை முன் காணப் பெற்றார் என் பதும் எங்கும் கேட்டறியாததும் கண்டறியாததும் ஆகிய அற்புதச் செயல்களாக லின் - மெய்ஞ்ஞானம் பெற்ற பெருவார்த்தையாலே அதிசயித்து என்றும், அந்த மெய்ஞ்ஞானப் பாலையுண்டதும் உலகினர் அந்த ஞானத்தை யடைந்து பிறவித் துன்பம் நீங்கிச் சிவானந்தத்தில் இருக்கவே யாகலான் - மண்களிப்பப் பெற்ற என்றும், மண்ணுலகிலுள்ளார் அந்தணர் முதலிய நான்கு வருணத்தவர்களும் அவர்களுள் சிவபெருமானிடத்தில் ஆசையுடையவர்களாய்த் தொண்டு செய்யும் தொண்டர்களுமே ஆகலான்-இருபிறப்பாளரும் அல்லா ஏனையோரும் பொங்கு திருத்தொண்டர்களும், என்றும், மேலே சொல்லிய அந்தணர் முதலியோர்க்கும் தொண்டர்களுக்கும் மழ விளங்கோலத்தராகியும் பரசமயங்களுக்கு ஆண்சிங்கக் குட்டிபோலும் இருப்பவர் ஆகலான் - சிங்க இளவேற்றின்பால் வந்தணைந்து என்றும், அப்பிள்ளையாரது திருவடியைப் பணியும் புண்ணியத்தைப் பெற்றா ராயின் அவர்களுக்குச் சிவஞானச் செல்வத்தை அடையும் முறை மிக எளி தாய்க் கூடுமாகலான்-கழல்பணியும் சிறப்பின்மிக்கார் என்றுங் கூறினர்.

இத்திருப்பாட்டான், ஆளுடைய பிள்ளையார் மெய்ஞ்ஞானத்தைச் செவி என்னும் வாயின் வழியாக உண்ணுவது முறையாக இருக்க, அந்த மெய்ஞ் ஞானத்தை உண்ணும் பொருளாயுள்ள பால்போல் உண்டருளிய அதிசயத்தைக் கேட்டுப் பற்பல திருப்பதிகளில் உள்ளவர்கள் எல்லாம், ஆளுடைய பிள்ளையாரை வந்து தரிசித்து வணங்கினர் என்று கூறியவாறும். (ககo)

வந்ததிருத் தொண்டர்கட்கு மல்குசெழு மறையவர்க்கும் மற்று
ளோர்க்குஞ், சிந்தை மகிழ் வுறமலர்ந்து திருவமுது முதலான சிறப்பின்
செய்கை, தந்தம்அள வினில்விரும்புந் தகைமையினாற் சடனாற்றுஞ்
சண்பைமூதூர், எந்தைபிரான் சிவலோகம் எனவிளங்கி எவ்வுலகும்
ஏத்து நாளில். ககக

(எ - து.) மேலே சொல்லியபடி வந்தவர்களாகிய தொண்டர்களுக்கும், வேதவொழுக்கங்களில் தவறாதொழுகும் சிறப்பினையுடைய வேதியர்களுக்கும், மற்றுமுள்ள வருணத்தவர்களுக்கும் மனமகிழ்ச்சியோடு முகமலர்ந்து திருவமுது

படைத்தல் முதலிய சிறப்பான செய்கைகளாகிய தத்தமக்குள்ள பொருள் அளவினால் செய்யத்தகும் செயல்களை அவர்கள் விரும்பும் விருப்பத்திற்கு ஏற்ற வகையினால் செய்யும் கடப்பாடுடையவர்கள் வசிக்கும் சண்பை என்னும் திருநாமமுடைய சீகாழி என்னும் பெரிய நகரமானது எம்பெருமானது சிவலோகம் போல விளக்கமுற்று இவ்வுலகத்தார் எல்லாராலும் போற்றப்பட்டு வருநாளில், என்பதாம்.

இத்திருப்பாட்டான், சீகாழியில் உள்ளவர்கள் தொண்டர் முதலிய யாவரையும் எதிர்கொண்டு முகமலர்ந்து இனியசொல் வழங்கி அவர் வேண்டுவனவாகிய திருவமுது முதலியவற்றை அவர்கள் மனமகிழுமாறு படைத்தும் கொடுத்தும் வருவதாகிய நல்லறங்களைத் தாங்கள் செய்யுங் கடனாகக்கொண்டு செய்வார் என்று அவர்களது சிறப்புக் கூறப்பட்டது.

சிவலோகத்தில் இருப்பவரெல்லாம், தொண்டர்களுக்கு விதிப்படி மனமகிழ்ந்து அமுது படைத்தவர்களும், வேண்டுவனவற்றைக் கொடுத்தவர்களுமே ஆகலான், அஃதேபோல் சீகாழியில் இருப்பவரெல்லாம் இருத்தலான் - **எந்தைபிரான் சிவலோகம் என விளங்கி** என்றார். (ககக)

## பிற திருப்பதிகளுக்கு எழுந்தருளல்

செழுந்தரளப் பொன்னிசூழ் திருநன்னி பள்ளியுள்ளோர் தொழுது
திங்கட், கொழுந்து அணியும் சடையாரை யெங்கள்பதி யினிற்கும்பிட்
டருள அங்கே, எழுந்தருள வேண்டுமென இசைந்தருளித் தோணிவீற்
றிருந்தார் பாதந், தொழுந்தகைமை யாலிறைஞ்சி யருள்பெற்றுப் பிற
பதியுந் தொழமுன் *செல்வார். ககஉ

(எ - து.) செழுமையுள்ள முத்துக்களை அலையாகிய கைகளால் ஒதுக்கும் காவிரி நதி சூழ்ந்த திருநனிபள்ளியிலுள்ள அந்தணர் முதலியோர் ஆளுடைய பிள்ளையாரை வணங்கி, "எங்கள் திருப்பதியிலுள்ள இளம்பிறையணிந்த சடைமுடியினையுடைய சிவபெருமானைத் தேவரீர் வணங்கி எங்களுக்குச் செய்யுமருளைச் செய்தருள அங்கு எழுந்தருளவேண்டும்" என்றுவேண்ட, அவ்வேண்டுகோளுக்கிசைந்தருளி, திருத்தோணியில் எழுந்தருளியிருக்கும் தோணியப்பருடைய திருவடிகளைத் தாம் வணங்கும் முறைப்படியே வணங்கி, அப்பெருமானது திருவாணையைப்பெற்றுத் திருநனிபள்ளி முதலிய பிற தலங்களையும் தரிசித்து வணங்கும்படி தாம் முன்னே எழுந்தருளப் புறப்பட்டனர், என்பதாம்.

இத்திருப்பாட்டான், திருநனிபள்ளியில் உள்ளவர்கள் இங்கு ஆளுடைய பிள்ளையாரைத் தரிசித்து வணங்கி மகிழப்பெற்றவராயிருந்தும் அவ்வளவில் அவர்கள் ஆசை அடங்காது தாமிருக்கும் திருப்பதிக்கு அழைத்துக்கொண்டு போய் மனவாக்குக் காயங்களால் செய்யவேண்டிய தொண்டுகளைச்செய்து மனங் களிக்குமாறு எண்ணி ஆளுடைய பிள்ளையாரை யழைக்க, அப்பிள்ளையாரும் அதற்குடன்பட்டுத் திருநனிபள்ளிக்கு எழுந்தருள இசைந்தனரென்று கூறப்பட்டது. (ககஉ)

* சென்றார் — என்றும் பாடம்.

### திருநனிபள்ளிக்கு எழுந்தருளல்

. தாதவிழ்செந் தாமரையின் அகவிதழ்போல் சீறடிகள் தரையின் மீது, போதுவதும் பிறரொருவர் பொறுப்பதுவும் பொறுவன்பு புரிந்த சிந்தை, மாதவஞ்செய் தாதையார் வந்தெடுத்துத் தோளின்மேல் வைத்துக்கொள்ள, நாதர்கழல் தம்முடிமேற் கொண்டகருத் துடன் போந்தார் ஞானமுண்டார். ககங

(எ - து.) ஆளுடைய பிள்ளையார் திருநனிபள்ளிக்கு எழுந்தருளத்தலைப் பட்டபோது, மகரந்தத்தோடு மலர்ந்த செந்தாமரையினது அகவிதழையொத்த அவர்தம் சிற்றடிகள் பூமியின்மேலே பொருந்தும்படி செல்லுவதையும், அவ் வடிகளை வேறொருவர் தாங்கிச்செல்வதையும் பொறாது, அன்புமிக்க சிந்தையோடு பெரிய தவத்தினைச் செய்த சிவபாத விருதயர் முன்வந்து எடுத்துத் தமது தோளின்மேல் வைத்துக்கொண்டு நடக்க, ஞானமுண்ட பிள்ளையார் திருத் தோணியப்பருடைய திருவடிகளைத் தமது முடியின்மேல் கொண்டிருக்கும் திரு வுள்ளத்தோடு எழுந்தருளினர், என்பதாம்.

இத்திருப்பாட்டான், ஞானமுண்டருளிய ஆளுடைய பிள்ளையார் திருநனி பள்ளிக்கு எழுந்தருளுமாறு செந்தாமரைமலரின் அகவிதழையொத்த சிற்றடிகள் பூமியிற்பொருந்த நடக்கத் தொடங்கியபோது, அவரைப் பிள்ளையாகப்பெறும் பெருந்தவத்தினைச்செய்த சிவபாத விருதயர் மனம்பொறாது தமது தோளின்மேல் வைத்துக்கொண்டு செல்ல, அப்பிள்ளையார் தமது தாதையாராகிய தோணியப் பருடைய பெரிய திருவடிகளைத் தமது சிறிய திருமுடிமேல் தாங்கிக்கொண்டு சென்றாரென்று கூறப்பட்டது.

சிவபாத விருதயர் பிள்ளையாரது திருவடியில் நீங்காத அன்புடையவராய்த் தமது முடிமேல் சுமப்பவரென்றும், அப்பிள்ளையார் தம் தந்தையாரிடத்து நீங்காத அன்புடையவராய் அவரது திருவடியைத் தமது திருமுடியில் நீங்காது சுமப்பவ ரென்றும் கூறியவாறும். (ககங)

### திருப்பதிகம் ஓதல்

தேனலரும் கொன்றையினார் திருநன்னி பள்ளியினைச் சாரச் செல் வார், வானணையும் மலர்ச்சோலை தோன்றுவதெப் பதியென்ன மகிழ்ச்சி யெய்திப், "பானல் வயல் திருநன்னி பள்ளி"யெனத் தாதையார் பணிப் பக்கேட்டு, ஞானபோ னகர்தொழுது நற்றமிழ்ச்சொல் தொடைமாலை நவிலலுற்றார். ககச

(எ - து.) தந்தையாரது தோளின்மேல் பிள்ளையார் எழுந்தருளிச் செல் லும்போது தேன்சிந்தும் கொன்றைமாலை யணிந்த நற்றுணையப்பரென்னும் திரு நாமமுடைய இறைவன் வீற்றிருக்கும் திருநனிபள்ளியின் அருகே சார, அப்போது மேகம் தவழும் மலர் நிறைந்த மலர்ச்சோலையானது காணப்பட, ஞான அமுது உண்டவராகிய பிள்ளையார் கண்டு தந்தையாரை நோக்கி "சோலை சூழ்ந்திருக்கும் இப்பதி எப்பதி?" யென்று வினவ அதுகேட்ட தாதையார் "நீலோற்பலங்கள் மலரும் வயல் சூழ்ந்த திருநனிபள்ளி இதுதான்" என்று சொல்ல, அதனைக்

கேட்டருளி, திருவுளமகிழ்ந்து கைகுவித்து வணங்கி, நல்ல திருநெறித்தமிழ் வேதமாகிய சொன்மாலையாலாகிய திருப்பதிகத்தை ஓதத் தொடங்கின ரென்பதாம்.

இத்திருப்பாட்டான், ஆளுடைய பிள்ளையார் திருநனிபள்ளியென்னும் திருத்தலம் எவ்வளவு தூரத்திலுள்ளதோ, நாம் எப்போது காணப்பெறுவோமோ என்று திருவுள்ளத்தில் எண்ணுவதற்கின்றி உடனே காணப்பெற்ற அம்மகிழ்ச்சியின் மிகுதியினுல் அக்கணமே தமது இருதிருக்கரங்களைக் குவித்துக் கும்பிட்டுத் திருப்பதிகம் பாடத்தொடங்கின ரென்று கூறப்பட்டது. (ககச)

வேறு

### திருக்கடைக்காப்பின் சிறப்பு

"காரைகள் கூகை முல்லை" யெனநிகழ் கலைசேர் வாய்மைச்
சீரியற் பதிகம் பாடித் திருக்கடைக் காப்புத் தன்னில்
"நாரியோர் பாகர் வைகு நனிபள்ளி யுள்கு வார்தம்
பேரிடர் கெடுதற் காணை நம" தெனும் பெருமை வைத்தார். ககரு

(எ - து.) "காரைகள், கூகை, முல்லை" யென்று முதலடி யெடுத்து வேதமாகிய கலையின் உண்மைப்பொருள் சேர்ந்து நிகழும் சிறப்பினையுடைய திருப்பதிகத்தைப் பாடியருளி, அப்பதிகத்தின் திருக்கடைக் காப்பின்கண் "உமாதேவி பாகராகிய நற்றுணையப்பர் எழுந்தருளி யிருக்கும் இத்திருநனிபள்ளியைச் சிந்திப்போருடைய பெரிய துன்பங்கள் கெட்டுப்போதற்கு ஐயமில்லை; இதற்குத் திருவாணை நமது" என்னும் பெருமையையும் வைத்துப் பாடியருளினுர் என்பதாம்.

இத்திருப்பட்டான், திருநனிபள்ளியில் எழுந்தருளியிருக்கும் நற்றுணையப்பரை யாதொரு இடையூறில்லாமல் மிக விரைவில் தாம் காணப்பெற்ற மகிழ்ச்சியினுல் அடியார்கள்மேல் கருணையுடையவராய், இத்திருநனிபள்ளி நற்றுணையப்பரை அடியார்கள் நினைந்தமாத்திரத்தில் அவர்களுடைய பேரிடர்கெடும் என்பதற்குப் பதிகத்திருக்கடைக்காப்பில் ஆணை நமதென வைத்துப்பாடிய அருமை கூறப்பட்டது. (ககரு)

### திருநனிபள்ளியில் தங்கியிருத்தல்

ஆதியார் கோயில் வாயில் அணைந்துபுக் கன்பு *கூரு
நீதியால் பணிந்து போற்றி நீடிய அருள்முன் பெற்றுப்
போதுவார் தம்மைச் சூழ்ந்து பூசுரர் குழாங்கள் போற்றுங்
காதல்கண் டங்க மர்ந்தார் கவுணியர் தலைவ னுர்தாம். ககசூ

(எ - து.) ஆளுடைய பிள்ளையார், திருப்பதிகம் ஓதிக்கொண்டு முதற்கடவுளாகிய இறைவன் வீற்றிருக்கும் திருக்கோயிலின் திருவாயிலை யடைந்து உள்ளேசென்று, அன்பு அதிகரிக்கும் நீதியினுலே வணங்கிப் போற்றித் தமக்கு அன்பு பெருகியது போலும், இறைவனிடத்துப் பெருகிய அருளைப் பெற்று,

* கூர - என்னும் பாடம்.

வெளியே வர எழுந்தருள்வாராயினர்; அச்சமயத்தில் கவுணியர் கோத்திரத்துத் தலைவராகிய அவ்வாளுடைய பிள்ளையாரை அத்திருநனிபள்ளியில் வசிப்பவர்களாகிய வேதியர்களெல்லாம் சூழ்ந்துகொண்டு, "சிலநாள் இங்கு எழுந்தருளியிருந்து திருமேனியின் காட்சியைக் கண்டு யாங்களெல்லாம் களித்துய்யப் பிரார்த்திக்கின்றோம்" என்று தோத்திரஞ்செய்ய, அவர்கள் ஆசையைக்கண்டு அதனை மறுப்பதற்குத் திருவுளங்கொள்ளாது அத்திருப்பதியில் எழுந்தருளியிருந்தனர், என்பதாம்.

கவுணியர் தலைவனார் தம்மை பூசுரர் குழாங்கள் சூழ்ந்து போற்றுங் காதல் கண்டு அங்கமர்ந்தார் எனக்கூட்டிப் பொருள் கொள்க.

இதனால், ஆளுடைய பிள்ளையார் ஆதிபகவனைப் பணிந்து போற்றிய நீதி கூறப்பட்டது.

மெய்ஞ்ஞானத்திற் சிறந்தவராகிய **மணிவாசக மூர்த்திகள்** இறைவனைப் "பத்திவலையிற் படுவோன் காண்க" என்றருளினர். அதனால் பத்திப்பரப்பு இல்லையாயின், அவன் வசப்படான் என்றாயிற்று; அவன் படானாயின், மெய்ஞ்ஞானம் பெற்றது எற்றுக்கு? மெய்ஞ்ஞானம் பெற்றிருப்பாராயின், அவருள்ளத்தில் பத்திப் பெருக்கு உண்டாகும்; அஃது உண்டாயின், அப்பத்தியில் அவன் அகப்படுவான்; அவன் அகப்படுவானாயின் அருளுண்டாகும். இவ்வுண்மையினை யுணரவே - **அன்புகூரும் நீதியாற்பணிந்து போற்றி நீடிய அருள் முன்பெற்று** என்றும், ஆளுடைய பிள்ளையாரும், பத்திவலையிற் படுவோன் மகனாராகலான் திருநனிபள்ளி அந்தணர் பத்திவலையிற்பட்டு-**காதல் கண்டமர்ந்தார்** என்றும் கூறியவாறும். (ககசு)

**திருத்தலைசை அந்தணர் அழைக்க வருதல்**

அம்பிகை யளித்த ஞானம் அகிலமும் உய்ய வுண்ட
நம்பெருந் தகையார் தம்மை யெதிர்கொண்டு நண்ண வேண்டி
உம்பரும் வணங்கு மெய்ம்மை யுயர்தவத் தொண்ட ரோடு
தம்பெரு விருப்பால் வந்தார் தலைசையந் தணர்கள் எல்லாம். ககஎ

(எ - து.) ஆளுடைய பிள்ளையார், திருநனிபள்ளியில் எழுந்தருளியிருக்கின்றபோது, திருத்தலைசை என்னும் திருத்தலத்தில் வாழ்கின்ற அந்தணர்கள், பெரிய நாயகியார் அளித்தருளிய சிவஞானமாகிய திருமுலைப்பாலை உலகெல்லாம் உய்யும்பொருட்டு உண்டருளிய பெருமானாராகிய ஆளுடைய பிள்ளையாரை எதிர்கொண்டு அழைத்து வரவேண்டும் என்னும் எண்ணங்கொண்டவர்களாய், எண்ணியபடியே அழைத்தற்கு, தேவர்களும் வணங்கத்தக்க மெய்ம்மையாகிய தவநெறியினையுடைய தொண்டர்களோடும் தமது உள்ளத்தில் உண்டாகிய பெரிய விருப்பத்தினால் திருநனிபள்ளியிற் சென்று ஞானமுண்ட பிள்ளையாரை அழைக்க, அவர்கள் வேண்டுகோளின்படியே பிள்ளையார் திருத்தலைசை என்னும் திருத்தலத்திற்கு எழுந்தருளினர், என்பதாம்.

இதனால், திருத்தலைசை யந்தணர்கள் "அகிலம் உய்ய ஞானப்பால் உண்டருளிய பிள்ளையாரை, நமது பதிக்கு வரும்வண்ணம் செய்து போற்றி வழிபட்டாலன்றோ அவர் அந்த ஞானப்பாலைச் சுரந்து நமக்குக் கொடுப்பர்? அப்

பாலை நாம் உண்ணப்பெறலாம்" என்னும் அவாவுடையவர்களாய்த் தங்கள் ஊரிலுள்ள அந்தணர்களெல்லாரையும் அழைத்துக்கொண்டு, பிள்ளையாரை அழைத்துவரத் திருநனிபள்ளிக்குச் சென்றனர் என்று கூறப்பட்டது.

உலகினருக்குச் செய்யவேண்டிய யாகாதி தருமங்களைச் செய்வதே யன்றித் தாங்கள் அடையவேண்டிய முத்தி நெறிக்குரிய சரியையாதி மெய்த்தவத்தையும் செய்யும் செயற்கரிய செய்கைகளைச் செய்கின்றவராயிருத்தலான் - உம்பரும் வணங்கும் மெய்ம்மை உயர்தவத்தொண்டர் என்றார். (கக எ)

### திருத்தலத்தை அலங்கரித்தல்

காவண மெங்கு மிட்டுக் கமுகொடு கதலி நாட்டிப்
*பூவணை தாமந் தூக்கிப் பூரண கும்ப மேந்தி
ஆவண வீதி யெல்லா மலங்கரித் தண்ணு லாரை
† மாவண மலர்மென் சோலை வளம்பதி கொண்டு புக்கார். கக அ

(எ - து.) பிள்ளையாரை அழைக்கச் சென்றவரெல்லாம் செல்ல, ஊரின் கண் இருந்தவர்களிற் சிலர் எவ்விடத்தும் நடைக்காவணம் இட்டு நிழல் பரப்பினார்கள்; சிலர் கமுகுகளுடன் வாழைகளையும் நிறுத்தி மலர்களாற் றொடுத்த மாலைகளைத் தூக்கி நிறைகுடங்களைக் கையிலேந்திக்கொண்டு மங்கையர்களை நின்றிருக்கும்படியாகச் செய்தார்கள்; இவ்வண்ணம் ஆவண வீதிகளெல்லாம் அலங்காரஞ் செய்திருக்க, பிள்ளையாரை எதிர்கொண்டழைக்கச் சென்றவர்கள் வண்டுகள் வாசஞ்செய்யும் மெல்லியபூக்கள் நிறைந்துள்ள சோலைகள் சூழ்ந்திருக்கும் தமது வளப்பமிக்க திருப்பதிக்கு ஆளுடைய பிள்ளையாரை, அழைத்துக் கொண்டு வந்தார்கள், என்பதாம்.

இதனால், இறைவன் திருவிழாவில் ஊரை அலங்கரித்து அதில் சிவபெருமானை எழுந்தருளிவரச் செய்து கண்டுகளித்தல் போல், அவர்தம் மகனாரையும் கண்டுகளிக்க அலங்கரித்து அழைத்துவந்தனர் என்று கூறப்பட்டது. (கக அ)

### திருப்பதிகம் ஓதல்

திருமறை யோர்கள் சூழ்ந்து சிந்தையின் மகிழ்ச்சி பொங்கப்
பெருமறை யோசை மல்கப் பெருந்திருக் கோயி லெய்தி
யருமறைப் பொருளா னாரைப் பணிந்தணி ‡நற்சங் கத்தின்
தருமுறை நெறியக் கோயில் சார்ந்தமை யருளிச் செய்தார். கக கூ

(எ - து.) பிள்ளையாரை அழைத்துக்கொண்டு வரும்போது, மெய்ஞ் ஞானத்திற் சிறந்தவர்களாகிய அந்தணர்கள் அப்பிள்ளையாரைச் சூழ்ந்துகொண்டு, தமது சிந்தையின்கண் மகிழ்ச்சி மேலிடும்படியாக வேதங்களை ஓதுவதனால் உண்டாகும் பெரிய ஓசையானது எங்கும் நிறையும்படியாகப் பெரிய திருக்கோயிலை யடைந்து, அரிய வேதப் பொருளாயுள்ள தலைச்சங்காட்டீசரை வணங்கி, அழகிய நல்ல வலம்புரிச்சங்கினது வடிவத்தை அத்திருக்கோயில் காட்டுமுறைமையினால் அதனையே திருப்பதிகத்தில் அமைத்துப் பாடியருளினார், என்பதாம்.

* பூவணைத் தாமம்—என்றும் பாடம். † மாவணை மலர்-என்றும் பாடம்.
‡ நலச் சங்கத்தின்—என்றும் பாடம்.

திருத்தலைசை என்னும் அத்தலத்தில் உள்ள கோயில், சங்கங்களில் தலைமையாகிய வலம்புரிச் சங்கினைப்போலும் அமைக்கப்பட்டிருத்தலாலும், அச் சிறப்புத் தோன்றத் திருப்பதிகத்திலும் ஓதியிருத்தலாலும் - நற்சங்கத்தின் தருமுறை நெறி அச்கோயில் சார்ந்தமை அருளிச்செய்தார் என்றார்.

இதனால், வேதியர் ஓதும் வேதம் ஓசையிலும் பெரிதான ஓசையுடைத் தென்பதும், பொருளிலும் அரிய பொருளை யுடைத்தென்பதுந் தோன்ற - பெரு மறையோசை என்றும், அருமறைப்பொருளென்றும் கூறியவாறும். (கககூ)

### திருச்சாய்க்காட்டுக்கு எழுந்தருளல்

கறையணி கண்டர் கோயில் காதலாற் பணிந்து பாடி
மறையவர் போற்ற வந்து திருவலம் புரத்து மன்னும்
இறைவரைத் தொழுது பாடுங் "கோடியுடை" யேத்திப் போந்து
நிறைபுனற் றிருச்சாய்க் காடு தொழுதற்கு நினைந்து செல்வார். கஉ0

(எ - து.) மேலே சொல்லியவாறு கோயிலைச் சிறப்பித்துத் திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டு வந்து நீலகண்டராகிய தலைச்சங்காட்டீசரது ஆலயத்துள்ளே சென்று, மிக்கஆசையோடு பணிந்து, திருப்பதிகத் திருக்கடைக்காப்புச் சாத்திப் பாடிமுடித்து, வேதியர்களெல்லாம் போற்றிக்கொண்டு வர, திருவலம்புரத்துக்கு எழுந்தருளிவந்து, அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவரை, "கொடியுடை" என்று முதலடி எடுத்துப் பாடிப் போற்றி வணங்கி, அவ்விடத்தினின் றும் புறப்பட்டு, நீர்வளமிக்க திருச்சாய்க்காடு என்னும் திருத்தலத்தைப் பணிதற்குத் திருவுளத்தெண்ணி எழுந்தருளிப் போவா ராயினர், என்பதாம்.

இதனால் திருவலம்புரத்தைத் தரிசித்துக்கொண்டு திருச்சாய்க்காட்டுக்கு எழுந்தருள எண்ணினர் என்று கூறப்பட்டது. (கஉ0)

### பல்லவனீச்சரத்தைப் பணிந்து போதல்

பன்னகப் பூணி னாரைப் பல்லவ னீச்ச ரத்துச்
சென்னியால் வணங்கி யேத்தித் திருந்திசைப் பதிகம் பாடிப்
பொன்னிசூழ் புகாரி னீடு புனிதர்தந் திருச்சாய்க் காட்டு
மன்னுசீர்த் தொண்ட ரெல்லாம் மகிழ்ந்தெதிர் கொள்ளப் புக்கார்.

(எ - து.) ஆளுடைய பிள்ளையார் திருச்சாய்க்காட்டை நோக்கிச் செல்லும் போது, இடையேயுள்ள பல்லவனீச்சரம் என்னும் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் சர்ப்பாபரண மணிந்த பூரணேசரைத் தமது முடியால் வணங்கித் திருந்திய இசையோடு கூடிய திருப்பதிகத்தைப் பாடித் துதித்துக் காவிரிசூழ்ந்த பூம்புகாரின்கண் எழுந்தருளியிருக்கும் சாயாவனேசரது திருச்சாய்க்காடென்னும் பெரிய தலத்தில் வசிக்கும் சிறந்த அடியவர்களெல்லாம் மகிழ்கூர்ந்து பிள்ளையாரை எதிர்கொண்டழைக்க, பிள்ளையார் அங்குவந்து எழுந்தருளினர், என்பதாம். (கஉக)

வானள வுயர்ந்த வாயி லுள்வலங் கொண்டு புக்குத்
தேனலர் கொன்றை யார்தந் திருமுன்பு சென்று தாழ்ந்து
மானிடந் தரித்தார் தம்மைப் போற்றுவார் "மண்புகார்" என்
றானெலாம் உருக ஏத்தி யுச்சிமேற் குவித்தார் செங்கை. கஉஉ

(எ - து.) பிள்ளையார் திருச்சாய்க்காட்டுக்கு எழுந்தருளி ஆகாயமளவும் உயர்ந்தோங்கியிருக்கும் கோபுரவாயிலி னுட்புகுந்து வலம்வந்து உள்ளே சென்று, தேன் சிந்தும் கொன்றை மலர்மாலை யணிந்த சாயாவனேசரது சந்நிதானத்தின் முன்னே சென்று வணங்கி, மானேந்தியிருக்கும் இடக்கரத்தினையுடைய இறைவனைப் போற்றத்தொடங்கினவராய் 'மண்புகார்' என்று முதலடியெடுத்துத் தமது திருமேனி முழுவதும் உருகச் சிவந்த இருகரங்களையும் சிரமேற் குவித்துத் துதிப்பாராயினர் என்பதாம். (கஉஉ)

சீரினிற் றிகழ்ந்த *பாட்டிற் றிருக்கடைக் காப்புப் போற்றிப்
பாரினிற் பொலிந்த தொண்டர் போற்றிடப் பயில்வார் பின்னும்
ஏரிசைப் பதிகம் பாடி யேத்திப்போந் திறைவர் வெண்கா
டாருமெய்க் காத லோடும் பணிவதற் கணைந்தா ரன்றே.

(எ - து.) "மண்புகார்" என்று எடுத்த சிறப்பினால் விளங்குகின்ற அத்திருப்பதிகத்தில் 'சாய்க்காட்டுப் பத்தினையும், எம்பந்தம் எனக்கருதி எத்துவார்க்கு இடர்கெடுமே' என்னும் அரிய திருக்கடைக்காப்பாற் போற்றி, இந்நிலவுகின்கண் விளங்குகின்ற அடியார்கள் துதிக்க, ஆளுடைய பிள்ளையார் அங்கு எழுந்தருளி யிருப்பவராய் மீளவும் அழகிய இசையுடைய திருப்பதிகத்தைப் பாடிப்போற்றி, அங்கு நின்றும் புறப்பட்டுச் சுவேதாரண்யேசுரர் எழுந்தருளியிருக்கும் திருவெண்காட்டை நிறைந்த மெய்யன்போடும் வணங்குவதற்குச் சென்றருளினர், என்பதாம். (கஉங)

பொன்னிதழ்க் கொன்றை வன்னி புனலிள மதியம் நீடு
†சென்னியர் திருவெண் காட்டுத் திருத்தொண்ட ரெதிரே சென்றங்
கின்னதன் மையர்க ளாறு ரெனவொணு மகிழ்ச்சி பொங்க
மன்னுசீர்ச் சண்பை யாளும் மன்னரைக் கொண்டு புக்கார். கஉச

(எ - து.) பொன்போலும் இதழையுடைய கொன்றை மலரும் வன்னிப் பத்திரமும் கங்காநதியும் இளம்பிறையும் ஆகிய இவைகளால் பெருமைபெற்றிருக்கும் சடைமுடியினையுடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருவெண்காட்டிலுள்ள திருத்தொண்டர்களெல்லாம் எதிர்கொண்டு வந்து, இப்பொழுது இத்தன்மையர்கள் ஆனரென்று சொல்லவொண்ணாத மகிழ்ச்சியானது அதிகரிக்க, நிலைபெற்ற சிறப்பினையுடைய சீகாழியை ஆளாநின்ற ஆளுடைய பிள்ளையாரை அழைத்துக்கொண்டு சென்றார்கள், என்பதாம். (கஉச)

முத்தமிழ் விரகர் தாமு முதல்வர்கோ புரத்து முன்னர்ச்
சித்தநீ டுவகை யோடுஞ் சென்றுதாழ்ந் தெழுந்து புக்குப்
பத்தரா மடியார் சூழப் பரமர்கோ யிலைச்சூழ் வந்து
நித்தனார் தம்முன் பெய்தி நிலமுறத் தொழுது வீழ்ந்தார். கஉரு

(எ - து.) திருவெண்காட்டுத்தொண்டர்களோடு இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் வல்லவராகிய ஆளுடைய பிள்ளையார் திருவெண்காட்டுக்கு

*பாடல்—என்றும் பாடம். †சென்னியார்—என்றும் பாடம்.

எழுந்தருளியவுடன் இறைவன் சந்நிதானத்திற்குச் சென்று, அவரது திருக்கோயி லின் கோபுரத்தின் முன்னே திருவுள்ளத்தினின்றும் உண்டாகும் மகிழ்ச்சியோடு சென்று விழுந்து வணங்கி, உள்ளே புகுந்து, சிவபக்தர்களாகிய அடியார்கள் தம் மைச் சூழ்ந்துவர இறைவன் வீற்றிருக்கும் திருக்கோயிலை வலமாக வந்து, அநாதி முத்த நித்தனுகிய அவ்விறைவனது சந்நிதியிற் சென்று தமது திருமேனி பூமியிற் பொருந்த விழுந்து வணங்கினு ரென்பதாம். (கஉரு)

மெய்ப்பொரு ளாயி னாரை வெண்காடு மேவி னாரைச்
செப்பரும் பதிக மாலை "கண்காட்டு நுதல்" முன் சேர்த்தி
முப்புரஞ் செற்றார் பாதஞ் சேருமுக் குளமும் பாடி
ஒப்பரு ஞான முண்டா ருளமகிழ்ந் தேத்தி வாழ்ந்தார். கஉசு

(எ - து.) வேதசிவாகமங்களின் உண்மைப் பொருளாயிருக்கின்றவரை, வெண்காடென்னும் சுவேதாரண்யேசரை, 'கண்காட்டு நுதலானை' என முதல் அடியெடுத்துத், திரிபுரத்தை எரித்தருளிய இறைவனுடைய திருவடிகளைச் சேரச் செய்யும் முக்குளம் என்னும் தீர்த்தத்தையும் ஒப்பில்லாத அப்பதிகத்திற் பாடியருளி, சிவஞானப்பாலை உண்டருளிய ஆளுடைய பிள்ளையார் திருவுள்ள மகிழ்ந்து, அச்சிவபிரானை மனமகிழ்ந்து போற்றித் தோத்திரம் செய்து பேரானந்த வாழ்வினை அடைந்தருளினர், என்பதாம். (கஉசு)

அருமையால் புறம்பு போந்து வணங்கியங் கமரு நாளில்
திருமுல்லை வாயி லெய்திச் * செந்தமிழ் மாலை சேர்த்தி
மருவிய பதிகள் மற்றும் வணங்குவார் மறையோ ரேத்தத்
தருமலி புகலி வந்து ஞானசம் பந்தர் சார்ந்தார். கஉஎ

(எ - து.) அத்திருவெண்காட்டில் பேரானந்தப் பெருவாழ்வடைந்த ஞான சம்பந்தப் பிள்ளையார் அவ்விறைவனைப் பிரியா விடைகொண்டு பிரிந்து வெளியே வந்து வணங்கி, அத்தலத்தில் அமர்ந்திருக்கு நாளில், தென்திருமுல்லைவாயி லென்னும் திருப்பதியை யடைந்து, அங்குச் செந்தமிழாலாகிய திருப்பதிக மாலையை அவ்விறைவனுக்குச் சாத்தியருளி, அங்கிருந்தும் புறப்பட்டு, அத்திரு முல்லைவாயிலைச் சார்ந்துள்ள மற்றைத் திருப்பதிகளையும் வணங்கும் திருவுள்ள முடையவராய், வேதியர்களெல்லாம் போற்றப் பலவகையான சோலைகள் நெருங்கி யுள்ள சீகாழிப்பதி வந்தருளினர், என்பதாம். (கஉஎ)

தோணிவீற் றிருந்தார் தம்மைத் தொழுதுமுன் னின்று தூய
ஆணியாம் பதிகம் பாடி யருட்பெரு வாழ்வு கூரச்
சேணுயர் மாட மோங்கு திருப்பதி யதனிற் செய்ய
வேணியார் தம்மை நாளும் போற்றிய விருப்பின் மிக்கார்.

(எ - து.) சீகாழித் திருப்பதிக்கு வந்தவுடன் திருத்தோணியப்பரை வணங்கி அவர் சந்நிதியின் முன்னே நின்று நின்மலன் வாக்காயுள்ள வேதாகமங்களின் பொருளுக்கு உரையாணியாகிய திருப்பதிகத்தைப் பாடியருளி, திருவருள்

* செழுந்தமிழ்மாலை சாத்தி — என்றும் பாடம்

என்னும் பெரிய வாழ்வானது அதிகரிக்க, அவ்வாளுடைய பிள்ளையார் விண்ணுல களவும் உயர்ந்த மாடங்கள் ஓங்கிய அச்சிகாழி யென்னும் திருப்பதியின்கண் வீற்றிருக்கும் தோணியப்பரை நாடோறும் துதிக்க வேண்டுமென்னும் ஆசை மிகுதியுடையராய் இருந்தருளினர், என்பதாம். (கஉஅ)

வைகுமந் நாளிற் கீழ்பான் மயேந்திரப் பள்ளி வாசஞ்
செய்பொழிற் குருகா வூருந் திருமுல்லை வாயி லுள்ளிட்
டெய்திய பதிகளெல்லா மின்புற விறைஞ்சி யேத்தித்
தையலாள் பாகர் தம்மைப் பாடினர் தமிழ்ச்சொன் மாலை. கஉகூ

(எ - து.) அவ்வண்ணம் சீகாழியில் எழுந்தருளியிருக்குங் காலத்து, அச் சீகாழியின் கீழ்த்திசையிலுள்ள திருமயேந்திரப் பள்ளியையும் நறுமணங் கமழும் சோலை சூழ்ந்த திருக்குருகாவூரையும் திருமுல்லைவாயிலையும் இவைகளையுள் ளிட்டுள்ள எல்லாத் திருப்பதிகளையும் தமது திருவுள்ளத்தில் ஆரா இன்பம் அதி கரிக்க வணங்கி வாழ்த்தி உமாபதியான சிவபெருமானைத் தமிழ்ச் சொல்லா லாகிய பதிகமாலைகளால் பாடியருளினர்; என்பதாம். (கஉகூ)

அவ்வகை மருங்கு சூழ்ந்த பதிகளி லரனர் பொற்றாண்
மெய்வகை ஞான முண்ட வேதியர் விரவிப் போற்றி
உய்வகை மண்ணு ளோருக் குதவிய பதிகம் பாடி
எவ்வகை யோரு மேத்த இறைவரை யேத்து நாளில். கங0

(எ - து.) இவ்வண்ணம் மெய்ஞ்ஞானப்பாலுண்டருளிய வேதியர் மேற் சொல்லியவாறு திருக்குருகாவூர் முதலிய தலங்களுக்குச் சமீபத்திலுள்ள தலங் களில் எழுந்தருளி யிருக்கும் இறைவனுடைய அழகிய திருவடிகளை அடைந்து துதித்து, நிலவுலகிலுள்ளோர்க்கு உய்யும் வகையாக உதவியருளிய திருப்பதிகங் களைப்பாடியருளி, எவ்வகைப்பட்ட மேன்மை யுடையோரும் தம்மைப் போற்றச் சீகாழியின்கண் அமர்ந்திருக்கும் தோணியப்பரைத் துதித்து எழுந்தருளியிருக் குங்காலத்தில், என்பதாம். (கங0)

வேறு

திருநீலகண்டயாழ்ப்பாணர் வந்தடைதல்

திருநீல கண்டத்துப் பெரும்பாணர் தெள்ளமுதின்
வருநீர்மை இசைப்பாட்டு மதங்கசூ ளாமணியார்
ஒருநீர்மை யுடனுடைய பிள்ளையார் கழல்வணங்கத்
தருநீர்மை யாழ்கொண்டு சண்பையிலே வந்தணைந்தார். கஙக

(எ - து.) ஆளுடைய பிள்ளையார் சீகாழியில் எழுந்தருளியிருக்குங் காலத் தில், பெரும்பாணராகிய திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்னும் பெரியார், தெள் ளிய அமுதினையொத்துச் செவிக்கு இன்பத்தினை விளைவிக்கும் தன்மையை யுடைய இசைப்பாட்டில் வல்ல மனைவியாராகிய மதங்க சூளாமணியாரோடு, பக்தி யில் ஒருமைப்பட்ட ஒழுக்கத்தினராய், ஆளுடைய பிள்ளையாருடைய திருவடிகளை வணங்க, இன்பத்தைத் தரும் யாழினை ஏந்திக்கொண்டு சீகாழிப்பதியில் வந்து சேர்ந்தனர், என்பதாம்.

திருநீலகண்ட யாழ்ப்பாணரினும், அவருடைய மனைவியார் இசையில் மேம்பட்டவர் என்னும் அச்சிறப்புத்தோன்ற - திருநீலகண்டத்துப் பெரும்பாணர் என்று வாளாகூறி, - தெள்ளமுதின் வருநீர்மை யிசைப்பாட்டு மதங்கசூளாமணி யார் என்றும், குலமுறைதோன்ற - பெரும்பாணர் என்றும், பெரும்பாணராகிய அவரது அறிவு, குலத்தின் அளவில் நில்லாது, மேம்பட்ட குலத்தினுல் உண்டாகும் அறிவுடையராய், தமது குலத்தையும் ஒழுக்கத்தையும் இழித்தொழித்து, இறைவன் அருளைத் தரவல்ல பக்தியை உள்ளத்துள்ளேகொண்டு "மனத்துக் கண்மாசிலன் ஆதல், அனைத்து அறன்" என்றபடி மனந்தூயராய், பிள்ளையார்தம் திருவடிகளைத் தியானிக்கும் ஞானசீலராய், அத் திருவடிகளைத் தரிசிக்க வேண்டுமென்னும் அவா மேலிட்டவராய்த் தம் மனைவியாருடன் சீகாழிப்பதிக்கு வந்தனரென்று இத்திருப்பாட்டாற் கூறப்பட்டது.

திருஞானசம்பந்தன் சீரடி, குலம் இலராகினும் குலத்துக்கு ஏற்பதோர் நலம் மிகக் கொடுக்கும் அத்துணிபான் - ஒருநீர்மையுடன் பிள்ளையார் கழல் வணங்க வந்தணைந்தார் என்றார். (கருக)

### யாழ்ப்பாணனர் பெருவாழ்வு எய்தப்பெற்று மகிழ்தல்

பெரும்பாணர் வரவறிந்து பிள்ளையார் எதிர்கொள்ளச்
சுரும்பார்செங் கமலமலர்த் துணைப்பாதம் தொழுதெழுந்து
விரும்பார்வத் தொடும்ஏத்தி மெய்ம்மொழிக ளாற்றுதித்து
வரும்பான்மை தருவாழ்வு வந்தெய்த மகிழ்சிறந்தார். கருஉ.

(எ - து.) பாணனுர், தம்மைத் தரிசிக்கும் அவாவுடையராய் வருதலை, அணுக்கராயுள்ள அந்தணர்களால் பிள்ளையார் அறிந்து, அவரை எதிர்கொள்ள வெளியே வந்து நின்றருள, அதுகண்ட பாணனுர், வண்டுகள் நிறைந்துள்ள செந்தாமரை மலர்போன்ற பிள்ளையார்தம் இரண்டு திருவடிகளையும் தம் பத்தினியாருடன் வணங்கி எழுந்து, தமக்கு வருவதாயுள்ள அருட்பான்மைதரும் வாழ்வாகிய பிள்ளையார் எதிரேவந்து நின்ற கருணையை நாடி, விருப்பம்தரும் மெய்யன்போடும் உண்மை மொழிகளால் தோத்திரஞ்செய்து மகிழ்ச்சியிற் சிறந்தவராயினர், என்பதாம்.

பிள்ளையாரைத் தரிசிக்கவேண்டுமென்னும் அவாமேலிட்டிருப்பினும் வருணவொழுக்கத்தில் தவருதவராகலான், அந்தணர்களை விலக்கித் தம்மைத் தரிசிக்கத் துணியார் என்னும் அவ்வொழுக்கத்தினைத் திருவுள்ளத்தேகொண்டு, அப்பாணனுர் தம்மை எளிதாகக் கண்டுகொள்ள வெளியேவந்து அவர் எதிரே நின்றருள, பாணனுர் தாம்வந்தபோதே எளிவந்த கருணையைநாடி, "இதுதானே தம் அடி நினைந்தார்க்கு வருவதாகிய அருட்பான்மை! இதுதானே வாழ்வைத் தருவதாகிய முறை!, இந்த வாழ்வையும், அருட்பான்மையையும் இங்கு நான் வந்து எய்தப்பெற்றேனே" என மகிழ்ச்சியிற் சிறந்தனர் என்று இத்திருப்பாட்டாற் கூறப்பட்டது.

அவரவருள்ளத்தே நிறைந்திருக்கும் அன்பினை அறிந்து அருள்செய்யும் தெய்வமே பிள்ளையாராகலின், பாணனுரது அன்பின் பெருக்கினையறிந்து அக்கணத்தில் அவரெண்ணிய அருளை எளிவந்து செய்தனர் என்பதாம். வேதநெறி

தழைத்தோங்க, மிகுசைவத்துறை விளங்கவந்தவராகலான், வெளியே வந்து நின்றது வேதநெறி, அவர் காணக் காட்சிகொடுத்து அவருடைய வணக்கத்தையும் வாழ்த்தையும் திருவுளம் இரங்கி ஏற்றுக்கொண்டது சைவநெறி.(௧௩௨)

பிள்ளையார் பாணனுடன் கோயிலுக்குப் போதல்

அளவிலா மகிழ்ச்சியினர் தமைநோக்கி ஐயர்நீர்
உளமகிழ இங்கணைந்த உறுதியுடை யோம்என்றே
இளநிலா நகைமுகிழ்ப்ப இசைத்தவரை உடன்கொண்டு
களநிலவு நஞ்சணிந்தார் பால்அணையும் கவுணியனர். ௧௩௩

(எ - து.) தம்மைத் தரிசிக்கப்பெற்று அளவில்லாத மகிழ்ச்சியையுடையவராயிருக்கின்ற பாணனரை, ஆளுடைய பிள்ளையார் பார்த்தருளி "ஐயரே! நீர் இங்கு வந்ததனல் உம்முடைய உள்ளமானது மகிழ நீர் ஓர் உறுதியை உடையவராக இருக்கின்றீர்; அதுபோலவே யாமும் ஓர் உறுதியை உடையேமா யிருக்கின்றேம்.'' என்று இளமையான நிலவின் தோற்றத்தைத் தமது புன்சிரிப்பானது தோற்றுவிக்கும்படி சொல்லியருளிப் பின்பு, கவுணியர் தலைவராகிய பிள்ளையார், அத்திருநீலகண்ட யாழ்ப்பாணரைத் தம்முடன்வர அழைத்துக்கொண்டு, கண்டத்தில் விளங்கும் விடத்தைத் தரித்த தோணியப்பரது சந்நிதியை அடைவாராயினர், என்பதாம். (௧௩௩)

கோயிலினிற் புறமுன்றில் கொடுபுக்குக் கும்பிடுவித்து
ஏயும்இசை யாழ்உங்கள் இறைவருக்கிங் கியற்றும்என
ஆயபுகழ்ப் பிள்ளையார் அருள்பெற்ற அதற்கிறைஞ்சி
மேயதொடைத் தந்திரியாழ் வீக்கிஇசை விரிக்கின்றார். ௧௩௪

(எ - து.) அங்ஙனம் போவாராகிய பிள்ளையார், திருக்கோயிலின் திருமுற்றத்தின்முன்னுள்ள புறவிடமாகிய வெளியிடத்தின் வரையில் பாணனரை அழைத்துக்கொண்டு சென்று, அங்கு நிறுத்தி அவரைக் கும்பிடுமாறு செய்து, பின்அவரைப் பார்த்தருளி "இந்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் உங்கள் இறைவருக்கு, இசையோடுகூடி யாழை வாசியும்'' என்று கட்டளையிட, பாணனர் இவ்வுலகின்கண் நிறைந்த புகழினையுடைய ஆளுடைய பிள்ளையாரது திருவருளை இசைபாடும் பொருட்டுப் பெற்றதைக் கருதி அப் பிள்ளையார்தம் திருவடிகளை வணங்கி, இசைபொருந்திய தொடையினையுடைய தந்திரிகளோடுகூடிய யாழின் மாடக முதலியவற்றை முடுக்கி இசையைப் பாடத்தொடங்கினர், என்பதாம்.

"'நாம் இழிந்த குலத்திற் பிறந்திருக்கின்றோம்; நாம் தரிசிக்க விரும்பும் பிள்ளையாரோ, சிறந்த உயர்ந்த குலத்தில் அவதாரஞ் செய்திருக்கின்றார்; அவருடைய தரிசனம் எவ்வாறு கிடைக்கும்? ஆனல் நம்மிடத்தில் யாழிசையொன்றிருக்கின்றது. இந்த யாழிசையை விரும்பி நம்மைத் தூரத்தேயாவது காண விரும்புவரோ என்றால், யாழிசைக்கு மேலாக இசையுள்ள பொற்றாளம் ஒன்று அவர் திருக்கரத்தில் இருக்கின்றது. குலம் நம்மைத் தாழ்வடையச் செய்வதாயிருந்தாலும் இசையாவது சிறப்புற்றிருக்குமானல் நாம் பிள்ளையாரைத் தரிசிக்கும் சிறப்பினை யுடையராவோம்; நமக்கு இருவகையினும் சிறப்பில்லை.

ஆயினும், பிள்ளையார் தெய்வத்தன்மை யுடையராக நாம் கேட்கப்படுகையினால், நமது உள்ளத்தை அறிந்து முற்றுப்பெறச் செய்வார்; அவ்வுண்மையை அறிவோம்' என்று வந்தவர் நீரென்று, உம்மை நாம் கண்டபோதே அறிந்தோம்; அறிந்து உமது மனக்குறையை நாம் ஒழிக்கவே, மகிழ்சிறந்தவராய் எம்மிடத்தில் நீர் உறுதியுடையவராயினீர். நமக்கோர் குறையுளது; அக்குறை நீங்கி இன்று உம்மால் உறுதியுடையவ ராயினோம். என்னையெனின், வேயுறுதோளி பங்கனும் விடமுண்ட கண்டனுமாகிய எம் தந்தை, மிக நல்ல வீணை தடவி அவ்விசையில் மகிழ்ந்திருப்பவன்; அவன் மகிழப் பாடும் எம்முடைய பதிகங்களுக்கு யாழிசை யிருக்கவேண்டு மென்று எண்ணியுள்ளோம்; அக்குறை தீர்ந்து உறுதிபெற்றோம்" என்று பாணனார் மகிழுமாறு புன்னகையோடு சொல்லி அவரை அழைத்துக் கொண்டு தம் தந்தையாகிய தோணியப்பரிடம் போய்க் கோயிலின் முன்னே நிற்கும்படியாகச் செய்து, யாழிசையைப் பாடும்படி பிள்ளையார் கட்டளையிட்டா ரென்று மேல் இரண்டு திருப்பாட்டானுங் கூறப்பட்டது.

எவ்வுயிர்களிடத்தும் செந்தண்மை பூண்டிருப்பவரே அந்தணராவா ரென்றும், பணிதல் செல்வம் செல்வர்க்கே தகைத்து என்றும், "இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம், செம்பொருள் கண்டார் வாய்ச்சொல்," என்றும், பொய்யாமொழியார் கூறியுள்ளார். ஆகையால், பாணனார் காண, எளிமையாக வெளியே வந்து அப்பாணனாரை - "ஐயர்நீர்" என்றும், "இங்கு உங்கள் இறைவருக்கு இசையியற்றும்" என்றும், செந்தண்மையும், பணிவும், இன்சொல்லும் வழங்கினார் என்பதாம். (கஙச)

தானநிலைக் கோல்வடித்துப் படிமுறைமைத் தகுதியினால்
ஆனஇசை ஆராய்வுற் றங்கணர்தம் பாணியினை
மானமுறைப் பாடினியார் உடன்பாடி வாசிக்க
ஞானபோ னகர்மகிழ்ந்தார் நான்மறையோர் அதிசயித்தார். கஙரு

(எ - து.) மந்தம் மத்திமம் தாரம் என்னும் மூவகை நாதங்களை அளந்து கட்டிய எல்லையின் நிலைமையோடுகூடிய யாழினைப் பண்ணுறுத்தி, அத்தாளங்களில் மூவகை நாதங்களும் பொருந்து முறைமையான் தகுதியோடும் ஆகின்ற குரல் முதலிய எழிசைகளைத் தனித்தனி தாளம் ஒவ்வொன்றினும் ஆராய்ந்து, சிவபெருமான் சம்பந்தமான பண்ணமைந்த பாடலை எழிசையின் காலஅளவு முதலியவற்றின் இலக்கணங்களை யுணர்ந்த பாடினியாருடன் பாணனார் பாடி யாழினை வாசிக்க, அதைக்கேட்ட ஞான அமுதுண்ட பிள்ளையார் திருவுள்ள மகிழ்ந்தனர்; இசையிற் சிறந்த நான்கு வேதங்களை யுணர்ந்தவர்களாகிய வேதியர்களும் மிக்க அதிசயமடைந்தார், என்பதாம்.

யாழிசையின் இலக்கணமும், அவ்விசைக்குரியராகிய அவ்விருவர் இலக்கணமும் அவர்களது குலஇலக்கணத்தை நோக்கவொட்டாது இசைநலத்தையே நோக்கச் செய்து, "நமக்கு இவ்விசைப் போனகங் கிடைத்ததே" என்கின்ற மகிழ்ச்சியை ஞானபோனகருக்கும், "நம்முடைய ஆளுடைய பிள்ளையாரிடத்து நிகழவரும் செயல்கள் ஒன்றின்மேலொன்று அதிசயத்தை விளைவிக்கின்றனவே! இஃது என்ன அதிசயம்!" என்று அரியதோர் அதிசயத்தை அந்தணர்களுக்கும் விளைவித்ததென்று இத்திருப்பாட்டாற் கூறப்பட்டது. (கஙரு)

### கந்தருவர் முதலாயினோர் போற்றல்

யாழில்எழும் ஓசையுடன் இருவர்மிடற் றிசையொன்றி
வாழிதிருத் தோணியுளார் மருங்கணையும் மாட்சியினைத்
தாழும்இரு சிறைப்பறவை படிந்ததனி விசும்பிடைநின்
றேழிசை நூற் கந்தருவர் விஞ்சையரும் எடுத்திசைத்தார். க௩௬

(எ - து.) நரம்புக் கருவியாகிய யாழின்கண் உண்டாகும் ஓசையுடன், பாணனாரும் அவர் பத்தினியாரும் ஆகிய அவ்விருவருடைய கண்டத்தினின் றெழும் இசைகளும் ஒன்றுபட்டுத் திருத்தோணியப்பரது திருச்செவியில் பொருந்தும் பெருமையை, சந்திரமண்டலத்தினின்றும் இசைக்கு உருகி வீழா நின்ற கின்னர மிதுனங்கள் நெருங்கியுள்ள ஆகாயத்தின்கண் நின்று எழிசைக ளோடு கூடிய காந்தருவ வேதத்தில் வல்ல காந்தருவரும், வித்தியாதரர்களும் விதந்தெடுத்துக் கூறினார்கள், என்பதாம்.

இத்திருப்பாட்டால், பாணனாரும் பாடினியாரும் பாடும் யாழினின்றெழும் ஒலியும், கண்டத்தினின்று எழும் கண்டத்தொலியும் ஒன்றுபட்டெழும் ஓசை ஆகாயம் அளவும் செல்ல, அங்குள்ள கந்தருவர் முதலாயினோர், "நாமும் இவர் களைப்போல் இவ்விண்ணுலகில் யாழிசையைப் பாடுகின்றோமே; அது மண்ணுல கிற் சென்று அங்குள்ளாரைக் கேட்கும்படி செய்து வியக்கச் செய்கின்றதா? இல்லையே" என்று நாணிப் பாணனாரையும் பாடினியாரையும் போற்றினார்கள் என்று கூறப்பட்டது. (க௩௬)

### பாணனாருக்கு விருந்து செய்வித்தல்

எண்ணரும்சீர்த் திருத்தோணி எம்பெருமான் கழல்பரவிப்
பண்ணமையாழ் இசைகூடப் பெரும்பாணர் பாடியபின்
கண்ணுதலார் அருளினால் காழியர்கோன் கொடுபோந்து
நண்ணியுறை இடஞ்சமைத்து நல்விருந்து சிறந்தளிப்ப. க௩௭

(எ - து.) அளவிடற்கரிய சிறப்பினையுடைய திருத்தோணியப்பருடைய திருவடிகளை வணங்கிப் பண்ணிற் கமைந்துள்ள யாழின்கண் எழிசைகளும் பிற ழாது பொருந்தும்படி பெரிய பாணனார் சிவபெருமானைப் பாடிய பின்னர், தோணியப்பருக்கு உண்டாகிய அருளினால், அப்பெரும்பாணரைப் பிள்ளையார் தமது திருமாளிகைக்கு அழைத்துக்கொண்டு வந்து, பாணனார் தம்முடைய பத்தினியாரோடு தனியே இருந்து வசிப்பதற்கு ஓரிடத்தை அருகே அமைத்து, நல்ல அறுசுவையோடுகூடிய விருந்தினை மனமகிழ்ச்சியுடன் சிறப்பாகச் செய் தருள, என்பதாம். (க௩௭)

பிள்ளையார் அருள்பெற்ற பெரும்பாணர் பிறையணிந்த
வெள்ளநீர்ச் சடையாரை அவர் மொழிந்த *மெய்ப்பதிகம்
உள்ளபடி கேட்டலுமே உருகுபெரு மகிழ்ச்சியராய்த்
தெள்அமிர்தம் அருந்தினர்போல் சிந்தை†களி யுறத்தொழுதார்.

(எ - து.) இவ்வண்ணம் பிள்ளையார் அமுதளிக்கும் திருவருளைப் பெற்ற பெரும்பாணர், சந்திரகலையையும், கங்காநதியையும் அணிந்துள்ள சடையினை

*திருப்பதிகம் - என்றும் பாடம். †களிப்புற - என்றும் பாடம்.

யுடையாரை, அவ்வாளுடைய பிள்ளையார் பாடியருளிய மெய்ம்மைப் பொருள் வாய்ந்த திருப்பதிகங்களைப் பிள்ளையார் ஓதியவண்ணம் அங்குள்ள திருக்கூட்டத்தவர்கள் பாட, அதனைக்கேட்ட அளவில் மனமுருகிப் பெரிய மகிழ்ச்சியினை உடையவராய்த் தெள்ளிய அமிர்தத்தை உண்டவர்போற் சிந்தை களிகூர்ந்து தொழுதனர், என்பதாம்.

இவ்விரண்டு திருப்பாட்டானும், தம் தோணியப்பரிடத்துப் பிள்ளையார் பாணரை அழைத்துக்கொண்டுபோய், அத் தோணியப்பர் வெளியே யாவருங் காணக் கோயிற் சிகரத்தில் வீற்றிருக்கின்றார் ஆகலான், பாணரைக் கோயிலின் முற்றத்தில் நிறுத்தித் தரிசிப்பித்து, யாழிசையும் பாடுவித்து, திருவுள மகிழ்ந்து, பின் அவரை அழைத்துக்கொண்டுவந்து ஓர் தனியிடம் அமைத்து, விருந்திட்டு மகிழ்வித்தனர் என்றும், அவ்வாறு மகிழ்விக்க மகிழ்ந்தவராகிய பாணனார், திருக்கூட்டத்தவர்கள் திருப்பதிகங்களைப் பாடக் கேட்டு "இப்பதிகங்களைப் பாடியருளிய பிள்ளையார் நம்மையும் பாடும்படி செய்து திருவுளமகிழ்ந்தனரே, ஈது என்ன அதிசயம்! இப்படியும் திருவருளிருந்ததோ! இப்பதிக அமிர்தத்தைப் பொழிந்த பெருமான் திருச்செவிக்கு இந்த யாழிசை இனித்ததே! இது என்ன புண்ணியமோ!" என்று மகிழ்ந்து, பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் திருமாளிகையை நோக்கிக் கும்பிட்டனர் என்றும் கூறியவாறும்.　　(கங-அ)

### திருப்பதிகத்தை யாழில்வைத்துப் பாடல்

காழியார் தவப்பயனும் கவுணியர்தந் தோன்றலார்
ஆழிவிடம் உண்டவர்தம் அடிபோற்றும் பதிகஇசை
யாழின்முறை மையின்இட்டே எவ்வுயிரும் மகிழ்வித்தார்
ஏழிசையும் பணிகொண்ட நீலகண்ட யாழ்ப்பாணர்.　　கஙகூ

(எ-து.) குரல் முதலிய ஏழிசைகளையும் தாம் எப்படி எப்படி யாழின்கண் அமைத்துப்பாட எண்ணுகின்றனரோ, அப்படியெல்லாம் இசைந்து நிற்கும்படி கொண்டிருக்கின்ற பெரும்பாணனார், சீகாழியின்கண் வாழ்வாரது தவப்பயனாகியும், கவுணியர் கோத்திரத்துத் தலைவராகியும் உள்ள பிள்ளையார், கடல்விடம் உண்டருளிய இறைவன் திருவடிகளைத் துதிக்கும் திருப்பதிகங்களின் பண்முறைகளைத் தாம் வைத்திருக்கும் யாழில் எழும் இசை முறைமைகளிற் சேர்த்து வாசித்து, சராசரங்களாகிய எவ்வுயிர்களும் மகிழுமாறு செய்வித்தார், என்பதாம்.

காழியிலுள்ளார் அடையும் பயன் சிவஞானமேயாகலான் அச்சிவஞானமே வடிவமாய், சிவஞானமே போனகமாய் உண்டருளி ஒருருவமாய்க் காணப்பெற்றமையான், இவ்வாறுஎப்பதியிலுள்ளாரும்காணப்பெறு அருமைநோக்கி-**காழியார் தவப்பயனும்** என்றும், எந்த எந்தக் கோத்திரமுடையாராலும் 'கவுணியர்தனமே' என்று அழைக்கப்படும் அருமைநோக்கி - **கவுணியர்தம்தோன்றலார்** என்றும், கடல்விடத்தை அமிர்தமாக்கவல்ல அமிர்தேசனுக்கு எப்பொழுதும் உண்டருளும் அரிய அமிர்தமாயிருக்கும் அருமைநோக்கி - **ஆழிவிடம் உண்டவர் தம் பதிகம்** என்றும், அத்திருப்பதிகத்தில் அமைந்து கிடக்கும் பண்ணிசை, ஏழிசையையும் தன்வழி நிறுத்தவல்ல பாணனாருக்கல்லது தேவகந்தருவர் முதலாயினருக்கும் அமையாதென்னும் அருமைநோக்கி - **ஏழிசையும் பணிகொண்ட நீலகண்ட**

யாழ்ப்பாணர், பதிக இசை யாழின் முறைமையின் இட்டே எவ்வுயிரும் மகிழ் வித்தார் என்றும் இத்திருப்பாட்டான் கூறியவாறும்.

ஏனைய கருவிகளின் இசையினும் சிறந்தது யாழின் இசை, அதனினும் சிறந் தது பண்ணிசை, அவ்விசையைத் தனக்கே யுடையது திருப்பதிகம் என்று இசை யின் சிறப்பைக் குறிப்பித்ததுமாம். (௧௩௯)

### பதிகங்களை யாழில்வைத்துப் பாடவேண்டல்

சிறியமறைக் களிறளித்த திருப்பதிக இசையாழின்
நெறியிலிடும் பெரும்பாணர் பின்னும்நீர் அருள்செய்யும்
அறிவரிய திருப்பதிக இசையாழில் இட்டடியேன்
பிறிவின்றிச் சேவிக்கப் பெறவேண்டும் எனத்தொழுதார். ௧௪௦

(எ - து.) எவ்வுயிரையும் மகிழ்வித்த பின்னர் தமிழ்வேதமென்னும் சிறிய யானைக்கன்றாகிய பிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய திருப்பதிகங்களின் பண் ணிசையை, யாழிசையின் நெறியில்வைத்துப் பாடவல்ல பெரும்பாணனார், அங் ஙனம் பாடும் பணியில் அவா மேற்கொண்டவராய்ப் பிள்ளையார் அடிவணங்கி, "சுவாமிகாள், இனி அருள் செய்யும் அறிவரிய திருப்பதிகங்களில் அமைந்துள்ள பண்ணிசைகளை அடியேன் இந்த யாழில் அமைத்துப்பாடும் தொண்டினைப்பெற எண்ணியுள்ளேன், எண்ணியவாறு அடியேன் பெறுவதற்கு, தேவரீரைப் பிரி வின்றிச் சேவித்து வருதலாகிய பாக்கியத்தைப் பெறவேண்டும்" என்று வணங் கினார், என்பதாம்.

புறச்சமயிகளுடைய மதமாகிய கொள்கைகளை அழிக்கவல்ல ஞானமதங் கொண்டு தமிழ்வேதம் என்னும் மதநீரைப் பொழியும் மழகளிறாகலின் - சிறிய மறைக்களிறு அளித்த திருப்பதிகம் என்றும், பொற்றாளத்தில் நின்றெழும் பஞ் சாக்கரவோசையோடு ஒத்தொலிக்கும் திருப்பதிகத்தின் பண்ணோசையை யாழில் நின்றெழும் ஓசையோடும் ஒத்தொலிக்கப் பாடும் திருவருளை ஆளுடைய பிள்ளை யாரிடத்தில் பெற்ற அவ்வொற்றுமையான், அப்பணியில் தாம் என்றும் நீங்கா திருக்கப் பேரவாக் கொண்டனராகலான்-நீர் அருள்செய்யும் அறிவரிய திருப்பதி கம் இசையாழில் இட்டடியேன் பிறிவின்றிச் சேவிக்கப் பெறவேண்டும் எனத் தொழுதார் என்றும் இத்திருப்பாட்டாற் கூறியவாறும். (௧௪௦)

### வேண்டியபடியே பாணனார் அருள்பெற்றது.

மற்றதற்குப் பிள்ளையார் மனமகிழ்வுற் றிசைந்தருளப்
பெற்றவர்தாம் தம்பிரான் அருளிதுவேல் எனப்பேணிச்
சொற்றபிழ்மா லையின்இசைகள் சுருதியாழ் முறைதொடுத்தே
அற்றைநாள் போல்என்றும் அகலாநண் புடன்அமர்ந்தார். ௧௪௧

(எ - து.) பாணனார் வேண்டிய அவ் வேண்டுகோளுக்கு உலகெலாம் உய்ய வந்த பிள்ளையார் திருவுள்ள மகிழ்ந்து, "அங்ஙனமே ஆகுக" என்று அருள் செய்ய, அவ்வருளைப்பெற்ற பாணனார், "பிள்ளையார் செய்த இத்திருவருள் சிவ

* அருளிதுவே என - என்றும் பாடம்.

பெருமான் செய்த திருவருளே யாகும்; சிவனார் அருளும் அவர்மகனார் அருளும் இப்படி ஒத்திருக்குமானால், அப்பணியை அவ்விருவருக்கும் அடிமையாயுள்ள நாம் செய்வதற்கு என்ன ஐய முளது?'' என்று அப்பணியில் மிக்க விருப்பமுடையவராய்ப் பிள்ளையார் அருளிய திருப்பதிக இசைகளைச் சுருதியையுடைய யாழில் முறைமையாக அமைத்துத் தொடுத்து அந்நாள்போல் என்றும் நீங்காத நட்பினுடன் உடன்வாழ்ந்திருந்தனர், என்பதாம்.

உலகெலாம் சிவனது அருட்பணிக்கு ஆளாய்வாழும் வாழ்வை அளிக்கவந்த பிள்ளையாராகலான், அவ்வாழ்வை விரும்பிய பாணருக்கு அவ்வாழ்வை அளித்தல் கடனாகலான் - **மற்றதற்குப் பிள்ளையார் மனமகிழ்வுற்று இசைந்தருள** என்றும், "இப்பிள்ளையார் அருள்செய்த இத்திருவருள் எல்லாவுயிருள்ளும் அனனியமாய்க் கலந்திருக்கும் இறைவனுக்குள்ள அருளாகலான், இப்பிள்ளையார் செய்த அருள் சிவபெருமானருளேயாகும். ஆகவே இப்பணியான் நமக்குச் சிவாபராதம் உண்டாகாது.'' என்று அப்பணியிபற்ற அவாவுடையாராயினாராகலான் - **தம்பிரான் அருளிதுவேல் எனப்பேணி** என்றும், பிள்ளையாரும், ஏனைய அந்தணர்களும், பாணரிடத்து எண்ணவேண்டிய குலத்தை எண்ணாது, அவருக்குண்டாயிருக்கும் அன்பின் ஒழுக்கத்தையும், அவ்வன்பினால் திருப்பதிக இசையை யாழில் அமைத்துப் பாடப்பெற்ற அவ்வன்மையையுமே எண்ணி அவர்பால் நட்பினைக் கொண்டாடினாராகலான் - **அகலா நண்புடன் அமர்ந்தார்** என்றும், பாணர்பால் உண்டாகிய நட்பு இசைநூலானும் அன்பானும் உண்டாகிய நட்பாகலான், "நவில்தொறும் நூல் நயம்போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு,'' என்றுகூறிய இலக்கியத்துக்கு இலக்கணமாய்நின்றது என்னும் அதனை விளக்க - **அற்றை நாள்போல் என்றும் அகலா நண்புடன்** அமர்ந்தார் என்றும் கூறினர். (கசக)

**தந்தையாருக்குத் தில்லைக்குப்போதும் குறிப்புணர்த்தல்.**

சிரபுரத்தில் அமர்ந்தருளும் திருஞான சம்பந்தர்
பரவுதிருத் தில்லைநடம் பயில்வாரைப் பணிந்தேத்த
விரவியெழும் பெருங்காதல் வெள்ளத்தை உள்ளத்தில்
தரஇசையும் குறிப்பறியத் தவமுனிவர்க் கருள்செய்தார். கசஉ

(எ - து.) பாணனார் செய்தி இங்ஙனமிருக்க, சீகாழியில் எழுந்தருளியிருக்கும் ஆளுடைய பிள்ளையார் திருவுள்ளத்தில் வேதங்களெல்லாம் போற்றும் தகராகாசத்தானமாகிய திருத்தில்லையின்கண் ஆனந்தத்தாண்டவம் செய்தருளும் தாண்டவேசனை வணங்கிப் போற்றவேண்டுமென்னும் பெரிய ஆசையாகிய வெள்ளத்தை அத்தாண்டவேசன் திருவருள் உண்டாக்க, அவ்வருளோடு கலந்திருக்கும் அவ்வாசையில் தாம் இசைந்திருக்கும் குறிப்பினைத் தம்மைப் பிள்ளையாகப்பெற்ற தவத்தினையுடைய சிவபாத இருதயர் அறியும்படியாகச் சொல்லி யருளினார், என்பதாம்.

சிரபுரத்தில் அமர்ந்தருளும் திருஞானசம்பந்தர் உள்ளத்தில் பரவு திருத் தில்லை நடம் பயில்வாரைப் பணிந்தேத்த எழுங் காதல் வெள்ளத்தைத்தர விரவி எழும் குறிப்பறியத் தவமுனிவர்க்கருள்செய்தார் எனக்கூட்டிப் பொருள்கொள்க.

திருஞானசம்பந்தப் பிள்ளையார் தமக்கு ஞானப்பால் ஊட்டித் தம்மைப் பிரியாது காட்சி கொடுத்து இருக்கும் தந்தையாகிய தோணியப்பரிடத்துத் தாமும் பிரியாது இருக்கும் இயல்பினை உடையவராயிருக்க, அவரது திருவுள்ளத்தில் தில்லை நடராஜன்தம்மைத் தரிசிக்க வேண்டுமென்னும் பெரிய ஆசை வெள்ளத்தைத் தமது திருவருளால் உண்டாக்க, அவ்வருளிலும் அவ்வருளால் எழுந்த ஆசையிலும் தம் உள்ளமானது கலந்து எழுகின்ற குறிப்பினைச் சிவபாத இருதயருக்குக் கூறினர் என்று இத்திருப்பாட்டாற் கூறப்பட்டது. (கசஉ)

### தோணியப்பரைத் தொழுது தில்லைக்குப் புறப்படல்

பிள்ளையார் அருள்செய்யப் பெருந்தவத்தால் பெற்றெடுத்த
வள்ளலார் தாமும்உடன் செல்வதற்கு மனங்களிப்ப
வெள்ளிமால் வரையென்னத் திருத்தோணி வீற்றிருந்த
புள்ளிமான் உரியாரைத் தொழுதருளால் புறப்பட்டார். கசங

(எ - து.) பிள்ளையார் தமது திருவுள்ளக் குறிப்பினைத் தம்மைப் பெருந்தவத்தினல் பெற்றெடுத்தவராகிய சிவபாத இருதயருக்குச் சொல்லியருள, அவ்வள்ளலாரும் அப்பிள்ளையாருடன் போவதற்கு விழைய, அவ்விழைவினுல் தமது மனமும் களிப்பினையடைய, அதனைப் பிள்ளையார் கண்டு, வெள்ளியங்கிரியைப் போல் விளங்கும் திருத்தோணியில் எழுந்தருளிய, புள்ளிமான்தோலை ஆடையாக உடுத்தியிருக்கின்ற இறைவரை வணங்கி, அப்பெருமான் திருவருள்பெற்று அங்குநின்றும் புறப்பட்டனர், என்பதாம்.

வெள்ளியங்கிரியில் வீற்றிருப்பது போலும் இங்குத் திருத்தோணியின் சிகரத்தில் வீற்றிருக்கின்றனர் ஆகலான் - வெள்ளி மால்வரை என்னத் திருத்தோணி வீற்றிருந்த புள்ளிமான் உரியாரை என்றார்.

பிள்ளையாரது திருக்குறிப்பின்படி மாறுதொழுகும் வள்ளலார் ஆகலான், தாமும் உடன் செல்வதற்கு மனம் களித்தனரென்னும் அக்குறிப்பினைப் பிள்ளையார் உணர்ந்து, திருத்தோணியப்பரிடத்தில் நடராஜப்பெருமானைத் தரிசித்து வருதற்கான விடைபெற்றுத் திருத்தில்லைக்குப் போகப் புறப்பட்டனர் என்று இத்திருப்பாட்டாற் கூறப்பட்டது. (கசங)

தாவில்யாழ்ப் பாணரொடும் தாதையார் தம்மோடும்
மேவியசீர் அடியார்கள் புடைவரவெங் குருவேந்தர்
பூவின்மேல் அயன்போற்றும் புகலியினைக் கடந்துபோய்த்
தேவர்கள்தம் பெருந்தேவர் திருத்தில்லை வழிச்செல்வார். கசச

(எ - து) வெங்குரு என்னும் திருப்பெயருடைய சீகாழிக்குத் தலைவராகிய ஆளுடைய பிள்ளையார் யாழிசையில் வல்லவராகிய திருநீலகண்ட யாழ்ப்பாணரோடும் தந்தையாராகிய சிவபாத இருதயரோடும், தம்மைவிட்டுப் பிரியாது வாழும் சிறப்பினையுடைய அடியவர் திருக்கூட்டத்தவர் சூழ்ந்துவர, தாமரை மலரில் வசிக்கும் பிரமனல் போற்றப்பட்ட சீகாழியைக் கடந்து சென்றருளி, தேவர்களுக்கெல்லாம் பெரிய தேவனுகிய நடேசப்பெருமானது திருத்தில்லையின் வழியே சென்றருள்வாராயினர், என்பதாம். (கசச)

### வேறு

### கொள்ளிட நதியையடைதல்

நள்இ ருட்கணின் ஞுடுவார் உறைபதி நடுவுகண் டனபோற்றி
முள்ளு டைப்புற வெள்ளிதழ்க் கேதகை முகிழ்விரி மணஞ்சூழப்
புள்ளு டைத்தடம் பழனமும் படுகரும் புடைகழிந் திடப்போந்து
கொள்ளி டத்திரு நதிக்கரை அடைந்தனர் கவுணியர் குலதீபர்.

(எ - து) கவுணியர்குலதீபராகிய பிள்ளையார் தில்லையை நோக்கிப் புறப் பட்டு எழுந்தருளி வரும்போது, மகாசங்கார காலத்தில் படரும் நடுராத்திரி யில் உமாதேவியார் காண நின்று நடனஞ் செய்தருளும் தில்லைப்பதிக்கு நடுவி லுள்ள திருக்குருகாவூர் முதலிய பலதிருத்தளிகளைக் கண்டு அங்கங்கும் இறை வனைப் போற்றி, புறத்திடையே முட்களையுடைய வெள்ளிய இதழ்களோடு கூடிய தாழைகளின் பூக்கள் விரிந்து எங்கும் நறுமணம் சூழ்ந்து வீச, பறவை கள் சூழ்ந்திருக்கும் பெரிய வயல்களும், நீர்நிலைகளும் வழியின் இருபக்கங் களிலும் கடந்து போக, கொள்ளிட நதியின் கரையை அடைந்தருளினர், என்பதாம். (கசரு)

### கொள்ளிடநதியைக் கடந்து போதல்

வண்டி ரைத்தெழு செழுமலர்ப் பிறங்கலும் மணியும்ஆ ரமும்உந்தித்
தண்ட லைப்பல வளத்தொடும் வருபுனல் தாழ்ந்துசே வடிதாழத்
தெண்டி ரைக்கடல் பவளமும் பணிலமும் செழுமணித் திரள்முத்தும்
கொண்டிரட்டி*வந் தோதம்அங் கெதிர்கொளக் கொள்ளிடங் கடந்தேறி.

(எ - து.) வண்டுகள் இரைச்சலிட்டுத் தேனுண்ணத் திரியும் செழுமை யான பூக்களாகிய மலைகளையும், முத்துக்களையும் சந்தனக் கட்டைகளையும் வாரிக் கொண்டு, சோலையிலுள்ள பலவளங்களோடு வருகின்ற கொள்ளிடநதியின் வெள்ளப் பெருக்கமானது அடங்கி, பிள்ளையாரது திருவடிக்கீழ் வணங்கித் தாழவும், தெள்ளிய அலைகளையுடைய கடலில்நின்றும் வருகின்ற ஓதமானது (அலைகளானது) பவளங்களையும் சங்குகளையும் இரத்தினங்களையும் முத்துக்களை யும் வாரிக்கொண்டு வீசித் தம்மை எதிர்கொள்ளவும் கொள்ளிடநதியைக் கடந்தேறி, என்பதாம்.

பிள்ளையார் எழுந்தருளிவரும்போது மேற்றிசையில்நின்றும் வரும் கொள்ளி டநதியானது வெள்ளப் பெருக்கடங்கித் திருவடியளவாகச் செல்லுதலால் அத் தோற்றமானது, கொள்ளிடநதியானது மலர்கள் முத்துக்கள் முதலியவற்றைத் திருவடியிலிட்டு வணங்குதல்போல் இருந்ததென்றும், கீழ்த்திசையில்நின்றும் வரும் கடலின் பேரலையானது தன்னிடத்துள்ள பவளம் முதலிய திரவியங்களை யெல்லாம் வாரிக்கொண்டு கரையின்கண் வீசும் அத்தோற்றமானது, வருண தேவன் எதிர்கொண்டழைக்க வருதல் போலும் இருந்ததென்றும் கூறினர்.

### தில்லை எல்லையைக் கண்டு வணங்கல்

பல்கு தொண்டர்தங் குழாத்தொடும் உடன்வரும் பயின்மறையவர்சூழச்
செல்க திப்பயன் காண்பவர் போற்களி சிந்தைகூர் தரக்கண்டு

*உந்தோதம் - என்றும் பாடம்.

மல்கு தேவரே முதல்அனைத் துயிர்களும் வணங்கவேண் டினஎல்லாம்
நல்கு தில்லைசூழ் திருவெல்லை பணிந்தனர் ஞானஆ ரமுதுண்டார். (கசஎ)

(எ - து.) திருவருள் கலந்த ஞானப்பாலுண்டருளிய பிள்ளையார், தம்முடன் பிரியாது நிறைந்து வரும் அடியவர் திருக்கூட்டங்களோடும், வேதங்களை ஓதுகின்ற வேதியர் கூட்டங்களும் சூழ்ந்து வரவும், அவர்கள் சென்று அடையத் தக்க கதிப்பயனை இன்னது இன்னது என்று மதித்து அளவிட்டுப் பார்ப்பவர் போலத் தமது திருவுள்ளத்தில் களிப்பு அதிகரிக்க அவர்களைப் பார்த்தருளி, எவ்விடத்திலும் இருக்கும் தேவர் முதலிய எல்லாவுயிர்களும் கண்டு வணங்கிய மாத்திரத்தில் வேண்டியாங்கு அருள் செய்யும் திருத்தில்லையைச் சூழ்ந்திருக்கும் எல்லையைக்கண்டு வணங்கியருளினர், என்பதாம்.

அடியவர் திருக்கூட்டங்களும் அந்தணர் கூட்டங்களும் எங்கும் பரவிச் சூழ்ந்து வருதலை ஞானமுண்ட பிள்ளையார் கண்டு அடங்காத ஆனந்தம் கொண்டு பார்த்தருளினர் என்றும், பார்த்த அத்தோற்றமானது, "இவர்கள் இனிப் பிறவாக் கதியை அடையுமாறு செய்யவேண்டும்" என்று திருவுளத் தெண்ணி அக்கதிப்பயனை இத்துணைத்தெனக் கணிப்பவர்போலும் இருந்ததென்றுங் கூறினர். (கசஎ)

## பொய்கைகளின் தோற்றச் சிறப்பு

செங்க ண்ஏற்றவர் தில்லையே நோக்கியித் திருந்துல கினிற்கெல்லாம்
மங்க லந்தரு மழஇளம் போதகம் வரும்இரு மருங்கெங்கும்
தங்கு புள்ளொலி வாழ்த்துரை எடுத்துமுன் தாமரை மதுவாசப்
பொங்கு செம்முகைக் கரங்குவித் தலர்முகங் காட்டின புனற்பொய்கை.

(எ - து.) வேதசிவாகமங்களால் திருத்தப்பட்டிருக்கும் எல்லா வுலகங்களுக்கும் சிவமங்கலத்தைத் தந்தருளும் இளங்களிறாகிய ஆளுடைய பிள்ளையார், சிவந்த கண்களையுடைய இடபவூர்தியையுடைய நடராசன் எழுந்தருளியிருக்கும் திருத்தில்லையை நோக்கி வரும்போது, இரண்டு பக்கங்களினும் இருக்கின்ற நீர் நிறைந்த தடாகங்கள் வாய்திறந்து மங்கல வாழ்த்துக்களைச் சொல்வது போல, பறவைகளை வாயாகக் கொண்டு களிப்பினையுடையனவாய்க் கூவி, அப்பிள்ளையார் காணும்படி அவர் முன்னே தேன்மணக்கின்ற செந்தாமரையின் அரும்புகளாகிய கைகளைக் குவித்துத் தாமரை மலர்களாகிய முகங்களை மலர்ந்து காட்டின, என்பதாம்.

இத் திருந்து உலகினிற்கெல்லாம் மங்கலந்தரும் மழஇளம் போதகம், செங்கண் ஏற்றவர் தில்லையே நோக்கிவரும் மருங்கெங்கும் தங்குபுனற்பொய்கை, புள் ஒலி வாழ்த்துரை எடுத்து, (அவர்) முன் தாமரை மதுவாசப் பொங்கு செம் முகைக் கரங்குவித்து அலர்முகங் காட்டின எனக்கூட்டிப் பொருள்கொள்க.

பிள்ளையார் தில்லையை நோக்கிவரும்பொழுது, இருபக்கங்களினும் உள்ள பொய்கைகள், தம்மிடத்துத் தங்கியிருக்கும் பறவைகளையே வாயாகக்கொண்டு மங்கலவாழ்த்துக்களைச் சொல்லியும், செந்தாமரையின் அரும்புகளையே கைக

ளாகக்கொண்டு கும்பிட்டும், செந்தாமரை மலர்களை முகமாகக்கொண்டு இனிய முகத்தைக் காட்டியுங் களிக்கச் செய்தன என்றுங் கூறினர். (கசஅ)

மலர்ச்சோலைகளின் தோற்றச் சிறப்பு

கலவ மென்மயில் இனங்களித் தழைத்திடக் கடிமணக் குளிர்கால்வந்
துலவி முன்பணிந் தெதிர்கொளக் கிளர்ந்தெழுந் துடன்வரும் சுரும்பார்ப்ப
இலகு செந்தளிர் *ஒளிநிறந் திகழ்தர இருகுழை புடையாட
மலர்மு கம்பொலிந் தசையமென் கொம்பர்நின் றாடுவமலர்ச் சோலை.

(எ - து) மலர்களையுடைய பூஞ்சோலையானது, கலாபத்தையுடைய மிருதுவான மயிற்கூட்டங்களைக் கொண்டு அழைக்கச் செய்யும், வாசமிக்க தென்றற் காற்றைக்கொண்டு முன்னே வந்து நின்று உலாவி வணங்கி எதிர்கொள்ளச் செய்தும், மேலெழுந்து நெருங்கித் தென்றற் காற்றோடு வரும் வண்டுகளைக் கொண்டு சந்தோஷத்தைக் காட்டும் ஆரவாரங்களைச் செய்யச் செய்தும், சிவந்து விளங்கும் தளிர்களைக்கொண்டு செவ்வொளி பரப்பச்செய்தும், பெரிய இலைக்கொத்துகளைக் கொண்டு ஆடும்படி செய்தும் மலராகிய முகம் பொலிவினை யடைந்தசைய மெல்லிய பூங்கொம்புகள் ஆடுவனவாயிருக்கும், என்பதாம்.

பூஞ்சோலைகளின் தோற்றமானது, வருகின்ற பிள்ளையாரை, மயிற்கூட்டங்களைக்கொண்டு அழைத்தும், தென்றற் காற்றைக்கொண்டு எதிர்நின்று வணங்கி எதிர்கொண்டும், தளிர்களைக்கொண்டு எங்கும் பிரகாசத்தை உண்டாக்கி வண்டுகளைக்கொண்டு ஆரவாரங்களைச்செய்தும், இலைக் கொத்துகளைக்கொண்டு ஆனந்தக் கூத்தாடியும், மலராகிய முகம் பொலிவினையடைந்து, பூங்கொம்புகளைக் கொண்டு ஆடாநிற்கும் என்று கூறினர். (கசக)

நெற்பயிர்களின் தோற்றச் சிறப்பு

இழைத்த டங்கொங்கை இமயமா மலைக்கொடி இன்னமு தெனஞானம்
குழைத்த ளித்திட அமுதுசெய் தருளிய குருளையார் வரக்கண்டு
மழைத்த மந்தமா ருதத்தினல் நறுமலர் வண்ணநுண் துகள்தூவித்
தழைத்த பொங்கெழில் முகஞ்செய்து வணங்கின தடம்பணை வயற்சாலி.

(எ - து.) பரந்துகிடக்கும் மருதநிலத்திற் பொருந்திய வயல்களில் உள்ள நெற்பயிர்கள், ஆபரணங்களோடு விளங்கும் பெரிய தனங்களையுடைய பர்வதராஜ புத்திரியாகிய பெரியநாயகியார், இனிய அமுதமென்று ஞானத்தைக் குழைத்து ஊட்டியருள அதனைத் திருவமுதுசெய்த இளஞ்சிங்கத்தையொத்த பிள்ளையார் எழுந்தருளிவர, அவரைப்பார்த்து, குளிர்ந்த சிறு தென்றற்காற்றினல் நறுமணமுள்ள மலர்களையும், அழகிய நுண்ணிய மகரந்தப் பொடிகளையும் தூவி, தழைந்து ஓங்கியிருக்கும் தமது அழகிய முகத்தைக் காட்டித் தலைவணங்கி நிற்கும், என்பதாம்.

தடம்பணை வயற்சாலி இழைத்தடங் கொங்கை, எனக்கூட்டுக.

வயல்களில் நெற்பயிர்கள் நிறைந்து தழைத்துக் கதிர்விட்டு ஓங்கிச் சாய்ந்திருக்கும் தோற்றமானது, ஞானமுண்ட பிள்ளையாரது வரவை நோக்கி, "தேவ

* மெய்யொளி சிறந்திட - என்றும் பாடம்.

ரீருக்கு யாங்கள் என்ன செய்ய இருக்கின்றது! தேவரீர் பசிப்பிணி யறியாத தெய்வ மூர்த்தி" என்று போற்றித் தென்றற் காற்றினுல் மலர்களேயும் மகரந்தங் களேயும் வீசித் தலேவணங்கி நிற்குமென்று கூறியவாரும். (கஙO)

### கமுகமரங்களின் தோற்றச் சிறப்பு

ஞாலம் உய்ந்திட ஞானமுண் டவரெழுந் தருளும்அந் நலங்கண்டு
சேல்அ லம்புதண் புனற்றடம் படிந்தணை சீதமா ருதம்வீசச்
சால வும்பல கண்பெறும் பயன்பெறும் தன்மையிற் களிகூர்வ
போல்அ சைந்திரு புடைமிடைந் தாடின புறம்பணை நறும்பூகம்.

(எ - து.) மருதநிலத்தின்கண் உள்ள வயல்களின் புறத்தே நிற்கும் நல்ல கமுக மரங்கள், உலகினர் உய்யும்பொருட்டுச் சிவஞானப்பாலே உண்டருளிய பிள்ளேயார் எழுந்தருளும் அந்நலத்தை நோக்கி, "கெண்டைமீன்கள் கலக்குகின்ற குளிர்ந்த நீரையுடைய தடாகங்களில் படிந்து வருகின்ற குளிர்ந்த தென்றற் காற்ருனது வீச, அளவில்லாத கமுகுகளின் கொத்துக்களென்னும் பல கண்களே நாம் பெற்றிருத்தலினுல் ஆகிய பயனே இப்போது அடையப் பெற்ருேம்" என்று எண்ணி அத்தன்மையினுல் களிப்பு மிகுந்ததுபோல அசைந்து இருபக்கத் திலும் நெருங்கி ஆடின, என்பதாம்.

கமுகமரங்கள் அசைந்தாடும் தோற்றம், "நாம் பாக்குக் கொத்துக்களே உடை யனவா யிருக்கின்ருேம்; அவை நமக்குப் பல கண்கள்போல் காணப்படுகின்றன. இவ்வளவு கண்களேப் பெற்றதனுல் நாம் அடையப்பெறும் பயன், ஞானபோனகம் உண்ட பிள்ளேயாரை இன்று நன்ருய்க் காணப்பெற்ருேமே, இதுவன்றி நமக்கு வேறென்ன பயன் வேண்டும்?" என்று களிகூர்ந்து அசைந்து ஆடுவனபோல் இருந்ததென்று கூறினர். (கஙக)

### ஆகாயத்தின் தோற்றச் சிறப்பு

பவந்த விர்ப்பவர் தில்லேசூழ் எல்லேயின் மறையவர் பயில்வேள்விச்
சிவந்த ரும்பயன் உடையஆ குதிகளின் செழும்புகைப் பரப்பாலே
தவந்த ழைப்பவந் தருளிய பிள்ளேயார் தாம்அணே வுறமுன்னே
நிவந்த நீலநுண் துகில்விதா னித்தது போன்றது நெடுவானம். கஙஉ

(எ - து.) பெரியஆகாயமானது, உலகில் தவநெறிகள் தலேயெடுப்பவந்து அவதாரஞ்செய்தருளிய பிள்ளேயார் இங்கெழுந்தருளுவாராகலான் அதன் நிமித் தம், தம்மைக் கண்டவர்களது பிறவியை நீக்கியருளும் நடராஜப்பெருமான் எழுந்தருளியிருக்கும் தில்லேயைச்சூழ்ந்த எல்லேயில் வாழும் அந்தணர்கள் செய் கின்ற யாகத்தில் இடுகின்ற, உயிர்களுக்குவேண்டிய நன்மைகளேத்தரும் பயன் களேயுடைய நெய் முதலிய ஆகுதிப் பொருள்களில் உண்டாகும் செழுமை பொருந்திய புகை என்கின்ற நீல நிறமுள்ள நல்ல வஸ்திரத்தை எடுத்துக்கொண்டு முற்பட்டுவந்து மேல் விதானங்கட்டியதுபோலிருந்தது என்பதாம்.

நெடுவானம், பவந்தவிர்ப்பவர் எனக்கூட்டுக,

தில்லையில் வாழும் அந்தணர்கள் செய்யும் யாகப்புகை ஆகாயத்திற் பரவியிருக்குந் தோற்றமானது, தவந்தழைப்ப அவதாரஞ் செய்தருளிய பிள்ளையார் பவந்தவிர்ப்ப ஆடுகின்ற ஆனந்தக்கூத்தனைத் தரிசிக்க வருகின்றாராகையால் அப்பெருமானுக்கு நாம் எங்கும் நிழல் பரப்பவேண்டும் என்று ஆகாயமானது அன்புடைமை கொண்டு, அங்கு அந்தணர்கள் செய்யும் யாகத்தினின்றெழும் செழுமையுடைய புகையையே நீலவஸ்திரமாகக் கொண்டு ஆகாயம் முழுவதும் பரப்பியது போலும் என்று கூறினர். (கஙூஉ)

நெடுவனம், பவந்தவிர்ப்பவர் எனக்கூட்டுக.

**தென்திருவாயில் வந்தணைதல்.**

கரும்பு செந்நெல்பைங் கமுகொடு கலந்துயர் கழனியம் பணைநீங்கி
அரும்பு மென்மலர் தளிர்பல மூலமென் றனைத்தின்ஆ கரமான
மருங்கில் நந்தன வனம்பணிந் தணைந்தனர் மாடமா ளிகையோங்கி
நெருங்கு தில்லைசூழ் நெடுமதில் தென்திரு வாயினேர் அணித்தாக.

(எ - து.) ஆளுடைய பிள்ளையார், கரும்பும் செந்நெற்பயிர்களும் பசிய சமுகமரங்களோடுங் கலந்து செழுமைபடைத்துள்ள வயல்களோடுங்கூடிய மருதநிலங்களைக் கடந்து, முகைகளும் மெல்லிய மலர்களும் தளிர்களும் பழங்களும் கிழங்குகளும் என்று சொல்லப்பட்ட எல்லாப்பொருள்களுக்கும் மூலமாயுள்ள பிறப்பிடமான தில்லையின் பக்கங்களில் உள்ள திருநந்தனவனங்களைப் பணிந்து, மாடங்களும் மாளிகைகளும் மேலோங்கி நெருங்கியுள்ள தில்லையைச்சூழ்ந்த நெடியமதிலின் தென்திசைத் திருவாயிலின் நேரே சமீபமாக எழுந்தருளினர், என்பதாம்.

இவ்வொன்பது திருப்பாட்டானும், பிள்ளையார் சீகாழியைவிட்டுத் தில்லையைநோக்கிப் புறப்பட்டுக் கொள்ளிடக்கரையை வந்தடைந்ததும், பின்னர் அந்நதியைக் கடந்து வந்ததும், வந்து தில்லை எல்லையைப் பணிந்ததும், எல்லைக்குள் எழுந்தருளித் தென்திருவாயிலை யடையும் அளவும் ஆங்காங்குள்ள நீர்நிறைந்துள்ள பொய்கைகளின் தோற்றமும், மலர்ச்சோலைகளின் தோற்றமும், நெற்பயிர்களின் தோற்றமும், கமுகுகளின் தோற்றமும், ஆகாயத்தின் தோற்றமும் ஆகிய இவைகளின் சிறப்பும், ஆளுடைய பிள்ளையாரை இவைகளெல்லாம் உபசரிப்பனவாக இருந்த காட்சியும் விதந்து கூறப்பட்டு இத்திருப்பாட்டில் தென்திருவாயிலை அடைந்தருளினமை கூறப்பட்டது. (கஙூங)

**பிள்ளையாரை அழைக்க எதிர்கோள்ளல்**

பொங்கு கொங்கையில் கறந்தமெய்ஞ் ஞானமாம் போனகம் பொற்குன்ற
மங்கை செங்கையால் ஊட்டவுண் டருளிய மதலையார் வந்தாரென்
றங்கண் வாழ்பெருந் *திருத்தில்லை அந்தணர் அன்பர்களுடன் ஈண்டி
எங்கும் மங்கல அணிமிக அலங்கரித் தெதிர்கொள அணைவார்கள். கஙூச

(எ - து.) "பர்வதராஜ புத்திரியாகிய உமாதேவியார், தம்முடைய தனங்களிற்பூரித்த மெய்ஞ்ஞானமாகிய திருவமுதினைத் தம்முடைய சிவந்த திருக்கரங்

* தில்லைவாழ்—என்றும் பாடம்.

களால் கறந்து ஊட்ட உண்டருளிய பிள்ளையார் தில்லைத் தென்திருவாயிலை அடைந்தருளினர்'' என்று அத்தில்லையின்கண் வாழ்கின்றவர்களாகிய தில்லை மூவாயிரவர்களென்று பெருமை பெற்ற அந்தணர்கள் அறிந்து, அகம்படித் தொண்டர்களாகிய அடியார்களோடு தில்லை முழுவதும் மங்கலகரமான அழகிற் சிறந்த அலங்காரங்களைச் செய்து பிள்ளையாரை எதிர்கொள்ள வருவார்களாயினர்கள், என்பதாம்.

''தில்லையின்கண் எல்லையில்லாத காலம் நடராஜன் நடனம் செய்பவராகவும், சிவகாமியார் அந்நடனத்தைப் பார்த்திருப்பவராகவும் முன்னுள்ளாரும் சொல்லக் கேட்டிருக்கின்றோம், நாமும் இன்றளவுங் காண்கின்றோம்; இதுவன்றி, சிவகாமியார் ஞானப்பாலைக் கறந்து யாருக்காவது ஊட்டினரா! அதனை யாராவது உண்டு பாடினர்களா? ஞானத்தைப் பாலாகக் கறந்ததும், அதனை உண்டு தமிழாக யாவரும் உண்ணப்பொழிவதும் என்றும் யாவரும் காணா அதிசயம்'' என்று அதிசயித்து ஞானமுண்டவரும் பிள்ளையாரை எதிர்கொண்டழைக்க, அந்தணர்கள் தமது கூட்டமேயன்றி அடியார்களையும் பெருங்கூட்டமாக அழைத்துக்கொண்டு சென்றனரென்று இத்திருப்பாட்டாற் கூறப்பட்டது. (கருச)

### பிள்ளையாரைத் தில்லைக்குள் அழைத்து வருதல்

வேத நாதமும் மங்கல முழக்கமும் விசும்பிடை நிறைந்தோங்கச்
சீத வாசநீர் நிறைகுடம் தீபங்கள் திசையெலாம் நிறைந்தாரச்
சோதிமாமணி வாயிலின் புறஞ்சென்று சோபனஆக் கமும்சொல்லிக்
கோதி லாதவர் ஞானசம் பந்தரை எதிர்கொண்டு கொடுபுக்கார்.

(எ - து.) அவச்செயலை என்றும் ஒழித்தவர்களாகிய தில்லைவாழந்தணர்கள், வேதவோசையும் மங்கல வாழ்த்தொலிகளும் விண்ணுலகத்தில் நிறைந்து மேலோங்கி ஒலிக்கவும், தண்ணியதாய் நறுமணங் கமழும் தீர்த்தம் நிறைந்துள்ள பூரணகும்பங்களும் தீபங்களும் எத்திசைகளிலும் நிறைந்திருக்கவும், ஒளி பரப்பும் இரத்தினங்கள் அழுத்திய தென்மதில் திருவாயிலின் புறம்பே சென்று, வேதங்களிற் கூறும் மங்கலகரமாகிய ஆசிவசனங்களைச் சொல்லி, ஆளுடைய பிள்ளையாரை எதிர்கொண்டு அழைத்துத் தில்லைக்குள் எழுந்தருளிவரச் செய்தனர், என்பதாம்.

கோதிலாதவர் வேதநாதமும் மங்கலமுழக்கமும் வாயிலின்புறஞ் சென்று சோபன ஆக்கமும் சொல்லி ஞானசம்பந்தரை எதிர்கொண்டு கொடுபுக்கார் எனக்கூட்டிப் பொருள் கொள்க.

''இப்பிள்ளையார், பிள்ளைமைப் பருவமுடைய மூவாண்டிற்றானே ஞானசம்பந்தராய், ஞானசம்பந்தர் என்னும் திருநாமமும் உடையவராய் வெளியே வந்தனர். நமக்கெல்லாம் எத்தனையோ ஆண்டுகளாயும் ஞானசம்பந்தம் உடையோம் என்பதை அறிவதற்கில்லை. இனியேனும் ஞானசம்பந்தரது சம்பந்தமேனும் கிடைக்கப் பெறுவோமாயின் இன்று நம்மைக் காண்பவர்களெல்லாம் ஞானசம்பந்தர் திருக்கூட்டமென்று சொல்வார்களல்லவா?'' என்னும் அவாக் கொண்டு தில்லைப்பதியை அலங்கரித்து, எதிர்கொண்டு, பிள்ளையாருடன் கூடி, யாவரும் ஞானசம்பந்தம் உடையவர்களாய்த் தில்லையுட் புக்கார் என்று இத்திருப்பாட்டாற் கூறப்பட்டது. (கருரு)

### பிள்ளையார் வீதியைத் தொழுதல்

செல்வ மல்கிய தில்லைமூ தூரினில் தென்திசைத் திருவாயில்
எல்லைநீங்கியுள் புகுந்திரு மருங்கினின் றெடுக்குமஎத் தொலிசூழ
மல்லல்ஆவண மறுகிடைக் கழிந்துபோய் மறையவர் நிறைவாழ்க்கைத்
தொல்லைமாளிகை நிரைத்திரு வீதியைத் தொழுதணைந் தனர்தூயோர்.

(எ - து.) ஆளுடைய பிள்ளையார், செல்வம் நிறைந்த திருத்தில்லை என்னும் பழைய திருப்பதியின் தென்திசைக்கண்ணுள்ள திருவாயிலின் எல்லையைத் தாண்டி உள்ளேபுகுந்து இருபக்கங்களினும் அந்தணர் முதலியோர் நின்று கூறும் வாழ்த்தொலி சூழ, பல பொருள்களாலும் வளம் பெற்றுள்ள கடைவீதியைக் கடந்து அப்புறஞ் சென்று, தில்லை மூவாயிரவர்கள் நிறைந்து வாழும் வாழ்க்கையினையுடைய பழைய திருமாளிகைப் பத்தியோடுகூடிய திருவீதியை வணங்கி அப்புறம் எழுந்தருளினர், என்பதாம்.

தூயோர், செல்வமல்கிய தில்லைமூதூரினில் திருவீதியைத் தொழுதணைந்தனர் என்று கூட்டிப் பொருள் கொள்க.

ஞானசம்பந்தமூர்த்தி அநாதிமலமுத்தராகலான் - தூயோர் என்றார். (கடுசு)

### கோபுரத்தைக்கண்டு வணங்கல்.

மலர்ந்த பேரொளி குளிர்தரச் சிவமணம் கமழ்ந்துவான் துகள்மாறிச்
சிலம்ப லம்புசே வடியவர் பயில்வுறும் செம்மையால் திருத்தொண்டு
கலந்த அன்பர்தம் சிந்தையில் திகழ்திரு வீதிகண் களிசெய்யப்
* பலன்கொள் மைந்தனர் எழுநிலைக் கோபுரம் பணிந்தெழுந் தனர்போற்றி.

(எ - து) சிவமணமானது எவ்விடத்தும் பரந்து மேலெழுந் தூசுகளை மாற்றி, எங்கும் பரந்து பேரொளியைத் தரும் சூரியப் பிரகாசத்தினால் உண்டாகும் வெம்மையைப் போக்கிக் குளிர்ச்சியைச் செய்ய, சிவநாம உச்சாரணைகளையும் சிவவேடங்களையும் உடைய சிலம்பொலிக்கும் குஞ்சிதபாதத்தையுடைய நடராஜப் பெருமானின் அடியவர்கள் எப்பொழுதும் நீங்காது உலவும் சிறப்பினால் இறைவனுடைய திருத்தொண்டுகளில் கலந்திருக்கும் அவ்வன்பர்களுடைய சிந்தையைப் போல விளங்குகின்ற திருவீதியானது கண்களைக் களிக்கச்செய்ய, அங்ஙனங் களிக்கச்செய்வதனால் அடையப்படும் பலனைக் கொள்ளத்தக்கவராகிய ஆளுடைய பிள்ளையார் எழுநிலையோடு கூடியுள்ள கோபுரத்தைக் கண்டு பணிந்தெழுந்து தோத்திரஞ் செய்தனர், என்பதாம்.

தில்லையின்கணுள்ள தேரோடும் பெரிய வீதியில், திருமேனி முற்றும் திருநீற்றினையும் உருத்திராக்கமணிகளையும் அணிந்து, நடராஜனுடைய திருநாமத்தைக் கூத்தாடிக் கூத்தாடிச் சொல்லும் அடியவர் திருக்கூட்டங்கள் நிறைந்திருக்கும் மிகுதியினால் வேடத்தின் பொலிவானது சூரியனுடைய வெப்பத்தைக் குளிரச்செய்கின்றதென்றும், சிவநாமோச்சாரணையானது நடராஜனுடையஅருண் மணத்தை எங்கும் வீசச்செய்கின்றதென்றும், அவ்வடியவர் நாமோச்சாரணை செய்து கூத்தாடிச்செல்லும் அச்செய்கையினால் உண்டாகும் தூசுகள் வேறு

* புலங்கொள்-என்றும் பாடம்.

வகையினுலுண்டாகும் மண்புழுதிகளை மாறும்படி செய்வதென்றும், இவ்வண்ணமான சிறப்பான் அன்பர்கள் சித்தத்தைப்போல் அவ்வீதி பிரகாசித்துக் களிக்கச் செய்கின்றதென்றும், அக்களிப்புக்குரியராகிய ஆளுடையபிள்ளையார் அக்களிப்பினைக்கண்டு திருவுள்ளம் மகிழ்ந்தனரென்றும், இம்மகிழ்ச்சிபோல் ஒன்றின்மேலொன்ருக நிலைகளால் மேலோங்கியிருக்கும் கோபுரத்தைக் கண்டு வணங்கினரென்றும், இத்திருப்பாட்டான் கூறியவாறும்.

இதனுல், தென்திசையை நோக்கி நடராஜப்பெருமான் நடனஞ் செய்கின்ருராகலின் அப்பெருமானைக் காலங்கள்தோறும் அடியவர் திருக்கூட்டத்தவர்கள் அத்தெற்கு வீதியில் நீங்காது நின்று தரிசிக்கும் சிறப்பினைக்கூறியதுமாம். (கடுஎ)

### திருவணுக்கன் திருவாயிலையடைதல்.

நீடு நீள்நிலைக் கோபுரத் துள்புக்கு நிலவிய திருமுன்றில்
மாடுசெம்பொனின் மாளிகை வலங்கொண்டு வானுற வளர்திங்கள்
சூடு கின்ற பே ரம்பலம் தொழுதுபோந் தருமறை தொடர்ந்தேத்த
ஆடு கின்றவர் முன்புற அணைந்தனர் அணிகிளர் மணிவாயில். கடுஅ

(எ - து.) பெரிய நிலைகளால் மேலோங்கி யிருக்கும் திருக்கோபுரத்தைக் கண்டு வணங்கியபின், உள்ளே புகுந்தருளி, அங்கு விளங்காநின்ற திருமுற்றத்தினருகே செம்பொன்னுலாகிய திருமாளிகையை வலஞ்செய்து, ஆகாயமளவும் வளர்ந்து அங்கு உயர்ந்திருக்கின்ற இளம்பிறையைத் தாங்கிய பேரம்பலம் என்னும் பொன்னம்பலத்தைக் கண்டு வணங்கிச் சென்றருளி, அரிய வேதங்கள் தொடர்ந்து துதிக்க ஆனந்த நடனஞ் செய்யும் நடராஜன் முன்னே அழகு பெற விளங்கும் திருவணுக்கன் திருவாயிலை யடைந்தருளினுர், என்பதாம்.

இத்திருப்பாட்டான், ஆளுடையபிள்ளையார் பெரிய கோபுரத்தை முன் வணங்கி உள்ளே சென்று, பொன்மாளிகை சூழ்ந்திருக்கும் முற்றத்தை வலம் வந்து, சந்திரமண்டலத்தை அளாவி அவ்வெண்ணிறமுடைய ஒளியோடு பொன்னம்பலத்தின் செந்நிற ஒளி கலந்து விளங்குவதாகிய பொன்னம்பலத்தை வணங்கி அங்கு நின்றும் உள்ளே எழுந்தருளி, திருவணுக்கன் திருவாயிலை அடைந்தருளினுரென்று கூறியவாறும். (கடுஅ)

### திருவணுக்கன் திருவாயிலினுள்ளே எழுந்தருளல்.

நந்தி யெம்பிரான் முதற்கண நாதர்கள் நலங்கொள்பன் *முறைகூட
அந்த மில்லவர் அணுகிமுன் தொழுதிரு வணுக்கனுந் திருவாயில்
சிந்தை யார்வமும் பெருகிடச் சென்னியில் † சிறுச்செய்ய கையேற
உய்ந்து வாழ்திரு நயனங்கள் களிகொள்ள உருகும்அன் பொடுபுக்கார்.

(எ - து) எம்முடைய பெருமானுகிய திருநந்திதேவர் முதலிய சிவகணநாதர்கள் பலமுறையும் இறைவனுலிடப்படும் தொண்டுகளாகிய நலங்களைக் கொள்ளும் இயல்புடையராய் எண்ணிறந்த பேர்கள் முன்னே கூடிவந்து நெருங்கி வணங்கும் திருவணுக்கன் என்னும் திருவாயிலில் சிந்தையின்கண் எழும் ஆனந்தமும் அதி

* மறைகூட—என்றும் பாடம். † சிறிய செங்கை—என்றும் பாடம்.

கரிக்க, தமது திருமுடியில் சிவந்த சிறிய திருக்கரங்கள் ஏற, இறைவனையே தரிசித்து உய்ந்து வாழ்வதாகிய திருக்கண்கள் களிப்பினைக்கொள்ள உருகிய அன்பொடு புகுந்தருளினர், என்பதாம்.

கண்டால் முத்தியைத் தரும் அநுக்கிரகச் செயலையுடையவன் நடராஜப் பெருமானாகலான், தம்மைத் தரிசிக்கின்றவர்களுக்குப் பரமுத்தியாகிய சாயுச்சிய முத்தி நீங்கலாகப் பதமுத்திகளை அநுக்கிரகஞ் செய்கின்ற காலத்து, அவர்களுக்கு அப்பதமுத்திகளைக் கொடுத்தற்குரிய திருக்கயிலாயத்தில் சேர்க்கவேண்டி யிருத்தலின், அந்நலங்கொள் பணியைச் செய்வதற்கு அப்போதைக்கப்போது பலமுறையும் சிவகணநாதர்கள் அவ்வணுக்கன் திருவாயிலில் நெருங்கி யிருப்பார்களென்றும், குஞ்சிதபாதத்தில் கூடுவதாகிய பரமுத்திக்கு உரியராகிய தொண்டர்களை அங்ஙனம் சிவகண நாதர்களோடு செல்லவிடாது, ஆசிரியர் பெருமானாகிய நந்தியெம்பெருமான் அங்கு நின்று அப்பரமுத்தியாகிய திருவருள் முத்தியை அங்ஙனே கூடுமாறு செய்வரென்றும், இங்ஙனமான சிறப்பினையுடைய அத்திருவாயிலில் சிவபிரானையே கண்டு களித்து வாழும் இயல்பிற் சிறந்திருக்கும் கண்களையுடைய ஆளுடையபிள்ளையார் சிந்தையின் கண்ணே ஆசை பெருகவும் திருமுடியிலே சிறியதளிர்போன்ற திருக்கரங்கள் ஏறவும், உருகிய அன்பொடு புகுந்தருளினரென்று இத்திருப்பாட்டான் கூறியவாறும். (கரும)

நடராஜப்பெருமானைக் கண்டு போற்றல்.

அண்ண லார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே யானவம்பல முந்தம்
உண்ணி றைந்தஞா னத்தெழும் ஆனந்த ஒருபெருந் தனிக்கூத்தும்
கண்ணின்முன்புறக் கண்டுகும் பிட்டெழும் களிப்பொடும் கடற்காழிப்
புண்ணியக்கொழுந் தனையவர் போற்றுவார் புனிதரா டியபொற்பு. கசுo

(எ - து) திருவணுக்கன் திருவாயிலினுள்ளே உருகிய அன்போடு புக்கு அங்கு, தோணியப்பர் தமக்களித்த மெய்ஞ்ஞானமயமேயாகிய திருவம்பலமும், தமது திருவுள்ளத்தில் நிறைந்த திருவருள் ஞானத்தில் எழுகின்ற சிவானந்த ரூபமேயான ஒப்பில்லாத ஒரு பெரிய கூத்தும், ஆகிய இவ்விரண்டினையும் தம் திருக்கண்களால் பிரத்தியட்சமாகக் கண்டு கும்பிட்டு மேலெழுகின்ற ஆனந்தப் பெருக்கோடும், கடற்பெருக்கத்தான் அழிவினை யறியாத சீகாழியில் அவதரித்த சிவபுண்ணியத்தின் கொழுந்தினையொத்த ஆளுடையபிள்ளையார் நடராஜப் பெருமான் நடனம் செய்தருளும் திருக்கூத்தினைத் தோத்திரஞ் செய்வாராயினர், என்பதாம்.

ஆளுடைய பிள்ளையார், திருவம்பலத்தைக் கண்டபோது, அவ்வம்பலம் தாம் உண்டருளிய மெய்ஞ்ஞான சொரூபமாகவும், அவ்வம்பலத்துள் இறைவன் நின்று செய்தருளும் கூத்து, தம் உள்ளத்து அனவரதமும் நின்றாடும் ஒரு பெருந் தனிக்கூத்தாகவும் கண்டு, அஃதாவது, அதுகாறும் உள்ளத்துள் கண்ட காட்சியாகவே வெளியே கண்டு கும்பிட்டெழுந்து நடராஜனது நடனத்தைத் துதிப்பாராயினர் என்று இத்திருப்பாட்டாற் கூறப்பட்டது. (கசுo)

திருப்பதிகம் ஓதல்

உணர்வின் நேர்பெற வரும் சிவபோகத்தை ஒழிவின்றி உருவின்கண்
அணையும் ஐம்பொறி அளவினும் எளிவர அருளினை எனப்போற்றி

இணையில் வண்பெரும் கருணையே ஏத்திமுன் னெடுத்த சொற்பதிகத்தில்
புணரும் இன்னிசை பாடினர் ஆடினர் பொழிந்தனர் விழிமாரி. கசுக

(எ - து.) நடராஜப் பெருமானது நடனத்தைப் பிள்ளையார் எவ்வாறு போற்றத் தொடங்கினரெனில், "சன்மார்க்க ஞானிகள் தமது ஆன்மஅறிவு, அவனவ ளதுவாய்க்காணப்படும் உருவங்களிடத்து மாறிமாறி நீக்கமின்றிப் பொருந்தும் ஐம்பொறிகளோடு கலந்து ஐயறிவாக, அந்த ஆன்ம அறிவை, அந்த ஐவகை அறிவுகளில் செல்லவொட்டாது தடுத்து, ஐயறிவுகளையும் அறிகின்ற தன்னறிவோடு கலப்பித்து, பின் தம் அறிவுக்குக் காட்டாக இருந்து எல்லா வற்றையும் அறிவித்தும் அறியவும் செய்கின்ற சிவ அறிவோடு நேர்பெறச் செய்ய வருகின்ற காலத்து வருவதாகிய சிவபோகத்தை இங்ஙனம் கூறிய முறைப்படி தம் அறிவை நேர்பெறச் செய்ய அறியாதவர்கள், ஒழிவின்றி உருவின்கண் அணையும் ஐம்பொறியளவினும் எளிதாக வரும்படி நீ நடனஞ் செய் தருளுகின்றனை'' என்று தோத்திரஞ் செய்து, அந்த ஒப்பில்லாத பெரிய அருளையே அப்பெருமான் முன்னே தாம் எடுத்தருளிய திருப்பதிகத்தில் பொருந்திய இனிய இசையோடு பாடினர், ஆனந்தக் கூத்தாடினர், திருக்கண்களினின்றும்ஆனந்தக் கண்ணீரைச் சொரிந்தனர், என்பதாம். (கசுக)

வேறு.

ஊழி முதல்வர்க் குரிமைத் தொழிற்சிறப்பால்
வாழிதிருத் தில்லைவாழ் அந்தணரை முன்வைத்தே
ஏழிசையும் ஓங்க எடுத்தார் எமையாளும்
காழியர்தங் காவலனார் "கற்றாங் கெரியோம்பி". கசுஉ

(எ-து.) எல்லாத் தேவர்களுடைய முதன்மையையும் அழித்து எழுகின்ற ஊழிக்காலத்துக்கு முதல்வரா யிருக்கின்ற நடராஜப் பெருமானுக்கு உரிமையாயுள்ள பூசனைத் தொழிலின் சிறப்பினால் வாழ்வு பெற்றிருக்கின்ற தில்லைவாழ் அந்தணர்களைத் திருப்பாட்டின் முன்னாகவைத்து ஏழிசைகளும் நிரம்பி ஒலிக்கும்படி எம்மையாண்டருளும் சீகாழித்தலைவராகிய ஆளுடைய பிள்ளையார், "கற்றாங்கெரியோம்பி" என்னும் திருப்பதிகத்தை எடுத்துப் பாடியருளினார், என்பதாம்.

சிவவுணர்வில் நேர்பெற்ற அறிவினையுடையவர்களுக்கு வருவதாகிய சிவபோகத்தை, ஐம்பொறிகளின் வழியில் நேர்பெற்றிருக்கும் அறிவினையுடையவர்க்கும் தந்தருளும் நடராஜனது ஆனந்த நடனத்தைப் புகழ்ந்து அப்பெருமானைப் போல், தாம் பதிகத்தை எடுத்தலாகிய ஒரு செயலும், அதில் இசையைச் சேர்ப்பதாகிய ஒருசெயலும், பாடுதலாகிய ஒருசெயலும், ஆடுவதாகிய ஒருசெயலும், ஆனந்தக் கண்ணீர் பொழிவதாகிய ஒரு செயலும் ஆகிய ஐவகைச் செயல்களையும் செய்து "கற்றாங் கெரியோம்பி" என்னும் பதிகத்தில் தில்லைவாழந்தணர்களை முதலிலே வைத்துப் பாடி யருளினார் ஆளுடைய பிள்ளையாரென்று இவ்விரண்டு திருப்பாட்டாற் கூறப்பட்டது. (கசுஉ)

**திருப்பதிகம்.**

பண்ணார் பதிகத் திருக்கடைக்காப் புப்பரவி
உண்ணாடும் என்பும் உயிருங் கரைந்துருக்கும்

விண்ணு யகன்கூத்து *வெட்ட வெளி யேதிளைத்துக்
கண்ணு ரமுதுண்டார் காலம் பெறவழுதார். கசுரு

(எ - து) பண்ணமைந்த 'கற்றாங்கெரியோம்பி' என்னுமப் பதிகத்தில் தமிழ் மாலை கோலத்தாற் பாடவல்லார் நல்லாரே! என்று திருக்கடைக்காப்பையுமருளி உடம்பினுள்ளிருக்கின்ற எலும்பும் உயிரும் ஒன்றாய்க் கலந்துருகச் செய்யும் தேவர்கள் தலைவனாகிய நடேசப் பெருமானது ஆனந்தத்திருக்கூத்தினை நான் எக்காலம் பெறுவேனென்று அந்தப் பெருவெளியாகிய சிற்றம்பலத்தில் தம் இருகண்களும் நிரம்ப அமுதுண்டவராகிய ஞானமுண்டபிள்ளையார் அழுதருளினார், என்பதாம்.

### தில்லைக்கூத்தனைத் தரிசித்து வெளிவருதல்

முன்மால் அயன்அறியா மூர்த்தியார் முன்னின்று
சொன்மாலை யாற்காலம் எல்லாம் துதித்திறைஞ்சிப்
பன்மா மறைவெள்ளம் சூழ்ந்து பரவுகின்ற
பொன்மா ளிகையைவலங் கொண்டு புறம்போந்தார். கசுச

(எ - து.) இனி எக்காலத்தில் தரிசனஞ்செய்யப் பெறுவேனென்று அழுத பிள்ளையார், திருமாலும் பிரமனும் அறியப் பெறாத நடேச மூர்த்தியினது சந்நிதியின் முன்னே நின்று, அங்கு நடக்கும் ஆறுகால பூஜைகளிலும் திருப்பதிகமாகிய சொன்மாலைகளால் துதித்து வணங்கி, பின் எண்ணிறந்த வேதங்கள் இடைவிடாது சூழ்ந்து துதிக்கின்ற பொன்னம்பலத்தை வலம்வந்து புறம்பே எழுந்தருளினார், என்பதாம்.

இவ்விரண்டு திருப்பாட்டானும், உணர்வில் நேர்பெற வரும் சிவபோகத்தை இந்த வெட்ட வெளியிலே நின்று நடனஞ்செய்து யாவருக்கும் அருளும் இவ்வானந்தக் கூத்தை, எக்காலம் பெறுவேனென்று என்புமுயிருங் கரைந்துருகிக் கண்ணீர் அரும்பி அங்ஙனேநின்று காலங்கள் தோறும் திருப்பதிகங்களைப்பாடி ஆனந்த பரவசத்தராய், திருக்கூத்தினை விளைவிக்கும் மெய்ஞ்ஞானத்தை முன் திருவாக்கினால் உண்டருளியதுபோல் இப்போது திருக்கூத்தில் விளையும் ஆனந்தத்தையும் திருக்கண்களால் உண்டருளினார் என்றும், அப்பொன்னம்பலத்தை வலமாக வந்து கோயிலுக்கு வெளியே வந்தனரென்றும் கூறியவாறும். (கசுச)

### அணுக்கன் திருவாயிலையும் திருவீதிகளையும் தரிசித்தல்

செல்வத் திருமுன்றில் தாழ்ந்தெழுந்து தேவர்குழாம்
மல்குந் திருவாயில் வந்திறைஞ்சி மாதவங்கள்
நல்குந் திருவீதி நான்குந் தொழுதங்கண்
அல்குந் திறம்அஞ்சு வார்சண்பை ஆண்டகையார். கசுரு

(எ - து.) வெளியே எழுந்தருளிய சண்பை நகரத்திற்குத் தலைவராகிய பிள்ளையார் செல்வம் நிறைந்த முற்றத்தில் நின்று பணிந்தெழுந்து, திருமால் முதலிய தேவரெல்லாம் நிறைந்திருக்கும் தெற்கின்கண் உள்ள திருவணுக்கன் திருவாயிலை வணங்கி, அதன் பின்னர், செயற்கரிய தவங்களெல்லாம் மிக எளி

* வெள்ள - என்றும் பாடம்.

தாய்த்தரவல்ல நான்கு திருவீதிகளையும் வணங்கிப் பின்னர் சிலநாளேனும் அங்கு வசித்திருப்பதற்கு அஞ்சுவாராயினர், என்பதாம்.

இத்திருப்பாட்டான் "நடராஜப் பெருமான் உலாவரும் வீதிகளாயும், அடியார்கள் இடைவிடாது வலம்வந்து பணிந்திருக்கும் வீதிகளாயுமிருப்பதால் இவ்வெல்லைக்கு வெளியேயிருந்து நாம் வணங்கவேண்டியதே யன்றிக் காலால் நடந்து உள்ளே வசித்து வாழ்தல் சிவாபராதமாம்" என்று ஆளுடைய பிள்ளையார் அன்பு மீதூர்ந்து அஞ்சினரென்று கூறப்பட்டது.

வனம் மலை முதலிய இடங்களைச் சார்ந்தவர்களுக்கு அவை தாமே சிவபுண்ணியங்களைத் தருவதில்லை, அவ்வாறு சார்ந்தவர்கள் தவத்தைச் செய்தே தேடிக்கொள்ளவேண்டும்; தில்லை வீதிகளோ தம்மைச் சார்ந்தவர்களுக்குப் புண்ணியத்தைத் தாமே கொடுத்துவிடுமென்று கூறிய தென்க; எனவே தலவிசேடத்தைக் குறித்ததாம். (கசரு)

### திருவேட்களத்திற்கு எழுந்தருளல்

செய்ய சடையார் திருவேட் களஞ்சென்று
கைதொழுது சொற்பதிகம் பாடிக் கழுமலக்கோன்
வைகிஅருளும்இடம் அங்காக மன்றுடும்
ஐயன் திருக்கூத்துக் கும்பிட் டணைவுறுநாள். கசசு

(எ-து) தில்லையில் வசிப்பதற்கு அஞ்சினவராகிய காழித்தலைவர் சிவந்த சடையினையுடைய இறைவன் வீற்றிருக்கும் திருவேட்களம் என்னும் திருப்பதியை வந்தடைந்து, அங்குள்ள பெருமானைக் கைகளால் தொழுது வணங்கி, சொன்மாரியாகிய திருப்பதிகத்தைப் பாடியருளி, அத்திருப்பதியைத் தாம் தங்கியருளுவதற்கு இடமாகக்கொண்டு, அங்கிருந்தபடியே சிற்சபையின்கண் நடனஞ் செய்தருளும் நடராஜனது திருக்கூத்தினை நாடோறும் கும்பிட்டுவரும் நாளில், என்பதாம். (கசசு)

### திருக்கழிப்பாலைக்கும் திருநெல்வாயிலுக்கும் எழுந்தருளல்

கைம்மான் மறியார் கழிப்பாலை யுள்ளணைந்து
மெய்ம்மாலைச் சொற்பதிகம் பாடி விரைக்கொன்றைச்
செம்மாலை வேணித் திருவுச்சி மேவியுறை
அம்மானைக் கும்பிட் டருந்தமிழும் பாடினர். கசஎ

(எ-து.) ஒருநாள் அங்குநின்றும் புறப்பட்டு மானேந்திய திருக்கரத்தினையுடைய பால்வண்ணநாதர் எழுந்தருளியிருக்கும் திருக்கழிப்பாலையென்னும் திருத்தலத்தையடைந்தருளி, அங்கு வேத உண்மை நிறைந்துள்ள சொல்லாலாகிய தமிழ்ப் பதிகமாலையைப் பாடியருளி, நறுமணங்கமழும் கொன்றை மாலை யணிந்துள்ள சடையினையுடைய இறைவன் வீற்றிருக்கும் திருநெல்வாயில் என்னும் திருத்தலத்தில் திருவுச்சி யென்னும் திருக்கோயிலை வந்தடைந்து, அப்பெருமானைக் கும்பிட்டு அரிய தமிழ்த் திருப்பதிகத்தையும் பாடியருளினர், என்பதாம்.

இவ்விரண்டு பாட்டானும், நடேசப்பெருமானை வணங்குவதற்குத் திருவேட்களம் என்னும் திருத்தலத்தில் இருந்து, அங்கிருந்தபடியே வணங்கிச் சில

நாட்கள் கழிந்து திருக்கழிப்பாலை, திருவுச்சி என்னும் தலங்களுக்கு எழுந்தருளினு ரென்று கூறப்பட்டது. (கசுஎ)

### பாணர் பாடக்கேட்டுத் தில்லையை நினைத்தல்

பாடும் பதிகஇசை யாழ்ப்பாண ரும்பயிற்றி
நாடும் சிறப்பெய்த நாளுநடம் போற்றுவார்
நீடுந் திருத்தில்லை அந்தணர்கள் நீள்மன்றுள்
ஆடும் கழற்கணுக்கர் ஆம்பே * றதிசயித்தார். கசுஅ

(எ-து.) திருநெல்வாயிலில் பிள்ளையார் எழுந்தருளியிருந்தபொழுது, அதுகாறும் தாம் பாடியருளிய் திருப்பதிகங்களின் இசையைத் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் யாழினிடத்து அமைத்துப் பாடியிருக்க அதைக் கேட்டருளும் பிள்ளையார், நாள்தோறும் நடனம் செய்தருளும் நடேசப்பெருமானை நாடுகின்ற எண்ணமுடையவராய் அந்நடனச்சிறப்பே தமது திருவுள்ளத்தில் நிரம்ப, பெருமையிற் சிறந்த திருத்தில்லையில் வாழ்கின்ற அந்தணர்கள் ஆனந்தமிகும் கனகசபையின் கண் நடனஞ் செய்தருளும் குஞ்சிதபாதத்திற்குத் திருவணுக்கராய் இருக்கும் பேற்றினை நினைந்து அதிசயம் அடைவாராயினர், என்பதாம்.

இத்திருப்பாட்டான் தில்லையைப் பாடியருளிய பதிகங்களைத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் தமது யாழிசையில் வைத்துப்பாட, பிள்ளையார் அவ்விசையைக் கேட்டு நடராஜனது திருக்கூத்தையும் அக்கூத்திலெழும் ஆனந்தத்தையும் திருவுள்ளத்தில் எண்ணிப் பரவசத்தராய், "ஆனந்தத்தை விளைவிக்குங் கூத்தினைச் செய்தருளும் குஞ்சிதபாதத்தை எக்காலமும் தீண்டவும் காணவும் வணங்கவும் தில்லை வாழந்தணர்கள் எப்பொழுதும் பெற்றிருக்கின்றாரே, இஃது என்ன அதிசயம்!" என்று அதிசயித்தனரென்று கூறப்பட்டது. (கசுஅ)

### தில்லைக்கு மீண்டருளல்

ஆங்கவர்தம் சீலத் தளவின் மையுநினைந்தே
ஓங்கிஎழுங் காதல் ஒழியாத உள்ளத்தார்
தேம்கமழும் சோலைத் திருவேட் களங்கடந்து
பூம்கிடங்கு சூழ்புலியூர்ப் புக்கணையும் போழ்தின்கண். கசுகூ

(எ - து.) திருத்தில்லை யந்தணர்கள் மன்றுள் ஆடுங் கழற்கு அணுக்கராகிய பேற்றை நினைந்து அதிசயித்ததன்றியும், அத்தில்லையின்கண் வாழும் அவ்வந்தணர்களது வைதிக சைவ ஒழுக்கமானது அளவிலா திருத்தலையும் திருவுள்ளத்து நினைந்தருளி, அங்ஙனம் நினைக்குந்தோறும் எழுகின்ற ஆசையானது நீங்காத திருவுள்ளத்தை யுடையவராய்த் தேன் மணக்கும் சோலையினையுடைய திருவேட்களத்தை விட்டு, அங்கு நின்றும் புறப்பட்டு மலர்கள் நிறைந்துள்ள அகழி சூழ்ந்திருக்கும் புலியூராகிய சிதம்பரத்தை அடைந்தருளுங் காலத்து, என்பதாம்.

ஆங்காங்கும் வைதிக சீலமும் சைவ சீலமும் அருகி, அருகச் சமயிகளுடைய சீலமே இருள் பரவி வருவதைப்போல் வர, இத்தில்லையின்கண் அவ்விருளுக்

* அதிசயிப்பார்—என்றும் பாடம்.

கிடமின்றி அவ்விருவகைச் சீலமும் குன்றாது மேலோங்கி வளரச்செய்யும் இயல்பினையுடையாராய்த் தில்லைவாழ் அந்தணர்கள் இருத்தலால் அவ்வதிசயத்தை நினைந்து மீளவும் அவர்களைத் தரிசிக்க வேண்டுமென்னும் அவா மேலீட்டினால் பிள்ளையார் சிதம்பரத்திற்குப் போகப் புறப்பட்டனர் என்று இதனால் கூறப் பட்டது.

வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க வந்தருளிய பிள்ளையாராகலின், மழை காரணமாக விண்ணுலகத்தில் தழைந்து ஓங்கவேண்டிய யாகாதி வைதிக தருமங்கள் மேலோங்கியும், இம்மண்ணுலகத்தில் விளங்கவேண்டிய சிவார்ச்சனையாதி சைவத்துறைகள் ஆகமசீலங் குன்றாது விளங்கியும் தில்லைவாழ் அந்தணரிடத்துக் காணப்படுதலும், அவ்வந்தணர் தலைவராகிய நடராஜப் பெருமான் ஆனந்தக்கூத்தாடி சர்வான்மாக்களுக்கும் விஷயானந்தத்தை மறக்கச் செய்து, சிவானந்தத்தை நினைப்பித்து, குஞ்சிதபாதத்தைக்காட்டி அருளுவதாகிய எளிய கருணையையும் திருவுள்ளத்தில் நினைந்து நினைந்து காதல் கொண்டனர் என்பார்—ஆங்கவர்தம் சீலத்து அளவின்மையும் நினைந்தே, ஓங்கி யெழுங் காதல் ஒழியாத உள்ளத்தார் என்றார். (கசுக)

**தில்லை மூவாயிரவர் சிவகணநாதராய்த் தோன்றும் காட்சியைப் பாணருக்குக் காட்டியருளல்.**

அண்டத் திறைவர் அருளால் அணிதில்லை
முண்டத் திருநீற்று மூவா யிரவர்களும்
தொண்டத் * தொகைமைக் கணநாத ராய்த்தோன்றக்
கண்டப் பரிசுபெரும் பாணர்க்குங் காட்டினார். கஎ0

(எ - து.) அழகிய தில்லையின்கண் வாழும் திருநீற்றுத் திரிபுண்டரம் அணிந்துள்ள தில்லை மூவாயிரவர்களும், ஞானயோகக் கிரியாசரியைகளான் இயற்றப்படுவதாகிய அறுபத்து நான்காக எண்ணப்படும் தொண்டுகளனைத்தும் இயற்றுபவராகிய தொண்டர்களும், சகல அண்டங்களுக்குந் தலைவராகிய நடராஜன் திருவருளால் சிவகணநாதராய்த் தோன்ற, அக்காட்சியைத் தில்லையை யடைந்த பிள்ளையார், தம்மைச் சூழ்ந்திருக்கும் அந்தணர் முதலியோர் காணும்படி காட்டியதேயன்றி, யாழிசையில் வல்ல பெரும்பாணனுருக்கும் பேரருளோடு காட்டியருளினார், என்பதாம்.

அணிதில்லை முண்டத் திருநீற்று மூவாயிரவர்களும், தொண்டத் தொகைமையரும், அண்டத்திறைவர் அருளால் கணநாதராய்த் தோன்றக் கண்டு அப் பரிசு பெரும்பாணர்க்கும் காட்டினார் எனக்கூட்டிப் பொருள் கொள்க.

ஆளுடைய பிள்ளையார் உலகிலுள்ள ஆன்மாக்களுக்கெல்லாம் சிவங்காட்டி உய்விக்கவந்த பரமாசாரிய மூர்த்தியாகலான், ஞானப்பாலைத் திருவாக்கினால் உண்டகாலத்துச் சுட்டிறந்த பெருமானைத் தமது அருட் கையால் தந்தையாருக்குச் சுட்டிக்காட்டியதுபோல், ஆனந்தக் கூத்தராகிய அமுதத்தைக் கண்ணால் உண்டருளிய இத்தில்லையில், பாணர் ஈறாகவுள்ள திருக்கூட்டத்தவர் யாவருக்கும் தில்லையின்கண்ணுள்ளார் யாவரும் சிவகணநாதர்களே என்பதைத்

* தகைமை-என்றும் பாடம்.

தமது திருக்கண்ணால் காட்டி யருளினர் என்று இத்திருப்பாட்டால் கூறப்பட்டது. ஆசிரியர் காட்டக் காணக்கூடுமே யன்றி, அவர் காட்டாக்கால் காண்பார் யார் என்னும் முறையை ஈண்டுக் குறித்ததுமாம். (கஎ0)

**தில்லைவாழந்தணர்கள் எதிர்கொள்ளல்**

செல்வம் பிறிவறியாத் தில்லைவாழ் அந்தணரும்
எல்லையில் சீர்ச்சண்பை இளவே றெழுந்தருளி
ஒல்லை இறைஞ்சாமுன் தாமும் உடன்இறைஞ்சி
மல்லல் அணிவீதி மருங்கணைய வந்தார்கள். கஎக

(எ - து.) பிள்ளையார், தில்லையில் வாழ்வாரது காட்சியைக் காட்டிக் கொண்டிருக்குஞ் சமயத்தில், பிரிதலையறியாத செல்வத்தினையுடைய தில்லை வாழந்தணர்களும், அளவுபடாத சிறப்பினையுடைய சண்பை என்னும் சீகாழியில் அவதாரஞ் செய்தருளிய இளஞ்சிங்கம் போன்ற ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளித் தங்களை விரைந்து வந்து வணங்குவதற்குமுன், உடனே தாங்களும் வணங்கி, எல்லாப் பொருளும் நிறைந்துள்ள அழகிய திருவீதியின்கண் பிள்ளையாரின் இருபக்கத்திலும் சூழ வந்தார்கள், என்பதாம்.

கலந்தபின் பிரிதலையறியாத இறைவனைப்போலும், கலந்தபின் பிரிதலையறியாத அருட்செல்வம் அங்கு என்றும் நீங்காதிருப்பதுபோல், கலந்தபின்னும் பிரிதலை அறிந்துள்ள பொருட் செல்வமும் அத்தில்லையில் பிரிதலையறியாது இருக்குந் தன்மையைப் பெற்றிருப்பதென்னும் அச்சிறப்புத் தோன்ற - **செல்வம் பிறிவறியாத் தில்லை** என்றும், தோணியப்பருக்கும் பெரிய நாயகியாருக்கும், தம்முடைய மகனரை ஆசிரியராகக் காணுங்காட்சியைத் தந்தது சீகாழி என்னும் அச்சிறப்புத் தோன்ற - **எல்லையில் சீர்** என்றும், தில்லையில் வாழ்வாரைச் சிவகண நாதர்களாய்ச் சீகாழிப்பிள்ளையார் கண்டதுபோலும், சீகாழிப்பிள்ளையாரைச் சிவகுமாரராகிய முருகப்பெருமானாகத் தில்லைவாழந்தணர்கள் காணப் பெற்றதனால், அம் முருகப்பெருமான் இப்போது கொண்ட கோலத்திற் கேற்ப நம்மை வணங்கத் தலைப்படினும் அவ்வணக்கத்தை நாம் எவ்வாறு ஏற்றுக் கொள்வதென் றஞ்சினர் என்னும் அச்சிறப்புத் தோன்ற - **சண்பை இளவேறு ஒல்லையிறைஞ்சுமுன் தாமும் உடனிறைஞ்சி** என்றும் கூறினர். (கஎக)

**பிள்ளையார் திருவாயிலினுள் எழுந்தருளுங் காட்சி**

பொங்கி எழுங்காதல் புலனாகப் பூசுரர்தம்
சிங்கம் அனையார் திருமுடியின் மேற்*குவித்துப்
பங்கயத்தின் செவ்வி பழித்து வனப்போங்கும்
செங்கையொடும் சென்று திருவாயில் உட்புக்கார். கஎஉ

(எ - து.) பிராமண குலத்தில் அவதாரஞ்செய்தருளிய சிங்கம்போன்ற ஆளுடைய பிள்ளையாரது அறிவெல்லாம் நடராஜனைத் தரிசிக்கவேண்டுமென்னும் ஆசையின் மயமேயாக, தாமரைமலரின் அழகினைப் பழித்து அதனினுஞ் சிறந்தோங்கும் அழகினையுடைய சிவந்த திருக்கரங்களைத் தமது திருமுடியின்

*குவித்த—என்றும் பாடம்.

மேல் அஞ்சலியாகக் குவித்துக்கொண்டு, அக்கோலத்தோடும் திருவாயிலி னுள்ளே புகுந்தருளினர், என்பதாம்.

வைதிக தருமத்தினல் இறுமாந்துலாவும் சிறப்பினையுடைய பூசுரர்கள் அருகர் முதலிய புறச்சமயிகளால் குன்றியிருக்கும் அக்குறை நீங்கவந்த பிள்ளை யார் ஆகலான் - பூசுரர்தம் சிங்கம் அனையார் என்றார்.

மெய்ஞ்ஞானமயமாயிருக்கும் பிள்ளையார்தம் அறிவு நடராஜப்பெருமானைக் கும்பிடும் ஆசைமயமேயாக, பிள்ளையார் இருகரங்களையும் அப்பொழுதே திரு முடிமேற் குவித்துக் கொண்டே திருவாயிலினுள்ளே புகுந்தனரென்று இத் திருப்பாட்டாற் கூறப்பட்டது. (கஎ௨)

திருக்களிற்றுப்படியை யடைதல்.

ஒன்றிய சிந்தை உருக உயர்மேருக்
குன்றனைய பேரம் பலமருங்கு கும்பிட்டு
மன்றுள் நிறைந்தாடும் மாணிக்கக் கூத்தர்எதிர்
சென்றணைந்து தாழ்ந்தார் திருக்களிற் றுப்படிக்கீழ். கஎ௩

(எ - து.) திருவாயிலினுள்ளே புகுந்த பிள்ளையார், நடேசப் பெருமானைக் கும்பிடும் ஆசையோடுகூடிய தமது சித்தமானது உருக, உயர்ந்த மேருமலையை யொத்த பேரம்பலத்தின் பக்கத்திலே சென்று வணங்கி, அதன்பின் சிற்சபையின் கண் திருவருள் நிறைந்த திருவுள்ளத்தோடும் ஆடியருளுகின்ற மாணிக்கமயமாய் விளங்கும் திருமேனியையுடைய கூத்தன் எதிரே சென்று, திருக்களிற்றுப் படியைச் சார்ந்து, அப் படியின்கீழ் வீழ்ந்து வணங்கினர், என்பதாம்.

திருக்கூத்தர் எதிர்சென்று திருக்களிற்றுப்படிக் கீழ் அணைந்து தாழ்ந்தார் எனக் கூட்டுக.

கும்பிடும் ஆசையோடும் நடராஜப் பெருமானிடத்துச் சென்ற பிள்ளையார், திருக்களிற்றுப்படி என்னும் பஞ்சாக்கரப்படியில் வந்து நின்றருளினர் என்று இத்திருப்பாட்டாற் கூறப்பட்டது. (கஎ௩)

வேறு

தில்லைவாழ் அந்தணரைக் கண்ட நிலையைத் திருப்பதிகத்தில் வைத்தோதல்

"ஆடி னாய்நறு நெய்யொடு பால்தயிர்" என்றெடுத் தார்வத்தால்
பாடி னார்பின்னும் அப்பதி கத்தினில் பரவிய பாட்டொன்றில்
நீடு வாழ்தில்லை நான்மறை யோர்தமைக் கண்டஅந் நிலையெல்லாம்
கூடு மாறுகோத் தவர்தொழு தேத்துசிற் றம்பலம் எனக்கூறி.

(எ - து.) திருக்களிற்றுப்படியின்கண் வணங்கிப் பதிகம் ஓதத்தொடங் கியபோது "ஆடினாய் நறுநெய்யொடு பால்தயிர்" என அடியெடுத்து அன் போடு திருப்பதிகத்தைப் பாடியருளினர்; பின்னும் அப்பதிகத்தினுள் சொல்லி யருளிய மூன்றாம் பாசுரத்தில் தில்லை நடராஜப் பெருமானோடு அன்றுமுதல் வாழ்கின்ற தில்லை மூவாயிரவர்களைத் தாம சிவகணநாதர்களாகப் பார்த்தருளிய

அந்த அடையாளங்களை எல்லாம் பொருந்துமாறு சேர்த்து அச்சிலமுடையவர்கள் வணங்கித் துதிக்கும் சிற்றம்பலமெனத் திருவாய்மலர்ந்தருளி, என்பதாம்.

*"நீலத்தாற் கரியமிடற்றார் நல்ல நெற்றிமேலுறை கண்ணினர் பற்றும், சூலத்தார் சுடலைப்பொடிநீறணிவார் சடையார், சீலத்தாற் றொழுதேத்தும் சிற்றம் பலம்" என்று மூன்றும் திருப்பாட்டில் ஓதியுள்ளாராகலான்—பின்னும் அப்பதிகத்தினில் பரவிய பாட்டு ஒன்றில், தில்லைநான் மறையோர் தமைக்கண்ட அந்நிலை யெல்லாம், கூடுமாறு கோத்து அவர் தொழுதேத்து சிற்றம்பலம் என்றும், இங்ஙனம் கூறியதே யல்லாமல் "தில்லையார் தொழுதேத்தும் சிற்றம்பலம்" என்றும், "தில்லை மறையோர் நல்லவர் பிரியாத சிற்றம்பலம்" என்றும், "கற்றவர் தொழுதேத்து சிற்றம்பலம்" என்றும், "ஆடினாய் நறுநெய்யொடு பால்தயிர் அந்தணர் பிரியாத சிற்றம்பலம் நாடினாய்" என்றும் அருளியிருத்தலான், தில்லையைவிட்டு நீங்காது வாழ்கின்ற நடராஜ மூர்த்தியோடு வாழும் வாழ்வினை மறையவரும் பெற்றிருக்கின்றமை வெளிப்பட—நீடுவாழ்தில்லை நான்மறையோர் என்றும் கூறினார்.

தில்லைவா ழந்தணர்களைப் பூசுரர்தம் சிங்கம் அனையார் பதிகத்தில் எடுத்து ஓதிய சிறப்பினை விதந்து இத்திருப்பாட்டால் கூறப்பட்டது. (கஎச)

### பிள்ளையார் பிரியா விடைபெற்று வெளியே எழுந்தருளல்

இன்ன தன்மையில் இன்னிசைப் பதிகமும் திருக்கடைக் †காப்பேத்தி, மன்னும் ஆனந்த வெள்ளத்தில் திளைத்தெதிர் வந்துமுன் நின்றுடும், பின்னு வார்சடைக் கூத்தர்பே ரருள்பெறப் பிரியாத விடைபெற்றுப், பொன்னின் அம்பலம் சூழ்ந்துதாழ்ந் தெழுந்துபோந் தணைந்தனர் புறமுன்றில். (கஎரு)

(எ - து.) தில்லைவா ழந்தணரைப் பற்றி இங்ஙனமான சிறப்புத் தன்மையினால் இனிய பண்ணிசையுடைய திருப்பதிகத்தையும் அதில் ‡"நாறுபூம் பொழில் நண்ணிய காழியுள் நான்மறைவல்ல ஞானசம்பந்தன், ஊறும் இன் தமிழால் உயர்ந்தார் உறைதில்லை தன்னுள், ஏறு தொல்புகழ் ஏந்து சிற்றம்பலத்து ஈசனை" என்று அத்தில்லைவா ழந்தணர்களையே உயர்த்தித் திருக்கடைக் காப்பினையும் பாடியருளி, பின்னிய நீண்டசைந்தாடும் சடையினையுடைய ஆனந்தக் கூத்தனுடைய அருளை மேலும் பெற அந்த நடராஜன் முன்னே வந்து, தம் எதிரே நின்றுடும் அழிவில்லாத சிவானந்த வெள்ளத்தில் திளைத்து அவரில் நின்றும் பிரியாததாகிய விடைபெற்றுப் பொன்னம்பலத்தை வலஞ்செய்து வணங்கி எழுந்து வெளியே இருக்கும் திருமுன்றிலின்முன்னே பிள்ளையார் வந்தருளினார், என்பதாம்.

இன்ன தன்மையில் இன்னிசைப் பதிகமும் திருக்கடைக் காப்பேத்தி, பின்னு வார்சடைக் கூத்தர் பேரருள் பெற எதிர்வந்து முன் நின்றுடும், மன்னும் ஆனந்த வெள்ளத்தில் திளைத்து, பிரியா விடைபெற்று, பொன்னின் அம்பலம் சூழ்ந்து தாழ்ந்து, எழுந்து புறமுன்றில் போந்து அணைந்தனர் எனக் கூட்டிப் பொருள் கொள்க.

---

* திருஞானசம்பந்தர் திருப்பதிகம்—கோயில் பண்-காந்தார பஞ்சமம்—செ. ரு.

‡ டி செ. கக-ம்    † காப்பேற்றி—என்றும் பாடம்.

"இந்த நடராஜன் தனது கூத்தினைக் காணச் சிவகாமிப்பிராட்டியா ராகிய நம்முடைய அன்னையை இடப்பக்கத்தில் வைத்திருக்கின்றான்; கூத்தில் விளையும் ஆனந்தத்தைப் பருக வலம் இடங்களில் பதஞ்சலி வியாக்கிரபாதர் என்னும் இரு முனிவரை நிற்கவைத்திருக்கின்றான்; இவ்வண்ணம் மூவரையும் வைத்ததுபோல் நாமும் நடுவே நின்று பாடும் அருளை நமக்கு வைத்தருளாமல் வையமெலாம் பரசமய கோளரியாய் உலாவி வருவதாகிய அருளைச் செய் தனனே!" என்று அவ்வருளை மாற்றுவதற்கு அஞ்சிப் பிரியா விடைபெற்று ஆளுடைய பிள்ளையார் வெளியே வந்து எழுந்தருளினார் என்று இத்திருப் பாட்டால் கூறப்பட்டது.

"ஆடினாய் நறுநெய்யொடு" என்ற திருப்பதிகத்தில் இடைஇடையே தில்லைவாழந்தணர்களைச் சிறப்பித்ததே யல்லாமல் திருக்கடைக் காப்பிலும் அவ்வந்தணர்களையே சிறப்பித்தருளிய விசேடத்தான் - இன்னதன்மையில் இன் னிசைப் பதிகமும் திருக்கடைக் காப்பேத்தி என்றார்.

"தோணியப்பன் நமக்கு ஞானப்பாலைக் கொடுத்து நம்மைக் கூத்தாடச் செய்து அக்கூத்தைத் தான் கண்டு அடைந்த ஆனந்தம் இத்தன்மையாகும் என்று அவ்வானந்தத்தை நாம் உணர, அத்தோணியப்பன் இங்கு வந்து கூத் தாடி நம்மை அவ்வானந்தத்தில் திளைக்கச் செய்கின்றான்" என்னும் அவ்விசேடந் தோன்ற - எதிர்வந்து முன்நின்றும் கூத்தர் பேரருள் பெற, மன்னும் ஆனந்த வெள்ளத்தில் திளைத்து என்றார். (கஎடு)

### திருவேருக்கத்தம்புலியூர் முதலிய திருத்தலங்களுக்கு எழுந்தருளல்

அப்பு றத்திடை வணங்கிஅங் கருளுடன் அணிமணித் திருவாயில்
பொற்பு றத்தொழு தெழுந்துடன் போதரப் போற்றிய புகழ்ப்பாணர்
நற்ப தந்தொழு தடியனேன் பதிமுதல் நதிநிவாக் கரைமேய
ஒப்பில் தானங்கள் பணிந்திட வேண்டுமென் றுரைசெய அதுநேர்வார்.

(எ - து.) சிற்சபேசன் திருக்கோயிலுக்கு முன்னுள்ள திருமுற்றத்தின் முன்னேவந்து நின்றருளிய பிள்ளையார் அங்கு வணங்கி, நடராஜனை நினைக்குந் திருவருளுடன், அழகிய மணிமயமாய் விளங்கும் கோபுரவாயிலின்கண்ணே வந்து, நன்றாகத் திருமேனி யெல்லாம் பொருந்த வணங்கி, அங்குநின்றும் புறப் படும்போது, புகழ்பெற்றுள்ள பாணனார் ஆளுடைய பிள்ளையாருடைய நல்ல திருவடிகளை வணங்கிப் புகழ்ந்து போற்றி, "அடியேனது ஜன்மபூமியாகிய திருவெருக்கத்தம்புலியூர் முதலாக, நிவாவென்னும் நதியின் கரையிலிருக்கும் ஒப்பில்லாத திருப்பதிகளைச் சுவாமிகள் எழுந்தருளி வணங்கவேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்ய, அவ்விண்ணப்பத்திற்கு ஆளுடைய பிள்ளையார் உடன் படுவாராயினர், என்பதாம்.

அப்புறத்திடை வணங்கி அங்கு அருளுடன் அணிமணித் திருவாயில், பொற்புறத் தொழுது எழுந்து போதர, உடன் புகழ்ப்பாணர் நற்பதந் தொழுது போற்றி அடியனேன் பதிமுதல் நிவா நதிக்கரைமேய ஒப்பில் தானங்கள் பணிந் திட வேண்டுமென்று உரைசெய அது நேர்வார் எனக் கூட்டிப் பொருள் கொள்க.

இத்திருப்பாட்டான், பெரும்பாணனர் வேண்டுகோளின்படியே ஆளுடைய பிள்ளையார் சிதம்பரத்தை விட்டுத் திருவெருக்கத்தம்புலியூர் முதலிய திருத் தலங்களுக்கு எழுந்தருளத் திருவுளங் கொண்டனர் என்று கூறப்பட்டது. (களசு)

பொங்கு தெண்திரைப் புனிதநீர் நிவாக்கரைக் குடதிசை மிசைப் போந்து, தங்கு தந்தையார் உடன்பரி சனங்களும் தவமுனி வரும் செல்லச், செங்கை யாழ்த்திரு நீலகண் டப்பெரும் பாணனர் உடன் சேர, மங்கை யார்புகழ் மதங்கசூ ளாமணி யாருடன் வரவந்தார். களஎ

(எ - து.) மேன்மேல் பெருகி வருகின்ற தெள்ளிய அலைகளை வீசும் பரி சுத்தமான நீரையுடைய நிவா என்னும் நதியின் மேற்றிசைக் கரையில் எழுந் தருள, அங்குத் தம்மை விட்டுப் பிரியாத சிவபாத இருதயராகிய தந்தையும், பரி சனங்களும் தவசீலர்களாகிய அடியவர் திருக்கூட்டங்களும் தம்முடன் சூழ்ந்து வராநிற்க, யாழினைத் தடவிச் சிவப்பேறிய கரங்களினையுடைய திருநீலகண்ட யாழ்ப்பாணரோடுகூட, இசையில்வல்ல மங்கையரெல்லாம் புகழும் மதங்க சூளாமணியாரும் உடன் வர, அங்கு நின்றும் எழுந்தருளினர், என்பதாம்.

திருநீலகண்ட யாழ்ப்பாணருடைய வேண்டுகோளின்படியே பிள்ளையார் சிதம்பரத்தை விட்டு நிவா என்னும் நதிக்கரையின் மேற்றிசைக்குச் செல்ல, அங்குத் தந்தையார் முதலாயினரும், தம் பத்தினியாருடன் பாணனரும் வந்து சேர, இவர்களெல்லாரோடும் அவ்வழியே எழுந்தருளினர் என்று இத்திருப்பாட் டாற் கூறப்பட்டது. (களஎ)

### திருவெருக்கத்தம்புலியூருக் கெழுந்தருளல்.

இருந்த டங்களும் பழனமும் கடந்துபோய் எருக்கத்தம் புலியூ ரின், மருங்கு சென்றுற நீலகண் டப்பெரும் பாணனர் வணங்கிக்கார், நெருங்கு சோலைசூழ் இப்பதி அடியனேன் பதியென நெடிதின்புற், றருங்க லைச்சிறு மழஇளங் களிறனர் அங்கணைந் தருள்செய்வார். களஅ

(எ - து.) நிவா என்னும் நதியின் மேற்றிசையே சென்று அந்த மார்க்கத்தி லுள்ள பெரிய வாவிகளையும் வயல்களையும் கடந்துபோய்த் திருவெருக்கத்தம் புலியூரின் பக்கலிற் சென்றருள, அப்பொழுது பாணனர் பிள்ளையாரை வணங்கி "மேகங்கள் நெருங்கிய சோலை சூழ்ந்த இத்தலம் அடியேன் ஜனித்த ஜனன பூமி" என்று சொல்ல, அரிய வேத முதலிய கலைகளில் வல்ல சிறிய இளங்களிற்றினை யொத்த பிள்ளையார் மிகவும் மகிழ்ச்சி யடைந்து, அத்தலத்தை அடைந்தருளிப் பாணனரை நோக்கி அருளிச்செய்வாராயினர், என்பதாம்.

வேத முதலிய கலைகளிற் கூறும் பொருள்மதமுடைய சிறிய யானை என் பார் - அருங்கலைச் சிறு மழ விளங்களிறு என்றார். (களஅ)

### திருப்பதிகம் ஓதல்

ஐயர் நீர்அவ தரித்திட இப்பதி அளவின்மா தவமுன்பு, செய்தவா றெனச் சிறப்புரைத் தருளியச் செழும்பதி யிடங்கொண்ட, பைகொள் கண்டர்தம் கோயிலின் உட்புக்கு வலங்கொண்டு வணங்கிப்பார், உய்ய வந்தவர் செழுந்தமிழ்ப் பதிகம்அங் கிசையுடன் * அருள்செய்தார்.

* உரைசெய்தார்—என்னும் பாடம்,

(எ - து.) உலகுய்ய வந்த பிள்ளையார், பாணனாரைப் பார்த்தருளி, "ஐயரே, நீர் இப்பதியில் அவதாரஞ் செய்ய இப்பதி அளவில்லாத பெரிய தவத்தை எவ்வகையாய்ச் செய்ததோ!" என்று அவரது சிறப்பினை யுரைத் தருளி, அந்தச் செழுமையுள்ள திருத்தலத்தை இடமாகக் கொண்டருளிய நீல கண்டத்தினையுடைய இறைவன் வீற்றிருக்கும் திருக்கோயிலினுள்ளே புகுந்து, வலமாக வந்து வணங்கி, வளப்பம் பொருந்திய திருப்பதிகத்தை இசையுடன் அருளிச்செய்தார் என்பதாம்.

தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரிடத்து அவரினும் அன்பராய்ச் சிறப் பிருத்தல் தெய்வத்தின் குணமாதலான், தெய்வமாகிய பிள்ளையார் பாணரை நோக்கி—ஐயர்நீர் அவதரித்திட இப்பதி அளவில் மாதவம் முன்பு செய்தவாறு எனச் சிறப்பு உரைத்தருளினாரென்க. (களகூ)

### திருமுதுகுன்றத்துக்கு எழுந்தருளல்.

அங்கு நின்றெழுந் தருளிமற் றவருடன் அம்பொன்மா மலைவல்லி,
பங்கர் தாம்இனி துறையுநற் பதிபல பரிவொடும் பணிந்தேத்தித்,
துங்க வண்தமிழ்த் தொடைமலர் பாடிப்போய்த் தொல்லைவெங் குரு
வேந்தர், செங்கண் ஏற்றவர் திருமுது குன்றினைத் தொழுதுசென் றணை
கின்றார். கஅ0

(எ - து.) வெங்குரு என்னும் திருப்பெயரினையுடைய சீகாழித்தலைவர் திருவெருக்கத்தம்புலியூரை விட்டு அங்குநின்றும் எழுந்தருளி, அந்தப் பெரும் பாணரோடு பர்வதராஜ புத்திரியாகிய உமாதேவியை இடப்பாகத்திலுடைய இறைவன் வீற்றிருக்கும் திருவெருக்கத்தம்புலியூருக்குத் தென்கிழக்கிலுள்ள திருக்கூடலையாற்றூர் முதலிய பல திருப்பதிகளை மிக்க அன்போடும் வணங்கிப் போற்றி, வளப்பம் பொருந்திய தமிழ்ச்சொல் மலராற் றொடுத்த பதிகமாலைகளை அவ்வவ்விடங்களிற் பாடியருளி அவ்விடங்களை விட்டுச்சென்று, சிவந்த கண்களை யுடைய இடபத்தை வாகனமாகக்கொண்ட பழமலைநாதர் எழுந்தருளியிருக்கும் விருத்தாசலத்தை வணங்குதற்குச் சென்றருள்வாராயினர், என்பதாம்.

மொய்கொள் மாமணி கொழித்துமுத் தாறுசூழ் முதுகுன்றை
அடைவோம்என், றெய்து சொன்மலர் மாலைவண் பதிகத்தை இசை
யொடும் புனைந்தேத்திச், செய்த வத்திரு முனிவரும் தேவரும் திசை
யெலாம் நெருங்கப்புக், கையர் சேவடி பணியும்அப் பொருப்பினில்
ஆதர வுடன்சென்றார். கஅக

(எ - து.) திரளாயுள்ள பெரிய முத்தங்களைக் கரையில் ஒதுக்கும் மணி முத்தாநதி சூழ்ந்துள்ள திருமுதுகுன்றை அடைவோமென்று சொல்லுவதாகிய சொல்லமைந்த சொன்மலராலாகிய வளம்பொருந்திய பதிகமாலையை இசை யுடனே பாடிப்போற்றி, செய்யத்தகும் தவநிலையில் நிற்கும் திருமுனிவரும், தேவர்களும் நாற்றிசைகளிலும் நெருங்கி உள்ளே புகுந்து பழமலைநாதருடைய திருவடிகளை வணங்கும் அத்திருமுதுகுன்றினில் விருப்பத்துடன் சென்றருளி னார், என்பதாம். (கஅக)

**திருப்பதிகம் ஓதிப் பணிதல்.**

.வான நாயகர் திருமுது குன்றினை வழிபட வலங்கொள்வார்
தூந றுந்தமிழ்ச் சொல்இருக் குக்குறள் துணைமலர் மொழிந்தேத்தி
ஞான போனகர் நம்பர்தங் கோயிலை நண்ணிஅங் குள்புக்குத்
தேன்அ லம்புதண் கொன்றையார் சேவடி திளைத்த*அன் பொடுதாழ்ந்தார்.

(எ - து.) ஞானப்பாலை யுண்டருளிய பிள்ளையார், தேவர்கள் தலைவனாகிய இறைவன் வீற்றிருக்கும் திருமுதுகுன்றத்தை வணங்கும் திருவுள்ளம் உடையவராய், வலம்வந்து, அப்பழமலைநாதரது கோயிலையடைந்து உள்ளே சென்று, புனிதமாகிய தமிழ்ச்சொல்லாலாகிய இருக்குக் குறளென்னும் அளவொத்த பதிகமாலையைத் திருவாய்மலர்ந்தருளித் துதித்து, தேன் நிறைந்து ததும்புகின்ற குளிர்ந்த கொன்றைப் பூமாலையையணிந்த பழமலைநாதரது சிவந்த திருவடியின் கீழ்க் கலந்த பேரானந்தத்தோடு பணிந்தருளினர், என்பதாம்.

ஞானபோனகர், வானநாயகர் நம்பர்தங் கோயிலை நண்ணி அங்குள்புக்கு, தூநறும் தமிழ்ச்சொல் மொழிந்தேத்தி, தேனலம்பு அன்பொடு தாழ்ந்தார் எனக்கூட்டிப் பொருள்கொள்க. (கஅ௨)

தாழ்ந்தெ ழுந்துமுன் "முரசதிர்ந் தெழும்" எனும் தண்தமிழ்த் தொடைசாத்தி, வாழ்ந்து போந்தங்கண் வளம்பதி யதனிடை வைகுவார் மணிவெற்புச், சூழ்ந்த தண்புனல் சுலவு "முத் தாறொடு" தொடுத்த சொற் றொடைமாலை, வீழ்ந்த காதலால் பலமுறை விளம்பியே மேவினர் சிலநாள்கள். கஅரு

(எ - து.) இறைவன் சந்நிதியின் முன்னே பணிந்தெழுந்து "முரசதிர்ந்து எழும்" என்பதை முதலாகவுடைய **திருமுக்கால்** என்னும தண்ணிய தமிழ்ப் பதிகமாலையைச் சாத்திப் பேரானந்த வாழ்வினை யடைந்து கோயிலினின்றும் புறம்பே எழுந்தருளி, வளம்பொருந்திய திருமுதுகுன்றின்கண் அழகிய ஓரிடத்தில் தங்கியிருந்தனர். அங்ஙனமிருக்கும் ஆளுடைய பிள்ளையார், அழகிய திருமுதுகுன்றினை, அலைவீசும் குளிர்ந்த நீரையுடைத்தாய்ச் சூழ்ந்து வருகின்ற திருமணிமுத்தா நதியோடு சேர்த்துப் பாடியருளிய சொற்களாலாகிய பதிகமாலைகள் பலவற்றைத் தமது திருவுளத்தில் உண்டாகிய விருப்பத்தினுல் பல முறையும் திருவாய் மலர்ந்து சிலநாள் அங்கு எழுந்தருளியிருந்தனர், என்பதாம்.

பிள்ளையார் திருவுள்ளத்தில் திருமுதுகுன்றம் மிகுந்த விருப்பத்தைத் தந்தபடியினுல் சிலநாள் அங்ஙனே எழுந்தருளி யிருந்து திருமுதுகுன்றத்தைச் சிறப்பித்துப் பாடுவதோடு அம்முதுகுன்றைச் சூழ்ந்து வரும் மணிமுத்தா நதியையும் சிறப்பித்துப் பாடியருளினர் என்று இத்திருப்பாட்டாற் கூறப்பட்டது. (கஅரு)

**திருப்பெண்ணாகடத்திற்கும், திருத்தூங்கானைமாடத்திற்கும் எழுந்தருளிப் பதிகமோதல்.**

ஆங்கு நாதரைப் பணிந்துபெண் ணாகடம் அணைந்தரு மறையோசை
ஒங்கு தூங்கானை மாடத்துள் அமர்கின்ற ஒருதனிப் பரஞ்சோதிப்

---

* இன்பொடு—என்றும் பாடம்.

பாங்க ணைந்துமுன் வலங்கொண்டு பணிவுற்றுப் பரவுசொற் றமிழ்மாலை
"தீங்கு நீங்குவீர் தொழுமின்கள்" எனும் இசைப்*பதிகமுந் தெரிவித்தார்.

(எ - து.) திருமுதுகுன்றத்தி லிருந்து பழமலைநாதரை வணங்கி, அங்கு நின்றும் புறப்பட்டுத் திருப்பெண்ணாகடத்துக்கு எழுந்தருளி, அங்குநின்றும் அரிய வேதங்களின் ஓசை மிக்க திருத்தூங்கானைமாடம் என்னும் திருத்தலத்திற்கு எழுந்தருளி, அங்கு வீற்றிருக்கின்ற ஒப்பில்லாத தனிப்பெருஞ்சோதியின் அருகிற்சென்று வலம் செய்து, எதிரே வந்து பணிந்து, தாம் துதிக்கும் தமிழ்ச் சொல்லாலாகிய திருப்பதிகத்தில், "தீங்கு நீங்குவீர் தொழுமின்கள்" என்று திருக்கடைக் காப்புச் சொல்லி இசை நிரம்பிய அப்பதிகத்தை யாவரும் அறிய ஓதியருளினார், என்பதாம். (கஅச)

வேறு

**திருவரத்துறைக்கு எழுந்தருளல்.**

கருவ ரைப்பில் புகாதவர் கைதொழும்
ஒருவ ரைத்தொழு துள்ளம் உவந்துபோய்ப்
பெருவ ரத்தினில் பெற்றவர் தம்முடன்
திருவ ரத்துறை †சேர்தும்என் றேகுவார். கஅரு

(எ - து.) பிறப்புக்கு எல்லையாயுள்ள யோனிவழியிற் புகாதவராகிய அடியார்கள், இடைவிடாது வணங்கும் ஒப்பில்லாத சுடர்க்கொழுந்தீசரை வணங்கித் திருவுள்ள மகிழ்ந்து, அங்குநின்றும் எழுந்தருளி, தோணியப்பரிடத்துப் பெற்ற பெரியவரத்தினால் தம்மை மகனாராகப் பெற்ற சிவபாத இருதயரோடும் நிவாக் கரையில் இருக்கின்ற திருநெல்வாயில்அரத்துறையைப் போய்அடைவோமென்று எழுந்தருளுவாராயினார், என்பதாம். (கஅரு)

**பிள்ளையார் திருவீதியில் நடந்தருளல்.**

முந்தை நாள்க ளொரோவொரு கான்முது
தந்தை யார்பியன் மேலிருப் பார்தவிர்ந்
தந்த ணாளர் அவர்அரு கேசெலச்
சிந்தை செய்விருப் போடுமுன் சென்றனர். கஅசு

(எ - து.) அதற்கு முன்பெல்லாம் முதுமைப் பருவத்தினை யடைந்திருக்கும் தம் தந்தையாகிய சிவபாத இருதயரது தோளின்மேல் ஒவ்வொரு நாளும் எழுந்தருளிச் செல்வாராகிய பிள்ளையார்; திருவரத்துறையை நோக்கி எழுந்தருளும்போது, அவரது தோளின்மேல் எழுந்தருளிப் போவதைவிட்டு, கூட்டமாக வரும் அவ்வந்தணர்களெல்லாம் தம்மைச் சூழ்ந்து அருகேவர, தாம் பாதசாரியாய்ச் செல்லவேண்டுமென்று திருவுளத்தெண்ணி, எண்ணிய விருப்பத்தின் படியே பின்னிடாது முன்னே திருவடிகள் நோவ நடந்து செல்வாராயினார், என்பதாம்.

* செய்யவாய் மலர்வித்தார்—என்னும் பாடம். † சேரும்—என்னும் பாடம்.

"சிவபாத இருதயர், நம்மைப் பிள்ளைமைப் பருவந்தொட்டு எடுத்ததோ அளவில்லை; நடக்கும் பருவம் வந்த இந்தப் பருவத்தும் பலமுறையும் பலநாளும் அவர் தோளின் மேலேயே வருகின்றோம், இனி அது முறையாகாது" என்று தந்தைபால் திருவுள்ளம் இரங்கினவராய் நடந்து செல்லத் துணிந்து, அந்தணர் எல்லாம் அருகே தம்மைச் சூழ்ந்து வர முன் சென்று நடந்தருளினார் என்று இத்திருப் பாட்டால் கூறப்பட்டது. (கஅசு)

திருவடி வருந்தல்.

ஆதி யார்தம் அரத்துறை நோக்கியே
காத லாலணை வார்கடி தேகிடத்
தாதை யாரும் பரிவுறச் சம்பந்தர்
பாத தாமரை நொந்தது பைப்பய. கஅஎ

(எ - து) முதற்கடவுளாகிய இறைவன் வீற்றிருக்கும் திருவரத்துறையை நோக்கி ஆசையோடு அணையும் கருத்துடையவராய ஆளுடைய பிள்ளையார் விரைந்து எழுந்தருள, அவர்தம் தாதையாராகிய சிவபாதவிருதயரும் திருவடிகள் பூமியிற் பொருந்தி நடப்பதனால் அடிகள் நோவுமே யென்று மனம் பொருது வருந்த, பிள்ளையாருடைய திருவடித் தாமரைகளும் நடை மேலிடமேலிட நோவைச் சிறிதுசிறிதாக அடைந்தன, என்பதாம். (கஅஎ)

மறைய னைத்து மொருவடி வாமென
நிறைம திப்பிள்ளை நீணிலஞ் சேர்ந்தெனத்
துறைய லைக்கங்கை சூடும ரத்துறை
இறைவ ரைத்தொழு வான்விரைந் தேகினார். கஅஅ

(எ - து) வேதங்களெல்லாம் திரண்டு ஒரு திருவுருவங்கொண்டு வந்தது போலவும், இளஞ்சந்திரன் கலைநிறைந்த சந்திரனாய் இப்பெரிய வுலகின்கண் வந்து சேர்ந்தது போலவும் காணப்படுகின்ற பிள்ளையார் பலதுறையாய் அலைகளை வீசும் கங்காநதியைச் சூடிய திருவரத்துறைநாதரை வணங்கும் பொருட்டு எழுந்தருளினார், என்பதாம். (கஅஅ)

பாச மற்றில ராயினும் பார்மிசை
ஆசை சங்கரற் காயின தன்மையால்
தேசு மிக்க திருவுரு வானவர்
ஈச னைத்தொழு தேதொழு தேகினார். கஅகூ

(எ - து) வேதவடிவமாகவும் சந்திரன் ஒளியாகவும் காணப்படும் திருவுருவினையுடைய பிள்ளையார் ஆன்மாக்களுக்குள்ள மூவகைப் பாசங்களும் சிறிதுமில்லாதவராயினும், இம்மண்ணுலகின்கண் மானுடத்திருவுருவமாய் வந்தும் இம்மண்ணுலகிலுள்ளார் அடையும் ஆசைகளை அடையாது தம் தந்தையாகிய சங்கரனிடத்தே தமது ஆசையெல்லாமாகிய தன்மையினால் அவ்வாசை வடிவினையுள்ள ஈசனையே மனத்தானும் வாக்கானும் வணங்கி, உடம்பானும் வணங்க அவ்வரத்துறையை நோக்கி எழுந்தருளினார், என்பதாம். (கஅகூ)

இந்த மாநிலத் தின்னிரு ணீங்கிட
வந்த வைதிக மாமணி யானவர்
சிந்தை யாரமு தாகிய செஞ்சடைத்
தந்தை யார்கழல் தாழ்ந்தெழுந் தேகினர். கசூ0

(எ - து) இம்மண்ணுலகின்கண் உள்ள மானிடரது ஆணவ மல இருள் நீங்கும்படி அவதரித்த வைதிக சூளாமணியாகிய பிள்ளையார் தமது சித்தத்தின்கண் நிறைந்த அமுதமாயிருக்கின்ற சிவந்த சடையினையுடைய இறைவனாகிய தந்தையின் திருவடிகளைப் பன்முறையும் ஆங்காங்குப் பணிந்தெழுந்தருளிப் போவாராயினர், என்பதாம். (கசூ0)

மாறன் பாடி யெனும்பதி வந்துற
ஆறு செல்வருத் தத்தின் அசைவினல்
வேறு செல்பவர் வெய்துறப் பிள்ளையார்
ஏறு மஞ்செழுத் தோதியங் கெய்திட. கசூக

(எ - து) இவ்வண்ணம் விடாது நடந்து வருவதனால் உண்டாகிய வருத்தத்தின் மிகுதியினல் தம்மோடு வரும் திருக்கூட்டத்தவர்களும் இளைப்பினையடைய, அப்பொழுது மாறன்பாடி யென்னும் பதியினை வந்தடையவே, அப்பதியினிடத்திற்றனே தங்குவதற் கெண்ணித் திருவைந்தெழுத்தை ஓசைபடச் சொல்லி அங்கே சென்றருள, என்பதாம். (கசூக)

உய்ய வந்தசம் பந்த ருடன்வந்தார்க்
கெய்து வெம்மை யிளைப்பஞ்சி னன்போலக்
கைக ளாயிரம் வாங்கிக் கரந்துபோய்
வெய்ய வன்சென்று மேல்கடல் வீழ்ந்தனன். கசூஉ

(எ - து.) உலக முய்யவந்த சம்பந்தமூர்த்திகளுக்கும் மூர்த்தியினுடன் வந்த திருக்கூட்டத்தவர்களுக்கும் சூரியன் தனது உஷ்ணமாகிய கிரணத்தினல் உண்டாகிய இளைப்பினைக்கண்டு பயந்தவனைப் போலத் தன்னுடைய கிரணங்களெனப்படும் ஆயிரம் கைகளையும் சுருக்கி மறைந்து சென்று மேற்கடலில் விழுந்தனன், என்பதாம் (கசூஉ)

அற்றை நாளிர வப்பதி யின்னிடைச்
சுற்று நீடிய தொண்டர்கள் போற்றிடப்
பெற்ற மூர்ந்தபி ரான்கழல் பேணுவார்
வெற்றி மாதவத் தோருடன் மேவினர். கசூங

(எ - து.) அந்நாளிரவில் அம்மாறன்பாடி யென்னும் திருப்பதியிலுள்ளவர்களும், அதைச்சூழ்ந்த சிற்றூரிலுள்ள தொண்டர்களும் வந்து கூடிப் பிள்ளையாருக்கும், ஏனைத் திருக்கூட்டத்தவர்களுக்கும் செய்யவேண்டிய உபசாரங்களெல்லாம் செய்ய, அவற்றை ஏற்று விடையினை ஊர்ந்தருளும் இறைவனது திருவடியை மறவாதிருக்கும் பிள்ளையார் வெற்றிபொருந்திய பெரிய தவத்தினையுடைய முனிவருடன் அங்கு எழுந்தருளியிருந்தனர், என்பதாம். (கசூங)

**பிள்ளையாரது திருவடிநோயினை அரத்துறைநாதன் திருவுளத் தெண்ணல்.**

இந்தி லைக்கண் எழில்வளர் பூந்தராய்
மன்ன ளூர்தம் வழிவருத் தத்தினை
அன்னம் ஆடும் துறைநீர் அரத்துறை
சென்னி யாற்றர் திருவுளம் செய்தனர். கககச

(எ - து.) மாறன்பாடி என்னும் பதியில் வழிநடையினல் உண்டாகிய வருத்தத்தினல் அடியார் திருக்கூட்டத்துடன் தங்கியிருக்கின்றபொழுது, அழி வெய்தவரும் ஊழிகள்தோறும் அழிவுருது அழகுபெற்று வளரும் திருப்பூந் தராய் என்னும் சீகாழிப்பதிக்குத் தலைவராகிய பிள்ளையாருக்கு வழி நடந்த தனல் உண்டாயிருக்கும் வருத்தத்தினை, அன்னப்பறவைகள் மூழ்கிவிளையாடும் நீர்த்துறையினையுடைய நிவாநதிக்கரையிலுள்ள திருஅரத்துறையில் எழுந்தருளி யிருக்கும் கங்காதரமூர்த்தி திருவுளத்தில் எண்ணியருளினர், என்பதாம்.

"தன்னைப் பிள்ளையாகப் பெற்ற தந்தையின் வருத்தத்தை நோக்கித் தோள்களினின்றும் கீழிறங்கி நம்மிடத்துக்கு வந்து நம்மைக் காணும் ஆசை யினல் நடந்து வரத்தலைப்பட்டான் பூந்தராய் மன்னன்; அவனைப் பிள்ளையாகவே உடைய நாம் அவனுக்கு இதுகாறும் செய்து வந்ததுபோல் இன்று நாம் செய்யா தொழிந்தது தந்தையாகிய நமது கருணைக்கு அழகன்று" என்று வருந்தினர் என்பார் - **சென்னியாற்றர் திருவுளஞ் செய்தனர்** என்ருர்.

அஃதாவது, "நம்மைக் காணுது அழுதபோது அதுபொருது பாலைக் கொடுத்தோம்; இளங் கையைத் தட்டி நம்மை நோக்கிப் பாடியபொழுது அது பொருது பொற்ருளத்தைத் தந்தோம்; வாய்திறந்து அழுததினும், கைசிவக்கத் தட்டியதினும், தாமரை மலரின் இளந்தளிர்போன்ற சிற்றடி சிவக்க நடந்து வந்தது பொறுக்கக்கூடாத வருத்தமான செயலன்ருே? இச்செயலை எண்ணு திருந்தோமே" என்று திருவுளமிரங்கி அதற்குச் செய்யவேண்டியவற்றைச் சிறப்பாகச் செய்ய விரைந்தனர் என்பதாம். (கககச)

**முத்துச்சிவிகை முதலியன அளித்தல்.**

ஏறு தற்குச் சிவிகை இடக்குடை
கூறி யூதக் குலவுபொற் சின்னங்கள்
மாறின் முத்தின் படியினல் மன்னிய
நீறு வந்த நிமலர் அருளுவார். கககரு

(எ - து.) திருநீறு என்னும் ஐஸ்வர்யத்தை உவந்தருளும் நின்மலத் திருமேனியராகி, திருவரத்துறை நாதர், ஒன்றுக்கொன்று மாறுபடாது ஒரு சமமாயுள்ள முத்தின் வரிசைகளால் செய்யப்பட்டனவாகி, எழுந்தருளிச் செல் வதற்குரிய முத்துச் சிவிகையும், நிழலைப்பரப்ப முத்துக்குடையும், பிள்ளையார் எழுந்தருளும் செயலை யாவரும் முன்னுணர அவரது திருநாமத்தைச் சொல்லி ஊதுவதற்கு அழகிய பொன்போல் பொலிவு பெற்றுள்ள முத்துத் திருச் சின்னங்களும் ஆகிய இவைமிற்றை அருளுவாராயினர், என்பதாம்.

நீறு உவந்த நிமலர், மாறின் முத்தின் படியினல் மன்னிய ஏறுதற்குச் சிவிகை சின்னங்கள் அருளுவார் எனக் கூட்டிப் பொருள் கொள்க. (கககரு)

**இறைவன் யாவர்க்கும் கனவின்கண் கூறல்.**

நீடு வாழ்பதி யாகும்நெல் வாயிலின்
மாட மாமனை தோறு மறையோர்க்குக்
கூடு கங்குல் கனவிற் குலமறை
தேடு சேவடி தோன்றமுன் சென்றுபின். கசுசு

(எ - து.) பிள்ளையாருக்கு முத்துச் சிவிகை முதலியவற்றை அருள் செய்ய எண்ணி, அரத்துறை நாதர் நெடுங்காலமாய்க் கெடாது வாழ்கின்ற பதியாகிய திருநெல்வாயில் அரத்துறையில் மேல்மாடங்களோடு கூடியுள்ள வீடுகள் தோறும் வசிக்கும் அந்தணர்களுக்கு அன்றிரவில் சொப்பனங் கூடும்படி செய்து அக்கனவில், சிறப்பினையுடைய வேதங்களைத் தேடும்படி செய்யும் தம் செம்மை வாய்ந்த திருவடிகள் அவர்கள் கண்களுக்கு முன்னே தோன்றச் சென்றருளிப் பின், என்பதாம். (கசுசு)

ஞான சம்பந்தன் நம்பால் அணைகின்றான்
மான முத்தின் சிவிகை மணிக்குடை
ஆன சின்னநம் பாற்கொண் டருங்கலைக்
கோன வன்பால் அணைந்து கொடுமென. கசுஎ

(எ - து.) "நம் திருஞான சம்பந்தன் நம்மைத் தரிசிக்க வேண்டுமென்று நம்மிடத்து வருகின்றான்; ஆகையினால், சிறந்த குளிர்ச்சியைச் செய்யும் பெரிய முத்துச்சிவிகையும், அழகிய முத்துக் குடையும், முத்தினலாகிய திருச்சின்னமும் நம்முடைய ஆலயத்தில் இருக்கின்றன; அவற்றை எடுத்துக்கொண்டு அரியவேத முதலிய கலைகளுக்கெல்லாம் அதிபனாகிய அத்திருஞானசம்பந்தனிடத்துக் கொண்டுபோய்க் கொடுங்கள்" என்று அருள் செய்தனர், என்பதாம். (கசுஎ)

**சிவிகை முதலியவற்றைப் பார்க்க யாவருங் கோயிலுக்கு வருதல்.**

* அந்த ணாளர் உரைத்தஅப் போழ்தினில்
வந்து கூடி மகிழ்ந்தற் புதமுறும்
சிந்தை யோடும் செழுநீர் அரத்துறை
இந்து சேகரர் கோயில்வந் தெய்தினர். கசுஅ

(எ - து.) மேலே சொல்லியவாறு அரத்துறை நாதன் அங்கு வசிக்கும் அந்தணர்களுக்குக் கனவின்கண் திருவாய் மலர்ந்தருளிய சமயத்தில், யாவரும் ஒன்றாகக்கூடி, மகிழ்ச்சியடைந்து "இது என்ன அதிசயம்!" என்றெண்ணுகின்ற சித்தத்தோடும் செழுமை மிக்க நீர்வளம் பொருந்திய திருவரத்துறையில் எழுந்தருளியிருக்கும் சந்திரசேகரனது திருக்கோயிலை வந்தடைந்தனர், என்பதாம்.

**திருக்கோயிலிலுள்ள அகத்தடியவர்கள் கூறல்.**

ஆங்கு மற்ற அருள்அடி யாருடன்
ஒங்கு கோயிலுள் ளார்க்கும்உண் டாயிட

---

* அந்தணாளர்க்கு—என்றும் பாடம்

ஈங்கி தென்ன அதிசயம் என்பவர்
தாங்கள் அம்* மறை யோர்கள்முன் சாற்றினர். ௧௯௯

(எ - து.) ஊரிலுள்ள அந்தணர்களுடைய செயல் அங்ஙனமிருக்க, அரத்துறை நாதன் ஊரிலுள்ள அந்தணர்களுக்குக் கனவின்கண் அருளியது போலவே, திருக்கோயிலிலிருந்து திருவருளை நாடித் திருவலகிடுதல் முதலிய திருத்தொண்டுகளைச் செய்யும் அடியார்களுக்கும், அவர்களோடு சிறந்த பூஜாதி காரமுடைய ஆதிசைவர்களுக்கும் கனவு நிலை உண்டாக, "இவ்விடத்து இது என்ன அதிசயம்" என்று அதிசயத்தைக் கொண்டவர்களாய், ஆங்கு வந்துகூடிய ஊர் அந்தணர்களுக்கு, "ஐயா! அந்தணர்களே, இன்றிரவு இங்கு ஓர் அரிய கனவைக் கண்டோம்; கண்ட அப்பொருள் இங்குள்ளதாகவும் கண்டோம்; இது என்ன அதிசயம்!" என்று அவர்கள் சொன்னார்கள், என்பதாம்.

ஊரிலுள்ள அந்தணர்களெல்லாம் தாங்கள் கண்ட கனவின் பொருளைக் கோயிலிலே கண்டு அப்பொருள்களை ஞானசம்பந்தர்பால் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டிக் கோயிலிலுள்ளாரைக் கேட்கவர, அவர்கள் கேட்பதற்கு முன்னே, அக்கோயிலிலுள்ளார் தாங்கள் கண்ட கனவினைக் கூறினர், என்று இத்திருப்பாட்டாற் கூறியவாறும். (௧௯௯)

**கோயில்கதவைத் திறத்தல்.**

சால மிக்க வியப்புறு தன்மையின்
பால ராதலும் பள்ளி எழுச்சியின்
காலம் எய்திடக் காதல் வழிப்படும்
சீல மிக்கார் திருக்காப்பு நீக்கினர். ௨௦௦

(எ - து) இவ்வண்ணம் கோயிலினிடத்தே கூடிய யாவரும் "இது அதிசயத்தினும் அதிசயமாயுள்ளது!" என்று நினைக்குந் தன்மையை யுடையவராய்ச் சற்றுநேரம் அவ்வதிசயத்தின்பாலராதலும், அச்சமயத்தில் திருப்பள்ளியெழுச்சிக்குரிய காலம் வர, சைவ சீலமிக்காராகிய தொண்டர்கள் முதலிய யாவரும் திருவாயிலின் திருக்காப்பினை நீக்கினார்கள் என்பதாம். (௨௦௦)

**கோயிலில் முத்துச்சிவிகை முதலியவற்றைக் காணல்.**

திங்கள் நீர்மைச் செழுந்திரள் முத்தினால்
துங்க வெண்குடை தூய சிவிகையும்
பொங்க வூதும் பொருவரும் சின்னமும்
அங்க ணாதர் அருளினால் கண்டனர். ௨௦௧

(எ - து) திருக்காப்பினை நீக்கியவுடன் சந்திரனைப்போலும் குளிர்ந்தவொளியையுடைய செழுமைபொருந்திய திரண்ட முத்தினாலாகிய பெரிய வெண்குடையும், பரிசுத்தமாகிய முத்துச்சிவிகையும், யாவருங் கேட்கும்படி பெரிய ஓசைபடக் கூவும் ஒப்புசொல்லக்கூடாத திருச்சின்னமும் அரத்துறை நாதன் திருவருளினால் அவ்விடத்தில் இருப்பக்கண்டார்கள் என்பதாம். (௨௦௧)

* மறையோர்க்கு முன்—என்றும் பாடம்.

**யாவரும் ஆரவாரம் செய்தல்.**

கண்ட*பின்னர் கைதலை மேற்குவித்
தெண்டி சைக்கும் விளக்கிவை யாமெனத்
தொண்ட ரோடு மறையவர் சூழ்ந்தெழுந்
தண்டர் நாடும் அறிவுற ஆர்த்தனர். உ0உ

(எ - து) அகத்தடிமையாளராகிய ஆதிசைவர் முதலிய பலவகையான தொண்டின் திறத்திலுள்ள தொண்டர்களோடு, ஊரின்கண் வாசிகளாய் வந்த வேதியர் கூட்டங்களும் முத்துச்சிவிகை முதலியவற்றைக் கண்டபின்னர், இரு கரங்களையும் தலைமேற் குவித்துக்கொண்டவர்களாய், "இவை எண்திசைகளை யும் விளக்கும் தீபக்கூட்டங்களாம்" என்று அவற்றை வலமாகச் சூழ்ந்து வந்து வணங்கி, எழுந்து, இம்மண்ணுலகமேயன்றி விண்ணுலகமும் அறியும்படி ஆரவாரஞ் செய்து "அர, அர" என்று கோஷஞ் செய்தனர், என்பதாம்.

தொண்டரோடு மறையவர், கண்டபின்னர் கைதலை மேற்குவித்து, எண்திசைக்கும் விளக்கு இவையாம் என, சூழ்ந்தெழுந்து அண்டர் நாடும்அறிவுற ஆர்த்தனர் எனக்கூட்டிப் பொருள்கொள்க. (உ0உ)

**முத்துச்சிவிகை முதலியவற்றேடு எதிர்கோளப் போதல்.**

சங்கு துந்துபி தாரைபே ரிம்முதல்
பொங்கு பல்லிய நாதம் பொலிந்தெழ
அங்க ணன்அரு ளாலவை கொண்டுடன்
பொங்கு காதல் எதிர்கொளப் போதுவார். உ0ரு

(எ - து.) சங்கங்களும் துந்துபியும் தாரையும் பேரிகையும் ஆகிய இவை முதலிய சிறந்த பலவகை வாத்தியங்களின் பெரிய ஓசை எங்கும் நிறைந்து எழ, திருவரத்துறை நாதன் அருளால் ஞானசம்பந்தப் பெருமானுக்கு அருளிய முத்துச்சிவிகை முதலியவற்றை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு அவற்றுடன் தாங்களும், பிள்ளையாரைக் காணும் அவாமேலிட்டுத் தங்களை உந்த, அப்பிள்ளை யாரை எதிர்கொண்டழைக்கப் போவாராயினர், என்பதாம். (உ0ரு)

**சிவிகை முதலியவற்றை அந்தணர்கள் தாங்கிச் செல்லல்**

மாசில் வாய்மைநெல் வாயின் மறையவர்
ஆசில் சீர்ச்சண்பை யாண்டகை யார்க்கெதிர்
தேசு டைச்சிவி கைமுத லாயின
ஈசர் இன்னரு ளாற்றாங்கி யேகினர். உ0ச

(எ - து.) உண்மையாகிய வைதிகநெறியில் பொய்மையில்லாத நெல்வா யில் அரத்துறையில் வசிக்கும் அந்தணர்கள், சீர்மையில் குன்றுதல் இல்லாத சண்பையாகிய சீகாழித்தலைவர்க்கு எதிராக, ஒளிமிக்கு விளங்கும் முத்துச்சிவிகை முதலிய சின்னங்களை ஈசன் அளித்த கட்டளையின்படியே ஏந்திக்கொண்டு சென்றார்கள், என்பதாம். (உ0ச)

*பின் அவர்—என்றும் பாடம்

இறைவன் பிள்ளையாருக்கருளல்

இத்த லையிவர் இன்னணம் ஏகினர்
அத்த லைச்சண்பை நாதர்க்கும் அவ்விரா
முத்த நற்சிவி கைமுத லாயின
உய்த்த ளிக்கும் படிமுன் உணர்த்துவார். உ0டு

(எ - து.) திருநெல்வாயில் அரத்துறையின்கண் ஆலயத்திலுள்ளாரும் ஊரிலுள்ளாரும் முத்துச்சிவிகை முதலியவற்றைத் தாங்கிக்கொண்டு பிள்ளையாரை எதிர்கொண்டழைப்பவர்களாய்ச் சென்றார்கள்; மாறன்பாடி என்னும் அவ்விடத்தில் எழுந்தருளியிருக்கும் சீகாழித்தலைவர்க்கு அன்று இரவிற்றானே, "நல்ல முத்துச்சிவிகை முதலாயினவற்றை அனுப்புகிறோம். அவற்றை நீ பெற்றுக்கொண்டு சிவிகையின்மேலிருந்து அடியார்கள் தாங்கிவர நீ நம்பால் வருவாயாக" என்பதனை அரத்துறையினின்றும் அவர்கள் வருவதற்குமுன் அரத்துறைநாதன் அறிவிப்பாராயினர்என்பதாம். (உ0டு)

கனவின்கண் அருளியதைப் பிள்ளையார் உணர்தல்

அள்ளல் நீர்வயல் சூழும் அரத்துறை
வள்ள லார்நாம் மகிழ்ந்தளிக் கும்அவை
கொள்ள லாகும்கொண் டுய்த்தல்செய் வாயென
உள்ள வாறருள் செய்ய உணர்ந்தபின். உ0சு

(எ - து.) சேற்றின் மயமாயுள்ள நீர்வளமிக்க வயல் சூழ்ந்த திருவரத்துறையில் எழுந்தருளியிருக்கும் வள்ளலாகிய இறைவன் பிள்ளையாரது நனவின்கண் நிகழும் கனவின்கண், "பிள்ளாய், இன்று நீ நம்மைக் காணும் பொருட்டுச் சிற்றடி சிவக்க நடந்துவந்தமை கருதி, நாம் மகிழ்ந்து, முத்துச்சிவிகை முதலியவற்றைக் கொடுத்திருக்கின்றோம்; அவை வருகின்றன. பிறராலன்றி நம்மால் கொடுக்கப்பட்டன ஆகலான், அவற்றை நீ இகழாமல் ஏற்றுக்கொள்ளக் கூடும்; ஏற்றுக்கொள்வதேயல்லாமல், அச்சிவிகையின் மேலேறி எங்கெங்கும் செல்வாயாக; நீ மயூரவாகனனுகையால் அவ்வூர்தியன்றி மற்றொன்றின்மேல் ஏற எண்ணங்கொள்ளாய்; அதனை எண்ணியே நாம் அந்த மயூரத்தையே இந்த முத்துச்சிவிகையாக வரச்செய்திருக்கின்றோம்." என்று தாம் செய்ததை உள்ளவண்ணம் சொல்லப் பிள்ளையார் அதனைத் திருவுளங் கொண்டவராய்ப் பின் திருக்கண் மலர்ந்து, என்பதாம்.

அவை நாம் மகிழ்ந்தளித்தவை, நீ கொள்ளலாகும் என்று அவ்வளவில் அருளாது, கொண்டு உய்த்தல் செய்வாயென உள்ளவாறு செய்ய என்றதனால், பிள்ளையாருக்குரிய மயூரத்தைக் குறித்ததென்க. (உ0சு)

பிள்ளையார் இறைவனருளியதைத் தந்தையார் முதலாயினருக்கருளல்

சண்பை யாளியார் தாம்கண்ட * மெய்யருள்
பண்பு தந்தையார் தம்உடன் பாங்கமர்

* பேரருள்— என்றும் பாடம்.

தொண்ட ருக்கருள் செய்துதொ ழாமுனம்
விண்பு லப்பட லிங்கிருள் நீங்கலும். உ0எ

(எ - து) திருக்கண்மலர்ந்தவராகிய சண்பை நாதர், தாம் கண்டதாகிய மெய்யருளை, அவ்வருட்பண்பினை உணரத்தக்க சிவபாத இருதயருக்கும் அவருடனிருக்கும் ஏனையடியார்களுக்கும் சொல்லியருளி அரத்துறைநாதனைத் திருவுளத் தெண்ணி வணங்குவதற்கு முன்னமே, படர்ந்து நெருங்கியிருந்த இருளானது நீங்கி ஆகாயம் வெள்ள வெளியாய்த் தெரியவரவும், என்பதாம். (உ0எ)

### பிள்ளையார் நித்திய கடன்களை இயற்றி எழுந்தருளல்

மாலை யாமம் புலர்வுறும் வைகறை
வேலை செய்வினை முற்றிவெண் ணீறணி
கோல மேனிய ராய்க்கைம் மலர்குவித்
தேல வஞ்செழுத் தோதி எழுந்தனர். உ0அ

(எ - து.) இரவில் எண்ணப்படும் நான்காம் சாமம் நீங்கும் உதயகாலத்தில், செய்யத் தருவதாகிய நித்திய கடன்களை முடித்துக்கொண்டு திருநீறு சண்ணித்த அழகிய திருமேனியராய் மலர்போன்ற மெல்லிய திருக்கரங்களைக் குவித்துக் கும்பிட்டுத் திருவரத்துறைக்கு எழுந்தருளும் திருவுள்ளத்தோடு எழுந்தருளினர், என்பதாம். (உ0அ)

### சூரியன் உதயமாதல்

போத ஞானப் புகலிப் புனிதரை
சீத முத்தின் சிவிகைமேல் ஏற்றிடக்
காதல் செய்பவன் போலக் கருங்கடல்
மீது தேரின்வந் தெய்தினன் வெய்யவன். உ0கூ

(எ - து.) சிவஞான போதச் செல்வராய்த் திருப்புகலியில்வந்த நின்மல மூர்த்தியைக் குளிர்ந்த முத்துச்சிவிகையின்மேல் எழுந்தருளச் செய்வதற்கு விருப்பமுற்றவன் போலச் சூரியன் கரிய கடலிலுள்ள உதயகிரியின்மேல் தேரூர்ந்து வந்தனன், என்பதாம். (உ0கூ)

### திருவரத்துறையிலிருந்து சிவிகையோடு எதிர்கொள வருதல்

ஆய போழ்தில் அரஎனும் ஆர்ப்புடன்
தூய முத்தின் சிவிகை சுடர்க்குடை
மேய சின்னங்கள் கொண்டுமெய் யன்பரோ
டேய அந்தணர் தாம்எதிர் தோன்றினர். உக0

(எ - து.) சூரியன் உதயமான காலத்தில், அரத்துறையிலுள்ள மெய்யன்பர்களோடு அவ்வூர் அந்தணர்களும் சிறந்த முத்துச்சிவிகையையும், ஒளிவீசும் முத்துக் குடையினையும் அதுபோலும் உள்ள திருச்சின்னங்களையும் தாங்கிக் கொண்டு "அர, அர" என்னும் பேரோசையுடன் பிள்ளையாரெதிரே வந்தனர்,

என்பதாம். ஆயபோழ்தில் மெய்யன்பரோடு ஏய அந்தணர்தாம் தூயமுத்தின்......கொண்டு அரனனும் ஆர்ப்புடன் எதிர்தோன்றினர் எனக் கூட்டிப் பொருள் கொள்க. (உக0)

**சிவிகை முதலியவற்றை ஏற்றுக்கொள்ள அடியார்கள் விண்ணப்பித்தல்**

வந்து தோன்றிய அந்தணர் மாதவர்
கந்த வார்பொழில் காழிநன் னுடையர்முன்
அந்த மில்சீர் அரத்துறை ஆதியார்
தந்த பேரருள் தாங்குவீர் என்றனர். உகக

(எ - து.) நறுமணங் கமழும் சோலைகள் சூழ்ந்துள்ள நல்ல சீகாழி நாடராகிய பிள்ளையார்முன்னே அவர் காணும்படி வந்தவர்களாகிய வேதியர்களும், பெரிய சிவதருமத்தைச் செய்யும் தொண்டர்களும் "அளவில்லாத சிறப்பினையுடைய அரத்துறையின்கண்ணே எழுந்தருளியிருக்கும் இறைவனர் பேரருளால் தந்தனவாகிய இவற்றை ஏற்றுக்கொள்வீர்" என்று விண்ணப்பஞ் செய்தனர், என்பதாம்.

கந்தவார் பொழில் காழி நன்னுடையர்முன், வந்து தோன்றிய அந்தணர் எனக் கூட்டுக. (உகக)

**இறைவன் அருளியவற்றை ஏற்றுக்கொள்ளல்**

என்று தங்களுக் கீசர் அருள்செய்த
தொன்றும் அங்கொழி பாமை உரைத்துமுன்
நின்று போற்றித் தொழுதிட நேர்ந்தது
மன்று ளார்அரு ளென்று வணங்கினர். உகஉ

(எ - து.) பிள்ளையாரைநோக்கி விண்ணப்பஞ் செய்த அவர்கள் மீண்டும் "சீகாழிப் பெருமானே! நாங்கள் இப்போது விண்ணப்பஞ் செய்தது, எங்கள் சொல்லல்ல; அரத்துறை ஈசன் எங்கள் கனவின்கண் எழுந்தருளி, 'ஞான சம்பந்தன் நம்பால் அணைகின்றான், ஆனமுத்தின் சிவிகை மணிக்குடை, ஆனசின்னம் நம்பாற்கொண்டு, அருங்கலைக் கோனவன்பால் அணைந்து கொடும்' என்று அருள் செய்த அருள் வாக்காகும்" என்று ஒருமொழியும் விடாமற் சொல்லி அப் பிள்ளையார் முன்னே நின்று துதித்து வணங்க, அவ்வருண் மொழியெல்லாம் கேட்டருளிய ஞானசம்பந்த மூர்த்திகள் இவ்வாறு இவையெல்லாம் அருளப் பெற்றது நடராசன் திருவருளாமென்று, முத்துச்சிவிகை முதலியவற்றை அரத்துறை நாதன் திருவுருவாகவே கண்டு வணங்கினர் என்பதாம்.

முத்துச்சிவிகையைக் கண்ணுற்ற காலத்து அதனிடத்து விளையும் குளிர்ச்சியானது நடேசப் பெருமானது குஞ்சிதபாதத்தில் விளையும் குளிர்ச்சியை ஒத்திருத்தலால், அதனைக் குறிப்பிட—மன்றுளார் அருளென்று வணங்கினர் என்றார். (உகஉ)

**திருப்பதிகம் ஓதல்**

"எந்தை ஈசன்" எனவெடுத் திவ்வருள்
வந்த வாறுமற் றிவ்வண மோ* என்று

* மற்றெவ்வணமோ—என்னும் பாடம்.

சிந்தை செய்யுந் திருப்பதி கத்திசை
புந்தி யாரப் புகன்றெதிர் போற்றுவார். உகரு

(எ - து.) முத்துச்சிவிகையைக் குஞ்சிதபாத நிழலாகக்கண்டு வணங்கிய பின்னர், இவ்வருள் வந்தவழி இவ்வண்ணமோ என்று, தாம் சிந்தை செய்தன எல்லாவற்றையும் சிந்தித்து, "எந்தையீசன்," என்று முதலடி யெடுத்துப் பாடும் அத்திருப்பதிகத்திசையில் தமது திருவுள்ளத்தில் நினைத்தவை யெல்லாம் எடுத்துச் சொல்லி, வந்த அடியார்களுக்கு முன்னே போற்றுவாராயினர், என்பதாம்.

இவ்வருள் வந்தவாறுமற்றிவ்வணமோ என்று சிந்தை செய்யும் (அவற்றை) எந்தையீசன், என எடுத்து (அத்) திருப்பதிகத்திசை (யில்) புந்தியாரப் புகன்று எதிர்போற்றுவார் எனக்கொண்டு கூட்டிப் பொருள் கொள்க.

"நாம் நமது சிற்றடி நோவு மென்றெண்ணாது அரத்துறை நாதன் திருவடியை நாடிவந்த அவ்வன்பின் வழியன்றோ இவ்வருள் வருவதற்கு வழியாயிற்று? ஆகவே, அருள் வருவதற்கு வழி ஞானமென் றெண்ணுகின்றார்களே, அஃது ஆகுமோ? ஆகாது. தவத்தான் மெய்ஞ்ஞானத்தைப்பெற்று, அதனால் உடம்பாற் செய்யப்படும் அன்பினைப் பெற்று அவ்வன்பின் வழியே மனமொழிகள் நைந்து சென்றால், அவ்வன்பின் வழியே அருள்வரும் வழியாகும்" என்று அம்முறை யெல்லாம் மெய்ஞ்ஞானிகளாகிய தொண்டர்களெல்லாம் உணரத் திருப்பதிகத்தில் வைத்துப் பாடி யருளினமையான்—திருவருள் வந்தவாறு மற்றிவ் வணமோ என்று சிந்தை செய்து திருப்பதிகத்திசை புந்தியாரப் புகன்றனர் என்று கூறினர்.

திருப்பதிகத்தில் புகன்றவை வருமாறு:—

"ஏறமர் கடவுள் என்றேத்திச் சிந்தை செய்பவர்க்கல்லால் சென்றுகை கூடுவதன்று", "எம்பெருமான், சீரும் செல்வமும் ஏத்தாச் சித்தர்கள் தொழச் செல்வதன்று", "சிவனெனப்பேணிப், பணிகலந்து செய்யாத பாவிகள் தொழச் செல்வதன்று", "தூயவெண்ணீற்றினராகி, உன்னி நைவர்க்கல்லால் ஒன்றுங் கைகூடுவதன்று", "விமலனென்றுள்கி, உருகிநைபவர்க்கல்லால் ஒன்றுங்கை கூடுவதன்று", "ஒருவனென்று உள்குளிர்ந்தேத்திப், பரவி நைபவர்க்கல்லால் பரிந்துகை கூடுவதன்று," "நீறணி சிவனெனப் பேணும், சீலமாந்தர்கட் கல்லால் சென்று கை கூடுவதன்று," "போற்றி என்பார்க்கல்லது அருளான் இருவரும் நோக்கரியானை, வணங்கி நைவர்க்கல்லால் வந்து கைகூடுவதன்று" "பாக்கியப்படகில்லாப் பாவிகள் தொழச் செல்வதன்.று" (உகரு)

### திருவருளை வியத்தல்

மெய்ம்மை போற்றி விடாத விருப்பினல்
தம்மை யுன்னும் பரிசுதந் தாள்பவர்
செம்மை நித்தில யானச் சிறப்பருள்
எம்மை யாளுவப் பானின் றளித்ததே. உகசு

(எ - து.) மேலே சொல்லியவாறு உலகம் உய்ய எடுத்தோதி, பின்னர், அரத்துறைநாதன் செய்த அற்புத அருளானது பிள்ளையாரது உள்ளத்தை விடாமையினால், அரத்துறை நாதனிடத்துக் காதலானது அதிகரிக்க, அவ்வதிகரிப்பினால் "இவ்வரத்துறை நாதன் தம்மை நினைப்பவரை என்றுந் தம்மை மறவாது நினைக்கத் தக்கதாகிய பரிசுகள் எவையோ அப்பரிசுகளைக் கொடுத்து ஆளுங் கருணையுடையனாகக் காணப்படுகின்றான். அவ்வுண்மையை அறியவே, சிறப்புப் பொருந்திய செம்மையாகிய முத்துச்சிவிகை முதலிய விருதுகளை எமக்கு இன்று கொடுத்ததாகும்; எனவே, எம்மை என்றும் தமக்கே ஆளாகக்கொண்டு திருவுளமகிழவேயாம்" என்று சிந்தித்தருளினர், என்பதாம்.

இதனால், தமது காரணமாக முக்கரணங்களும் மெய்மையாய் வருந்தப்பெற்றார்க்கு உலகெலாம் அறியத் தரவேண்டிய பரிசளித்துத் தம்மை என்றும்நினைக்கச் செய்யும் அரத்துறைநாதன் என்று அருளியவாறும். (உகச)

### திருப்பதிகத்தை முடித்தல்

பொடிய ணிந்த புராணன் அரத்துறை
அடிகள் தம்அரு ளேயிது வாம்எனப்
படியிலாத சொன் மாலைகள் பாடியே
நெடிது போற்றிப் பதிகம் நிரப்பினார். உகரு

(எ - து) "எமக்கருளிய இந்த முத்துச்சிவிகை எம்மை ஆளுவப்பான் இன்று அளித்ததாகும்" என்று சிந்தித்து, பின்னர் 'யான் இச்சிவிகையிலிருக்க இச்சிவிகை எனக்குக் குளிர்ந்த நிழலைத் தருவதாயிருக்குமானால், இது நீறணிந்த திருமேனியனாய் அநாதிபுருஷனாய் அரத்துறையில் எழுந்தருளியிருக்கும் அடிகளுடைய அருளுருவேயாகும் இதில் ஐயமில்லை' என்று சொல்லியருளி ஒப்புசொல்லுதற்கரிய சொன்மாலையை நெடிது நேரம் பாடிப் போற்றித் திருக்கடைக்காப்புச் சாத்தியருளினர், என்பதாம்.

"யான் பால்வேண்டி அழுத காலத்து, உலகினருக்கெல்லாம் சிவஞானாமிருதத்தை வழங்க ஞானத்தைக் குழைத்துப் பாலூட்டினான்; ஓசைபட அந்த ஞானப்பாடலைப் பாடத்தொடங்கிய காலத்துத் திருவைந்தெழுத்தை அமைத்துள்ள பொற்றாளத்தைத் தந்து அவ்வோசையின் வழியானே அம்மந்திரத்தின் பொருள் யாவர் செவியினும் புகும்படி செய்தனன்; இப்பொழுது சிவஞானத்தையுணர்ந்து, பஞ்சாக்கரப்பொருளில் நின்று மனமொழிமெய்கள் அன்பின் வழியே உருகப் பெற்றார் மலசத்தியின் வெம்மை நீங்கி, திருவருளே யிடமாகக்கொண்டு அதிற் கருவிகரணங்களெல்லாங் குளிர்ந்திருந்து சிவமயமாய்ப் பிரகாசிப்பர் என்பதை யாவரும் அறியக் குளிர்ந்த நிழலைச் செய்யும் முத்துக்குடையையும், இருக்க முத்துச்சிவிகையையும் தந்தருளினன்; இவ்வருள்நிலை சிவஞான சம்பந்தமுடைய இச்சைவநிலை யுடையார்க்கன்றி ஏனைய சமயநிலை யுடையோர்க்குக் கிட்டாதென்பதை அச்சமயிகளெல்லாம் அறியப் பேரோசைகொண்டு ஊதுவதாகிய திருச்சின்னத்தையுந் தந்தருளினன்" என்பார் - அரத்துறையடிகள் தம் அருளே இது வாம் எனப்பாடினார் என்றார்.

பதிகம் நிரப்பினர் எனவே, ஆன்மாக்களுக்கு நிரம்பவேண்டியது சிவஞான மும், திருவைந்தெழுத்தும், 'சித்தமுந் தீயகரணமும் சித்திலே ஒத்ததே ஒத்தது' என்று சித்தாந்தநூலிற் கூறியுள்ளபடி சித்த முதலியவற்றைக் குளிரச்செய்து ஆன்மாவை வாழ்விப்பதாகிய அருள்நிலையுமே யாகலான் அவ்வுண்மை நிலையை இப்பதிகத்தில் நிரப்பியுள்ளார் என்பார்—நேடிதுபோற்றிப் பதிகம் நிரப்பினர், என்றுங் கூறினர். (உகரு)

முத்துச்சிவிகையில் ஏறியருளல்

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்
றோதி யாரரு ளாதலில் அஞ்செழுத்
தோதி ஏறினர் உய்ய* உலகெலாம். உகசு

(எ - து) மேலே சொல்லியவாறு திருப்பதிகத்தை நிரப்பிய பின்னர், இம்முத்தின் சிவிகையினின்றும் வீசுவதாகிய சோதியானது திருவெண்ணீற்றின் ஒளியைப்போல் பிரகாசிக்கின்றது என்று அதிசயித்து மகிழ்ந்து போற்றி, பின் அச்சிவிகையை வலம் வந்து, பூமியில் திருமேனி பொருந்தும்படி வீழ்ந்து வணங்கிநின்று, "சிவஞானம் உணரப்பெற்றோர்களைச் சிவன் தன்னுட்கொண்டு அருளில் இருத்தி அவ்வருளையே அவர்களுக்கு ஆதியாய் (ஆதாரமாக்கியும்) அந்தமாய் (நிழலாக்கியும்) வாழச்செய்யும் வண்ணம் இவ்வண்ணந்தானே!" என்று போற்றி, அருளின் ஆதியையும் அந்தத்தையும் காட்டும் அருளுருவாக இச்சிவிகை யிருத்தலால், இவ்வருளிலிருந்து இவ்வருள்வழிச் செல்வதே நமது கடனாகுமென்று திருவுளத்தெண்ணிப் பஞ்சாக்கரத்தை ஓதி உலகெலாம் உய்யும் படி அச்சிவிகையில் ஏறியருளினர், என்பதாம்.

மெய்யன்பர்களுக்கு அருளே (ஆதியாய்) ஆதாரமாய்த் தாங்குமென்பதை யும், (அந்தமாய்) மேலாய் எங்கும் பரவிப் பிரபஞ்ச வெப்பத்தைப் போக்கி நிழலைச்செய்யும் என்பதையும் முத்துச்சிவிகையின் மூலமாய் விளக்கிப் பஞ்சாக் கரத்தை ஓதி அதில் ஏறியருளினர் என்று கூறினர்.

இங்ஙனங் கூறிய உண்மை பஞ்சாக்கரத்தில் அமைந்து கிடத்தலால் அதனை உலகினர் உணர—அஞ்செழுத்தோதி ஏறினர் என்றார்.

எனவே, திருவைந்தெழுத்தில் மலரூபமாய் விளங்கும் பிரபஞ்சத்தின் வெம்மை இது என்பதையும், அவ்வெம்மையில் தாக்குண்டு அலமரும் உயிர் இது என்பதையும், அவ்வெம்மையைப் போக்கும் அருள் இது என்பதையும், அவ்வருளையுடைய பதி இவன் என்பதையும் உணரக் கிடத்தலான்—ஐந்தெழுத் தோதி என்றார். (உகசு)

* "உலகெலாம்" என்று புராணந்தொடங்கிய ஆசிரியர் சேக்கிழார் இரண்டாம் முறை "உலகெலாம்" என்று ஈண்டு வழங்கினர்; மூன்றாம் முறை "உய்ய உலகெலாம்" என்று புராணத்தை முடிக்கின்றனர்.

## வேறு

### பிள்ளையார் சிவிகையூர்தல்

தொண்டர் ஆர்த்தனர் சுருதிகள் ஆர்த்தன தொல்லை
அண்டர் ஆர்த்தனர் அகிலமும் ஆர்ப்புடன் எய்தக்
கொண்டல் ஆர்த்தன முழவமும் ஆர்த்தன குழுமி
வண்ட ரூப்பொலி மலர்மழை ஆர்த்தது வானம். உகஎ

(எ - து) பிள்ளையார் சிவிகையில் எழுந்தருளியபோது, அக்கோலத்தைக் கண்ட அடியார்களெல்லாம் "அர அர" வென்று ஆரவாரஞ் செய்தனர்; வேதங்களெல்லாங் கோஷித்தன; நெடுங்காலமாயுள்ள தேவர்களும் ஆரவாரஞ் செய்தனர்; இவ்வாறு உலகமெல்லாம் ஆரவாரத்தைச் செய்வனவாயிருக்க, மேகங்களும் ஆரவாரஞ் செய்தன; ஆகாயமெங்கும் பரவி தேவதுந்துபி முதலிய வாத்தியங்களெல்லாம் ஒலித்தன; அவ்வாகாயத்திலிருந்து வண்டுகள் நீங்காது ஒலிக்கும் பொலிவினையுடைய மலர்மழையும் பொழிந்து ஆரவாரஞ் செய்தது, என்பதாம். (உகஎ)

வளையும் ஆர்த்தன வயிர்களும் ஆர்த்தன மறையின்
கிளையும் ஆர்த்தன கிளைஞரும் ஆர்த்தனர் கெழுவும்
களைகண் ஆர்த்ததோர் கருணையின் * ஆர்த்தன முத்து
விளையு மாக்கதிர் வெண்குடை ஆர்த்தது மிசையே. உகஅ

(எ - து.) சங்கங்கள் எல்லாம் ஒலித்தன; ஊதுகொம்புகளும் ஒலித்தன; பலபல வேதசாகைகளும் ஆரவாரஞ்செய்தன; சிவபாத இருதயரைச் சார்ந்த உறவின ரெல்லாரும் ஆரவாரஞ்செய்தனர்; பிள்ளையாரது திருமேனியிலுண்டாகிய சிரமத்துக்குக் களைகணாயிருந்து அதனைப் போக்கிய அரத்துறையானது, அருளுருவாய் விளங்கும் சிவிகை அசையுந்தோறும் அதிலிருக்கும் முத்தங்கள் ஒவ்வொன்றும் கிரணங்களைப் பரப்பி ஆரவாரஞ்செய்தன; அதுபோலவே, மேலிருந்து நிழலைச்செய்யும் வெண்முத்தக் குடையிலிருக்கும் முத்தங்களினின்றும் வீசும் கிரணங்களும் ஆரவாரஞ்செய்தன, என்பதாம். (உகஅ)

பல்குவெண்கதிர்ப் பத்திசேர் நித்திலச் சிவிகைப்
புல்கு நீற்றொளி உடன்பொலி புகலிகா வலனார்
அல்கு வெள்வளை அலைத்தெழு மணிநிரைத் தரங்கம்
மல்கு பாற்கடல் வளர்மதி உதித்தென வந்தார். உககூ

(எ - து.) நிறைந்த வெள்ளிய கிரணத்தையுடைய முத்துக்களின் பத்தி சேர்ந்த சிவிகையில், திருமேனிமுற்றும் நிறைந்து ஒளிவிடும் திருநீற்றொளியோடு பிரகாசிக்கும் புகலித்தலைவராகிய பிள்ளையார், சுருங்கிய முகத்துடன்கூடிய வெண்ணிறம் பொருந்திய சங்குகளை வீசுகின்ற அலைகளை மிகுதியாகவுடைய

---

* ஆர்கலின் முத்தின் — என்றும் பாடம்.

அழகிய பாற்கடலில் வளர்கின்ற இளம்பிறை உதயமானதுபோல எழுந்தருளி வந்தனர், என்பதாம்.

முத்துச்சிவிகையும் முத்துக் குடையும் வெண்ணிறத்தை எங்கும் பரப்பி வீசுதலால் அத்தோற்றத்தைப் பாற்கடலாகவும், அதில் எழுந்தருளிவரும் இளம் பருவத்தினையுடைய பிள்ளையார் திருநீற்றொளி பரப்பி அழகு செய்தலால் அததோற்றத்தை வளர்கின்ற இளம்பிறையாகவும் கூறினர். (உகக)

### யாவரும் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கல்

நீடு தொண்டர்கள் மறையவர் ஏனையோர் நெருங்கி
மாடு கொண்டெழு மகிழ்ச்சியின் மலர்க்கைமேற் குவித்தே
ஆடு கின்றனர் * ஆர்த்தனர் அளவிலா னந்தம்
கூடு கின்றகண் பொழிபுனல் வெள்ளத்திற் குளித்தார். உ௨0

(எ - து.) பெருங்கூட்டத்தினராயுள்ள தொண்டர்களும், வேதியர் கூட்டங்களும், ஏனையோர்களும் இடமின்றி எங்கணும் நெருங்கி, ஒருவருக்கும் அமையாத செல்வச் சிறப்பினை மேற்கொண்டு பிள்ளையார் எழுந்தருளிவருகின்ற அவ்வெழுச்சியைக் கண்டு, ஒவ்வொருவருக்கும் உண்டாகும் மகிழ்ச்சியினால் தங்கள் மலர் போன்ற கைகளைச் சிரமேற் குவித்துக்கொண்டே கூத்தாடுகின்றவர்களாயும், சிவநாமங்களைச் சொல்லிச்சொல்லி ஆரவாரஞ் செய்கின்றவர்களாயும், அளவில்லாத ஆனந்தத்தால் உள்ளத்துள்ளே கூடுகின்றதனால் கண்களினின்றும் பெருகுகின்ற ஆனந்த நீர் வெள்ளத்தில் மூழ்கினவர்களாயும் இருந்தனர், என்பதாம். (உ௨0)

### திருச்சின்னம் ஊதும் சிறப்பு

செய்ய பொன்புனை வெண்தரளத் தணிசிறக்கச்
சைவ மாமறைத் தலைவர்பாற் பெறுந்தனிக் காளம்
வையம் ஏழுடன் மறைகளும் நிறைதவத் தோரும்
உய்ய ஞானசம் பந்தன்வந் தானென ஊத. உ௨க

(எ - து.) வைதிக சைவத் தலைவராகிய அரத்துறை நாதரிடத்துப் பெற்ற சிவந்தபொன் தகட்டில் வெள்ளிய முத்துக்கள் கோவைபடச் சிறந்து விளங்கும் பெரிய எக்காளமாகிய திருச்சின்னமானது, ஏழுலகங்களோடு வேதங்களும் நிறைந்த தவத்தினரும் உய்யும்படியாக ஞானசம்பந்தப் பிள்ளையார் வந்தாரென்று ஊத, என்பதாம். (உ௨க)

சுற்று மாமறைச் சுருதியின் பெருகொலி நடுவே
தெற்றி னார்புரம் எரித்தவர் தருதிருச் சின்னம்
முற்று மானவண் ஞானமே முலைசுரந் தூட்டப்
பெற்ற பாலறு வாயன்வந் தான்எனப் பிடிக்க. உ௨௨

* அயர்ந்தனர்—என்னும் பாடம்.

(எ - து.) மாறுபட்டவருடைய முப்புரங்களை நகைத்து எரித்தவராகிய அரத்துறைநாதர் அருளிய திருச்சின்னமானது, மற்றொருமுறை, பிள்ளையாரைச் சூழ்ந்தொலிக்கும் வேதவோசைகளின் நடுவே "எல்லாப் பொருளுமாய் விளங்கும் ஞானவடிவினராகிய பெரியநாயகியார், தமது வடிவமாய் விளங்கும் அச்சிவ ஞானத்தையே முலைசுரந்தூட்ட உண்ணப்பெற்ற பாலருவாயர் வந்தா" ரென்று ஊத, என்பதாம்.

பாலை ஊட்டினவளும், அவன் ஊட்டிய பாலும், அப்பாலை உண்டவரும் சிவஞான சொரூபங்களே என்று குறிக்க - முற்றுமான என்றதுமாம். (உஉஉ)

புணர்ந்த மெய்த்தவக் குழாத்தொடும் போதுவார் முன்னே
இணைந்த நித்திலத் திலங்கொளி நலங்கிளர் தாரை
அணைந்த மாமறை முதற்கலை அகிலமும் ஓதா
துணர்ந்த முத்தமிழ் விரகன்வந் தான்என ஊத. உஉங

(எ - து.) மெய்த்தவத்தை விடாது புணர்ந்திருக்கின்ற அடியவர்கூட்டங் களோடும் நிறைந்து செல்கின்ற பிள்ளையார் திருமுன்னே, ஒன்றோடொன்று மாறுபடாது ஒருசமமாயுள்ள முத்துகளால் நல்ல ஒளிபெற்று விளங்கும் திருச் சின்னமானது, "முதன்மையாயுள்ள வேதங்களையும், அவ்வேதங்களை அணைந் துள்ள எல்லாக் கலைகளையும், ஓதாதுணர்ந்தருளிய முத்தமிழ்விரகன் வந்தான்" என்று ஊத, என்பதாம். (உஉங)

அரத்துறைக்கு எழுந்தருளல்

தெருளு மெய்க்கலை விளங்கவும் பாருளோர் சிந்தை
இருளு நீங்கவும் எழுதுசொல் மறையளிப் பவர்தாம்
பொருளும் ஞானமும் போகமும் போற்றி என்பாருக்
கருளும் அங்கணர் திருவரத் துறையைவந் தணைந்தார். உஉச

(எ - து.) பதிபசுபாசம் என்னும் முப்பொருள்களைப் பிரமாணமுகத் தானும் இலக்கணமுகத்தானும் தெளிவிக்கவல்ல மெய்ந்நூல்களாகிய வேத சிவாகமங்களை உலகின்கண் ஓதவும், ஓதியுணரவும், உணர்ந்தவர் பிறர்க்கு உரைக்க வும், பிறர்க்குரைத்தவழித் தாம் அடங்கி ஒழுகவுமான முறையில் விளங்கவும், இங்ஙனங் கூறிவந்த முறையான் மும்மலவிருள் நீங்கவும், எழுதும்சொல்லாலாகிய தமிழ்வேதத்தை அளித்தருளும் பிள்ளையார், தம்மை நினைந்து போற்றி என்று துதிப்பவர்க்குப் பொருளையும் சிவஞானத்தையும் சிவபோகத்தையும் எளிதாய்க் கொடுக்கவல்ல பேரருளுடைய அரத்துறைநாதர் எழுந்தருளியிருக்கும் அப் பதியை வந்தடைந்தருளினர், என்பதாம். (உஉச)

திருக்கோயிலுக்கு எழுந்தருளல்

வந்து கோபுர மணிநெடு வாயில்சேய்த் தாகச்
சந்த நித்திலச் சிவிகைநின் றிழிந்துதாழ்ந் தெழுந்து
சிந்தை யார்வமும் மகிழ்ச்சியும் பொங்கிமுன் செல்ல
அந்தி நாண்மதி அணிந்தவர் கோயிலுள் அடைந்தார். உஉரு

(எ - து.) அரத்துறைப்பதியை அடைந்த பிள்ளையார், இரத்தினமயமாய் விளங்கும் கோபுரவாயிலுக்குச் சிறிது தூரத்திலே வந்து, அங்கு நின்று அழகு பொருந்திய முத்துச்சிவிகையினின்றும் இழிந்தருளி, கோபுரத்தை வணங்கி எழுந்து, திருவுள்ளத்தில் நேசமும் மகிழ்ச்சியும் அதிகரித்துத் தமக்கு முன் செல்ல, அந்திப்பொழுதில் தோன்றும் இளம்பிறையணிந்த இறைவரது திருக் கோயிலுள் எழுந்தருளினர், என்பதாம். (உஉரு)

### கருணையை வியந்து போற்றல்

மன்னு கோயிலை வலங்கொண்டு திருமுன்பு வந்து
சென்னி யிற்கரங் குவித்துவீழ்ந் தன்பொடு திளைப்பார்
என்னை யும்பொரு ளாகஇன் னருள்புரிந் தருளும்
பொன்ன டித்தலத் தாமரை போற்றிஎன் றெழுந்தார். உஉசு

(எ - து.) அநாதியாயுள்ள திருக்கோயிலை வலம் வந்து, இறைவன் சந்நிதியின் முன்னே நின்று, தம்முடைய இருகரங்களையும் சிரசின்மேற் குவித்து வீழ்ந்து வணங்கி அன்பில் மூழ்கிய பிள்ளையார், பெருமானை நோக்கி, "என்னையும் ஒரு பொருளாகத் திருவுளத் தெண்ணி இனிய திருவருளைச் செய் தருளும், பொன்போலும் என்றும் அருமையை விளைவிக்கும் உம் திருவடித் தாமரை மலர்களுக்கு நமஸ்காரம்" என்று சொல்லி எழுந்தனர், என்பதாம்.

"நான் ஏறிச்செல்வதற்கு எனது இளம்பருவத்திற்கேற்ப முத்துச்சிவிகை யையும், நிழலைச்செய்ய முத்துக்குடையையும், உன்னுடைய திருப்பெயரைச் சொல்லவே இம்மண்ணுலகில் வந்தவனுகிய என்னுடைய பெயரைச் சொல்ல, அஃதாவது, ஞான சொரூபியாகிய உன்னுடைய குமாரன் நான் என்று உலகெலாம் எளிதில் உணர்ந்து ஞானசம்பந்தன் என்று சொல்ல ஒரு பெரிய திருச்சின்னத்தையும் தந்தருளிய உனது பொன்னடிக்கு நமஸ்காரம்" என்றும், தந்தையாருக்குக் களிபேருவகையைத் தருவது தம்முடைய மக்களின் இனிய சொல்லே யாகலான், பிள்ளையார் தம் தந்தையாருக்குத் தம்பொருளாகவே யிருக்கும் தாம் அவருக்குக் களிபேருவகையைத் தர - என்னையும் பொருளாக இன்னருள் புரிந்த என்றும் கூறியருளினர்.

அல்லதூஉம், தம்மக்களைத் தம்பொருளாக எண்ணுவதும், அவர் வேண்டும் பொருளைத் தாமே யறிந்து கொடுப்பதும், வேண்டிக்கேட்கப்படும் பொருளைப் பின் கொடுப்பதும், இம்மக்கட்பொருளன்றி வேறு பொருளைப் பொருளாக எண்ணாததும் உலகினியல்பாயிருக்க, உலகெலாம் உணர்ந்தோதற்கரிய இவ் விறைவன் பெத்தநிலையில் எண்ணிறந்த பேரை அம்மையப்பரென் றழைத் தழைத்து இளைத்து, முத்திநிலையில் தம்மை "அம்மையேயப்பா" என்றழைத்தால் அவர்களைத் தம்மக்களாகவேகொண்டு வேண்டுவனவெல்லாம் தானே கொடுத்து வருதல் இல்பயு. அவ்வியல்பினையுடைய இறைவனுக்கு இயல்பாகவே மகனரா யிருக்கும் இவருக்கு முத்துச்சிவிகை முதலியவற்றைத் தந்தது அருமையன்று யிருக்க, இப்பிள்ளையார், "என்னையும் பொருளாக இன்னருள் புரிந்தனை"

என்றது தம் தந்தையாராகிய இறைவனுக்குக் கழிபேருவகையைத் தருதற்கே யாம் என்பதில் ஐயமில்லை என்க. (உஉசு)

வேறு

**கருணை நிகழப் பாடல்**

சூடி னார்கர கமலங்கள் சொரிந்திழி கண்ணீர்
ஆடி னார்திரு மேனியில் அரத்துறை விரும்பி
நீடி னார்திரு அருட்பெருங் கருணையே நிகழப்
பாடி னார்திருப் பதிகமேழ் ழிசையொடும் பயில. உஉஎ

(எ - து.) "அருளும் பொன்னடித் தாமரை போற்றி" என்று எழுந்த பின்னர், தம்முடைய திருக்கரங்களாகிய தாமரை மலர்களைச் சிரத்தின்மேல் கூப்பிக்கொண்டு, திருக்கண்களினின்றுஞ் சொரிந்து இழிகின்ற நீர் வெள்ளத்தில் தமது திருமேனிமுற்றும் மூழ்கும்படி ஆனந்த வடிவமாயினர்; அதனால் அவ்வரத்துறைநாதனது கருணையையே விரும்பி அதிற்றானே தமது திருவுள்ளத்தையுஞ் செலுத்தித் தாம் பாடும் பதிகத்திலும் அவ்வருட்பெருங்கருணையே நிகழ, ஏழிசையும் ஒலிக்கத் திருப்பதிகத்தைப் பாடியருளினர், என்பதாம்.

அரத்துறைநாதன் தம்மை என்றும் எங்கும் நினைத்தற்குச் சிவிகையைத் தந்தருளினனாகலான், அவ்விறைவனைத் தாமும் என்றும் எங்கும் மறவாது நினைத்தற்கு அவ்விறைவன்பால் மாறாதிருக்கும் பேரன்பினைத் திருவுள்ளத்திற் கொண்டனர், என்பதாம். (உஉஎ)

**திருவரத்துறையில் எழுந்தருளியிருத்தல்**

இசைவி ளங்கிட இயல்பினிற் பாடிநின் றேத்தி
மிசைவி ளங்குநீர் வேணியார் அருளினால் மீண்டு
திசைவி ளங்கிடத் திருவருள் பெற்றவர் சிலநாள்
அசைவில் சீர்த்தொண்டர் தம்முடன் அப்பதி அமர்ந்தார். உஉஅ

(எ - து.) எத்திசையிலும் சைவசமயமே பிரகாசிக்கத் திருவருள் ஞானத்தையுண்டருளிய பிள்ளையார் இசையோடு பாடத்தொடங்கிய திருப்பதிகத்தில் ஏழிசைகளும் ஒலிக்க இசையின் முறைப்படி பாடி நின்றேத்தி, கங்கையானது மேலே பிரகாசிக்கும் சடைமுடியினையுடைய அரத்துறைநாதனது திருவருளினால் சந்நிதானத்தைவிட்டு வெளியேவந்து, தத்தமக்குரிய தொண்டுகளில் அசைதலையடையாத சிறப்பினையுடைய தொண்டர்களோடு அத்திருத்தலத்தில் சிலநாள் தங்கி அருளினர், என்பதாம்.

திசை விளங்கிடத் திருவருள் பெற்றவர், இசைவிளங்கிட அசைவில் சீர்த் தொண்டர் தம்முடன் அப்பதி சிலநாள் அமர்ந்தார் எனக்கூட்டிப் பொருள் கொள்க.

அரத்துறைநாதன் பொன்னடித் தலத் தாமரையைப் போற்றிப் பரவசப் பட்டு உணர்வுதோன்றாத ஆனந்தத்தில் அழுந்தியிருக்கும் அந்நிலையில் அவ் வுணர்வைச் சிறிதே தோன்றும்படி அவ்வரத்துறைநாதன் செய்தருளினன் என் பார் - பாடி நின்றேத்தி, நீர்வேணியார் அருளினால் மீண்டு தொண்டர் தம்முடன் அப்பதியமர்ந்தார் என்றார். (௨௨அ)

தேவர் தம்பிரான் திருவரத் துறையினில் இறைஞ்சி
மேவு நாள்களில் விமலனார் நெல்வெண்ணெய் முதலாத்
தாவில் அன்பர்கள் தம்முடன் தொழுதுபின் சண்பைக்
காவ லார்அருள் பெற்றுடன் கலந்துமீண் டணைந்தார். ௨௨௯

(எ - து.) சீகாழிப் பிள்ளையார் தேவர்பெருமானாகிய இறைவனைத் திரு வரத்துறையினில் வணங்கி எழுந்தருளியிருக்குங் காலத்தில், அத்தலத்தைவிட்டு வெண்ணெயப்பரது திருநெல்வெண்ணெய் முதலிய திருப்பதிகளை நீங்காத அன்பினராகிய அடியவர்களோடு சென்று தரிசித்து வணங்கி ஆங்காங்கும் இறைவனருள் பெற்று, பின் ஆங்காங்குக் கூடும் அன்பர்களுடன் கலந்து மறுபடி யும் திருவரத்துறையை அடைந்தருளினார், என்பதாம். (௨௨௯)

### சீகாழிக்குச் செல்ல நினைத்தல்

விளங்கு வேணுபு ரத்திருத் தோணிவீற் றிருந்த
களங்கொள் கண்டர்தங் காதலி யாருடன் கூட
உளங்கொ ளப்புகுந் துணர்வினில் வெளிப்பட உருகி
வளங்கொள் பூம்புனற் புகலிமேற் செலமனம் வைத்தார். ௨௩0

(எ - து.) எக்காலத்தும் அழிவின்றி விளங்கும் வேணுபுரமென்னும் சீகாழிப்பதியில் திருத்தோணிபோல் சிகரத்தில் வீற்றிருக்கும் ஆலயத்தில் எழுந் தருளி யிருக்கின்ற விடமுண்ட கண்டராகிய தோணியப்பர் தம்முடனிருக்கும் பெரியநாயகியாரோடு தமது திருவுள்ளத்தில் நிறையும்படி புகுந்து தமது அறிவில் வெளிப்பட்டுத் தோன்ற மனம் உருகினவராய், பலவகை வளங்களையுங் கொண் டிருக்கின்ற சீகாழிக்குச் செல்லத் திருவுளத்து எண்ணினார், என்பதாம்.

இதனால் முத்துச்சிவிகை யளித்த பெருமானிடம் வந்தபோது ஞானப்பா லளித்த தோணியப்பர் நினைவுவர மனமுருகி அத்தோணியப்பரைக் கண்டு களிக்க நினைத்தருளினார் என்று கூறியவாறும்.

பிள்ளையார் மீண்டுந் திருவரத்துறைக்கு எழுந்தருளியபோது, இப்பெரு மான் நமது திருமேனி குளிர முத்துச் சிவிகையும் முத்துக் குடையும், நமது உண்மைச் செயலை எடுத்துக் கூறத் திருச்சின்னத்தையுந் தந்தருளினன் என்று எண்ணும்பொழுது, அவருள்ளத்தைக் கவருங் கள்வனாகிய தோணியப்பன் தேவி யுடன் உளம் புகுந்தனன். புகவே, அவ்விருவரையும் அவ்வறிவினிடத்தே கண்டு களித்தவராய், "நமது தோணியப்பன், அன்று பிரம தீர்த்தக்கரையில், நமது உள்ளங்குளிர உவமையிலாக் கலைஞானத்தைப் பொற்கிண்ணமாக்கி, அக்கலை

ஞானமாகிய கிண்ணத்தில் உணர்தற்கரிய திரிபதார்த்த ஞானமாகிய உணர்வரிய மெய்ஞ்ஞானத்தைப் பாலாக்கி நிரப்பி, அந்த மெய்ஞ்ஞானத்தில் பவமதனை யற மாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமாகிய திருவருள் ஞானத்தைக் கலந்து குழைத்து ஊட்டி, அத்திருவருள் ஞானத்தால் சிவனடியே சிந்திக்கும் திருப் பெருகு சிவஞானத்தை இனிய தமிழ்மொழியால் வரம்பின்றிப் பொழியவைத்து நமது உள்ளத்தைக் குளிரவைத்தவனல்லனே!" என்று உள்ளங்கரைந் துருகுந் தன்மையைப் பெற்றனராகலான்—தோணி வீற்றிருந்த களங்கோள்கண்டர் தங் காதலியாருடன்கூட உளங்கோளப் புகுந்து உணர்வினில் வெளிப்பட வுருகி என் றும், பாலுண்டருளிய பொழுதே தனது உள்ளத்தைக் கவரும் கள்வனைக்கண்டு அவனைப் புறத்தேகாண விரைந்து செ[illegible] தலைப்பட்ட ஆவல் இப்போதும் இருக்குமாகலான்—புகலிமேற் சேலமனம் [illegible]ார் என்றுங் கூறினர்.

உவமையிலாக் கலைஞானம் என்றது, வேத சிவாகமங்கள். இவை சிந்தித் துத் தெளிந்து நிட்டையடையப் பெறுவார்க்கும் பாத்திரமாயிருந்து கேட்கப் பட்டு வருதலின் அவற்றைப் பொற்கிண்ண மென்றும், வேத சிவாகமங்களைக் குருமுகமாய்க் கேட்டபின்னர் அவ்வேத சிவாகமங்களின் பொருளைச் சிந்திக்கத் தலைப்படுங்காலத்து அதனால் அறியவரும் விடயம் பதிபசுபாசம் என்னும் முப்பாலே யாகலின் அவற்றைப் பாலென்றும், அம்முப்பாலையும் உண்மையாக உணர்ந்து அவற்றுள் உண்மை ஞானத்தைத் தெளியத் தலைப்படுங்காலத்து அங்ஙனந் தெளிந்தறியப்படும் ஞானம், பவமதனையற மாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமாகிய திருவருள் ஞானமே அறிவின்கண் கலந்து குழைந்து வெளிப்படுவ தாகலான் அதனை ஊட்டி என்றும், அறிவிற் கலந்து குழைக்கச் செய்ய வல்ல திருவருள் ஞானத்தை உண்டபின்னர், அவ்வருள் ஞானம் மனத்தைச் சிவனடியே சிந்திப்பதிலும், வாக்கைச் சிந்திக்கும் நெறியில் நின்று வாழ்த்தி இசைகொண்டு பாடுவதிலும், காயத்தை வணங்குவதிலும் அயராது நிற்கச் செய்வதாகிய திருவைப் பெருக்கு மாகலான் அத்திருவையே பெருக்கி, தமிழ் மொழியாய் விளங்கும் வேதத்தைப் பொழிந்தனரென்றும், கூறினம். (௨௩௦)

### திருவரத்துறையை விட்டெழுந்தருளல்

அண்ண லார்திரு அரத்துறை அடிகளை வணங்கி
நண்ணு பேரரு ளால்விடை கொண்டுபோய் நடங்கொண்
டுண்ணி றைந்தபூங் கழலிணை உச்சிமேற் கொண்டே
வெண்ணி லாமலர் நித்திலச் சிவிகைமேற் கொண்டார். ௨௩௧

(எ - து.) புகலிமேற்செல மனம்வைத்த பிள்ளையார் திருவரத்துறையில் வீற்றிருக்கும் அண்ணலாராகிய சிவபெருமானை வணங்கித் தம்மாட்டுப் பொருந்தி யிருக்குந் திருவருள் பொருந்திய வண்ணமாகவே யிருக்கும்படி அப்பெருமானை வேண்டி விடைபெற்று வெளியே வந்து, தமது திருவுள்ளத்தில் நிறைந்து கூத்தாடுகின்ற தோணியப்பர்தம் திருவடிகளைத் தலைமேற்கொண்டு வெ[illegible] நிலவை வீசுகின்ற முத்துச்சிவிகையின்மேல் எழுந்தருளினர், என்[illegible]

## முத்துச் சிவிகையின்மேல் எழுந்தருளுஞ் சிறப்பு

சிவிகை முத்தினிற் பெருகொளி திசையெலாம் *விரிக்கக்
கவிகை வெண்மதிக் குளிரொளி கதிர்செய்வான் கலப்பக்
குவிகை மேற்கொண்டு மறையவர் குணலையிட் டாடப்
புவிகைம் மாறின்றிப் போற்றவந் தருளினர் போந்தார். உ௲உ

(எ - து.) முத்துச் சிவிகையினின்றும் பெருக்கெடுத்து வீசும் பெரிய வொளியானது எட்டுத்திக்குகளிலும் பரவி விரியாநிற்கவும், முத்துக் குடையாகிய வெள்ளிய சந்திரனது குளிர்ந்த [illegible]ளியானது சூரிய கிரணத்தால் விளங்குகின்ற ஆகாயமளவும் பரவிச்[illegible] அந்தணர்களெல்லாம் இருகரங்களையும் குவித்[illegible]த் தலைக[illegible]ன்மே[illegible] கொண்டு குணலைக் கூத்தாடவும், உலகினரால் யாதொரு கைம்ம[illegible] வேண்டாது தாமே அவர்களை இரட்சித்தருள வந்தவராகிய பிள்ளையார் எழுந்தருளினர், என்பதாம்.

முத்துச்சிவிகையின் ஒளியும் முத்துக்குடையின் ஒளியும், எவ்வகை ஒளியையும் கீழ்ப்படுத்தி அப்பிரகாசப்படுத்துவதாகிய சூரியன் ஒளியையும் அப்பிரகாசப்படுத்தி, தமது பிரகாசத்தையே திக்குகளிலும் விரித்து ஆகாயத்திலும் ஓங்கி ஒளிரச் செய்தனவென்று இத்திருப்பாட்டாற் கூறப்பட்டது.

திருமால் முதலிய தேவரெல்லாம் இவ்வுலகின்கண் வருதல் தங்களுக்குண்டாகிய சாபங்களை யொழித்தற் பொருட்டு : அச்சாபத்தோடு அனுக்கிரகமும் பெற்றுள்ளாராகலான் அவ்வனுக்கிரகமானது உலகினருக்கு ஒரு நன்மை செய்ய வந்தனரென்று வழங்கும்படி செய்கின்றது ; உண்மையில் அனுக்கிரகஞ் செய்யவந்தவர்களன்று, சாபத்தை அனுபவித்து ஒழிக்கவந்தவர்களே என்னும் உண்மையும், அத்தேவர்கள் செய்த வுபகாரமும் பலபேரைத் தங்கட்குத் துணையாகக்கொண்டு செய்தனரென்னும் உண்மையும் தோன்ற—புவிகைம் மாறின்றிப் போற்றவந் தருளினர் என்றார்.

ஆளுடைய பிள்ளையார் கைம்மாறு வேண்டாத கடவுளாகிய முருகப் பெருமானே என்று இதனல் அறிவுறுத்தியதா மென்க. (உ௲உ)

மறைமு ழங்கின தழங்கின வண்தமிழ் வயிரின்
குறைந ரன்றன முரன்றன வளைக்குலம் காளம்
முறையி யம்பின இயம்பல ஒலித்தன முரசப்
பொறைக றங்கின பிறங்கின †போற்றிசெய் அரவம். உ௲௩

(எ - து.) முழைகளிலிருந்த வேதங்களெல்லாம் வெளியே வந்து ஆரவாரஞ் செய்தன ; இலக்கணவரம்பு கடவாத திருநெறித் தமிழ் வேதங்களும் எழிசையோடு ஒலித்தன ; ஊதுகொம்புகள் எங்கும் ஒலித்தன ; சங்குகளும் எக்காளங்களும் ஒலித்தன ; முறையாக ஊதுவனவாயுள்ள பல வாத்தியங்களும் ஒலித்தன ; கொட்டுகின்ற பேரிகைகளாகிய பெரிய வாத்தியங்களும் ஒலித்தன ; "அரஅர" வென்று சிவநாமங்களும் பேரொலிகொண்டு ஒலித்தன, என்பதாம்.

---

[illegible] என்னும் பாடம். †போற்றிசை என்னும் பாடம்.

உலகெலாம் உய்யவந்த பெருமானுகலான் வேத முதலிய ஓசைகளும், வாத்திய பேதங்களுடைய ஒலிகளும் ஒலித்து மங்கலங் கொண்டாடின என்று இதனுற் கூறப்பட்டது.

புறச்சமயங்களுடைய முழக்கம் அற்றன என்பது தோன்ற—மறைமுழங்கின என்றும், வேதியர்களும் தமிழ் வேதத்தைப் போற்றினர் என்பது தோன்ற—**வண்தமிழ் தழங்கின என்றுங் கூறினர்.** (உகூங)

உடைய பிள்ளையார் வரும்எல்லை யுள்ள அப் பதியோர்
புடையி ரண்டினும் கொடியொடு பூந்துகில் விதானம்
நடைசெய் காவணம் தோரணம் பூகநற்கதலி
மிடையு மாலைகள் நிறைகுடம் விளக்கொடு நிரைத்தார். உ௩உ௪

(எ - து.) உலகெலாம் உய்வதற்கான ஞானமெல்லாம் உடைய ஆளுடைய பிள்ளையார் திருவரத்துறை முதலிய திருப்பதிகளைத் தரிசித்துக்கொண்டு சீகாழிக்கு எழுந்தருளும் மார்க்கத்தின் இடையிலுள்ள பெரும்புலியூர் முதலிய திருப்பதிகளிலிருக்கும் அடியவர்கள் "நமது ஊருக்கு இன்றுகாலை வருவார், இன்றுபகல் வருவார், இன்றுமாலை வருவார்" என்று அவரவர்களும் மிக்க விரைவுடன், இரண்டு பக்கங்களிலும் கொடிகளையன்றி, மேலே மெல்லிய புடவைகளினலாய மேற்கட்டுகளையும், கீழே நடைக்காவணங்களையும், தோரணங்களையும், கமுகுகளையும், நல்ல வாழை மரங்களையும், நெருங்கிய பூமாலைகளையும் நிறைகுடங்களையும், தீபவரிசைகளையும் முறையாக வைத்தார்கள், என்பதாம்.

திருஞானசம்பந்த சுவாமிகள் புராணம்
(செய்யுள்கள் க முதல் உகூச வரை)
பொழிப்புரை, சித்தாந்த விரிவுரையுடன்
முற்றும்

